# ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி - 27 எண். 1.2.3.

ஜனவரி முதல் மார்ச் வரை

1938

JL
R65m 211,N12
N38.27.1-3
158715

# SRI VEDANTA DIPIKA

VOL. 27] JANUARY 1938 [PART 1


473

4 APR 1938

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

ஈசுவர ௵



தை ௴


பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர்



CONDUCTED BY

**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**

VANI VILAS 4–5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]

[illegible] ।

[illegible]

[illegible] ॥

# விஷய ஸூசிகை


1. மஹா மஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமி — 1

2. மஹாமஹோபாத்யாய லக்ஷ்மீபுர ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமி — 7

3. தீபிகையைப் பற்றி விளம்பரம். — 9

4. ஜாதி நிர்ணய ஸங்க்ரஹம் — 11

   [ஸ்ரீ. உப. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஆஸ்தான வித்வான் அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்.]

5. ஸ்ரீ பராசர பட்டரின் திருமஞ்சனக் கவிகள் — 15

   [ஸ்ரீ உ. வே. A. ஸ்ரீநிவாஸராகவன், புதுக்கோட்டை]

6. வேதாந்த ரக்ஷாமணி விமர்சம் — 22

   [ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசாரியர்]

7, வர்த்தமானங்கள்

   (1) *சதாபிஷேகம்* — 25

   (2) *அகில பாரதீய ஸநாதந தர்ம வித்வத் பரிஷத்து* — 29

   (3) *ஸ்ரீமான் பண்டித வெ. அனந்தாசார்ய ஸ்வாமிக்கு அபினந்தனம்* — 34

9. க்ரந்த விமர்சங்கள் — 35

10. வேதாந்த ஸாரம் — 33—40

11. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி — 49—56

4 APR 1


अमृताजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

“ अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । ”

“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । ”




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம் ! எப்படி?

## L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள் ! பெற்றோர்களின் களிப்பு ! !

**விலை மலிவு ! சுவை பெரிது !**

**நன்மை தரும் !**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

**வாங்க முந்துங்கள் ! கொடுக்கும் பணத்திற்கு நல்ல பெப்பர்மெண்டு !!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

**SRI L. N. SHIYALI CONFECTIONARY, LTD.,**

*MADRAS OFFICE* :—**Phone No. 3658 : Res. No. 4258**

304, Thambu Chetty St., G. T. Madras.

---

## L காயம்—பெருங்காயம் G

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரம் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

158715

SL

811,812

N38-20.1-3

APR 1938

473



ஸ்ரீ உ. வே. மஹா மஹோபாத்யாய ராமானுஜ ஸித்தாந்த விஜயத்வஜ கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி

ஸ்ரீ:

# மஹா மஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீ தேசிகாசார்யஸ்வாமி

ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்திற்கு விஜய த்வஜமாக விளங்கிக் கொண்டிருந்த மஹா மஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி பரமபதத்தை அடைந்ததாக விருத்தாந்தத்தைக் கேட்டு மிகவும் வருந்துகிறோம். இந்த ஸ்வாமியின் வைதுஷ்யத்தைப் பற்றி பேசுவதற்கு நம்மால் இயலாது. அவருடைய மகிமை நாவினால், நவிப்பதற்கும், மனத்தால் சிந்திப்பதற்கும் முடியாதது. இப்படிப்பட்ட மஹானுடைய பிரிவால் நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கும் பொதுவாய் வேதாந்த வித்யைக்கும், அதன் மூலமாய் அகண்ட பூமண்டலத்திற்கும் பெரியதொரு குறை நிவ்ருத்தி செய்ய முடியாத நிலைமையில் ஏற்பட்டு விட்டது என்று சொல்லுவது உண்மை உரைத்தல் ஆகுமே அல்லாது, புகழ் உரை ஆகாது. இவ்வுலகில் இந்த ஸ்வாமி, வேதாந்த வித்யா விஷயத்திற்காக செய்ய எண்ணங்கொண்டிருந்த பரிஷ்காரங்களை கவனிக்கும் போது, இவ்வளவு சீக்கிரத்தில் இவரைப் பிரியச் செய்த பகவான் நன்றி இல்லாதவர் என்றே சொல்லுவது பொருந்தும். ஆனால் இப்படிப்பட்ட ஒரு வித்வான், பரமபத லோகத்திற்கு தேவை என்று இவரை அங்கு அழைத்தனர் போலும்.

இந்த ஸ்வாமியினிடத்தில் ஸகலேதர விலக்ஷணங்களான, சக்தி விசேஷங்கள் பல உண்டு. பதினாலு வித்யாஸ்தானங்களிலும் சிரகால பரிசயம் கொண்டு, எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து நிர்ணயிக்கும் திறமை வாய்ந்தவர். அநேக பெரிய சபைகளில் உபநிஷத்துக்களுடையவும், ப்ரஹ்ம ஸூத்ரங்களுடையவும் நுட்பமான விஷயங்களை உபந்யஸிக்கும் போது, கொஞ்சமேனும் படிப்பில்லாதவர் கூட மேற்படி விஷயங்களை நன்கு க்ரஹித்து ஆனந்த பரவசமாய் இருந்ததை நாம் கண்கூடாக கண்டிருக்கிறோம். மிகவும் நுட்பமான சாஸ்திர விஷயங்களை உரைக்கும் போது ஏதோ எளிய கதை சொல்லுவதாகத் தோன்றுமே அல்லாது கடினமான சாஸ்திர விஷயமாகப் புலப்படாது. சரீரம் மெலிந்திருந்தாலும் ஆகாரம் ஹ்ரஸ்வமாய் இருந்தாலும் புத்தி விசாலம். மனம் திடமானது. ஞாபக சக்தி மிகவும் வலுவுற்றது. இந்த ஸ்வாமி 7—1—38ல் பரம பதம் சென்றார். இப்போது திரு நக்ஷத்திரம் 82. திரு நாட்டுக்கெழுந்தருளுகின்ற இரண்டு மணிக்கு முன் நாராயணனுவாக பாஷ்யத்திற்கு ஒரு மங்கள ச்லோகத்தை எழுதி முடித்தார என்பதைக் கேட்க மிகவும் ஆச்சர்ய முண்டாகிறது.

## சரித்திரம்

இந்த ஸ்வாமி ராக்ஷஸ வருஷம் ஐப்பசி மாதம் அனுஷ நக்ஷத்திற்குச் சரியான (15—10—1855)ல் திருப்பதி கோவிந்த ராஜஸ்வாமி மாட வீதியில் அவதரித்தருளினார். சேட்லூர் கோபாலாசாரியர் இந்த ஸ்வாமிக்குத் திருத் தகப்பனார். ஒன்பது வயது வரையில் தமது பிதாவிடம் காவ்ய நாடகங்களைப படித்தார். அதன்பின் புரிசை ஸ்ரீ ரங்காசாரிய ஸ்வாமி நடத்திவந்த பாடசாலையில் சேர்ந்து வாழிக்கலானார். பதினெட்டாவது வயது வரையில் அப்பாட சாலையில் தர்க்க வ்யாகரணங்களை நன்கு அதிகரித்தார். அப்போதே இவர் தர்க்க வ்யாகரண சாஸ்திரங்களில் பூர்ண பாண்டித்யம் வாய்ந்திருந்தார். அக்காலத்தில் காளஹஸ்தி ராஜாவை இவர் பார்க்க நேர்ந்தது. அவ்வரசன் ஸம்ஸ்கிருதத்தில் மிக ப்ரியமுள்ளவன். சிறு பிராயத்தில் பூர்ண பாண்டித்தியம் வாய்ந்த இவரைக் கண்டு, மிகவும் சந்தோஷப்பட்டு, தன்னுடைய ஆஸ்தானத்திலேயே வெகு காலம் வஸிக்கும்படி வேண்டினான். அதற்கு இணங்கி ஒரு வருஷ காலம் அங்கு வஸித்தார். அப்போது குறிச்சி ரங்காசாரியர் முதலான மகா வித்வான்களுடன் அனேக சாஸ்திர விஷயங்களில் சர்ச்சை செய்தும், விநோத காலங்களில் வெகு அழகான ஸமஸ்யா பூரணங்களைச் செய்தும், வெகு உல்லாஸமாயும் உத்ஸாஹமாயும் காலத்தைக் கழித்தார். தமது இருபதாவது வயதில் இவர் திருச்சானூரில் தமது பிதாவின் மாதுலரான லாடபுரம் கோபாலாசாரியஸ்வாமியினிடம் ரஹஸ்யத்ரய ஸாரம் முதலிய ஸம்ப்ரதாய க்ரந்தங்களை அதிகரித்தார். அச்சமயத்தில் கேதாண்டபட்டி ஸ்ரீரங்கராமானுஜ மஹா தேசிகன் என்று ப்ரசித்தி பெற்றிருந்த ஸ்வாமி அனேக சிஷ்யர்களுடன் திருச்சானூருக்கு எழுந்தருளினார். அந்த ஸ்வாமி திருவஹீந்திர புரத்தில் அனேக காலம் வஸித்து, பலவித்வத் சிரோமணிகளுக்கு ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களை ப்ரஸாதித் தருளி நாடெங்கும் "ஜகதாசாரியன்" என்று கொண்டாடும்படி எழுந்தருளி இருந்தார். லாடபுரம் கோபாலாசாரிய ஸ்வாமி இவரை மேற்சொன்ன ரங்கராமானுஜ மஹாதேசிகனிடம் சிஷ்யனாக கொண்டு சேர்த்தார். அவ்விடத்தில் ஸ்ரீ பாஷ்யம் முதலிய காலக்ஷேப க்ரந்தங்களையும், மற்றுமுள்ள வாதக்ரந்தங்களையும், பல தடவைகள் கேட்டு தன்னுடைய ஞானத்தை மிகவும் கூறாக தீட்டி, தன்னுடைய ஸதீர்த்யர்கள் அனைவரும் தன்னை கொண்டாடும்படி செய்து கொண்டார். க்ரந்த காலக்ஷேபம் செய்யும்போதே மேல்படி ரங்கராமானுஜ ஸ்வாமி, தமது சிஷ்யர்களை இந்த ஸ்வாமியிடம் சாஸ்திர விஷயங்களை தினவுகெடக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி நியமிப்பதுண்டு. இவருக்கு எல்லா சாஸ்திரங்களிலும் பூர்ண பாண்டித்யம் வந்த பிறகு பரமக்ருபாளுவான ஸ்ரீ கேதாண்ட



பட்டிஸ்வாமி இவரை சில ராஜ ஸதஸ்ஸுகளுக்கு சென்று ஸம்மானங்களைப் பெற்று, குடும்பத்தை நன்கு போஷிக்குமாறு நியமித்தருளினார். முதன் முதல் திருவனந்தபுரத்தில் நவராத்ரி வித்வத் ஸபைக்கு எழுந்தருளினார். அங்கு இவருடைய பாண்டித்யத்தைக் கேட்டு திருவனந்தபுரம் ராஜா ப்ரம்ஹ ஸூத்ரங்களுக்கு அத்வைதிகள் சொல்லும் பொருள் ஒவ்வாதது என்றும் விசிஷ்டாத் வைதிகளுடைய யோஜனையே பொருத்தமானது என்றும் வெகு கம்பீரமாய் இவர் செய்த உபன்யாஸத்தைக் கேட்டு பரமானந்தமடைந்து இவருக்கு வீரத்தோடா முதலிய ஸம்மானங்களை ராஜா தன் கையினாலே ஸமர்பித்து மகிழ்ந்ததுடன் ஸபையில் உத்தம ஸம்பாவனையும் கொடுப்பித்தான். 1883 வருஷத்தில் அப்போது சென்னை கவர்னர் திருப்பதிக்கு வந்தபோது, இவர் ஒரு ச்லோகம் எழுதி வாசிக்க, அதைக் கேட்டு கவர்னர் மிகவும் சந்தோஷமடைந் திருக்கையில், திருப்பதியில் ஒரு ஸம்ஸ்கிருத பாடசாலை ஆரம்பிக்கும்படி ஏற்பாடு செய்ய கவர்னரை வேண்டினார். கவர்னரும் அப்படியே செய்ய மகந்துவுக்கு உத்திரவிட்டார். இப்பாடசாலை 1885-வது வருஷத்தில், ஆரம்பிக்கப்பட்டது. அது முதல் 1925 வருஷம் வரை இந்த ஸ்வாமி பாடசாலை உபாத்தியாயராக இருந்து அனேக சிஷ்யர்களுக்கு வித்யா ப்ரதானம் பண்ணிக்கொண்டு வந்தார். ஒரு சமயம் வட தேசத்திலிருந்து ஒரு வித்வான் இவருடன் சாஸ்திரத்தில் சர்ச்சை செய்து இவர் சொல்லும் கக்ஷிக்குமேல் கக்ஷி சொல்ல முடியாமல் நின்று போய், மகந்துவினிடம் சென்று, இவர் பாண்டித்யத்தைப் பற்றி மிகவும் புகழ்ந்தான். அப்போது மகந்துவாக இருந்த பகவான் தாஸ் என்பவருக்கு இவரிடத்தில் விசேஷ பஹுமானம் உண்டாயிற்று.

1892-வது வருஷத்தில் இவர் மயிலாப்பூரில் சிலகாலம் வசிக்க ஜஸ்டிஸ் சுப்ரமண்ய ஐய்யருக்கு சங்கரபாஷ்யத்தைப் போதித்தார். இதற்குமுன் பல அத்வைதி வித்வான்களிடம் மேற்படி ஐய்யர் அவர்கள் அத்வைத வேதாந்த ப்ரக்ரியை கேட்டிருந்தும் இவரிடம் கேட்ட பிறகே அவருக்கு புதிதாக கண் திறக்கப்பட்டதுபோல் ஆயிற்று. இவருடைய உபன்யாஸத்தைக் கேட்டதின் பயனாக மேற்படி ஐயர் அவர்கள் உபனிஷத்துக்களுக்கும், ப்ரம்ஹ ஸூத்ரங்களுக்கும் அத்வைதிகள் சொல்லும் அர்த்தமே பொருந்தினது எனத் தோன்றுகிறதே, விசிஷ்டாத்வைதிகள் சொல்லும் ப்ரக்ரியை யாது எனக் கேட்டார்கள். அப்போது இவர் பாஷ்யத்தை தனியாக வாசித்தால் இவற்றுக்கு எல்லாம் பதில் கிடைக்கும். அதற்கு, உண்மையான குரு சிஷ்ய பாவம் வேண்டும் என்றார். 1908வது வருஷத்தில் காஞ்சீபுரத்தில் ரஜஸ்வலா விவாஹம் த்வீபாந்தர யாத்திரை இவற்றைப்பற்றி பெரிய ஸபை கூடியது. அங்கு மேற்சொன்ன இரண்டும்

அசாஸ்திரீயங்கள் என்று பல ப்ரமாண யுக்திகளால் நிர்ணயித்தருளினார். அங்கு வந்திருந்த ப்ரபல வித்வான்கள் அனைவரும் இவருடைய உபன்யாஸத்தை பலமான சிரக்கம்பத்துடன் கேட்டுக் கொண்டாடினார்கள். 1911 வது வருஷத்தில் மத்வ ஸம்பரதாயத்தைச் சேர்ந்த உத்தராதி மடத்தின் ஸ்வாமி காசியில் வந்திருந்தார். அங்கு சில அத்வைதிகள் முத்ராதாரணம் கூடாது என்று ஆக்ஷேபித்தனர். அதற்கு பதில் சொல்லுவதற்கு இந்த ஸ்வாமியை காசிக்கு எழுந்தருளும்படி வேண்டினார். அப்படியே இவர் சென்று, சிவகுமார சாஸ்திரி முதலிய பல வித்வான்களுடன் வாதம் செய்து, தப்த முத்ராதாரணம் அவச்யம் என்ற ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தினார். அப்போது வடதேசத்தில் இவருடைய பாண்டித்யம் ப்ரபலமாய் பரவிற்று. ஸ்ரீமான் பண்டித மதன்மோஹன் மாளவியா இவருடைய பாண்டித்யத்தைக் கண்டு வியந்து மிகவும் ஸம்மானித்தார். காசி ஹிந்து ஸர்வ கலாசாலையில் வேதாந்த பகுதியை, திறந்து வைக்கும்படி இவரை மாளவியா வேண்டினார். வேண்டுகோளின்படி மேற்படி கலாசாலைக்குச் சென்று வேதாந்த வித்யா பகுதியைத் திறந்து வைத்து அந்த ஸர்வ கலாசாலையில் மெம்பராகவும் வெகுநாள் இருந்தார்.

1917வது வருஷத்தில் இந்திய கவர்ண்மெண்டார் மஹா மஹோபாத்யாய பட்டமளித்தார். 1922-வது வருஷம் ஜனவரியில் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தபோது இவர் ஒரு வரவேற்பு பத்திரத்தை அளித்தார். இவருடைய பாண்டித்யத்திற்கு மெச்சி இளவரசர் இவருக்கு தங்க தோடாவை பரிசளித்தார். இவர் அநேக வருஷங்கள் சென்னை ஸர்வ கலாசாலையிலும் ஆந்த்ர ஸர்வ கலாசாலையிலும், மைசூர் ஸர்வ கலாசாலையிலும், ஓரியண்டல் டைட்டில் போர்ட்டு மெம்பராக இருந்தார். ஏறக்குறைய 40 வருஷ காலம் திருப்பதி ஸம்ஸ்கிருத காலேஜ் ப்ரின்ஸிபாலாக இருந்து 1925 வருஷம் ஜூலை மாதத்தில் மேற்படி பதவியிருந்து விலகினார். மைசூர் மகாராஜா தனது ஸம்ஸ்தானத்தில் ஆஸ்தான பண்டிதராகவும், தர்மாதிகாரியாகவும், இருக்கும்படி, அதற்கு மாதம் ரூபாய் 200 சம்பளம் கொடுப்பதாகவும் வேண்டினார். அதற்கு இவர் திருப்பதி ஸ்ரீனிவாஸனுடைய திருவடிவாரத்தை விட்டு வேறு இடத்திற்குச் செல்ல ப்ரியமில்லாதவராய் மேற்சொன்ன வேண்டுகோளை மறுத்துவிட்டார். திருவேங்கடமுடையானுடைய மஹிமையை பல விடங்களில் பலவாறாக இவர் ஸ்தாபனம் செய்து வந்தபடியால் மேற்படி திருவேங்கடமுடையான் இவரிடம் விசேஷமாக அருள் கொண்டார் என்று எண்ணக்கூடும்.



இந்த ஸ்வாமி அருளிய க்ரந்தங்கள்

(1) கார்யாதி கரணச்வாஸம்.
(2) "ராமம் தசரதம் வித்தி" ச்லோக தாத்பர்யங்கள்
(3) நித்ய வபூதி வைபவம்
(4) வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டம்
(5) ஸித்தாந்த த்ரய ஸங்க்ரஹம்
(6) சதுஸ் ஸூத்ரீ ஸாகரம்
(7) ஜாதி நிர்ணயம்
(8) தத்க்ரதுந்யாய வாதம்
(9) ஈசாவாஸ்யோப நிஷத் ஸித்தாந்த சந்திரிகா
(10) ச்ருதி தாத்பர்ய சந்திரிகை
(11) ஸ்ரீ பாஷ்ய பூஷணம்
(12) நாராயணாநுவாக பாஷ்யம்

சென்னையில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் முதல் ஸ்தபகமாக ப்ரசுரிக்கப்பட்ட ஸ்ரீ ந்யாய ஸித்தாஞ்ஜந க்ரந்தத்தை இந்த ஸ்வாமி, வெகு ச்ரமம் எடுத்துக்கொண்டு பரிசோதித்து பதிப்பித்ததுமின்றி அரியதும் பெரியதுமான ஓர் முகவுரை ஷை க்ரந்தத்திற்கு எழுதியிருக்கிறார். 1934 வது வருஷம் மே மீ" த்தில் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ தேவாதிராஜ திவ்ய மஹோத்ஸவ ஸமயத்தில் நாநாதேசங்களிலிருந்து வந்து கூடின மஹா பண்டித ஸபையில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபா மூலமாய் இந்த ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணி,

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த விஜயத்வஜ: என்ற பிருதம் அளிக்கப்பட்டது.

பண்டித ச்ரேஷ்டர்களும் அநேக மஹநீயாசார்யர்களும் சேர்ந்து ஸமர்ப்பித்த இந்த பிருதம் நமது ஸ்வாமிக்கு இந்தியா சக்கிரவர்த்தி கொடுத்த மஹாமஹோபாத்தியாய பிருதத்தைக் காட்டிலும் விசேஷ ஆதரத்துடன் அங்கீகரிக்கக் கூடியதாயிருந்தது.

மேற்சொன்ன பிருதத்தை ஸமர்ப்பிக்கும்போது ஷை ஸபையார் கொடுத்த அபிநந்தந பத்திரிகை பின் வருமாறு.

श्रीः

॥ श्रीमते रामानुजाय नमः ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

श्रीमद्वेदमार्गप्रतिष्ठापनाचार्याणां, नैकविधप्रस्थानभेदविततरवेदान्तविद्याविशारदानां महामहोपाध्यायानां कपिस्थलम्—देशिकाचार्याणां सन्निधौ श्रीवैष्णवसिद्धान्त-

प्रचारसभया सप्रणामं समर्पिता अभिनन्दनबिरुदपत्रिका ।

अयि भो आचार्यवर्याः ! आस्माकीना सभा एषा दिवाकरसहस्रेणापि अभेद्यं अखिलं आन्तरं तमः अपनेतुं अलंकर्मीणस्य इदानीं कालमहिम्ना दीनां दशां आस्थितस्य श्रीभगवद्रामानुजदर्शनस्य पुनरुद्धरणाय प्रतिष्ठापिता वर्तते ।

परमकारुणिकैः श्रीनिगमान्तमहादेशिकप्रभृतिभिः परमाचार्यैः तत्त्वहितपुमर्थेषु पण्डितपामरसाधारण्येन सर्वेषां अध्यात्मं चक्षुरुन्मीलनमभिसन्धाय प्रणीतान्, अखिलैः पक्षपातरहितैः विप्रश्चित्तल्लजैः सशिरःकम्पं अभिनन्दितान्, दुस्तरसत्तर्कप्रक्रियादूरीकृत-कथककुलकोलाहलान्, कालत्रयेऽप्यद्वितीयान्, प्रबन्धान् अत्यद्भुतं ग्रन्थप्रौढिमानं अनुरुध्य यथामनोरथं सुष्ठु संमुद्रय अखण्डेऽपि भूमण्डले प्रचयकरणाय यथाशक्नं व्यवस्यति च ॥

तत्र श्रीनिगमान्तमहादेशिकानुगृहीतं न्यायसिद्धाञ्जनं नाम ग्रन्थरत्नं प्रथमं संमुद्रितुं आरब्धवन्तो वयं ग्रन्थस्यास्य सम्यक् संशोधनेन अत्याश्चर्यप्रतिभाप्रवाहपरिवाह-भूतेन सुष्ठुप्रतिपादितदुरूहशास्त्रप्रक्रियापटलेन सरळसरळया वाक्यसरण्या समुद्ग्रथितेन उपोद्घातेन च उपकृतवत्सु तत्रभवत्सु सर्वे इमे कृतज्ञतामनुसन्दध्महे ॥

दुर्वारदुर्वादिगर्वनिर्वापणचणं स्वतस्सिद्धेन प्रौढिम्ना विराजमानमिदं न्यायसिद्धाञ्जनं तत्रभवद्भिः अनुगृहीतेन उपोद्घातेन सम्यक् उपस्कृतं पूर्वापेक्षया विशेषतः शोभातिशयं पुष्णाति इति नितरां चिक्रीयामहे च ॥

भोः ब्रह्मविदग्रेसराः ! सर्वेषां अकृतकवचसां सामरस्यसंपादकत्वेन वरिष्ठस्य श्रीमन्नाथयामुनादिपरमाचार्यप्रणीतैः प्रबन्धैः भूयांसं भूमानं आरोपितस्य श्रीविशिष्टाद्वैत-सिद्धान्तस्य श्रीव्याससिद्धान्तमार्तण्डप्रभृतिबहुग्रन्थप्रणयनेन सुबहु उपकृतवताम्, पदवाक्य-प्रमाणपारावारपारीणधिषणावैभवसमुल्लासितसकलसहृदयहृदयानाम्, प्रचण्डतरवितण्डा-डम्बरपराजितपण्डितप्रकाण्डैः तीक्ष्णतरधिषणावधीरितधिषणैः निरङ्कुशप्रवेशकलुषीकृत-निखिलविद्यास्थानैः बहुभिः वादिभिः समं अनेकशः वादं आरचय्य कन्थाशतग्रन्थिलानि नानाविधानि बहिर्मतानि अपुनरुन्मेषं प्रतिक्षिप्तवतां भवतां सन्निधौ यथोचितं कृतज्ञतां अनुष्ठातुं अपारयन्तः वयम्



"श्रीरामानुजसिद्धान्तविजयध्वजः"

इति बिरुदं वितरीतुं कुतूहलिनो भवामः । सोऽयं बिरुदः प्रतिगृह्यतां इति संप्रार्थयामहे ॥

इति

श्रीवैष्णवसिद्धान्तप्रचारसभानिर्वाहकाः

मद्रपुरी.

*தமது பாண்டித்யத்தையும், வாழ்நாட்களையும் சிறிதேனும் வீணாக்காமல் உபகரித்த இப்படிப்பட்ட மஹநீய வ்யக்தி கிடைப்பது அதி துர்லபம்.*

*இவ்விதம் அநேக தசாப்தங்களாய் நம்முடைய விசிஷ்டாத்வைத திருமலையின் உச்சியில் ப்ரகாசித்துக் கொண்டிருந்த ப்ரதீபமானது அணைந்து விட்டது. ஏற்றி வைத்தவனே அணைத்து விட்டால் யார் தாம் ஏது செய்யலாம். மற்றோர் தீபத்தை அவனே தான் ப்ரதிஷ்டை செய்து அநுக்ரஹிக்கவேண்டும்.*

---

## மஹாமஹோபாத்தியாய
## லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமி

*இம்மாதம் மற்றுமொரு ஸ்ரீ வைஷ்ணவ மஹா வித்வானுடைய நிர்யாணத்தைக் குறித்தும் எழுத வேண்டி நேரிட்டது, நம்மவர்களின் பெரியதோர் தௌர்பாக்கியமே. நாளது ஜனவரி மாதம் 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பரமபத மடைந்தார் மைசூரில் தனது கிருஹத்தில் இந்த ஸ்வாமியும். இவருக்கு நிர்யாண காலத்தில் வயது ஏறக்குறைய 72 ஆயிருப்பினும் நாம் அவரை ஐந்தாறு மாதங்களுக்கு முன் சேவித்த பொழுது கூட அரோக திடகாத்திரராகவே எழுந்தருளி யிருந்தார்; ஆதலால் இவ்வளவு சீக்கிரத்தில் அவரை ஸ்ரீ வைஷ்ணவ உலகு இழந்துவிட நேரிடும் என நாம் நினைக்கவில்லை; அவர் ஜனன ஸ்ரீகிராமம் சித்தூர் ஜில்லா லக்ஷ்மீபுரம், மஹா பரமை காந்திகள் என்று ப்ரஸித்தமான நல்லான்சக்கிரவர்த்தி குலத்தில் அவதரித்தவர். ஜகதாசார்யனாக எழுந்தருளி யிருந்த ஸ்ரீ கேதாண்ட பட்டி ஸ்வாமிக்கு பூர்வாச்ரம வம்சத்தில் நெருங்கிய ஸம்பந்த முடையவர். கேதாண்டபட்டியில் ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ.ப. விரக்தி ராகவாசார்ய ஸ்வாமியின் திருவடி. மைசூரில் மிக ப்ரஸித்தராக ஆஸ்தான வித்வானாக எழுந்தருளியிருந்த பண்டிதரத்ந கஸ்தூரி ரங்காசார்ய ஸ்வாமியிடம் பூர்வ மீமாம்ஸை கற்று அதில் விசேஷ தேர்ச்சி பெற்றவர்.*

இம்மஹநீயர் சிறு வயது முதலே ஸம்ஸ்கிருத ஸாஹித்யம், சாஸ்திரம் முதலியவைகளில் அசாதாரணமான பாண்டித்யத்தை சம்பாதித்து ப்ரக்யாதியை அடைந்தார். மைசூர் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மஹாராஜா—சம்ஸ்கிருத கலாசாலையில் தர்க்கம், மீமாம்ஸை, வேதாந்தம், ஆகமங்கள் முதலான சாஸ்திரங்களில் தலைமை வகித்து, அநேக வருஷங்கள் வித்யார்த்திகளுக்குப் போதித்து வந்தார். ஆங்கில ராஜாங்கத்தினரால் "மஹா மஹோபாத்தியாயர்" என்கிற பிருதுநாமாவும், "ஆதுனிக ஜனகர்" என்று கீர்த்திபெற்ற மஹாராஜாவினால் "பண்டித ரத்னம்" என்கிற பிருதத்தையும் அடையப்பெற்றார்; மஹாராஜரின் அரண்மனையில் ஆஸ்தான தர்மாதிகாரியென்ற பதத்தையும் அலங்கரித்தார். அவருடைய வைதுஷ்யமும் கீர்த்தியும் மைசூர் ராஜ்யத்தில் மாத்திரமல்லாமல் தென்னிந்தியாவில் அநேக இடங்களில் பரவியது. இந்த ஸ்வாமியும் ஸ்ரீ கபிஸ்தலம் ஸ்வாமி போலவே ஒரு நாளையாவது வீணாக்காமல் கூடிய வரையில் ஸ்வாத்தியாயப் பிரவசனங்கள் மாத்திரமேயன்றி புதிது புதிதாய் கிரந்த லேகன விஷயத்தில் உத்ஸாகமுள்ளவராய் எழுந்தருளியிருந்தார். அந்த ஸ்வாமி போலவே இவரும் ம்ருதுபாஷியாய் கண்டவர் கேட்டவர் மனங்களை ஆகர்ஷித்து விளங்கினார்.

ஸ்ரீபரகால ஸ்வாமி மடத்திலும் இந்த ஸ்வாமி அநேக பரீக்ஷா முதலான விபவங்களிலும் அந்வயிக்கும்படியாக விருக்கும்.

இந்த ஸ்வாமியோ உன்னத ஆக்ருதியுடனும் அதற்குத் தகுந்த தேக அமைப்புடனும் ஸ்நிக்த வர்ணத்துடனும் விசாலமான நெற்றியுடனும், ஸ்ரீவைஷ்ணவ தேஜஸ் பிரகாசிக்க விளங்கினார். இந்த ஸ்வாமியையும் நாமும் நமது ஸித்தாந்தமும் இழக்க நேரிட்டது. பகவத் ஸங்கல்பத்தினால் இம்மஹானைப்பற்றி இன்னம் வெகுவாய் எழுதக் கூடுமானாலும் எழுதவேண்டிய தவசியமேயானாலும் அவகாசக் குறைவினால் இத்துடன் விரமிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இம்மஹானுடைய சரித்திரமும் மார்க்கதரிசித்வமும் உத்ஸாகமும் முயற்சியும் எழுதி வெளிப்படுத்திய கிரந்தங்களும் வெகுகாலம் நம் மவர் யாவருக்கும் ப்ரோத்ஸாஹகமாக ஏற்பட வேண்டுமென்று ப்ரார்திக்கிறோம்.

இந்த ஸ்வாமி மிகவும் கம்பீரமாயும் மிக ஸரளமாயு மிருக்கும் நடையில் மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் 'மாநமேயரஹஸ்ய ச்லோக வார்திகம் என்ற க்ரந்தமும் ஸர்வ சாஸ்த்ரங்களின் ஸங்க்ரஹ ரூபமாக 'தர்சனோதயம்' என்கிற க்ரந்தமும் விசிஷ்டாத்வைத தரிசனத்தில் 'ராமாநுஜ தர்சனம்' என்று ஒரு க்ரந்தமும் மற்றும் லோகோபயோகியான அநேக நூற்களையும் செய்தருளி யிருக்கிறார். அநேக பத்ரிகைகளில் பல நுட்பமான விஷயங்களைப்பற்றி பல உபந்யாஸங்களை வடமொழியில் எழுதி வெளியிட்டுமிருக்கிறார்.

# தீபிகையைப் பற்றி விளம்பரம்.

சென்ற மாத ஸஞ்சிகையில் தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணியையும் தீபிகையையும் ஒன்று சேர்த்து நடத்துவதாக ஏற்பாடு நடந்து வந்ததைத் தெரிவித்திருந்தோம். அவ்விதம் நடந்தேறவில்லையென்று இதனால் தீபிகாமானிகள் யாவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஏகீபாவமென்பது ஐக்கியம். பல ஒன்று சேர்வது பலத்திர்க்கும் ப்ரபலத்திற்குங்கூட காரணமாகும். அதை யோசித்துதான் ஒன்று சேர்க்கப்படவேண்டுமென்கிற பிரயத்தனம் அங்கீகரிக்கப்பட்டது. ஆயினும், சில காரணங்கள் பற்றி ஸம்ரக்ஷிணியின் முக்கிய அபிமானிகளுக்குள் அவ்வித ஒன்று சேர்க்கையே பரஸ்பர வைரஸ்யத்திக்குக் காரணமாகுமென்று தெரிய வந்ததால் அந்தப் பிரயத்தனம் இருதரத்தாராலும் விட்டுவிடப்பட்டது. ஆதலால் இதுவரையில் போலவே இன்னும் தீபிகையானது நடத்தப்படும். இதுவும் அநேக காரணங்களை உத்தேசித்து பகவதாஜ்ஞா ரூபமான பரமஹிதமாகவே கருதக்கூடும்.

முன் ஸஞ்சிகையில் மேற்சொன்ன விதம் ஒன்று சேர்ப்பதை உத்தேசித்து வருஷாந்திர சந்தாவை மூன்று ரூபாயிலிருந்து குறைத்து 2-ரூபாயாக மாற்றுவதாகத் தெரிவித்திருந்தோம். அவ்விதம் குறைப்பதாக தெரிவித்த விஷயத்தில் அநேகர் தங்களுக்குண்டாயிருக்கும் த்ருப்தியையும் ஸந்தோஷத்தையும் நமக்குத் தெரிவித்தார்கள். இந்த தீபிகையை தத்காலம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தப் பிரசார சபையார் ஏற்றுக்கொண்டு நடத்திவருவது திரவிய லாபத்தை உத்தேசித்ததல்லவென்று அனைவருக்கும் தெரியும். மேலும் தீபிகையானது ஸரியான சந்தா ஸுலபத்தில் கொடுக்க முடியாத ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகத்தைச் சார்ந்த ஆண் பெண் எல்லோராலும் படிக்கப்படவேண்டுமென்று அபிலாஷை கொண்டிருக்கிறோமாகையால் அவ் வபிலாஷை நிரைவேறுவதற்கு இவ்விதம் சந்தாவைக் குறைப்பது உபாயமாய் ஏற்படக்கூடுமென்று நமது நண்பர்களில் அநேகர் அபிப்பிராயப் படுவதாலும், ஏதோ ஒரு காரணத்தினால் சந்தாவை குறைப்பதாகத் தெரிவித்ததை திரும்பவும் ஏற்ற வேண்டாமென்று தீர்மானித்திருக்கிறோம். ஆதலால் இந்த ஜனவரி மாதம் முதல் தேதி முதல் இப்புது வருஷத்தில் புது வால்யூமாக ஆரம்பித்து, ஒவ்வொரு மாத ஸஞ்சிகையையும் இங்கிலீஷ் வருஷக் கணக்கு ரீதியில்

கணக்கிட்டு வருவதாகவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அந்த காரணத்தால்தான் இந்த ஸஞ்சிகை 27வது வால்யூம் முதல் நம்பராகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இது முதல் சந்தாவானது ஜனவரி முதல் டிஸம்பர் வரையில் என்று கொடுக்கப்படவேண்டியது. வருஷ நடுவில் சேருகிறவர்கள் சந்தா செலுத்தி முன் மாத ஸஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது ஒவ்வொரு மூன்று மாதங்களாலாகிய கால் வருஷம் ஒன்றுக்கும் 8-அணு வீதம் செலுத்தலாம். ஏற்கனவே இந்தப் புது வருஷத்தில் ஒரு பாகத்திற்கும் சந்தா செலுத்தியிருப்பவர்கள் விஷயத்தில் இது வரையில் செலுத்தியிருக்கும் சந்தாவை சென்ற டிஸம்பர் மாதம் வரையில் பழைய கணக்குப்படி வரவு வைத்துக்கொண்டு மிகுதியிருப்பதை இவ்வருஷத்திற்கு வாவு வைத்துக்கொண்டு பாக்கி யிருப்பதைத் தெரிவித்து வரப் பெற்றுக்கொண்டு வர உத்தேசப்பட்டிருக்கிறோம். அவ்விதமே சீக்கிரம் நடத்தப்படும். ஆனால் சந்தாவைக் குறைத்த போதிலும் அவ்விதம் குறைத்தது அடிப்படை குறைந்த சந்தாவாகையால் அது அதற்குமேல்செலுத்த சக்தியற்றவர்களுக்கும், செலுத்த இஷ்டமில்லாதவர்களுக்கு மாத்திரமே. மற்றபடி இந்த தீபிகையானது ஸரிவர விருத்தியடைந்து நடைபெறவேண்டுமென்று உத்ஸாகமுடைய எல்லோரும் யதேஷ்டமாய் அதற்குமேல் எவ்வளவு செலுத்தி உபகரிக்கக்கூடுமோ அவ்வாறு உபகரிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

இவ்வருஷம் முதல் கூடிய வரையில் தீபிகையில் ஒவ்வொரு மாதமும் விஷயங்கள் ஸுலபமாய்த் தெரிந்து கொள்ளக்கூடியதாயும் புதிது புதிதாயும் வெவ்வேறு விதங்களாயும், ரஸமுள்ளவைகளாயும் எளிய நடையுள்ளவைகளாயும் வியாஸங்களாம் கட்டுரைகளாயும் எழுதிப் பிரசுரிக்குமாறு யோசித்திருக்கிறோம்.

இத்தீபிகையானது ஏற்கனவே ஸித்தாந்த ஸம்ப்ரதாய விஷயங்களில் பாண்டித்யம் அடைந்திருக்கிறவர்களுக்காக உத்தேசித்ததல்ல. ஆதலால் அவ்விஷயங்களில் இன்னும் தெரிந்து கொள்ள ஆவலுடையவர்களுக்கும், நவீன ரீதியில் கண்டறிய ருசியுள்ளவர்களுக்கும் முக்கியமாய் உபயோகப்படவேண்டியதென்றும் யோசித்திருக்கிறோம்.

இவையெல்லாம் அறிந்து உகந்து நம் ஸமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் தீபிகாபிமானிகள் ஆவார்களென்று மிகவும் பிரார்த்திக்கிறோம்.

---

ஸ்ரீ:

# ஜாதி நிர்ணய ஸங்க்ரகம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஆஸ்தான வித்வான் அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்.]

## அவதாரிகை

இவ்வுலகத்தில் மனிதர்களினால் மிகவும் சிரமப்பட்டு அனுபவிக்கப்படுகின்ற பலவித காமசுகங்களை தாழ்ந்த ஜன்மாக்களான ஸர்வப்ராணிகளும் அனுபவிக்கக் காண்கிறபடியினால் உயர்ந்ததான மனுஷ்ய ஜன்மாவை அடைந்திருப்பதர்க்கு அந்த காம சுகங்கள் ப்ரயோஜனங்களாக ஆக மாட்டா.

உயர்ந்த தவங்களைச் செய்து அதனால் சாச்வதமான ப்ரம்மானந்தத்தை அனுபவிப்பதுதான் மனுஷ்ய ஜன்மத்திர்க்கு ப்ரயோஜனமாக ஆகும் என்று பாகவதம்—ஸ்கந்தம்—5 அத்—5 ல்

नायं देहो देहभाजां नृलोके कष्टान् कामानर्हति
विड्भुजां ये । तपो दिव्यं पुत्रका येन सत्त्वं शुद्ध्ये
द्यस्माद् ब्रह्मसौख्यं त्वनन्तम् ॥

என்ற ச்லோகம் சொல்லுகிறது.

இப்படி சாச்வதானந்தமான மோக்ஷத்தை அடைவதர்க்கு ஸாதநமான மனுஷ்ய தேகத்தை அடைந்திருந்தும் அந்த க்ஷேமத்தைத் தேடிக்கொள்ளாமல் சிற்றின்பத்திலேயே ஆழ்ந்திருக்கும் மனிதன் ஆரூடபதிதன்) அதாவது பிறந்தும் கெட்டவன் என்று—

यः प्राप्य मानुषं देहं मुक्तिद्वारमपावृतम् ।
गृहेषु खगवत्सक्तस्तमारूढच्युतं विदुः ॥

என்கிற—ஹாரீத வசனம் சொல்லுகிறது.

இங்கு தபஸ் என்கிற சப்தம் மற்றும் பலவித தர்மங்களையும் குறிப்பிடுகிறது.

இப்படி மனிதனால் செய்யப்படவேண்டிய தவங்கள் (அல்லது தர்மங்கள்) எல்லா மனிதர்களுக்கும் ஒரே விதமாக இல்லாமல்—

स वर्णधर्मेष्वाश्रमधर्मेषु तं प्रति नाना भवेत्स.

என்கிறபடியே அந்தந்த ஜாதி, ஆச்ரமங்களைக் குறித்து வெவ்வேருக இருப்பதால், அவைகளுக்குள் தம் தம் ஜாதிக்குப் பொருந்தினவை களையே செய்யவேண்டும். அவைகளையும் ஈச்வரனுடைய ஆராதன ரூபமாகவே செய்யவேண்டுமென்பதை—பகவத்கீதை—அத்—18—45, 46வது ச்லோகங்கள் சொல்லுகிறன.

இப்படி அந்தந்த ஜாதி மனிதன், செய்யவேண்டிய தர்மங்களை விட்டு விட்டால், அதினல் பாபங்களும், நரகங்களும் ஸம்பவிக்குமென்பதை,

யஸ்ஸ்வயம்வரிதாஜீ வாஷ்ணீதாஹ்ய தெ வாடியெ: ।
தசு ஸம தூசு தசுஸஊஸ்ராசு தாவாஹாவவி வாவிநள ।
ததஸ்ஸ்வயஉம் கீதிம் உ ஷிகூா வாவஉவாஸ்ஹவி ॥

என்பவை முதலிய பல ப்ரமாணங்கள் சொல்லுகின்றன.

ஆகையினுல் சாஸ்திரங்களினுல் சொல்லப்படும் தர்மங்கள் எல்லாம் ஜாதி பேதங்களை முன்னிட்டே சொல்லப்படுவதால், மனிதன் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களுக்குள்—ஜாதிகளும் அவைகளின் பேத ஹேதுக்களும் முக்கியமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியவை.

## ஜாதி விஷய விவாதங்கள்

இக்காலத்தில் சிலர் மனிதன், மாடு, ஆடு, முதலியவைகளுடைய பேதங்கள் எப்படி ப்ரத்யக்ஷத்தினுல் காணப்படுகின்றனவோ அப்படி பிராமணன், க்ஷத்ரியன், வைச்யன், முதலிய ஜாதி பேதங்கள் ப்ரத்யக்ஷ ஸித்தங்களாகத் தோன்றவில்லை ; ஆகையினுல் பிராமணுதி ஜாதிகள் உலகத்தில் சிற்சில காரியங்களை. உத்தேசித்து நமது முன்னேர்களினுல் கேவலம் கட்டுப்பாடாக ஏற்படுத்தப்பட்டவை என்கிருர்கள்.

வேறே சிலர் சமம், தமம், முதலிய சில நற்குணங்களை உடையவன் பிருமணுகிருன். சூரத்தனம், ஸாமர்த்யம், தைரியம், ஆளும் திறமை முதலிய சில குணங்களை உடையவன் க்ஷத்ரியனுகிருன். க்ருஷி, கோரக்ஷணம், வர்த்தகம், இவைகளை உடையவன் வைச்யனுகிருன். ஆக பிராமணுதி ஜாதி பேதங்கள் இப்படி குணங்களினுலும் அவனவன் செய்கிற வேலைகளினுலும் உண்டாகின்றன என்கிருர்கள்.

மற்றும் சிலர் பிராமணுதி ஜாதிகள் கீழே சொல்லப்பட்ட குணங்கள் செயல்களால் ஏற்படக்கூடியவை அல்ல ; மனுஷியன், மாடு, ஆடு,



முதலிய ஜாதிகளைப் போலவே பிறவியினுலேயே அவைகள் உண்டாகின்றன, மரணுந்தமாகவே, போகின்றன என்கிருர்கள்.

இந்த ஜாதி விஷயத்தில் இவ்வுலகத்தில் இப்படி பல்விதங்களான அபிப்பிராய பேதங்களிருப்பதாலும், இவற்றுள் எது ஸரியானது என்பதை புத்திமான்கள், விசாரித்து தெரிந்து கொள்ளவேண்டிய தவச்யமாகும். ஆகையினுல் பிராமணுதி ஜாதி விஷயத்தில் நமது சாஸ்திரங்களினுடையவும் முன்னேர்களுடையவும் அபிப்பிராயத்தை சுருங்க எழுதுகிருேம்.

## ஜாதி என்பது எது

இவ்விஷயத்தில் வைசேஷிகர்களுடைய மதம்—நாம் ஒருவகையான ஆடுகள் அல்லது மாடுகள் போன்ற பல வஸ்துக்களை பார்க்கும்பொழுது இது ஆடு, இதுவும் ஆடு, அல்லது, இது மாடு இதுவும் மாடு, என்று வெவ்வேறன வஸ்துக்கள் விஷயத்தில் ஒரே மாதிரியான தோற்றமும் இவை எல்லாம் ஆடுகள், இவை எல்லாம் மாடுகள் என்று ஒரே மாதிரியான வ்யவஹாரமும் உண்டாகுவதை ப்ரஸித்தமாகப் பார்க்கிருேம்.

இப்படி வெவ்வேருகத்தோன்றும், வஸ்துக்களில் ஒரே மாதிரியான தோற்றம், வ்யவஹாரம் இவைகளுக்கு ஓர் காரணமிருக்க வேண்டும்.

ஆகையினுல் எல்லா ஆடுகளிலும் அல்லது எல்லா மாடுகளிலும் பரவி இருக்கிறதான ஓர் வஸ்துவை அங்கீகரிக்க வேண்டியதவச்யம். அது தான் ஜாதி என்று சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிருர்கள்.

இப்படிப் பலவஸ்துக்களிலும் ஒரே ஜாதி இருப்பதாக ஒப்புக்கொள்ள வேண்டியதாக முடிந்ததால், ஓர் ஆடு இறந்து போனுலும் அந்த அஜத்வம், என்கிற, ஜாதி, மற்ருெரு ஆட்டிலிருப்பதினுல்—அது நித்யம் என்றும் சொல்லுகிருர்கள்.

## இவ்விஷயத்தில்—வேதாந்திகளுடைய மதம்

நாம் ஆடு, மாடு—முதலிய வஸ்துக்களைப் பார்த்ததும்—அந்தந்த வஸ்துக்களிலுள்ளதான எந்த அடையாளங்களைக் கொண்டு, இது ஆடு, இது மாடு என்று தீர்மானித்துக் கொள்ளுகிருேமோ அந்த அடையாளம் தான் ஜாதி என்றும், ப்ரத்யக்ஷமாகத் தோன்றுகிற (தஸூஉவயவஸம்ஸ்தாநவிசேஷ)மென்கிற அடையாளத்தைத் தவிற வேறு நித்யமாக ஓர் ஜாதியை அங்கீகரிக்க ப்ரமாணமில்லை என்கிருர்கள்.

இந்த மதத்தில் அந்தந்த வஸ்து ஸம்ஸ்தானத்தையே ஜாதியாக அங்கீகரிப்பதால் ஜாதி நித்யமல்ல. வெவ்வேருக இருக்கும் வஸ்துக்

கள்—ஒரே மாதிரியாக தோன்றுவதற்கு ஸாத்ருச்யம் காரணம் என்கிறார்கள்

ப்ராம்மண்யம்—முதலியவை ஜாதிகள்தான். இவ்வுலகத்தில் நம்மால் வ்யவஹரிக்கப்படும் சப்தங்கள் ஜாதி சப்தங்கள் குண, சப்தங்கள், க்ரியா சப்தங்கள், யத்ருச்சா சப்தங்கள், என்று, நான்கு வகைகளாக இருக்கின்றன.

அவற்றுள் ஆடு, மாடு, மனிதன், இம்மாதிரியான சப்தங்கள் ஒவ்வொரு ஜாதியைச் சொல்லுகிறபடியினால்—ஜாதி சப்தங்கள் என்று சொல்லப்படுகின்றன.

சிவப்பு, கருப்பு, புளிப்பு, கசப்பு முதலிய குணங்களைச் சொல்லுகிற சப்தங்கள்—குண சப்தங்கள் என்று சொல்லப்படுகின்றன.

சமைக்கிறான், போகிறான், வருகிறான் என்பவை போன்ற சப்தங்கள் வேலைகளைச் சொல்லுகிறபடியினால் க்ரியா சப்தங்கள் என்று சொல்லப்படுகின்றன. காரணப்பெயராகச் சொல்ல முடியாத டித்தன் என்பது போன்ற இடுகுறிப் பெயர்களை யத்ருச்சா சப்தங்கள் என்கிறது.

வியாகரண சாஸ்திரத்திர்க்கு பாஷ்யம்செய்தருளின பதஞ்சலி மகர்ஷியானவர் வியாகரண ஸூத்ரம் அத்—6—பாதம்—4—"ப்ராஹ்மோ ஜாதௌ" என்கிற ஸூத்திரத்தின் பாஷ்யத்தில்—ப்ராமண சப்தத்தை ஜாதி சப்த மென்று தீர்மானித்திருக்கிறார்.

ஷை பாஷ்யத்திற்கு—வ்யாக்யானமான கைய்யட க்ரந்தத்திலும் ப்ராஹ்மணசப்தம் ஜாதி சப்தந்தான் என்று விஸ்தாரமாக விசாரித்து தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மனு முதலிய பல மகர்ஷிகளாலும் அது அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தை—ஸ்ரீ நிகமாந்த தேசிகன் தத்வடீகை என்கிற க்ரந்தத்தில்—ப்ராஹ்மணன் முதலான சப்தங்கள் ஜாதி சப்தங்கள் என்பது வியாகரண சாஸ்திரத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்று எழுதி அதற்கு ப்ரமாணமாக—(ஜாஹ்மோஜாதௌ) என்கிற ஸூத்ரத்தையும் எழுதி இருக்கிறார். ஆகையினால் சிலர், ப்ராஹ்மணாதி சப்தங்கள் ஜாதி சப்தங்கள் அல்லவென்றும், சமம் தமம் முதலிய குணமுடையவர்களைச் சொல்வதால் அவை குண சப்தங்களென்றும், சொல்வது சரியல்ல.

(தொடரும்)

---

# ஸ்ரீ பராசர பட்டரின் திருமஞ்சனக்கவிகள்

[உ.வே. A. ஸ்ரீநிவாஸராகவன், புதுக்கோட்டை]

ஸ்ரீரங்கத்தில் பொங்கோதம் ஆழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைத் திருவரங்கச் செல்வனான ஸ்ரீரங்கநாதன் ஜந்மநக்ஷத்திரமான ரேவதி, ஏகாதசி, அமாவாஸை, தீபாவளி, ஸ்ரீராமநவமி, ஸ்ரீஜயந்தி முதலான திருநாள்களில் திருமஞ்சனம் கண்டருளுகிறார். அதற்காகப் புறப்பாடாகி, அந்தந்தத் திருநாளுக்கு என்று ஏற்பட்ட மண்டபத்தில் எழுந்தருளி, யதோக்தமாய் திருவாராதனம் நடக்கும். 81 கலசங்களில் திருமஞ்சனத்திற்காகத் தீர்த்தமும், த்வாரகலசங்கள் என்னும் எட்டு கலசங்களில் தீர்த்தமும் இருக்கும். பெருமாளுக்கு ஸ்நாநஶாடீ (திருமஞ்சநத்திற்காக ஏற்பட்ட வஸ்திரம்) ஸமர்ப்பித்து, க்ருதம் (நெய்) முதலியவைகளால் உபசாரமாக திருமஞ்சனமாட்டி, பிறகு மந்திரத்தால் பரிசுத்தமான இந்தக் கலசதீர்த்தங்களால் திருமஞ்சனம் செய்வார்கள். அதில் 81 கலசங்களையும் ஒன்பது ஒன்பதாகப்பிரித்து, எட்டு மூலையில் இருக்கும் ஒன்பதுகளில் மத்யகலசத்தால் பெருமாள் அபயஹஸ்தம், திருமுடி, சங்கசக்கரங்கள் இவைகளிலும், மற்ற எட்டுக் கலசதீர்த்தங்களையும் திருவடியிலும் சேர்ப்பார்கள். நடுவிலிருக்கும் ஒன்பது கலசமும் அர்ச்சகர்களாலே எடுத்துக் கொடுக்கப்பட்டு, திருமுடியிலும் முன்போல மற்ற விடங்களிலும் திருமஞ்சனம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஸ்நாநத்திற்கு தூபதீபாதிகளும், வஸ்திரபரிவிருத்தியும் (வேறு பீதாம்பரம் சாற்றுவது) உண்டு.

அதற்குப் பிறகு சந்தனத்தால் திருமஞ்சன மாட்டி, முகச்சோதியாய் நீண்ட திருக்கிரீடத்தில் சந்தனத்தை ஸமர்ப்பித்தும், ஆச்ரிததுக்கத்தைத் தீர்க்க ஆவலினால் ஸம்பிரமித்துக் கொண்டிருக்கிறதும் பிராட்டியினால் அலங்கரிக்கப்பட்டதுமான திருமார்பிலும் சந்தனத்தை ஸமர்ப்பித்தும், லேசான ஒரு மாலையையும் சாற்றி, ஸஹஸ்ராரத்திருமஞ்சனம் ஆவதற்கு முன் ஸ்ரீ பட்டருக்கு அருளப்பாடாகும். அந்தக் காலத்தில் அவர் அருளிச் செய்யும் சுலோகங்களே திருமஞ்சனக் கவிகள். அவற்றுக்கு அவரே வியாக்கியானமும் அருளிச் செய்துள்ளார். இன்றும் அந்த சுலோகங்களும் அதன் வியாக்கியானங்களும் பட்டர் திருவம்சத்தைச் சேர்ந்த மஹான்களால் நம்பெருமாள் திருமுன்பே சொல்லப்பட்டு வருகின்றன. ஸ்ரீ பட்டர் பெருமாளை பலவிதமாக அநுபவித்திருக்கிறார். ஒரு கல்பகவிருக்ஷம் போலவும், ஸமுத்திரம் போலவும், ஸர்வ புண்ய

*தீர்த்தமயமாக இருப்பதாகவும் இப்படிப்பலவாறாக அனுபவித்திருக்கிறார். அந்த மாதிரி சுலோகங்கள் சுமார் 62 இப்போது இருப்பதாகத் தெரிகிறது. அதில் 10, 15 தான் இப்போது சொல்லப்பட்டு வருகின்றன. தீபிகாபிமானிகளுக்கு அந்த பட்டரின் அனுபவத்தை நம்பெருமாளின் முகோல்லாஸார்த்தமாக அடியேன் ஸமர்ப்பிக்கிறேன்.*

## हरिः ओम्

त्वं मे, अहं मे, कुतस्तत्, तदपि कुतः, इदं वेदमूलप्रमाणात्,
एतच्च अनादिसिद्धात् अनुभवविभवात्, तर्हि साक्रोश एव ।
क आक्रोशः कस्य, गीतादिषु मम विदितः, कोऽत्र साक्षी, सुधीः स्यात्,
हन्त त्वत्पक्षपाती सः, इति नृकलहे मृग्यमध्यस्थवत् त्वम् ॥

*பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும், 'ஜீவாத்மா யாரைச்சேர்ந்தவன்' என்பதைப் பற்றி ஏற்பட்ட ஸம்பாஷணை. அதில் பரமாத்மா சொல்லுகிறான்—நீ என்னுடையவன்.*

*ஜீவாத்மா—நான் என்னுடையவன்.*

*பர.—அது எப்படி ?*

*ஜீ.—நீ சொல்வது தான் எப்படி ?*

*பர.—வேதமாகிற மூலப்ரமாணத்தால்.*

*ஜீ.—நான் சொல்லுகிற இதுவும் அநாதிகாலமாக இருந்து வருகிற என்னுடைய அநுபவ பாத்தியத்தினால்.*

*பர.—ஆனால் அதற்கு ஆக்ஷேபம் நடந்து வந்திருக்கிறது.*

*ஜீ.—ஆக்ஷேபம் எங்கு செய்யப்பட்டிருக்கிறது, யாரால் ?*

*பர.—கீதை முதலிய அத்யாத்மக்ரந்தங்களில்; என்னால்.*

*ஜீ.—இதற்கு ஸாக்ஷி யார் ?*

*பர.—ஞானிகள் ஸாக்ஷியாக இருப்பார்கள்*

*ஜீ.—உனக்கு வேண்டியவர்களாதலால், அவர்கள் உனக்குப் பக்ஷபாதிகள்.*

*என்கிற இந்தமாதிரியான சச்சரவில், வேறு வழியில்லாமல், 'ஸொத்து என்னுடையது' என்று பிரமாணம் செய்வதற்குத் தயாராயிருப்பவன் போல் நீரிருக்கிறீர்.— என்று இந்த சுலோகத்தின் சுருக்கமான தாத்பர்யம். இனி பட்டரின் அனுபவத்தைத் தொடருவோம்.]*

*நாய்ந்தேன்—*

1. ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ *என்றும்,*

---

1. *பூமியும் லக்ஷ்மியும் உன் பத்னிகள்.*



2. वैकुण्ठे तु परे लोके श्रीसहायो जनार्दनः ।
उभाभ्यां भूमिनीलाभ्यां सेवितः परमेश्वरः ॥ *என்றும்,*

*"வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்றும், "திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ" என்றும் சொல்லுகிறபடியே லக்ஷ்மீ பூமி நீளாநாயகனாய்,*

3. यतो वा इमानि भूतानि जायन्ते *என்றும்,*

4. सदेव सोम्येदमग्र आसीत् *என்றும்,*

5. स कारणं करणाधिपाधिपः *என்றும்,*

6. स्थितिसंयमकर्ताऽसौ जगतोऽस्य जगच्च सः *என்றும்,.........*

*"தானோருருவாய் தனிவித்தாய்" என்றும் சொல்லுகிறபடியே ஸகல ஜகத்காரண பூதனாய்,*

7. अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः *என்றும்,*

8. पराऽस्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च *என்றும்,*

9. सत्यं ज्ञानं अनन्तं ब्रह्म *என்றும்,*

10. समस्तकल्याणगुणात्मकः *என்றும்,*

---

2. *பூமி நீளை இருவரால் ஸேவிக்கப்பட்டு, மஹிஷியான பெரிய பிராட்டியாரோடு ஸ்ரீ வைகுண்டத்தில் ஸர்வேச்வரன் எழுந்தருளி யிருக்கிறான்.*
3. *எதனிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாயினவோ.*
4. *முதலில் 'ஸத்' என்பது மட்டுமே இருந்தது.*
5. *அவனே காரணம்; காரணங்களுக்கு அதிபனான ஜீவாத்மாவுக்கும் அதிபதி*
6. *இவ்வுலகத்தின் ஸ்திதி, ஆளுகை இவற்றைச் செய்கிறான். அவனே ஜகத்தாகவும் இருக்கிறான்.*
7. *ஒருவித தோஷமு மில்லாதவன், கிழத்தனம், மரணம், துக்கம், பசி, தாகம் என்பவைகள் மூன்று மில்லாதவன், ஸத்யமான காமங்களையுடையவன், ஸத்யஸங்கல்பன் (பகவான்).*
8. *இவனுடைய சக்தி, ஞானம், பலம், கிரியை எல்லாம் சிறந்தவை, ஸ்வபாவமானவை.*
9. *பரப்ரஹ்மம் என்பது விகாரமில்லாமலும், ஞானஸ்வரூபமாயும், அநந்தமாகவும் இருக்கிறது.*
10. *எல்லாகல்யாண குணங்களு முடையவன்.*

11. गुणानामाकरो महान् என்றும்,

12. बहवो नृप कल्याणगुणाः पुत्रस्य सन्ति ते என்றும்,

13. वशी वदान्यो गुणवान् ऋजुः शुचिः என்றும்,

14. समस्तकल्याणगुणामृतोदधिः என்றும்,

15. दयाक्षान्त्यौदार्य (इत्यादि) என்றும்,

"உயர்வற உயர்நல முடையவன்" என்றும், "சிலமெல்லையிலான்" என்றும் சொல்லுகிறபடியே ஸமஸ்தகல்யாண குணவிபூதி யுக்தரான தேவரீர்,

16. यत्र पूर्वे साध्याः सन्ति देवाः என்றும்,

17. यत्र ऋषयः प्रथमजा ये पुराणाः என்றும்,

18. सदा पश्यन्ति सूरयः என்றும்,

'அயர்வறும் அமரர்களதிபதி" என்றும், "சூட்டுநன் மாலைகள் தூயன ஏந்தி விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபம் தாங்கி நிற்கவே" என்றும் 'சொல்லுகிறபடியே, நித்யஸூரிகளாலே அநவரத பரிசர்யமாண சரணநளிநயுகளராயிருக்கச் செய்தேயும், 19 स एकाकी न रमेत என்கிறபடியே உண்டதுருக்காட்டாதே, தேசாந்தரகதனான புத்திரன் பக்கலிலே பித்ருஹிருதயம் கிடக்குமாப்போலே, ஸம்ஸாரி சேதனர் பக்கலிலே திருவுள்ளம் குடிபோந்து,

---

11. குணங்களுக்கெல்லாம் இருக்கும் பெரிய ஆகரம்.
12. அரசனே ! உன் புத்திரனுக்கு அநேக கல்யாணகுணங்கள் இருக்கின்றன.
13. ஸர்வசக்தன், மஹோதாரன், ஸௌசீல்ய முள்ளவன், ஆச்ரிதர்கள் சொன்னவண்ணம் செய்பவன், ஒருவித தோஷமற்றவன் (ஸர்வேச்வரன்)
14. எல்லா கல்யாண குணங்களுக்கும் ஒரு அமிருத ஸமுத்ரம் போன்றவன்.
15. தயை, பொறுமை, ஔதார்யம் (முதலியவை உடையவன்).
16. எங்கே நித்யர்களான ஸாத்யதேவர்கள் (நித்யஸூரிகள்) இருக்கிறார்களோ.
17. எங்கே முன்னால் தோன்றின அநாதியான ரிஷிகள் உண்டோ.
18. (எந்த ஸ்தானத்தை) ஸூரிகள் எப்போதும் பார்க்கிறார்களோ.
19. ஒருவனாய், அவனுக்கு ஆநந்தம் உண்டாகவில்லை.



20. अनुग्रहाय पुण्यानामास्थितोऽण्डमहं प्रभो ।
क्षीरोदं मण्डलं भानोः औपेन्द्रं च तथा दिवि ॥ என்றும்,

21. अवतारसहस्राणि कल्पे कल्पे करोम्यहं என்றும்,

22. प्रजानामनुकम्पार्थं पुनरर्चात्मना भुवि என்றும்,

"பின்னானார் வணங்கும் சோதி" என்றும் ஸகலசேதனோஜ்ஜிஜீவிஷையாலே பர-வியூஹ-விபவ-அந்தர்யாமி அர்ச்சாதிகளிலே அத்யந்த-ஸுலபமாய், அபராத-ஸஹமாய், ஆபிரூப்ய-மூலகந்தமான அர்ச்சாவதாரமாய், சதுர்முக-இக்ஷ்வாகு ப்ரப்ருதி-தசரத நந்தந-விபீஷண-தர்மவர்ம-தப:-பல பூத-ரங்கேசய ரூபேண அவதரித்தருளி,

23. आद्यं प्रोक्तं स्वयं व्यक्तं विमानं रंगसंज्ञकम् என்றும,

'செங்கயல் பாய் நீர் திருவரங்கம்" என்றும், அற்றபத்தர் சுற்றிவாழும் அந்தணீர் அரங்கம்" என்றும் சொல்லுகிறபடியே பகவதபிமத-அஷ்டோத்தரசத-ஸ்தாந-ச்ரேஷ்டதமமாய், அதிஹ்ருத்யமான கோவிலிலே எழுந்தருளி யிருக்கிற தேவரீர் இந்த விசேஷோத்ஸவத்திலே திருமஞ்சனம் கண்டருளி எழுந்தருளி யிருக்கிற நிலை இங்ஙனே விண்ணப்பம் செய்யலாய் இராநின்றது.

அதெங்ஙனே என்னில்; த்வம்மே இத்யாதி.

24. एको ह वै नारायण आसीत् என்றும்,

25. एक एवाभवत् तत्र देवो नारायणः प्रभुः என்றும்,

சொல்லுகிறபடியே ஸகல ஜகத்காரண பூதனான உனக்கு "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" என்கிறபடியே ஜன்மபரம்பரைகளிலே தோள் மாறி, நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்த நீ சேஷபூதன்' என்று ஜீவனைக் குறித்து நீர் அருளிச் செய்ய,

---

20. புண்யம் செய்தவர்களை அநுக்ரஹிப்பதற்காக, அண்டத்தை யடைந்து, பாற்கடலிலும, சூரியமண்டலத்திலும், ஸ்வர்க்கத்தில் உபேந்திரனாகவும் இருக்கிறேன்.
21. ஒவ்வொரு கல்பத்திலும் எவ்வளவோ அவதாரங்கள் செய்கிறேன்.
22. மறுபடியும் என் பிரஜைகளை அநுக்ரஹிப்பதற்காக பூலோகத்தில் அர்ச்சா ரூபியாக (வருகிறேன்.)
23. ஸ்வயம் வியக்தமான ஸ்ரீரங்கம் என்று பெயருள்ள விமானம் முதலாவது.
24. நாராயணன் ஒருவனே இருந்தான்.
25. ஸர்வசக்தனான நாராயணன் என்னும் பகவான் ஒருவனே இருந்தான்,

'. அஹம் மே'—'தேஹாத்மாபிமாநியான நான் ईश्वरोऽहं अहं भोगी, என்றும், "யானே எந்தனதே என்றிருந்தேன்" என்றும் ஸ்வதந்திராத்மாபிமான யுக்தனை எனக்கு சேஷபூதன்' என்று ஜீவன் சொல்ல,

குதஸ்-தத் =' அது எதனாலே?' என்ன,

ததபி குத:—'தேவரீரருளிச் செய்கிற அது எதனாலே?' என்ன,

இதம் வேத-மூல-ப்ரமாணத்—27 वाचा विरूपनित्यया என்றும்,

28. अनादिनिधना ह्येषा वागुत्सृष्टा स्वयंभुवा என்றும்,

"சுடர் மிகு சுருதி" என்றும் நித்ய-அபௌருஷேயமான வேதரூபமான லிகிதம் உண்டாயிருக்கையாலே என்ன, அதில் சொல்லுகிறது என் என்ன, 29. पतिं विश्वस्यात्मेश्वरं என்றும்,

30. तमीश्वराणां परमं महेश्वरं तं दैवतानां परमं च दैवतं என்றும்,

31. क्षरात्मानौ ईशते देव एकः என்றும்,

32. प्रधानक्षेत्रज्ञपतिः गुणेशः என்றும்,

33. भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा என்றும்,

34. नित्यो नित्यानां चेतनश्चेतनानां என்றும்,

35. अन्तः प्रविष्टः शास्ता जनानां सर्वात्मा என்றும்,

---

26. நான் ஈச்வரன், நானே அநுபவிப்பவன்.
27. மாறுபாடில்லாத நித்யமான வாக்கான (வேதத்தால்)
28. ஆதியும் அந்தமுமில்லாத வாக் பிரம்மாவால் உபதேசிக்கப்பட்டது.
29. ஸர்வலோகத்திற்கும் பதி, தனக்கும் தானே ஈச்வரன்.
30. ஈச்வரர்களுக்கெல்லாம் ஸர்வேச்வரனும், தேவதைகளுக்கும் தேவனும் அவனே.
31. அசேதனம், சேதனம் இரண்டையும் ஒரு தேவன் நியமிக்கிறான்.
32. பிரகிருதி, ஜீவன் இருவருக்கும் ஸ்வாமியும், குணங்களுக்கு ஈச்வரனும்.
33. போக்தா (ஜீவன்), போக்யம் (அசேதனம்), இரண்டையும் நியமிக்கும் ஈச்வரன், இவற்றை அறிந்து.
34. நித்யர்களான சேதனர்களுக்கு நித்யனான ஒருவன் (வேண்டியதைச் செய்கிறான்).
35. எல்லாருக்கும் ஆத்மாவாய், உள் புகுந்து நியமிப்பவன்.



36. "यस्य आत्मा शरीरं" "यस्य पृथिवी शरीरम्" என்றும்,

'இந்தப்படி உன்னை எனக்குச் சேஷபூதனாகச் சொல்லுகையாலே' என்ன,

ஏதத்ச அநாதி ஸித்தாத் அநுபவ விபவாத் என்ன, அநாதி-அநுபவம் என்ன தன்றோ வென்ன,

தர்ஹி ஸாக்ரோஶ ஏவ—ஆனால் அதற்கு ஆக்ஷேபணை உண்டு காண் என்ன,

க்வ ஆக்ரோஶ: கஸ்ய—யார் எங்கே ஆக்ஷேபணை பண்ணினார் என்ன,

கீதாதிஷு மம விதித:—கீதாதிகளில் நாம் 'ஆக்ஷேபணை பண்ணினோம் என்ன, ஆக்ஷேபணை பண்ணின பிரகாரம் எது என்ன,

37. द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर एव च ॥
उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ என்று காண் என்ன,

கோத்ர ஸாக்ஷீ—அதற்கு ஸாக்ஷியார் என்ன,

ஸுதீ: ஸ்யாத்—ஞானீ ஸாக்ஷி என்ன,

ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸ:—அவ்வளவோ!

38. प्रियो हि ज्ञानिनोऽत्यर्थं अहं स च मम प्रियः என்று

அவன் தேவரீருக்கு பக்ஷபாதி யாகையாலே 39 கூடஸாக்ஷி என்ன,

இதி ந்ருகலஹே—இப்படி தேவரீரோடே சேதனனானவன் விவாதம் பண்ணின வளவிலே, ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்—

40. प्रमाणं कर्तुमुद्युक्तः मृग्यमध्यस्थ ईरितः ।

அவனால் ஸித்தி பண்ணப் போகாதபடி (ப்ரமாணம் பண்ண) யத்நம் பண்ணியருளுகிறாப் போலே இராநின்றது.

---

36. எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவனுக்கு பிருதிவீ சரீரமோ.
37. ஜீவர்கள் க்ஷரன் என்றும் அக்ஷரன் என்றும் இருவகை, எல்லாபூதங்களும் க்ஷரங்கள், இவர்களுக்கெல்லாம் முதலானவன் (முக்தன்) அக்ஷரன், இவ்விருவர்களைக் காட்டிலும் வேறான புருஷோத்தமனே பரமாத்மா, அவன் மூன்று லோகங்களையும் உட்பிரவேசித்து தரித்து நியமிக்கிறான்.
38. பக்தர்களுக்கு என்னிடம் அதிகபிரியம், எனக்கும் அவர்களிடம் அதிக பிரியம்.
39. कूटसाक्षी பொய்ஸாக்ஷி.
40. பிரமாணம் செய்யத் தயாராயிருப்பவன் 'ம்ருக்யமத்யஸ்தன்' என்று சொல்லப்படுகிறான்.

ஸ்ரீ:

# வேதாந்த ரக்ஷாமணி விமர்சம்

[ஸ்ரீ. உப. வே. வி. கோபாலாசார்யர்]

(தொடர்ச்சி)

ப்ரஹ்ம ஸூத்ரங்கள் தங்களுக்கு முன் நடந்ததாக (வ்ருத்தமாக) ஜைமினீய ஸூத்ரங்களை யங்கங்கே க்ரஹித்துப் பேசுவது ஸ்பஷ்டம். 'முன்பே சொல்லப்பட்டுளது' என்று ஜைமினி ஸூத்ரங்களா லேற்பட்ட நிர்ணயத்தைப் பேசுகின்றன. குணோப ஸம்ஹாரபாதத்தில் அக்ஷரத்யதி கரணத்தில் 'தநுக்தம்' முன்பே முதல் காண்டத்தில் 'குண முக்ய வ்யதிக்ரம' ஸூத்ரத்தில் கூறப்பட்டது' என்று ஜைமினி ஸூத்ரத்தைக் காட்டி வ்யாஸருரைத்த பரிஹாரம். 'ச்ருத்யாதி' 'சோதனாதி' என்ற வ்யாஸ ஸூத்ரங்களில் 'ஆதி' என்பதற்கு ஜைமினி ஸூத்ரங்கள் கூறிய மற்றவைதான் பொருள். ஜைமினி ஸூத்ரங்களின் அபேக்ஷை உபஜீவனம், வ்யாஸ ஸூத்ரங்களுக்கிருப்பது ஸ்பஷ்டம். தம் மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கு முன்பாகமாக ஜைமினீய மீமாம்ஸையை வ்யாஸரபிமானிப்பது ஸ்பஷ்டம். அவர் மீமாம்ஸைக்கு ஜைமினி மீமாம்ஸை பூர்வவ்ருத்தம், பூர்வ ப்ரக்ருதம், உபஜீவ்யம், அவச்யாபேக்ஷிதம்—'ஸகுண ப்ரஹ்ம விசாரத்திற்கு ஜைமினி ந்யாயங்களின் அபேக்ஷையுள்ளதுதான்; நிர்க்குண ப்ரஹ்ம ஞானத்திற்கு வேண்டியதில்லை; ஆகையால் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு ஜைமினீய மீமாம்ஸா ந்யாயங்களின் அபேக்ஷையில்லை; ஆகையால் கர்ம மீமாம்ஸையை முன்பு கற்க அபேக்ஷையில்லை' என்று அத்வைத க்ரந்தங்களுரைக்கும் யுக்தி மார்க்கம்—'முன் மீமாம்ஸா ந்யாயங்கள் இங்கும் உபஜீவிக்கப்படுகின்றனவே; ஆகையால் அம் மீமாம்ஸை செய்த பிறகு தானே இந்த மீமாம்ஸையில் அதிகரிக்கவேணும்' என்று பஞ்சபாதிகை அத்வைதத்தின் பேரில் கேள்வி கேட்டுக்கொண்டு, 'அப்படி அபேக்ஷித்து உபஜீவிப்பதெல்லாம் ஸகுண வித்யைகளின் விஷயத்தில் தான்—ஸகுண ப்ரஹ்மோபாஸனமென்பது ஞானமல்ல; அது மானஸமான செய்கை; அது விதிக்கப்படும் ஓர் தர்மம்; அதின் பலன் அநித்யம். ஆகையால் ஜைமினீய ந்யாய ஸமூஹத்திற்கு இந்த ப்ரஹ்ம விசார சாஸ்த்ரத்தில் அபேக்ஷையில்லை ஆகையால் 'பின்பு' 'அத' என்பது முன் மீமாம்ஸையை யபேக்ஷித்ததல்ல' என்று பதில் கூறிற்று. பெரும்பான்மையாக, ப்ரஹ்ம ஸூத்ரங்கள் ஸகுண ப்ரஹ்மத்தையும், ஸகுண வித்யைகளையுமே விசாரிக்கின்றனவென்று ஸ்ரீ தீக்ஷிதர் தீர்மான வாக்யங்களைக் காட்டினோம்.



ஸ்ரீ சங்கர பாஷ்யத்தைக்கொண்டே ஸ்ரீ தீக்ஷிதரப்படிப் தீர்மானித்தா ரென்றும் காட்டினோம். ஸகுண ப்ரஹ்மம், ஸகுண வித்யைகள், ஜீவ ப்ரஹ்ம பேதம், இவற்றின் ப்ராசுர்யம் நிர்விவாதம்—ஸகுண ப்ரஹ்ம, ஸகுண வித்யாபூயிஷ்டமான இந்த ப்ரஹ்ம மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கு பூர்வ மீமாம்ஸோபஜீவனமில்லை யென்று பேசுவது முழு அந்ருதமாகும். இந்த நான்கு அத்யாயங்களடங்கிய சாஸ்த்திரத்திற்கு பூர்வ வ்ருத்தமென்ன, உபஜீவிய மென்ன, என்று விசாரம்—'அத' சப்தத்தோடு தொடங்குவது இந்த முழு சாஸ்த்ரம் 100இல் 99க்கு மேற்பட்ட பாகத்திற்கு உபஜீவ்யம் தானென்று ஒப்புக்கொள்ளுவதால், இந்த சாஸ்த்ரம் தொடங்குமுன் அதைச் கற்றிருக்க வேண்டியது அவச்யமே. ஏதோ நிர்க்குண ப்ரஹ்ம பாகம் ஸ்வல்பமிருப்பதாக நினைப்பதும் தப்பென்போம் ஸகுண வித்யைக்கு அங்கமாக ப்ரயாணம் வரையில் நிஷ்காம கர்மாநுஷ்டானம் செய்தே தீரவேண்டுமென்பதை ஸ்ரீ சங்கர பாஷ்யாதிகள் ஒப்புவதைக் காட்டினோம். ஸகுண வித்யைகளே இங்கே அதிகம்; அவற்றின் விசாரமே அதிகம்; ஆகையாலும் இந்த சாஸ்த்ரத்திற்கு கர்ம விசாரத்தின் அபேக்ஷையுள்ளதே. ப்ரஹ்ம வித்யைக்குக் கர்மங்களினபேக்ஷையுண்டா இல்லையா வென்று ஸாதநாத்யாயத்தில் வித்யாஸாதன பாதத்தில் விசாரிக்குங்கால் 'ஸர்வாபேக்ஷாச' என்று ஸூத்ரகாரர் ஸ்பஷ்டமாக அபேக்ஷையை அறுதியிட்டார். ப்ரஹ்ம வித்யை கர்மநிரபேக்ஷை' யென்ற சாஸ்த்ரிகளபிமானம் ஸூத்ரத்திற்கு ப்ரத்யக்ஷ விருத்தம், ப்ரத்யக்ஷர விருத்தம்-வித்யை உத்ப்பத்தியாவதற்குக் கர்மாநுஷ்டானம் வேண்டும், உத்பத்தியான பிறகு அபேக்ஷையில்லை' யென்றங்கே ஸ்ரீ சங்கரபாஷ்யம். வித்யை உத்பத்தியான க்ஷணமே ப்ரஹ்மத்தோடு ஸம்பந்நனாகி முக்தனாகி விட்டால், அந்த முக்தனுக்கு கர்மா பேக்ஷை யில்லை யென்று ஒருவர் சொல்ல வேணுமோ? அப்ரஸக்த ப்ரதிஷேதம். முக்தருக்குக் கர்மா பேக்ஷையில்லை யென்பது எல்லோர்க்கு மிஷ்டமே—ஸித்தத்தை ஸாதிக்க வேண்டியதில்லை. யோகாரூடருக்கு ஸமாதிதசையில் கர்மா பேக்ஷை இல்லைதான்—ஸம்ஸாரிகளைப் போல எல்லா வ்யாபாரங்களையும் செய்து கொண்டும், (க்ஷுத்பிபாஸாதிகளுக்கு) பசிதாஹங்களுக்கு வச்யராயிருந்து கொண்டிருப்பவர், சாஸ்த்ரவச்யரல்லவென்பது ஒவ்வாது—பசி, தாஹத்தை மீற முடியாதவர், ஈச்வராக்ஞையான சாஸ்த்ரத்தை மட்டும் மீறலாமோ? ப்ரக்ருதி வச்யதையைத் தள்ள முடியாதவர், சாஸ்த்ர வச்யதையைத் தள்ளலாமோ? உத்பன்னமான பின் வித்யைக்குக் கர்மாபேக்ஷை யில்லை யென்பது ஸூத்ரங்களுக்கு இசையாத பொருளே. 'எல்லா ஆச்ரம கர்மங்களையும் வித்யை அபேக்ஷிக்கவே அபேக்ஷிக்கிறது' என்று ஸூத்ரப்பொருளை ஸ்ரீ சங்கர பாஷ்யம் ருஜுவாக உரைத்தது—இந்த அபேக்ஷைக்கு ஸூத்ர

காரர் கூறியஹேது ‘யக்ஞாதி ச்ருதி’. அங்கிக்கு அங்கங்களினபேக்ஷையுண்டென்பது மீமாம்ஸகர் பேச்சு. கதம்கர்தவ்யம் ‘செய்யும் முறையென்ன’ என்று இதிகர்த்தவ்யதாபேக்ஷையுள்ளது. கர்மங்களுக்கும் வித்யைக்குமுள்ள ஸம்பந்தத்தைப் பற்றி இங்கே விசாரம். அங்காங்கிபாவ முண்டென்று தீர்மானமென்பது ஸ்பஷ்டம். ‘விஹிதத்வாச்ச ஆச்ரம கர்மாபி’ என்னும் மேலதிகரணத்தில் ‘ஸர்வாபேக்ஷா ச என்று ஆச்ரம கர்மங்களுக்கு வித்யாஸாதநத்வம் தீர்மானிக்கப்பட்டது’ என்று ஸ்ரீ சங்கரர் முன்னதிகரணத்தின் தீர்மானத்தை விளக்கினார்—இதனாலும் ஸூத்ரகாரர் ஆச்ரம கர்மங்கள் வித்யைக் கங்கமென்று தீர்மானித்தது ஸ்பஷ்டமாகிறது. இந்த அதிகரணத்திலும் ‘ஸஹகாரித்வேந ச’ என்னும் ஸூத்ரத்தால் ‘வித்யாநிஷ்டன் அநுஷ்டிக்கும் ஆச்ரம தர்மங்கள் வித்யைக்கும் ஸஹகாரியாகும்—ஏனெனில், யக்ஞாதிச்ருதியால் இவை வித்யாஸஹ காரியாக விதிக்கப்பட்டன’ என்று ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டது. வித்யைக்காக ஒரு தரமநுஷ்டானம், ஆச்ரமத்திற்காக மற்றோர் தரமென்று இரண்டு தடவை யநுஷ்டானம் வேண்டாம்; ஒருதர மநுஷ்டானமே, (தந்த்ரத்தால்) இரண்டிற்கு மாகுமென்று அடுத்த ஸூத்ரம் ஸூசித்தது—ஸஹகாரியான அங்கமென்றதால் வித்யையிருக்கும் காலத்திலேயே கூடவே அதற்குத்துணையாக அநுஷ்டிக்கப்படுவதென்பது ஸ்வரஸம் இந்த ஸ்வாரஸ்யத்தை விலக்குவதற்காக ‘ஸஹகாரித்வம்’ என்பது ‘வாசோயுக்தி’ ‘பேர்மாத்ரம்!’ என்று ஸ்ரீ சங்கர பாஷ்யம் பேசுகிறது. ஸூத்ரங்களை வீணாக்க வேண்டி வந்தது. இது நியாயமாகுமோ? ஸூத்ரத்தை வீணாக்குவதை பாஷ்யம் ருஜுவாக ஒப்பிற்று. அங்கங்கள் தானென்று நிச்சயமாக ஏற்படுகையில், இவை சமதமாதிகளைப் போல ஸந்நிபத்யோபகாரியான (ஸஹகாரியான) அங்கமாகும். ‘ஸர்வோ வர்ணாதி தர்ம: சமதம முகவத் ஸந்நிபத்யோபகாரீ’ என்று இதை தத்வ முக்தாகலாபம் பணித்தது—அங்கங்களை ஸந்நிபத்யோபகாரகமாக ஒப்புவதில் ஸ்வாரஸ்ய மதிகம் என்பர் மீமாம்ஸகர்—‘ஸர்வாபேக்ஷா ச’ என்று அங்கத்வத்தைப் பேசினதுபோல, ‘சமதமாத்யுபேத: ஸ்யாத்’ என்று அடுத்த அதிகரணம் உரைத்தது. வித்யையின் சரீரம் ஸித்திக்க இவை வேணும், வித்யையின் பயனாக மோக்ஷம் ஸித்திப்பதில் இவை நேராக உபயோகப்படுவதில்லை—வித்யை யென்பது ப்ரஹ்மத்தின் இடைவிடாத நினைப்பு. வித்யையின் உத்பத்திக்கு (மேல் மேல் தொடர்ச்சிக்கு) நிஷ்காம கர்மாநுஷ்டானம் அவச்யமபேக்ஷிதம். அது வித்யைக்கு ஓர் ஸாதனம், வித்யை என்பது ப்ரயாண பர்யந்தம் அநுவர்த்திக்க வேணும்; ஆகையால் முடிவு வரையில் கர்மாநுஷ்டானமும் கூடவிருக்கவேணும். ஒரு க்ஷணத்திலேயே ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் வந்து அதிலேயே கடைசி வரை



யில் மூழ்கியிருந்தால், கர்மாநுஷ்டானம் ஸமாதி நிஷ்டை காலத்திலும் வேண்டுமென்று ஒருவரும் சொல்லுவதில்லை—கீதை 5, 23இல் ‘சரீரம் விழுவதற்கு முன்பும், எவன் காமக்ரோதங்களால் வரக்கூடிய வேகத்தை ஸஹிக்க சக்தனோ அவன் யோகி, அவன் ஸுகீ, என்றுளது—அங்கே ஸ்ரீதர ஸ்வாமி ‘அழூம் யுவதிகளால் கட்டிக் கொள்ளப்பட்டாலும், புத்ரரால் தலை நமஸ்காரம் செய்யப்பட்டாலும், ப்ராணனில்லாத தேஹம் எப்படி அதை யறியாதோ’ அப்படி உலக ஸ்மரண மற்றிருப்பவன் ஜீவன் முக்தன்—ப்ராணன் போனபிறகு எப்படி தேஹம் ஸுகத்தையும் துக்கத்தையும் அறியாதோ, அப்படியே ப்ராணனோடு கூடியிருக்கும் தசையில் இருப்பனேயாயின் அவன்கைவல்யாச்ரமியாவானென்று வஸிஷ்ட வசனம்’ என்று பணித்தார். இந்தப்படியிருப்பவன் அந்த தசையில் கர்ம விதிவச்யனல்லதான்—ஸமாதியிலிருந்து வ்யுத்திதனாபின், ஸமாதி கலைந்து விட்டால், கர்ம விதிகளுக்குக் கட்டுபட்டவனே—ஸஹகார்யந்தர ஸூத்ரத்தையும் அதற்கு ஸ்ரீ சங்கர பாஷ்யத்தையும் கவனிக்க—அங்கே பாண்டித்யம், மௌனமெனும் அங்கங்களின் விஷயத்தில் எப்படி ஸஹகாரி’ யென்ற சப்தமோ, அப்படியே ஆச்ரம கர்மங்கள் விஷயத்தில் ‘ஸஹகாரித்வேன’ என்று அதே சப்தம். ‘கில்பிஷம்’ என்பது இரண்டு விதம். வித்யை யென்றும் உபாயத்திற்கு விரோதியான பாபங்கள் (1); ப்ரஹ்ம ப்ராப்திக்கு விரோதியான பாபங்கள் உபாயமான பக்தியோகத்திற்கு விரோதியான பாவங்களை நிஷ்காம கர்மாநுஷ்டத்தால் பிறக்கும் ஈச்வராநுக்ரஹ மென்றும் அதிருஷ்டத்தால் அப்பொழுதப்பொழுது போக்கப்படும்—ப்ரஹ்ம ப்ராம்திக்கு விரோதமான பாபத்தை (ப்ரதி பந்தகத்தை) பக்தியோக மென்றுமுபாயம் ஈச்வர ப்ரஸாதமெனு மத்ருஷ்டத்தை யுண்டு பண்ணி அதின் மூலமாகப் போக்கும்’ என்று தாத்பர்ய சந்த்ரிகை.

---

## வர்த்தமானங்கள்

### (1)

### சதாபிஷேகம்

*ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் சதாபிஷேக மஹோத்ஸவக் கொண்டாட்டம்.*

### ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதியில் விசேஷித்த குதூஹலம்

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தானத்தில் நாற்பத்தொன்றுவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எளிந்தருளியிருக்கும் ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ அழகி

சிங்கர் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் எண்பத்தி நாலாவது திருநக்ஷத்திரம் (சதாபிஷேகம்) ஈசுவர வருடம் மார்கழித்திங்கள் இருபத்தி நான்காந்தேதி (7-1-1938) வெள்ளிக்கிழமை பூரட்டாதி நக்ஷத்திரத்தில் வெகு விமரிசையாய் ஆரம்பமாகியது. அன்று உதயம் வெகு நாழிகைக்கு முன்னரே ஸ்ரீ அழகிய சிங்கர் திருவாராதனம் இரண்டரை மணி முதலே ஆரம்பித்து காலை 4-30-மணிக்கு திருப்பாவை சாற்று மறை அதி சம்பிரமமாக நடந்தது. ஸ்ரீரங்கம் தசாவதாரன் சந்நிதி மண்டபம் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டு, பூப்பந்தல் நிறுவப்பட்டு கண்டவர் மனம் கவரும்வண்ணம் அழகுபட அமைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான சிஷ்ய வர்க்கங்கள் பல திவ்யதேசங்களிலிருந்து இம் மஹோற்சவத்தைப் பூர்ணமாய் அநுபவித்து கிருதார்த்தராவதற்காய் ஸந்நிதியில் வந்து குழுமினர். பின் ஸ்ரீரங்கம், பெருமாள் கோவில், திருவள்ளூர், திருக்குடந்தை, புள்ளம் பூதங்குடி, மதுராந்தகம் முதலிய பல திவ்ய திருப்பதிகளினின்றும் எம்பெருமான்கள் ப்ரஸாத மரியாதைகளை அங்கங்கிருந்து வெகு சிரத்தையுடன் கொண்டுவந்தவர் வழங்க, அவற்றை முறையே ஸ்ரீ அழகிய சிங்கர் ஏற்று பகவதநுக்ரஹத்தைப் பெற்று மகிழ்ந்தார். பின்னர் ஸ்ரீ அழகியசிங்கர் தனியாக ஓராசனத்தில் வீற்றிருந்து ஸ்ரீபாத தீர்த்தம் வழங்க, வந்திருந்தோரனைவரும் ஒவ்வொருவராக பயபக்தியுடன் ஸ்ரீ அழகிய சிங்கரை அணுகி தீர்த்த புரோக்ஷணமும் ப்ரஸாதமும் பெற்று மகிழ்ந்தனர்.

ஸ்ரீ அழகிய சிங்கர் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்த கர்நாடகப் பல்லக்கில் எழுந்தருள, முன்னர் ஸ்ரீஸந்நிதி பிருதுகளுடன் யானை, குதிரை செல்ல, ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் சகல சிஷ்யர்களுடன் ஸ்வஸ்திவாசனம், வேத பாராயணம் முதலியவற்றுடன் பாதசாரிகளாக பின்னர் செல்ல, வடக்கு சித்திரை வீதி அடைந்து வடக்குக் கோபுரவாசலில் ஸ்ரீ அழகிய சிங்கர் பல்லக்கை விட்டிறங்கி தாயார் ஸந்நிதிக்கு எதிராக உள்ள ஸ்ரீ ஸந்நிதிக்குப் பாத்தியமான ஸ்ரீ தேசிகர் சந்நிதிக்கு எழுந்தருளி அங்குள்ள ஸ்ரீ ஹயக்ரீவர், ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகர் முதலியோரை மங்களா சாஸநம் செய்து கொண்டு, பிராட்டி ஸ்ரீரங்க நாய்ச்சியார் ஸந்நிதி சென்று தாயாரை மங்களா சாஸனம் செய்து பிரதக்ஷிணமாக எழுந்தருளி கீழ உத்தர வீதியடைந்து அங்குள்ள ஸ்ரீ அஹோபில மடத்துள்ள ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹன் வேதாந்த தேசிகர், ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகர் முதலியோரை மங்களாசாஸனம் செய்து கொண்டு வடக்குச் சித்திர வீதி மேல கோடியிலுள்ள ஸ்ரீ தேசிகர் ஸந்நிதியில் மங்களாசாஸனம் செய்துகொண்டும் வந்த வழியே தசாவதாரன் ஸந்நிதிக்குத் திரும்ப எழுந்தருளினர்.

ததீயாராதன ஸம்ப்ரமம் வருணனைக் கடங்காது. வந்திருந்தோரனைவரும் ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹன் ப்ரஸாதத்தைப் பெற்று உவந்து உள்ளங் குளிர்ந்து அளவிலா ஆனந்தம் அடைந்தனர்.

இரவில் கோஷ்டி விநியோகத்துக்குப் பின்னர் ஸ்ரீ கண்ணபிரானுக்கு டோலோத்ஸவம் அதி அற்புதமாய் இதுவரை நடந்திராத ரீதியில் அத்யாச்சரியமாய் நடந்தது. டோலையில் மாயன் அதிகம்பீரமாய் ஊஞ்சலாட, ஸ்ரீ அழகிய சிங்கர்கள் அல-



ஸ்ரீ அஹோபில மடம் 41-வது பட்டத்தில் ஸ்ரீமத்தாபிஷேகிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ சடகோப யதீந்த்ர மகாதேசிகனுடைய 84-வது திருநக்ஷத்திர சதாபிஷேக மஹோத்ஸவக் கொண்டாட்டம்.

ங்கரித்த ஆசனங்களில் எழுந்தருளியிருக்க. சிஷ்ய வருக்கங்கள் புடை சூழ்ந்து அமர்ந்து நிற்க, திருவல்லிக்கேணித் தமிழ் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் தமிழ் வித்வான் ப. ரெ. திருமலை ஐயங்கார், ஸந்நிதி சிஷ்யரும், சங்கத் தலைவரும், 'வகுள மாலை' பத்திராசிரியரும் திருவல்லிக்கேணி அட்வொகேட்டுமான ஸ்ரீ உப வே ஆர். கேசவய்யங்காரவர்களாலியற்றப்பட்டு வகுள மாலையில் முன்னமே பிரசுரிக்கப்பட்டிருந்த 'வேதாந்த தேசிக ரூசல்' என்ற தலையங்கமிட்ட இருபது பாசுரங்கள் பாடினர். இவ்வமயத்துக்கென்று மேற்படி திருமலை ஐயங்காரவர்களால் தயாரிக்கப்பட்ட நான்கு விருத்தப் பாக்களைப்பாடி விளக்கியதுடன் இந்த மஹோற்சவத்தை முன்னிட்டு அநேக வித்வான்கள் வரைந்துள்ள கட்டுரைகளடங்கிய மஹோத்ஸவ ஞாபக விசேஷ மலர் கூடிய சீக்கிரம் பிரசுரமாகும் என்றும் மேற்படியார் தெரிவித்தார்.

முடிவில் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் மிக அழகியதோர் அரிய உபந்யாசம் செய்தார். அதன் சாரம்சமாவது :—

" ஏற்றி மனத் தெழில் ஜ்ஞானவிளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்கொரு கைம்மாறு மாயனும் காண இல்லான்,
போற்றி யுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே ".

இதின் கருத்து. ஆசார்யர்களால் ஞானமாகிற விளக்கானது நமது மனதில் ஏற்றப்பட்டு அஞ்ஞானமாகிற இருள்களை எல்லாம் போக்கி செய்து வைக்கப்பட்ட உபகாரத்துக்கு பதில் உபகாரம் செய்யும் வகையை ஈச்வானும் அறிய இயலாதான் ஆகிலும் ஒன்றுமே செய்யாது கைவாங்காமல் ப்ரீதியால் நம்மால் இயன்றமட்டில் சிற் சில ஸ்தோதிரம் முதலிய உபகாரம் செய்வதும் கிஞ்சித்தாகாதோ ஸ்வல்பமன்றோ என்று! முக்தி யெனும் ஸாம்ராஜ்யத்தைப் பெறவிரும்புவோர்க்கு ஸதாசார்யஸம்பந்தம் தவிற, வேறு வழியில்லை. இதர்க்கு நிதர்சனமாக

" பாபிஷ்ட²: க்ஷத்ரப³ந்து⁴ஸ்ச புண்ட³ரீகஸ்ச புண்யக்ருத் ।
ஆசார்யவத்தயா முக்தா: தஸ்மாதா³சார்யவான் ப⁴வேத் ॥ "

என்று பேசப்பட்டிருக்கிறது.

இதனால் மோக்ஷத்துக்கு பாவங்களும் ப்ரதிபந்தகங்கள் புண்யமும் ஸாதகமாகமாட்டாது; ஸதாசார்யவத்தை யொன்று தான் மோக்ஷத்திற்கு ஸாதகம். இத்தகைய யௌனம் வாய்ந்த ஸதாசார்யர்கள் " க்ருபயா நிஸ்ப்ருஹ: " என்கிறபடியே உபதேசி த்தனுக்ரஹித்தருளியதுக்கு ப்ரமபக்தியோடு கூடிய சிஷ்யனால் ப்ரத்யுபகார செய்யக் கூடியதேதாகிலும் உண்டோ என்பதை ப்ரதிபாதிக்கிறது இந்த பா ரம். ஜ்ஞானம் எனப்படும் விளக்கை மனதில் ஏற்றி என்றால், மனது என்பது அணுவா லாலும் அதிசஞ்சலமானதாலும் ஊசி முனையில் பர்வதத்தை ஏற்றுவது போல் துச்ச மான அறுமைப் பொருளை ஏற்றி, விளக்காக நிரூபிக்கப்பட்ட படியால் விளக் போல் ஸர்வஸூக்ஷ்மார்த்தத்தையும் ப்ரகாசிப்பிறதை ஏற்றி என்றதாயிற்று. அதிலு " எழில் " உஜ்வலமான என்று அர்த்தம். அந்த எழிமை மூன்று விதம் உபதேசக் தம், விஷயக்ரதம், பாத்ர க்ருதம் என்று. "ஜ்ஞாநாத்³வைவித்⁴யா விதி⁴தாஸ

ப்ரஷ்டும் அர்ஹஸி” என்கிறபடியிலே ஸதாசார்ய ஸம்பந்தத்தால் ஸம்பாதித்ததாதலால் உபதேச க்ருதௌஜ்வல்யம் உடையதாயிற்று, “தஸ்மாந்நஸ்மாந்நதோ தாந்யத் ஜ்ஞேயம்” என்றபடி ஆபாத சூடமபாய ஸம்ப்ரதாய விஷயகமாதலால் இஃது விஷய க்ருதௌஜ்வல்யத்தையும் “வாத்ஸல்யாதபய ப்ரதாநஸமயாத் ஆர்த்தார்த்தி நிர்வாபணாத் ஔதார்யாத் அகசோஷணாத் அகணித ச்ரேயஃபத ப்ரதாநத: ஸேவ்ய: ஸ்ரீபதிரேக ஏவ ஜகதாம்” என்கிறபடி ஸத்பாத்ரமறிந்து உபதேசிப்பதால் பாத்ர க்ருத ஔஜ்வல்யத்தையும் உடையதென்றாகிறது. இப்பாத்ர விசேஷத்தில் அதாவது நல்ல சிஷ்யனிடத்தில் உபதேசிப்பதை மஹாகவி

“வாத்ஸல்யாதிவிசேஷிதம் குணகணம் வ்ரஜந்தி யஸ்மாத் தத: ।
ஜ்ஞாத்வா ஸமீக்ஷ்ய சுசீந் ஸுக்ஷேத்ரே ஹ்யுப்தாம் வ்ரீஹிபக்திமிவ ॥”

என்று சொன்னாரிறே. ஆகவே உபதேசிக்கப்பட்ட விஷயம் சாகோபசாகமாய் அபிவ்ருத்தமாகும் என்று கருத்து. இப்படிக்கு மூன்று வித ஔஜ்வல்யத்தோடு கூடிய ஜ்ஞாநமாகிற விளக்கை மனத்தேற்றி அப்ரதிபத்தி விப்ரதிபத்தி முதலிய இருளனைத்தும் போக்கி உபகரித்த முநிவனுக்கு ப்ரதியுபகாரம் இன்னதென்று ஈச்வரனும் அறிய அஸமர்த்தன். “மாயனென்றதால் ஸர்வஜ்ஞனுக்கும் ஸாமர்த்யமில்லை, என்று கருத்து. “காணகில்லான்” என்றதால் செய்ய சக்திஅற்றவன் என்பது ப்ரஸித்தமிறே. காண்பதர்க்கும் இல்லான் என்றும் கருத்து. இங்கு ஸர்வஜ்ஞனுக்கு ஓர் அஜ்ஞதையை கல்பித்தால் தோஷாவஹமன்றோ என்றில், அன்று; இது குணத்துக்கனுகுணமே. யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ। ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதச்சந” என்று ஆழ்வானருளிச் செய்தது இங்கு தக்க ஸமாதானமாய் அநுஸந்தேயம். “ஸர்வஜ்ஞதாதிதேவைர் அபி ப்ரத்யுபகர்த்தும் நசக்யதே । குரோ:” என்று தேவதைகள் ஒன்று கூடி செய்ய முயன்றாலும் ப்ரத்யுபகாரம் செய்ய முடியாது என்று சாண்டில்ய பகவான் அருளிச் செய்தானிறே. அப்படியாகில் “பக்த்யா ஸதா ஸேவ்ய” என்றபடி ஆதராதிசயத்தால் சிஷ்யன் செய்யும் ஸ்தோத்ராதிகள் ப்ரத்யுபகாரமாகாதோ வென்றில் அருளிச் செய்கிறார்—போற்றியுகப்பதும் இத்யாதியினால். சிஷ்யனால் அதிக ஆதரவிசேஷத்துக்குப் போக்கு விடாக்ச் செய்யப்படுமது போற்றுதல் புந்தியில் கொள்ளுதல் முதலியது “க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்” என்றபடி கரைபுரண்ட கருணையோடு முதலில் உபதேசித்த ஆசார்யனிடம் நாம் அடைந்த உபகாரத்துக்கு சற்றல்லவோ—அத்யல்பமன்றோ, என்று கருத்து,

இப்படிக்கு ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் அருளிச் செய்தபடி ப்ராக்ருதத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் சிஷ்யர்களுக்கு ஸ்ரீபாஷ்யாதிப்ரவசனத்தால் ஞான விளக்கேத்தி செய்தருளும் நிரபேக்ஷ மகோபகாரத்துக்கு நாம் ஆதரவிசேஷத்தால் ஊரைக்கொண்டாடுதல், பேரைக்கொண்டாடுதல், நாளைக்கொண்டாடுதல் முதலியதாக வகுத்த ப்ரகாரங்களில் இன்னாள் கொண்டாட்டம் எனப்படும் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் மிகவும் ஆனந்திக்கத்தக்கது.

பின் மஹோத்ஸவம் இரவு 11-30 மணிக்கு இனிது நிறைவேறியது.

---



(2)

## அகில பாரதீய ஸநாதநதர்ம வித்வத் பரிஷத்து

[ஸ்ரீ. உ.வ. வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.]

அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் 10-வது ஸமாவேசம் இவ்வருஷம் நமது சென்னையில் ராயபேட்டை லாயிட்ஸ் ரோட் லலிதாஸதநமென்கிற விடத்தில் (ஸ்ரீமான். டி. எஸ். ராமஸ்வாமி ஐயர் அவர்களின் க்ருஹத்தில்) சென்ற டிசம்பர் மீ 29, 30, 31உகளில் நடந்தேறியது. பம்பாயில் வசிக்கும் சேத்தேவிதாஸ் மாதவ்ஜீதாக்கர்ஸே என்பவர் தலைமை வகித்தார். இதற் கநுஸரணையாக இதன் ஆரம்பத்திற்கு நான்கு தினங்கள் முன்னாடியே ஆரம்பித்து 25, 26, 27, 28, தேதிகளில் அகிலபாரதீய ஸநாதநதர்ம வித்வத் பரிஷத்து ஒன்று வெகு விமர்சயாக அதே பந்தலில் நடந்தேறியது. நாநா தேசங்களிலிருந்து பல வித்வான்கள் விஜயம் செய்திருந்ததும் பரமஹம்ஸபரிராஜகாசார்ய ஸ்ரீ திருநாராயணபுரம் யதிராஜஸம்பத்குமார ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி இந்த வித்வத் பரிஷத்தில் அத்யக்ஷராக எழுந்தருளியிருந்ததும் ஸ்ரீமான் பம்பாய் வல்லபாசார்யர் கோகுலநாத் மகராஜ் என்பவர் ஹநுமத்த்வஜாரோபணத்தை செய்து பரிஷத்து நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டிருந்ததும் பரிஷத்தை மிகவும் சிறப்புள்ளாகச் செய்தது. ஹநுமத் த்வஜத்தை ஏற்றுகையில் ஸ்ரீ கோகுல்நாத் மகாராஜ் “ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களுக்கு ஆபத்து ஏற்பட்ட காலத்தில் ஹநுமார் ஸஞ்ஜீவி பர்வதத்தைக் கொண்டுவந்து அவர்களைக் காத்ததுபோல் இன்றும் ஹநுமத் கொடியின் கீழ் கூடிய ஸநாதநிகளையும் காப்பது அவர் கடமை” என்று அச்சமயம் குறிப்பிட்டார். பின் பரிஷத்து ஆரம்பத்தில் விஜயநகரம் அட்வொகேட் ஸ்ரீமான் ப்ரபல லக்ஷ்மீந்ருஸிம்மம் பந்துலு பரிஷத்தை உபசரித்து வரவேற்பு உபந்யாசத்தை வடமொழியில் படித்தார். அதில் அவர் இப்பொழுது ஸநாதந தர்மத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்றும் ஸநாதநிகள் தமது ஸஹோதரர்களையே எதிர்க்க வேண்டியிருக்கிறதென்றும் அரசாங்க அதிகாரத்திலுள்ளவர்கள் சாஸ்த்ரீயக் கொள்கையில் நிற்கவேயில்லையென்றும் நம் நாட்டில் ஸநாதநதர்மத்தில் கைவைத்த எந்த அரசாங்கமும் வெற்றிபெறவில்லை யென்றும் இதை நினைத்தேதான் “மதவிஷயத்தில் தலையிடுவதில்லை” என்று மகாராணி விக்டோரியா வாக்களித்ததென்றும் குறிப்பிட்டார். பின் திருவாங்கூர் ஸம்ஸ்தாநத்தில் கோயிலில் பஞ்சமர்களை விடும் விஷயத்தை ஆலோசித்து முடிவுசெய்ய ஏற்படுத்திய கமிட்டியின் ரிபோர்டில் “ஸநாதநிகளின் விருப்பத்துக்கு மாறாக பஞ்சமர்களை கோயில்களில் விடுவதில் கோயில் கார்யங்களிலும் மற்றும் தேச விஷயத்திலும் பலவிதமான அமைதியின்மை ஏற்படுமென்றும் இவ் விஷயத்தை ஒரு வித்வத் பரிஷத்தின் மூலம் நிச்சயித்து பிறகு அநுமதித்தால் இத்தகைய கஷ்டங்கள் ஏற்படமாட்டாதென்றும்” குறிப்பிட்ட பாகங்களை படித்துக்காட்டி அந்த ரிபோர்ட்டுக்கும் விரோதமாக அந்த அரசாங்கம் முடிவு செய்தது மிக வருந்தத்தக்கதே யென்றும் குறிப்பிட்டார்.

அதன்பின் புஷ்பகிரி மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ மல்லாதி ராமகிருஷ்ண மஹாக்னிசித் பரிஷத்தை திறந்துவைத்து ஸ்ரீ யதிராஜ ஜீயர் ஸ்வாமிகளை அக்ராஸநம் வகிக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். பின் ஜீயர் ஸ்வாமிகள் மிகவும் அழகாயும் கம்பீரமாயும் மநதை உருக்கக்கூடியதாயுமுள்ள நடையில் தமது அக்ராஸந உபந்யா

ஸத்தை வடமொழியில் எழுதி வாசித்தார். பரிஷத்தின் நடவடிக்கைகள் முற்றிலும் வடமொழியிலேயே நடந்தது. அச்சமயம் சுமார் 1000 பேர்களடங்கிய பந்தல் முழுவதும் நிச்சப்தமாயும் ஏகாக்ரசித்தமாயுமிருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

## இவ்வுபந்யாஸத்தின் சுருக்கம்

மேனாட்டு ப்ரஜைகளின் ஸகல யத்னங்களும் வெளிப்படையான விஷயங்களிலேயே செல்லுகின்றன. இந்த்ரிய ஸுகங்களை யநுபவிப்பதிலேயே திருப்தியடைந்துவிடுகிறார்கள். அத்யாத்ம விஷயத்தில் கொஞ்சமேனும் ப்ரவர்திப்பதில்லை. அவர்களால் ஏற்படுத்தப்பட்ட படிப்பும் இவ்விதமாகவே யிருக்கிறது. நமது நாட்டின் முற்காலத்திய படிப்போவெனில் அத்யாத்ம விஷயத்தை முதல் லக்ஷ்யமாகச் செய்துக்கொண்டு அதற்கு விரோத மில்லாத வகையில் இஹலோக பரலோக சுகங்களிலும் அவற்றின் ஸாதனங்களிலும் இரங்கும்படி செய்து அவர்களை மாத்திரமல்லாமல் ஸகல ஜனங்களையும் மேருபர்வதத்தின் சிகரத்தில் ஏற்றிவைக்கக்கூடியதாகும்.

தத்காலம் அதிகாரியாகவிருக்கும் ராஜவர்க்கமானது இப்பாரத பூமியை துண்டு துண்டாகப் பிரித்து ஆங்காங்குள்ள ப்ரஜைகளின் கையில் அந்தந்த மண்டலங்களின் அதிகாரத்தை ஒப்புவித்து தன் கையில் மாவட்டியை வைத்துக்கொண்டு நடத்த, அதற்குத் தக்கவாறு பரபரப்புடன் கார்யங்கள் நடைபெறும்பொழுது சில மண்டலங்களில் மேலேச்சர்களின் அதிகாரமும் மற்றும் சில விடங்களில் ஸநாதன தர்மத்தின் கொள்கைகளுக்கு விரோதமான ஜனங்களுக்கு அதிகாரமும் ஏற்பட்டது. அவர்களும் ஸநாதன வர்ணாச்ரமதர்மம் தங்கள் முன்னேற்றத்துக்கு விரோத மென்று ப்ரமித்து அதை எவ்விதத்திலாவது அதிகாரத்தின் மூலம் நசுக்க முயல்கின்றனர்.* இப்பொழுது நாம் செய்யவேண்டிய கார்யம் (1) ப்ரதி க்ராமம் பிரதி பட்டணம் பிரதி மண்டலம் நம்சபைகளை ஏற்படுத்தி முன்முன் சபைகளில் தீர்மானித்த விஷயங்களை பின் சபைகளில் முடிவு செய்து அவற்றை ராஜசபைக்கு அனுப்புவதுடன் வார்தா பத்ரிகைகளிலும் வெளியிடுவது (2) முன்சொன்ன ஸபையின் நிபந்தனைப்படி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதும் முக்ய சபையில் அனேக ஜனங்களின் இஷ்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ச்ரேஷ்டமான மனிதர்களை முக்ய ராஜசபைகளில் அங்கத்தினராக அனுப்பி அவர்கள் மூலமாக ஸனாதன ஸபையின் கபட நீதிகளை முதலில் கண்டித்து ஸநாதன தர்மத்தைக் காப்பதற்கு அறிக்கைகளை அரசரின் கட்டளைப்படி மண்டலங்களில் பரவச்செய்து அதன் மூலம் அபயத்தை யடைதல். இதற்கு அடிப்படையான கார்யங்க ளிரண்டு.

(1) முதலில் ஸ்வாரஸ்யமான விஷயங்களை நன்றாய் பேசுபவர்களைக்கொண்டு ஆங்காங்கு உபந்யசிக்கப்படவேண்டும். சாஸ்த்ரங்களில் பிறர்களால் கூறப்படும் அபார்த்தங்களை ஒழிக்கவேண்டும். நமது பிள்ளைகளையும் பெண்களையும் விரோதிகளின் ஏற்பாட்டிற்குக் கட்டுப்பட்ட பாடசாலைகளிலிருந்து திருப்பி நமது தர்மத்திற்கு அநுகூலமான பள்ளிக்கூடங்களில் படிக்கும்படி செய்யவேண்டும்.

(2) ஸனாதன ஸப்யர்களால் தூண்டப்பட்ட விரோதிகளால் நடத்தப்படும் அடிதடி சண்டைகளைத் தடுக்க வாலண்டியர்களை ஏற்படுத்தல் மற்றும் இது முதலான நம்முடைய நன்மைக்கு வேண்டியவைகளைச் செய்துகொள்ளல்.



வித்வத்பரிஷத்து நன்கு நடந்தேறவேண்டி அடியிற் கண்டவர்களிடமிருந்து கிடைத்த மங்களாசாஸன ஸ்ரீமுகங்களும் பத்ரிகைகளும் தந்திகளும் வாசிக்கப்பட்டன :—

ஸ்ரீ அஹோபில மடம், காஞ்சி காமகோடி மடம், சிருங்கேரி மடம், வானமாமலை மடம், திருக்குருங்குடி மடம், புஷ்பகிரி மடம், கோவர்த்தன மடம், வல்லபாசார்ய மடம், தீக்ஷிதமகாராஜ் வல்லபாசார்யர் பம்பாய், வ்ரஜரத்னலால் வல்லபாசார்யர் ஸூரத், கங்காநாத்ஜா வயஸ்சான்ஸிலர் அலகாபாத், ஸி. வி. அநந்தகிருஷ்ணய்யர் ஐகோர்ட் ஜட்ஜ், எம். ஸுப்ரமண்ய ஐயர் ரிடைர்ட் ஜட்ஜ், ஸ்ரீ ஹர்ஷமுகர்ஜீ பர்ட்வான், ஸ்ரீநிவாஸ முதலியார் மன்னார்குடி, வி. கே. சடர்ஜீ அகவுண்டெண்ட்ஜனரல் நாக்பூர், டி. கோதண்டராமய்யங்கார் தஞ்சாவூர், ஜயந்திராமய்ய பந்துலுகாரு, ஆர். வி. கிருஷ்ணய்யர் முதலானவர்கள். அனேகம் மகாமகோபாத்யாயர்களும் மற்றும் பல தேசத்திய வித்வான்களும் கொச்சி அரசகுமாரர் பரீக்ஷித் மஹாராஜா, ஜஸ்டிஸ் வெங்கடஸுப்பாராவ், ஜஸ்டிஸ் வரதாசாரியர் முதலியோர்களும் சபையை அலங்கரித்ததுமல்லாமல் இவர்களில் பலர் வாதங்களிலும் கலந்துகொண்டார்கள். ஜஸ்டிஸ் வரதாசார்யர் பரிஷத்தின் நடவடிக்கைகளை முழுவதும் கவனிக்கும்படி வேண்டிக்கொள்ளப்பட்டு அவ்வாறே செய்துவந்தார்.

## (1) விவாதித்து நிச்சயிக்கப்பட்ட விஷயங்கள்

பரிஷத்தின் முதல் தின விவாதத்திற்கு "வேதம் பௌருஷேயமா அபௌருஷேயமா" என்ற விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. எல்லா ப்ரமாணங்களிலும் வேதம் முன்னிலையில் நிற்பதால் அதன் ப்ராமண்யத்தை ஸாதித்துக்கொள்வதற்கு இவ்விவாதம் முதலில் துவக்கப்பட்டது.—காளிதாஸன் முதலானோர்களின் க்ரந்தங்கள்போல் வாக்யரூபமானதால் ஏன் வேதம் பௌருஷேயமாயிருக்கக்கூடாது என்று தீவ்ரமாக பூர்வபக்ஷம் நடந்தது. இப் பாரதநாடு முழுவதும் சிஷ்டர்கள் எல்லோராலும் ஈஷத்தும் பேதமில்லாமல் அத்யயன பரம்பரயாகவே வேதம் கற்றுக்கொள்ளப்பட்டு வருவதால் இது அநாதியென்றும் அப்படி கற்றுக்கொள்ளப்பட்டுவரும் வேதம் இன்னார் செய்தது என்று யாரும் சொல்லாததால் வாக்யரூபம் என்ற ஹேது ஸோபாதிகமாயிற்றென்றும் கூறி வெகுநேரம் விவாதத்திற்குப்பின் வேதம் அபௌருஷேயந்தான் என்று ஸித்தாந்தம் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## (2) தர்மநிர்ணயத்தில் மீமாம்ஸாபத்ததியே ஆதரிக்கவேண்டும்

இது இரண்டாவதாக சர்சித்த விஷயம். தர்மநிர்ணயத்திற்கென ஏற்பட்ட ப்ரமாண க்ரந்தங்கள் (வேதம் முதலியவைகள்) ஏதோ சிலர்களின் சரித்ரங்களையும் கொள்கைகளையும் தெறிவிக்கும் நூல்களே. அவை மீமாம்ஸகர்கள் சொல்லும் ரீதியில் முற்றும் ப்ரமாணமாகா வென்று ஆக்ஷேபம். தர்மம் எது என்பதிலும் பல ஆக்ஷேபம் கிளம்பியது. முடிவில் அத்ருஷ்டஸாதனமாக வேதவிஹித கார்யம் தர்மமென்றும் அத்தகைய தர்மத்தை நிச்சயிக்க மீமாம்ஸகர்களின் வழி யொன்றே இயலுமென்றும் நிர்தாரிதமாயிற்று.

(3) தர்மநிர்ணயத்தில் யுக்தி ஸ்வதந்த்ர ப்ரமாணமா என்பதிலும் பூர்வபக்ஷ யுக்திகள் நன்கு விசாரிக்கப்பட்டு ப்ரமாண அநுக்ராஹகமாகத்தான் யுக்தியை எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாது ஸ்வதந்த்ர யுக்தி ப்ரமாணமாகாது என்றும் ஆகையால் ஆத்ம துஷ்டியென்பது சாஸ்த்ர விரோதத்தில் ப்ரமாணமாகாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## (4) சாஸ்த்ரங்களை மாற்ற யாருக்கு அதிகாரம்

அத்ருஷ்டஸாதனமான விஷயத்தில் யாருக்கும் அதிகாரமில்லை. கேவலத்ருஷ்ட விஷயத்தில் அரசாங்கத்தார் இஷ்டப்படி செய்தால் செய்யலாம். அதன் ஸாதகபாதகங்கள் ஜனங்களுக் குண்டாவதானால் அதிலும் அதிகாரமில்லை. தர்மசாஸ்த்ர விருத்தமாக ராஜசாஸநம் ஏற்பட்டால் சக்தர்கள் அதை மீறியே தர்மத்தை நடத்திக்கொள்ள வேண்டும். அதால் ஏற்படும் காராக்ருஹப்ரவேசம் முதலியவற்றை பொறுமையுடன் ஏற்று பின் அவற்றிற்கு ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும். அசக்தர்கள் ராஜசாஸநத்தை பின்பற்றி பின் அதற்கு ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். இது ஆபத்கல்பம். இதில் சிலர்களின் அபிப்ராயம் மரண ஸம்பாவனை யாகிற ஆபத்திலுங்கூட அநுவர்த்தநம் பண்ணலாகாதென்று.

## (5) அஸ்ப்ரச்ய விசாரம்

இதில் முதலில் பொதுவாக ஜாதி 'ஜன்மஸித்தமா கர்மஸித்தமா' என்று விசாரிக்கப்பட்டு பல ப்ரமாணங்களை யநுஸரித்து ஜன்ம ஸித்தந்தான் என்றும் ஜாதியை ஒட்டிவரும் ஸ்பருசத்யத்வமும் அஸ்ப்ருச்யத்வமும் ஜந்மஸித்தமே யென்றும் ஆதலால் சரீர முள்ளளவும் அதை மாற்ற முடியாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்பின் தீண்டத்தகாதவர்களின் ஸபாப்ரவேசம், கிணறு குளங்களில் ஜலம் எடுத்தல், தேவாலய ப்ரவேசம் முதலியது பலமாக விசாரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆக்ஷேபத்திற்கும் தக்கபடி பாஞ்சராத்ரங்களிலிருந்தும் வைகாநஸாகமங்களிலிருந்தும் சைவாகமங்களிலிருந்தும் தக்க ப்ரமாணங்களை எடுத்துக்காட்டி நிர்ணயித்ததாவது—(1) பொது ஸ்தலங்களில் நான்கு யுகத்தடி வ்யவதானத்தில் எங்கு சாயாக்ரமண மிராதோ அப்படிப்பட்ட விடங்களில் ஸபாப் ப்ரவேசம் அவர்களுக்கும் கூடும்; மாறியிருந்தால் மற்றவர்களுக்கு ஸ்நாநத்தால் சுத்தி. (2) நான்கு புறங்களிலும் நான்கு முழம் விஸ்தாரமுள்ளதாயும் ஆவரணமில்லாமலுமிருக்கிற பொதுக்கிணறுகளில் ஒரு பக்கம் அஸ்ப்ருச்யர்கள் ஜலமெடுத்துக்கொள்ளலாம். அவ்வாறே முழங்காலளவு ஆழத்திற்கு குறையாமலிருக்கும் குளங்களில் அவர்களுக்கென ஏற்பட்ட துறைகளில் அவர்கள் உபயோகித்துக் கொள்ளலாம். தேவாலய விஷயத்தில் வெகு விவாதம் நடந்தபின் ஏகோபித்த நிர்ணயமாவது—அத்ருஷ்ட ஸாதநமான தேவோபாஸநத்தில் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு விதமான உபாஸநம் ஏற்பட்டபடி இவர்களுக்கு வெகு எளிதான முறையில் அது ஏற்பட்டிருக்கிறது. மற்றவர்கள் பல நியமங்களாலும் கஷ்டத்தாலும் ஸாதிக்க வேண்டிய தர்மத்தை இவர்களால் கோபுர தர்சநத்தாலும் விமாந தர்சநத்தாலும், வெளியில் உத்ஸவம் இவர்களுக்கெனவே ஏற்பட்டபடியால் உத்ஸவ மூர்த்தியை அக்காலங்களில் தர்சிப்பதாலும் ரத தர்சனத்தாலும் உண்டாவதாக சாஸ்த்ரங்கள் ஒரே விதமா-



-கச் சொல்லுவதாலும் தேவாலயத்திற்குள் ப்ரவேசிப்பதால் பிம்பத்திற்கு அசுத்தி ஏற்பட்டு அத் தேவதை அதை விட்டு அகன்று விடுமென்றும் கூறுவதாலும், அசுத்த பிம்பத்தை தர்சிப்பதாலும் பூஜிப்பதாலும் பாபமுண்டாவதாகவும் தேசத்திற்கே அநர்த்தம் ஏற்படுவதாகவும் கூறுவதாலும், அவர்கள் தேவாலயத்திற்குள் வரவேண்டுமென்று கோறுவது அவர்களுக்கே (சாஸ்த்ரப்படி) அநர்த்தாவஹமாகையால் தேவாலய ப்ரவேசம் அவர்களுக்குக் கூடாது என்று நிர்ணயிக்கப்பட்டது.

## (6) பதிதபராவர்தனம்

வேறு ஜாதி மதங்களில் வ்யாமோகத்தாலோ பலாத்காரத்தாலோ புகுந்தவர்களை பின் அநுதாபம் ஜநித்தும் பழைய ஜாதியில் சேர்த்துக் கொள்வதைப்பற்றி பலமாக விசாரம் நடந்தது. நான்கு வருஷங்களுள் அவர்களுக்கு ப்ராயச் சித்தத்தால் சுத்தியென்றும் அதன்பின் சுத்தியில்லையென்றும் கக்ஷிகள் எடுத்துக் காட்டபபட்டு இதன் நிர்ணயம் தத்காலம் செய்யாமலேயே ஒத்தி வைக்கப்பட்டது.

## (7) அவாந்தர ஜாதி விவாகம்

ஒவ்வொரு ஜாதியிலுமே உட்பிரிவுகளில் பரஸ்பரம் விவாஹம் சாஸ்தராநுமதமா என்று விசாரிக்கையில் நிஷேதமில்லாமையால் அது அநுமதமாகலாமென்று சிலர் அபிப்ராயப்பட்டபோதிலும் ஸ்காந்த புராண வசநங்களைக் கொண்டு ஸ்பஷ்டமாக அவையும் கூடாதென்றே ஏற்படுவதால் அதுவும் நிஷித்தமே என்றும் நிச்சயிக்கப் பட்டது.

பின் முடிவில் அத்யக்ஷருடைய உபந்யாசத்தில் மேல் கோட்டையில் வருஷத்திற் கொருமுறை உத்ஸவ காலத்தில் த்வஜம் வரையில் பஞ்சமர்கள் வரலாமென்று ஸ்ரீ ராமாநுஜர் ஏற்பாடு செய்திருக்கிறார் என்று சிலர்சொல்லும் வாதத்திற்கு பதில் கூறுகையில் அத்யக்ஷர் தான் " அதே ஊரில் பிறந்தவர் என்றும் இந்த வதந்தி இன்றுட்களாக யாரும் அவ்வூரில் சொல்வாரில்லை என்றும் அவ்வூர் வ்ருத்தாந்தத்தை தெறிவிக்கும் 'நிகமனப்படி' என்கிற நூலிலும் இவ்விஷயமில்லையென்றும் ஸம்ப்ரதாயபன்னமான க்ரந்த காரர்கள் யாரும் இதை சொல்லாமையால் பின் காலத்தார் எழுதி வைத்திருப்பதெல்லாம் உபேக்ஷிக்கத் தந்ததாகுமென்றும் குறிப்பிட்டார். முடிவில் கோச்சி மகா ராஜாவுக்கு தார்மிக சக்ரவர்த்தீ என்கிற பிருதம் அளிக்கப்பட்டு அது எல்லா தேசத்தவர்களாலும் அவருடைய தர்மசரத்தை தர்மாநு குணராஜ்ய பரிபாலன முறை அவருடைய தர்ம சாஸ்த்ர பாண்டித்யம் முதலியவைகளைப் புகழ்ந்து இத்தகைய கவுரவம் அவருக்கே தகுமென்றும் இத்தகைய தார்மிகசக்ரவர்த்தியின் லாபத்தால் நம்முடைய தர்மம் இனி செழிந்தோங்கு மென்றும் அபிநந்தனம் செய்யப்பட்டபின் வந்தனோபசாரங்களுடன் வித்வத்பரிஷத்து கலைந்தது. பின், 29, 30, 31. உகளில் நடந்த வர்ணாச்ரமஸ்வராஜ்ய சங்கக் கூட்டத்திலும் இவ்விஷயங்கள் ஊர்ஜிதப் படுத்தப்பட்டன.

## ஸ்ரீமான் பண்டித வே. அனந்தாசார்ய ஸ்வாமிக்கு அபிநந்தனம்

[பிரம்மஸ்ரீ. வி. நாராயண அய்யரவர்கள், M. A., M. L.]

சென்னை பச்சையப்பன் கலாசாலையில் சுமார் 15 வருஷகாலமாக ஸம்ஸ்கிருத உபாத்தியாயராக இருந்து சென்ற ஜுலை மாதம் விட்டுவிலகிய ஸ்ரீ. அனந்தாசார்ய ஸ்வாமிக்கு அக்கலாசாலை மாணவர்களின் ஸம்ஸ்கிருத ஸங்கத்தின் சார்பாக ஒரு அபிநந்தன பத்திரிகை 21—1—1938 சாயங்காலம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அச்சமயம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ. எஸ். ஸுப்ரமண்யன் என்னும் மாணவகனால் கையால் எழுதப்பட்டதான ஸ்ரீ அனந்தாசார்யரின் படம் ஒன்று அக்ராசனாதிபதியால் ஸம்ஸ்கிருத ஸங்கத்தின் சார்பாக கலாசாலைக்கு அளிக்கப்பட்டது.

தலைவர் முன்னுரையில் நமது நாட்டின் விசேஷச் சிறப்புக்களில் அஸாதாரணமானது ஆசார்ய சிஷ்ய ஸம்பந்தம் என்றும் அது பதிபத்நி ஸம்பந்தம் போன்று அவ்வளவு அந்தரங்கமானது என்றும் ஸ்ரீ அனந்தாசார்யரவர்களைத் தாம் வெகுகாலமாக அறிந்து அவருடைய உத்தம குணங்களை அனுபவித்து வந்துள்ளதாகவும், அவருடைய ஆசார்யகுணாதிசயங்களை அவர் கலாசாலையை விட்டுவிலகிய பின்பு தம்முடன் நெருங்கிய பழக்கத்தால் தாம் நன்குணர்ந்ததாகவும் கூறி, இனித்த அன்புடைமையே அனந்தாசார்யாரவர்களின் விசேஷ குணமாகுமென்றும் இக்குணத்தை இவரது முகத்தைப்போல் இவரது படமும் பிற்காலத்து மாணவர்களுக்கு நினைப்பூட்டுமென்றும் கூறிப் படத்தைத் திறந்து வைத்தார்.

பின்பு மாணவகர்கள் சார்பாக ஸம்ஸ்கிருதத்தில் உபசாரப்பத்திரிகை வாசித்துக் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீமான், அனந்தாசார்யர் அழகானமாயும், கம்பீரமாயும் ஸம்ஸ்கிருதத்தில் பேசியதின் ஸாரம் வருமாறு:—

"என்னிடம் காணப்பட்டதாகக் கூறிய குணங்கள் பலவும் என்னுடையதல்ல; அவை நான் பால்யமுதல் வழிபடும் ஸரஸ்வதிதேவியின் அனுக்கிரகங்கள். இவ்வகைக் குணங்கள் ஸம்ஸ்கிருத பாஷையைப் பயில்வோர் அனைவருக்கும் இருப்பது ஸஹஜம். ஸம்ஸ்கிருதம் கற்பவர்கள் அம்மொழி பரீக்ஷையிலே மட்டுமெல்லாமல் மற்றைய பாட பரீக்ஷைகளிலும் சிறப்பாக தேர்ச்சி பெறுவதை நான் பல வருஷங்களாக கவனித்திருக்கிறேன். ஆகையால் மாணவர்கள் எல்லோருமே ஸம்ஸ்க்ருதம் படிக்கவேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை. ஸம்ஸ்கிருதம் கற்றோர் நற்குணமுடையோராய் கல்வியிலே தேர்ந்து நற்பதவியடைவார்கள். என்னைப்பொறுக்கி எடுத்து இக்கலாசாலையின் ஸம்ஸ்கிருத உபாத்யாயராக்கிய பச்சையப்பன் டிரஸ்ட் போர்ட்டாருக்கும் விசேஷமாக அதன் தலைவராக இருந்த ஸ்ரீமான் திருமலைப்பிள்ளையவர்களுக்கும் என் நன்றி உரியது" என்று சொன்னார்.



காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீமான் பி. என். ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் காலேஜின் சார்பாக படத்தை ஏற்றுக்கொண்டு பேசியபோது ஸ்ரீமான் பண்டிதரவர்கள் வித்யா விநய ஸம்பன்னர் என்றும் அவருக்கு காவிய ரஸத்தை அனுபவித்துப் பிறருக்குப் போதிப்பதிலே விசேஷ சக்தியுண்டு என்றும் தத்துவ விஷயத்திலும் மத விஷயத்திலும் ஒருங்கே தேர்ந்திருப்பதால் உபாத்தியாயத் தொழிலினின்று விலகி விச்ராந்தி விரும்பிய காலத்திலும் 'வேதாந்த தீபிகை' யை நடத்துவதோடும் ஸ்ரீபாஷ்யத்வத வியாக்யானங்களுடன் பதிப்பிப்பதோடும் இராமல் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் அடிப்படையான உண்மை "தைவம் என்பது அழகு" என்பதே என்று தமக்குக் காவியத்திலும் வேதாந்தத்திலும் உள்ள விசேஷ பாண்டியத்தியத்தால் நிரூபிக்க வேண்டுமென்று தாம் வேண்டிக்கொள்வதாகக் கூறினார்.

கலாசாலைத் தெலுங்கு உபாத்தியாயர் ஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் ஸ்ரீ அனந்தாசார்யரவர்களின் பாண்டித்யத்தைப் புகழ்ந்து பேசி தமிழ் முதலிய இதர பாஷை உபாத்தியாயர்களின் சார்பாகவும் தெலுங்கின் சார்பாகவும் அத்தெலுங்குக்கு மாதுருபாஷையான ஸம்ஸ்கிருதத்தின் உபாத்தியாயரிடம் தங்களுக்கு கௌரவ புத்தி யுள்ளதைத் தெரிவித்தார்.

ஸ்ரீ அனந்தாசார்யரின் சிஷ்யர்களின் சார்பாக இருவர் பேசியபின், அக்ராசனாதிபதி தமது முடிவுரையிலே ஒவ்வொரு பெரியவரையும் கண்டெடுத்துப் பாராட்டுவதற்கு ஒரு பெரியார் வாய்ப்பார் என்றும் அவ்வாறு ஸ்ரீமான் அனந்தாசார்யரின் பெருமையைப் பாராட்டி அவருக்கு ஊக்கமும் உதவியும் அளித்தவர் காலஞ்சென்ற திவான் பகதூர். டி. நம்பெருமாள் செட்டியாரவர்கள் என்றும் கூறி, இக் கூட்டத்திற்குத் தம்மைத் தலைவராக வரித்து தம்முடைய ஸௌகரியத்திற்காக இக் கூட்டத்தைத் தள்ளிப் போட்டு, தமக்கு இக்கூட்டத்திலே கலந்துகொள்ள ஸௌகர்ய மளித்த ஸங்கத்தாருக்கு தம்முடைய நன்றியைக் கூறி முடித்தார். தலைவருக்கு வந்தனோபசாரம் கூறியதோடு ஸபை கலைந்தது.

---

ஸ்ரீ:

## க்ரந்த விமர்சங்கள்

### (1)

யதீந்த்ர மத தீபிகை. [கும்பகோணம் திவான் பஹதூர். ஸ்ரீ. உ.வே. கெ. ராமாநுஜாசார்யருடைய தமிழ் உரையுடன் கூடியது. மூல்யம் ரூ 3-8-0]

சோளஸிம்ஹபுரம் மஹாசார்யரென்று ப்ரஸித்தரான ஸ்ரீ தொட்டயாசார்ய ஸ்வாமியின் சிஷ்யரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்ய ரென்னும் வித்வானால் ஸம்ஸ்க்ருத பாஷையில் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள "யதீந்த்ர மத தீபிகை" என்னும் க்ரந்தத்திற்கு, கும்பகோணம் திவான் பஹதூர்

ஸ்ரீ. உப. வி. கெ. ராமாநுஜாசார்யர், ஸ்ரீ. உப. சின்னாமு ஸ்ரீநிவாஸ பாட்ராசார்யர் என்பவருடைய ஸஹாயத்துடன் எளிதான தமிழ் உரை ஒன்றெழுதி அதை ஒரு பெரிய புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார். இந்த மூல க்ரந்தம் பத்து அவதாரங்களை [அதாவது-பிரிவுகளை]உடையது. முதல் மூன்று அவதாரங்கள், ப்ரத்யக்ஷம் அநுமாநம் சப்தம் என்னும் மூன்று வித ப்ரமாணங்களையும், மற்றை ஏழு அவதாரங்கள் ஏழு வித ப்ரமேயங்களையும், விசாரிக்கின்றன. இந்த ஏழு அவதாரங்களுள் முதல் ஆறு அவதாரங்கள் த்ரவ்யங்களைப் பற்றியும், ஏழாவது அவதாரம் அத்ரவ்யங்களைப்பற்றியும் விசாரம் செய்கின்றன. அந்த ஆறு அவதாரங்களுள் முதல் இரண்டு ப்ரக்ருதி காலம் என்னும் ஜடத்ரவ்யங்களைப்பற்றியும், அடுத்து வரும் இரண்டு நித்ய விபூதி தர்ம பூதஜ்ஞாநம் என்னும் அஜடமாயும் பராக்காயுமுள்ள த்ரவ்யங்களைப்பற்றியும், கடைசி இரண்டும் ஜீவன் ஈச்வரன் என்னும் அஜட ப்ரத்யக் த்ரவ்யங்களைப் பற்றியும் விசாரிக்கின்றன. கடைசி பத்தாவது அவதாரம் ஸத்வம் ரஜஸ்தமஸ் முதலிய பத்து வித அத்ரவ்யங்களைப்பற்றி விசாரம் செய்கின்றது. இப்படி விசாரிக்கப் பட்டுள்ள விஷயங்களே பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம் என்று சொல்லப் படும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் முக்கிய விஷயங்கள். ஆகையால் இவை உள்ளபடி அறியப்பட்டால் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் நன்றாக அறியப்பட்டதாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை.

இது ஒரு சிறிய க்ரந்தமேயாயினும், தமிழ் உரையுடன் இது 550 பக்கங்கள் அடங்கியப் பெரியதொரு க்ரந்தமாக விஸ்தாரத்தைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், இந்த உரையின் கர்த்தாக்கள் மூல க்ரந்தத்தின் விஷயங்களை அஜ்ஞாந ஸம்சய விபர்யயங்களற விளக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய ந்யாய பரிசுத்தி ந்யாய ஸித்தாஞ்சநம் தத்வமுக்தாகலாபம் முதலிய திவ்ய ஸூக்திகளிலிருந்து அருமையான சில விஷய விசேஷங்களை ஆராய்ந்து எடுத்து அவைகளை ஆதாரமாய்க்கொண்டு அநேக குறிப்புகளையும் விஸ்தாரமான பதினாறு அநுபந்தங்களையும் எழுதி இருக்கிறார்கள் என்பதே. மிகவும் ஸங்குசிதமாயுள்ள இந்த க்ரந்தத்தை எல்லாரும் எளிதில் தெளிவாக அறியவேண்டுமானால் இவ்வளவு விஸ்தாரமும் இன்னும் இதைக் காட்டிலும் அதிகமான விஸ்தாரமும் அபேக்ஷிதமே.

இந்த உரையின் மஹிமையைப் பற்றி நாம் சொல்ல வேண்டியது ஸ்வல்பமே. இதன் முக்கிய கர்த்தாவாகிற ஸ்ரீ. உப. ஸ்ரீ ராமாநுஜாசார்யர், ப்ரஹ்ம விதக்ரேஸரர்களான ஸதாசார்யர்களுடைய ஸாக்ஷாத் கடாக்ஷத்தைப் பூர்ணமாகப் பெற்றவர். இவருக்கு இவ்விஷயத்தில் உதவி புரிந்துள்ள ஸ்ரீ. உப. சின்னாமு பாட்ராசார்யரும், நமது பூர்வாசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளை பஹுவாக ஆவ்ருத்தி செய்து அதனால் வேதாந்தத்தில் சிறந்த வைதுஷ்யத்தைப் பெற்றிருப்பவர்களுள் ஒருவர். இவர்களுடைய ஸ்ம்பந்தமே இந்த உரையின் பெருமையை வெளியிடப் போதுமானது. பஹுவாக எழுதி யிருக்கிறார்களே! எவ்விடத்திலாவது ஏதாவது ஒருதோஷம் ஸம்பவித்திருக்லாமோ?" என்று நாம் இந்த உரையைப் ஊன்றிப் பார்த்தோம். ஓரிடத்திலும் ஒரு வித தோஷமும் நமக்குத் தென்படவில்லை. இதில் செய்யப்பட்டுள்ள உபபாதநங்களெல்லாம் நமது ஸித்தாந்தத்திக்கு ஒத்தவையாகவே இருக்கின்றன.



இந்த க்ரந்தத்தை அபேக்ஷிப்பவர்கள் "ஸ்ரீ. உப. ர. ஸ்ரீ நிவாஸ பாட்ராசார்யர், 16, பாட்ராசார்ய வீதி, கும்பகோணம்" என்னும் விலாஸத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மாம்பலம்
10-1-38 } வங்கிபுரம் வாஸுதேவாசார்யர்.

---

## ஸுபாஷிதநீவி

(2)

நமது ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ என்னும் மாத பத்திரிகையில் ப்ரதிமாதம் வெளியாகி வந்த இந்த சுபாஷிதநீவி. என்னும் நூல் முடிவு பெற்று புத்தகரூபமாய் நமது வேதாந்த தீபிகை ஆபீசுக்கு வரப் பெற்றோம். ஸ்ரீ ரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் வேதாந்த சாஸ்திர பாராவார பாரீணரும் ஸாஹித்ய சாஸ்திர ஸாரஸர்வஸ்வவேதியுமான ஏ. வி. கோபாலாசார்யரால் எழுதப்பட்ட எளிதும் விரிந்ததுமான தமிழ் உரையுடன் கூடி இப்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த நூல் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனால் அருளிச் செய்யப் பட்டது. பனிரண்டு பத்ததிகள் அடங்கியது. இதில் அடங்கிய ச்லோகங்களின் ஸங்கியை 144. இதை சிறியதொரு நீதி காவ்யமாகச் சொல்லாம். சிறுவர்களுக்கு எளிதில் வடமொழி கற்க இது ஓர் நிகரற்ற நூல் ஆகும். மனிதர், இன்பமுற உலக வாழ்க்கையை நடத்துவதற்கு என்னென்ன நீதிகள் வேணுமோ அப்படிப்பட்ட அருமையான நீதிகள் என்னும் ரத்நங்களால் தொடுக்கப்பட்ட மாலை என்று இதைச் சொல்லலாம். சோள ஸிம்மபுரம் தொட்டயாசார்யர் அருளிச் செய்த வைபவ ப்ரகாசிகையில் இதற்கு "ஸுகுண ஸுபாஷிதாநாம் மாலா" என்று ஸுபாஷித மாலை

என்றே பெயரிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ச்லோகத்திலும் பல பொருட்கள் தொனிக்கும்படி பதங்கள் கோர்க்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் அரஸிகர் மனங்கூட ஆநந்த பரவசமாய்த் தீரும். இந்த ஒரு புத்தகத்தை மாத்திரம் கசடறக் கற்றறிந்தால் ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல ப்ரவேசம் உண்டாய் விடும் என்பதில் ஸம்சயம் இல்லை. இதில் அடங்கிய விலையில்லா மாணிக்கம் போன்ற ஒவ்வொரு ச்லோகத்திற்கும் நமது வித்வான் ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி எழுதி வெளிப்படுத்திய தாத்பர்யங்கள், பண்டிதர் மாத்திரமல்ல பாமரர்கூட கண்டு களிக்கத் தக்கவை. இதற்கு முன் வித்வான்களால் எழுதப்பட்ட சில வ்யாக்யானங்கள் உண்டு. அவற்றில் அடியிற்கண்ட இரண்டும் பிரசித்தமானவை. (1) ஸ்ரீ சைலகுலத்தில் தோன்றிய ஸ்ரீநிவாஸ ஸூரியால் செய்யப்பட்ட ரத்நபேடிகா (2) நரகேஸரி என்ற வித்வானால் எழுதப்பட்டது.

காஞ்சீபுரம் சதுச்சாஸ்திர வித்வான் பட்டப்பா ஸ்வாமியால் எழுதப்பட்ட வியாக்யானம் சில ச்லோகங்களுக்கே உளது. ஸ்ரீ பட்டப்பா ஸ்வாமி வியாக்யானம் வித்வான்களுக்கும் ரஸிகர்களுக்கும் மிகவும் ஆஸ்வாதநீயமானது. இப்படிப்பட்ட உயர்ந்த கிரந்தத்தை வடமொழியில் பயிற்சியில்லாதவர் எளிதில் வாசிக்கக்கூடிய ரீதியில் உரை எழுதி வெளிப்படுத்தியதற்காக ஸ்ரீமான் ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியினிடத்திலும் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணீ ஸபையாரிடத்திலும், இதற்குப் பொருளுதவி செய்த ஸ்ரீமான் கமலாபுரம் ராமஸ்வாமி அய்யங்காரிடத்திலும் நாமனைவரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ச்ரமமின்றி ஸாஹித்யத்தில் அறிவை பெற விரும்புகின்ற சிறுவர் அனைவரும் இந்நூலைத் தவறாமல் படிப்பது நன்று.

இதன் விலை ரூ 1—4—0

கிடைக்குமிடம் (1) ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ ஸபை ஸ்ரீ ரங்கம் or 29. கிருஷ்ணபவநம், வேப்பேரி, மதராஸ்.



என்கிறார்கள். தன்னிடத்தில் லயித்துக்கிடப்பதால் ஸ்வபிதி என்று சொல்லுவது மிகப்பொருந்தும் என்று. உறங்கிற இந்த சேதநன் ஸத்தோடு சேர்ந்திருக்கும்போது ஸ்வாப்யயம் அதாவது ஆத்மாவில் லயித்தவன் என்று சொல்லியிருக்கிறபடியினால் ஸத் என்னும் வஸ்து ப்ரதாநமன்று ப்ரதாநத்தைக் காட்டிலும் வேறு என்று நிச்சயமாய் அறியப்படுகிறது. "ஸ்வம பீதோபவதி" என்னும் வாக்யத்திற்கு இந்த ஜீவன் தன்னையே அடைந்தவன் ஆகிறான் என்று பொருள்.

चिद्वस्तुशरीरकं तदात्मभूतं ब्रह्मैव जीवशब्देनाभिधीयत इति नामरूपव्याकरणश्रुत्युक्तम् ॥

சித் என்றால் சேதநன். அறிவுள்ளவன். ஜீவனை சரீரமாகவுடையவும், அந்த ஜீவனுக்கு ஆத்மாவாக நிற்கிறதுமான ப்ரஹ்மமே ஜீவ என்ற சொல்லால் சொல்லப்படுகிறது என்று. நாமரூபங்களை விவரிக்கிற ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

तज्जीवशब्दाभिधेयं परं ब्रह्मैव सुषुप्तिकालेऽपि प्रलयकाल इव नामरूपपरिष्वङ्गाभावात् केवलसच्छब्दाभिधेयमिति 'सता सोम्य तदा सम्पन्नो भवति स्वमपीतो भवति' इत्युच्यते ।

அந்த ஜீவன் என்ற சப்தத்திற்குப் பொருளாக நிற்கிற பரப்ரஹ்மமே ஸுஷுப்தி காலத்திலும் ப்ரளய காலத்தில் போல், நாமரூபங்கள் ஒன்றும் இல்லாதது கொண்டு ஸத் என்னும் சப்தத்தால் மாத்திரம் சொல்லப்படுகிறது, ஆகையால் அப்போது ஸத்தோடு சேர்ந்தவனாகிறான். தன்னையே அடைந்தவனாகிறான் என்று சொல்லப்படுகிறது. ப்ரளய காலத்தில் ஜீவாத்மாக்கள் நாமரூபங்கள் இன்றி சுத்தமான ஆத்ம ஸ்வரூபத்தில் நின்று பரமாத்மாவோடு சேர்ந்திருக்கிறார்கள் என்பது வேதாந்திகளின் சித்தாந்தம், அப்படியே உறங்கும்போதும் நாம ரூபங்களை விட்டு பரமாத்மாவோடு லயித்துக் கிடக்கிறார்கள் என்று தாத்பர்யம்,

तथा समानप्रकरणे नामरूपपरिष्वङ्गाभावेन प्राज्ञेनैव परिष्वङ्गात् 'प्राज्ञेनात्मना संपरिष्वक्तो न बाह्यं किञ्चन वेद नान्तरम्' इत्युच्यते ।

ப்ருஹதாரண்ய கோப நிஷத்தில் இதே விஷயத்தை விவரிக்கும் ப்ரகரணத்தில் நாமரூபங்களின் சேர்க்கையற்றிருப்பதால் ப்ராஜ்ஞன் என்று சொல்

லப்படும் பரமாத்மாவோடு சேர்ந்திருப்பதால் 'ப்ராஜ்ஞனோடு சேர்ந்த இந்த ஜீவன் தனக்குப் புறனிலும் உள்ளிலும் ஒன்றையும் காண்பதில்லை. அறிவதில்லை. என்று சொல்லப்படுகிறது.

आमोक्षाज्जीवस्य नामरूपपरिष्वङ्गादेव हि स्वव्यतिरिक्तविषयज्ञानोदयः ।

ஜீவனுக்கு ப்ரக்ருதியில் நின்றும் மோக்ஷம் உண்டாகும்வரை, நாமரூபங்களின் ஸம்பந்தத்தாலே யன்றோ தனக்குப் புறமே உள்ள பொருட்களின் அறிவு உண்டாவது.

सुषुप्तिकाले हि नामरूपे विहाय सता संपरिष्वक्तः पुनरपि जागरदशायां नामरूपे परिष्वज्य तन्नामरूपो भवतीति श्रुत्यन्तरे स्पष्टमभिधीयते—

"यदा सुप्तः स्वप्नं न कथञ्चन पश्यति अथास्मिन् प्राण एवैकधा भवति । एतस्माद्वा आत्मनः प्राणा यथायथं विप्रतिष्ठन्ते ।" तथा, "त इह व्याघ्रो वा वृको वा वराहो वा, यद्यद्भवन्ति तथा भवन्ति" इति ।

ஸுஷுப்திகாலத்தில் நாம ரூபங்களை விட்டு ஸத்தோடு சேர்ந்திருந்து பின்னேயும், விழிக்கும்போது நாமரூபங்களைப் பெற்று, அந்த நாம மயமாயும் அந்த ரூப மய மாயும் ஆகிறான். என்று வேறு ச்ருதியால் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. "யதாஸுப்த:" என்றது கௌஷீதகி ப்ராஹ்மண வாக்யம். உறங்கினவன் எப்போது ஒரு ஸ்வப்நத்தையும் காணவில்லையோ அப்போது ப்ராண சப்த வாச்யனான பரமாத்மாவினிடம் சேர்ந்து, மனதில் உண்டாகக்கூடிய ராகத்வேஷம் முதலான கலக்கமற்றவனாக இருக்கிறான். எப்போது விழித்துக்கொள்ளுகிறானோ அப்போது இந்த ஜீவர்கள் பரமாத்மாவினிடமிருந்து வஸிக்குமிடம் சென்று வேலை செய்ய புறப்படுகின்றனர். என்று.

गतिसामान्यात् ॥ १. १. ११. ॥



இந்த உபநிஷத் வாக்யத்திற்கு மற்ற உபநிஷத் வாக்யங்களைப் போலவே பொருள் கொள்ளவேண்டியது அவச்யமிருப்பதால், ப்ரதாநம் ஜகத்காரணமல்ல.

सकलोपनिषद्गतिसामान्यादस्यामप्युपनिषदि न प्रधानं कारणमिति ज्ञायते । "आत्मा वा इदमेक एवाग्र आसीत् । नान्यत्किञ्चन मिषत् । स ईक्षत लोकान्नुसृजा इति स इमाल्लोकानसृजत ।" "तस्माद्वा एतस्मादात्मन आकाशस्सम्भूतः ।" "स कारणं करणाधिपाधिपो न चास्य कश्चिज्जनिता न चाधिपः ।" इत्यादि सकलोपनिषत्सु सर्वेश्वर एव हि जगत्कारणमिति प्रतिपाद्यते ।

மற்ற எல்லா உபநிஷத்துக்களிலும் காணப்படும் வழியைப் பின்பற்ற வேண்டியது அவச்யமாயிருப்பதால் இந்த உபநிஷத்திலும் ப்ரதாநம் ஜகத்காரணமல்லவென்றே பொருள் ஏற்படுகிறது. "ஆத்மா இதம் ஏக ஏவாக்ர ஆஸீத்" என்று தொடங்கும் ஐதரேயோபநிஷத் வாக்யத்திலும் இவ்வுலகம் ஆதிகாலத்தில் பரமாத்மா ஒன்றாகவே இருந்தது. வேறு ஒன்றும் தென்படவில்லை. அந்த பரமாத்மா இவ்வுலகங்களை படைக்கப் போகிறேன் என்று ஸங்கல்பித்தார். அவர் இவ்வுலகங்களை ஸ்ருஷ்டித்தார். என்று சொல்லப்பட்டது. தைத்திரீயோபநிஷத் ஆநந்தவல்லி, முதல் அநுவாகத்திலும் அந்த பரமாத்மாவினிட மிருந்து இந்த ஆகாசம் உண்டானது என்று கூறப்பட்டது. ச்வேதாச்வதரோபநிஷத் ஆறாவது அத்யாயத்திலும், அந்த பரமாத்மாவே ஜகத்காரணமாகிறான். இந்திரியங்களுக்கு அதிபதியான ஜீவனுக்கும் அவனே அதிபதி. அவனைப் பிறப்பித்தவன் வேறு ஒருவன் இல்லை. அவனுக்கு அதிபதியும் இல்லை. என்று தெளிவாய் உரைக்கப்பட்டது. இதுவுமன்றி எல்லா உபநிஷத்துக்களிலும் ஸர்வேச்வரனே ஜகத்காரணம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

श्रुतत्वाच्च ॥ १. १. १२ ॥

இதே சாந்தோக்யோபநிஷத்திலும் பரமாத்மாவினிடமிருந்தே இவ்வுலகம் உண்டானது என்று ஓதப்பட்டிருப்பதால், ப்ரதாநம் ஜகத்காரணம் அல்ல.

श्रुतमेव ह्यस्यामुपनिषदि, "आत्मतः प्राणाः आत्मतः

आकाशः" इत्यादौ आत्मन एव सर्वोत्पत्तिः। अतः प्रधानादचेतनादर्थान्तरभूतः सर्वज्ञः पुरुषोत्तम एव जगत्कारणं ब्रह्मेति स्थितम् ॥

॥ इति ईक्षत्यधिकरणम् ॥

இந்த உபநிஷத்தில் ஆத்மாவினிடமிருந்தே ப்ராணன் உண்டானது, ஆத்மாவினிடமிருந்தே ஆகாசம் உண்டானது என்று தொடங்கி ஆத்மாவினிடமிருந்தே எல்லாம் பிறந்ததாக ஓதப்படுகிறது. ஆகையால் அசேதநமான ப்ரதாநத்தைக் காட்டிலும் வேறு பொருளான ஸர்வஜ்ஞனை புருஷோத்தமனே ஜகத்காரணமான பரஹ்மமாகிறான் என்று தீர்மானம்.

ஈக்ஷத்யதிகரணம் முடிந்தது.

---

ஆநந்தமயாதிகரணம்.

## आनन्दमयोऽभ्यासात् ॥ १. १. १३ ॥

यद्यपि प्रधानादर्थान्तरभूतस्य प्रत्यगात्मनश्चेतनस्य ईक्षणगुणयोगस्संभवति। तथापि प्रत्यगात्मा बद्धो मुक्तश्च न जगत्कारणम्। "तस्माद्वा एतस्माद्विज्ञानमयात् अन्योऽन्तर आत्मानन्दमयः" इति अस्य आनन्दमयत्वप्रतिपादनात्। कारणतया व्यपदिष्टोऽयमानन्दमयः प्रत्यगात्मनः अर्थान्तरभूतः सर्वज्ञः परमात्मैव; कुतः? अभ्यासात्। आनन्दमयस्य निरतिशयदशाशिरस्कानन्दमयत्वेन अभ्यासात्। "ते ये शतं प्रजापतेरानन्दाः स एको ब्रह्मण आनन्दः।" "यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह। आनन्दं ब्रह्मणो विद्वान् न बिभेति कुतश्च न॥" इति हि वेद्यत्वेनायमानन्दमयः अनवधिकातिशयः अभ्यस्यते।



தைத்திரீயோபநிஷத்தில் "தஸ்மாத்வா ஏதஸ்மாத்விஜ்ஞாநமயாத் என்று தொடங்கி ஞானரூபியான ஜீவனைக் காட்டிலும் அவனுக்கு அந்தர்யாமியான ஆத்மா வேறு அவன் ஆநந்தமயன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஆநந்தமயன் என்று சொல்லப்பட்டவன் ஜீவாத்மாவா, பரமாத்மாவா என்று ஸந்தேஹம். சித்தாந்தம்—பரமாத்மாவே என்பது ஏனெனில் "அப்யாஸாத்" அதே உபநிஷத்தில் மேல் அநுவாகத்தில் ஆநந்தத்தை விசாரிக்கத் தொடங்கி, படிப்படியாய் மேல் மேலும் உயர்ந்த ஆநந்தத்தைச் சொல்லி முடிவில் பரப்ரஹ்மத்தின் ஆநந்தத்தைக் காட்டியிருக்கிறபடியால் ஈக்ஷத்யதிகரணத்தில் அசேதநமான ப்ரதாநத்திற்கு ஈக்ஷணம் பொருந்தாதாகையால் அது ஜகத்காரணமாகாது என்று நிரூபிக்கப்பட்டது. இந்த அதிகரணத்தில் அந்த ஈக்ஷணம் ஜீவனுக்கு ஸம்பவிக்குமாகையால் ஜீவனே ஜகத்காரணமாகலாம் என்று ஆக்ஷேபித்து பரிஹரிக்கிறார் "யத்யபி" என்று தொடங்கி. ப்ரதாநத்தைக் காட்டிலும் வேறு பொருளானசேதநனான ஜீவனுக்கு ஈக்ஷணம் என்னும் குணம் ஸம்பவிக்கும் ஆனாலும் பத்தன் முக்தன் என்று இரண்டு வகையான ஜீவன் ஜகத்காரணமாகான். தஸ்மாத்வா ஏதஸ்மாத் என்ற ச்ருதியில் ஜகத்காரண வஸ்துவுக்கு ஆநந்த மயத்வம் சொல்லியிருப்பதால், ஆகாசம் முதலான பொருட்களுக்குக் காரணமாகச் சொல்லப்பட்ட இந்த ஆநந்தமயன் ஜீவனைக் காட்டிலும் வேறுபட்ட ஸர்வ ஜ்ஞனான பரமாத்மா தான். ஏனெனில் "அப்யாஸாத்"—அந்த ஆநந்த மயனை ஒப்புயர்வற்ற நிலையில் ஏறியிருக்கும் ஆநந்த மயன் என்று சொல்லியிருப்பதால். ப்ராஜாபதியினுடைய நூறு ஆநந்தங்கள் ப்ரஹ்மத்தின் ஒரு ஆநந்தமாகும். என்றும், வாக்குகளும் மனதுகளும் பரமாத்மாவைக் கண்டறிய முடியாமல் திரும்பி விடுகின்றன. அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தினுடைய ஆநந்தத்தை அறிந்தவன் ஒன்றினிடமும் பயப்படமாட்டான் என்றும் ஒப்புயர்வற்றவனான இந்த ஆநந்தமயன் அறியக்கூடியவனாக பலபடியாய் முறையிடப்படுகிறான். அறியுமவன் ஜீவன். அறியப்படவேண்டியவன் பரமாத்மா, என்று தாத்பர்யம்.

## विकारशब्दान्नेति चेन्न प्राचुर्यात् ॥ १. १. १४ ॥

स वा एष पुरुषोऽन्नरसमयः इति विकारार्थमयट् प्रकरणात् आनन्दमयः इत्यस्यापि विकारार्थत्वं प्रतीयते। अतोयमानन्दमयः नाविकाररूपः परमात्मा इति चेन्न। अर्थविरोधात्। प्राचुर्यार्थे एवायं

मयडिति विज्ञायते । तस्माद्वा एतस्मादात्मन आकाशस्संभूतः इति हि अविकार आत्मा प्रकृतः । प्रकरणे च विकारार्थत्वं प्राणमय एव परित्यक्तम् । उक्तेन न्यायेन आनन्दप्राचुर्यात् परमपुरुष एवायमानन्दमयः ।

ஆநந்தமய என்னும் 'சொல் ஆநந்'த என்னும் மய என்னும் இரண்டு பாகமாகப் பிரியும். மய என்றது விகுதி, மிருந்மய, ஹிரண்மய, தாருமய, சிலாமய, இவ்விடங்களில் மய என்னும் விகுதிக்கு விகாரம் எனப் பொருள் ஸாதாரணமாய் வழங்கும். அதுபோல் இங்கும் விகாரம் எனப் பொருளைக் கொண்டால் ஆநந்த மயன் என்ற சொல் பரமாத்மாவைக் குறிக்காது. ஜீவனையே குறிக்கும். ஜீவனே விகாரமுடையவன் என்று ச்ருதிகள் சொல்லுகிறபடியால், என்று ஆக்ஷேபம்—இதற்கு ஸமாதானம்—ப்ராசுர்யாத் என்று, இங்கு மய என்னும் விகுதிக்கு விகாரம் பொருள் அல்ல. ப்ராசுர்யமே பொருளாகும். ப்ராசுர்யமாவது நிறைவு. ஆநந்தமய = ஆநந்தத்தால் நிறைந்தவன் என்று அர்த்தம். அப்போது பரமாத்மாவுக்கே இப்பெயர் பொருந்தும். இதற்குமுன் அநுவாகங்களில் ப்ராணமய: மநோமய:, விஜ்ஞாநமய:, என்று ஒவ்வொரு சொல்லிலும் மய என்னும் விகுதிக்கு விகாரம் என்ற பொருள் ஒவ்வாதது கொண்டு ப்ராசுர்யமே உசிதமாகையால் அதே ப்ரகரணத்தில் காணப்படும் இந்த ஆநந்த மய என்னும் சொல்லிலும் ப்ராசுர்யார்த்தமே கொள்ளத் தக்கது.

இந்த ப்ரகரணத்தில் முதல் அநுவாகத்தில் காணப்படும் அந்நரஸமய: என்னும் பதத்தில் மாத்திரம் மய என்னும் விகுதிக்கு விகாரம் அதாவது வேறு உருவமாய் மாறுதல் என்ற பொருள் கூறப்படும். இரண்டாவது அநுவாகத்தில் ப்ராணமய: என்றவிடத்தில் விகாரார்த்தம் ஒவ்வாதது கொண்டு அதை விட்டு ப்ராசுர்யார்த்தமே கொள்ளப்பட்டது. ஆகையால் இங்கு ஆநந்தமய: என்றவிடத்தில் விகாரார்த்தம் கொள்ள ப்ரஸக்தியே இல்லை. ப்ராசுர்யார்த்தமே கொள்ளத் தக்கது. ஆகையால் பரமாத்மாவே ஆநந்த மயன் ஆகிறான்.

## सू—तद्धेतुव्यपदेशाच्च ॥ १. १. १५ ॥

एष ह्येवानन्दयाति इति जीवान् प्रति आनन्दहेतुरयं आनन्दमयो व्यपदिश्यते । अतश्चायं न प्रत्यगात्मा ।



ஆநந்தமயன், இதரர்களுடைய ஆநந்தத்துக்குக் காரணமானவன் என்று உபநிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. "ஏஷஹ்யேவாநந்தயாதி" இவனே மற்ற ஜீவன்களை ஆநந்திப்பிக்குறான் என்று. ஆகையாலே இந்த ஆநந்தமயன் ஜீவனல்லன்.

## सू—मान्त्रवर्णिकमेव च गीयते ॥ १. १. १६ ॥

"सत्यं ज्ञानमनन्तं ब्रह्म" इति मन्त्रवर्णोदितमेव । "तस्माद्वा एतस्मात्" इत्यादिना आनन्दमय इति गीयते । अतश्च न प्रत्यगात्मा ।

கீழில் !ஸத்யம் ஞாநமநந்தம் ப்ரம்ம. என்று ஒரு மந்திரம் உண்டு. அதில் ஸத்யமாயும், ஞாநஸ்வரூபியாயும், அழிவற்றதுமான ப்ரஹ்மம் சொல்லப்பட்டது. அதையே மேல் மந்த்ரத்தில் ஆநந்தமய: என்று நிரூபணம் செய்திருக்கிறது. இந்த காரணங்கொண்டும் ஆநந்த மயன் ப்ரஹ்மமே. ஜீவனல்லன் என்பது புலப்படுகிறது.

## सू—नेतरोनुपपत्तेः ॥ १. १. १७ ॥

इतरः प्रत्यगात्मा मन्त्रवर्णोदित इति नाशङ्कनीयम् । "सोऽश्नुते सर्वान् कामान् सह । ब्रह्मणा विपश्चितेति" प्रत्यगात्मनो मुक्तस्य च ईदृशविपश्चित्वानुपपत्तेः ॥

இதர:=பரமாத்மாவைக் காட்டிலும் இதரனை ஜீவன், ந=மாந்திரவர்ணிகன் அல்ல=அதாவது ஸத்யம் ஞாநம் என்ற மந்திரத்தால் ப்ரதிபாதிக்கப்பட்டவன் அல்ல. ஏனெனில் அநுபபத்தே:=மேல் ப்ரஹ்மணா விபச்சிதா என்று கூறப்படும் விபச்சித்வம், ஜீவனுக்கு ஒவ்வாது. விபச்சித்வமாவது விசித்திரமான ஜங்கமஸ்தாவர ரூபமாய் பலபடியாக ஆகுவேன் என்று ஸங்கல்பிக்கை. இந்த ஸங்கல்பம் பரமாத்மாவுக்கே உளது. ஜீவனுக்கு இல்லை.

"सोकामयत, बहुस्यां प्रजायेय" इति विचित्रस्थिरत्रसरूपबहुभवनसङ्कल्परूपमिदं विपश्चित्वमिति ह्युत्तरत्र व्यज्यते । मुक्तस्य सर्वज्ञस्यापि जगद्व्यापाराभावात् ईदृशविपश्चित्वासंभवः ।

விபச்சித் என்னும் சொல்லுக்கு பலபடியாகக் காண்கிறவன். என்று பொருள். இங்கு பலபடியாகக் காண்கையாவது பஹுபவநஸங்கல்பமே. இந்த ஸங்கல்பம் ஜீவனுக்கு இல்லை, முக்தி பெற்ற ஜீவன் ஸர்வஜ்ஞன் ஆகையால் அவனுக்கு இருக்கக் கூடுமே என்றால், ஜகத் வ்யாபாரம் உலகத்தின் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்கள் அவனுக்கும் இல்லை என்று நிரூபிக்கப்பட்டிருப்பதால் இப்படிப்பட்ட விபச்சித்வம் ஜீவனிடத்தில் இல்லை,

## सू—भेदव्यपदेशाच्च ॥ १. १. १८ ॥

"तस्माद्वा एतस्माद्विज्ञानमयात् । अन्योऽन्तर आत्मानन्दमयः" इति हि विज्ञानमयात् प्रत्यगात्मनो भेदेनायमानन्दमयो व्यपदिश्यते ।

தஸ்மாத்வா என்று தொடங்கிற ச்ருதியில், விஜ்ஞாந மயன் என்று சொல்லப்பட்ட ஜீவனைக் காட்டிலும் ஆநந்த மயன் அன்னியன் என்றல்லவோ சொல்லியிருக்கிறது ஆகையால் ஜீவனே ஆநந்த மயன் என்று எப்படிச் சொல்லலாம் ?

न च विज्ञानमयविषयतया उदाहृतश्लोके "विज्ञानं यज्ञं तनुते" इति व्यपदेशात् विज्ञानमयो बुद्धिमात्रम् इत्याशङ्कनीयम् । यतः सूत्रकार एव इमामाशङ्कां परिहरिष्यति । "व्यपदेशाच्च क्रियायां न चेन्निर्देशविपर्ययः" इति (२. ३. ३५) विज्ञानं यज्ञं तनुते इति यज्ञादि क्रियायां जीवस्य कर्तृत्वव्यपदेशाच्च जीवः कर्ता । विज्ञानशब्देन जीवस्य अव्यपदेशे बुद्धिमात्रव्यपदेशे च विज्ञानेनेति निर्देशविपर्ययः स्यात् । बुद्धेः करणत्वादिति ॥

### இதில் ஆக்ஷேபம்

விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே என்றது, தைத்திரீயோப நிஷத்தில் உளது அது ச்லோக ரூபமானது. விஜ்ஞாநமயன் இன்னான் என்று நிரூபிக்க வந்தது. அதில் விஜ்ஞாநமானது யஜ்ஞத்தைச் செய்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு புத்தியை விஜ்ஞாநம் என்று சொல்லலாம். அப்படியானால் விஜ்ஞாநமயன் என்று புத்தியைச் சொல்லி, அதைக் காட்டிலும் வேறு ஆநந்தமயன் என்றால் ஜிவனை ஆநந்த மயன் என்று சொல்லுவதில் விரோதமில்லையே என்று,



மாயிருந்தவென்றபடி. நிறக=ப்திரபக்ஷா விசால்யமாக, பாடி என்னெஞ்சுள்=வேதாந்தார்த்தங்களை உள்ளபடி அறியாதே அலமர்ந்து கிடக்கிற வென்னெஞ்சிலே நிறுத்தினான்=ஸம்சயவிபர்யயங்கள் ஒன்றுமில்லாதபடி, ஸ்திரப்ரதிஷ்டிதமாக்கினான். உபபந்நம்=ஆழ்வார் வர்ணத்திலே திருவவதரித்தவரானாலும் கீழ்ச்சொன்ன உபபத்திகளாலே இவருக்கு ஆசார்யத்வத்தில் ஒரு கொத்தையும் சொல்லவொண்ணாது. என்று திருவுள்ளம்.

அவ—ஆனாலும் ஆழ்வார் த்ரவிடப்ரபந்த முகத்தாலேயன்றோ ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளினது. அதுதான் பாஷாந்தரமாகையாலே அபசப்தமாய், "ம்லேச்சோஹவா ஏஷ யதபசப்த:" என்றிதுக்கு ம்லேச்சத்வம் சித்திக்கையாலே "நம்லேச்சிதவை நாபபாஷிதவை" என்று நிஷித்தமாயிருக்கையாலும் அபசப்தகயநம் அந்ருதவதந துல்யமாய் அபசப்தவர்ஜநம் ச்ருதிமூலமென்று மீமாம்ஸகர் நிஷ்கர்ஷிக்கையாலும். வைதிகராயிருப்பார்க்கு இது பாதேயமாயிருக்கிறபடி எங்ஙனே என்னவருளிச் செய்கிறார்.

மூ—வேதாந்தார்த்தவைசத்யாதிசயஹேது வாகையாலே பாஷாந்தரம் உபஜீவ்யம்.

வ்யா—வேதாந்தார்த்தம்=வேதாந்தரஹஸ்யார்த்தம், "வேதாந்தரஹஸ்யவைசத்யாதி சயஹேதுபூதை:" என்றிறே ஸ்தோத்ரபாஷ்யத்திலே அருளிச்செய்திருக்கிறது.

வேதாந்தங்களிலே பல அர்த்தங்கள் உண்டாகையாலே "நாம ப்ரஹ்மேத்யுபாஸீத" இத்யாதி த்ருஷ்டி விதி வ்யாவ்ருத்யர்த்தமாய் ரஹஸ்யார்த்த என்ன வேண்டிற்று. வைசத்யாதி சயஹேது வாகையாலே என்றது.

"இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத் ।
வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: ॥

என்கிறப்படியே அஸ்பஷ்ட வேதார்த்த வ்யக்தீகரணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான ஸ்ரீ ராமாயண மஹாபாரத ஸ்ரீ விஷ்ணு புராணாதிகளில் காட்டில் ஆழ்வார் ப்ரபந்தங்களே விசதமாகத் தெளிவிக்கைக்கு ப்ரதாந காரணமாயிருக்கும். அந்த ப்ரபந்தங்கள் இவ்வளவு இராதென்று திருவுள்ளம். ஆகையாலேயாயிற்று.

"யத்ருஷ்ட்யா ஸ்ருஷ்டம் ஸ்ருதீநாம் உபநிஷண விஹிதை: ।
ஸைதிஹாஸை: புராணை: ததர்ஸ
ஸக்ய ஸீக்ஷ: ஸம்யஙந உபநே: ஸம்ஹிதா ஸாவதீர்ணா: ।

என்றருளிச் செய்தது. “ஸ்ரீ பாதராயண ஸமவாயிக ஸௌஹார்தநாம ஸ்ரீஶைலராஜ ஶிரஸாம்” என்றிறே ஞாநாதிகர் கொண்டாட்டம். வேதாந்தார்த்த ரஹஸ்யம் பகவத் விஷயமாயிருக்குமாகையாலே பகவத்விஷயமாயிருந்தால் பாஷாந்தரம் அப பாஷையானாலும் உபஜீவ்யம். அதல்லாதபோது ஸம்ஸ்கிருத பாஷையும் த்யாஜ்யமாயிருக்கும்.

“ தத்வாக்விஸர்கோ ஜநதாகவிப்லவோ யஸ்மிந்
ப்ரதிஶ்லோகமபத்தவத்யபி ॥
நாமாந்யநந்தஸ்ய யஶோऽங்கிதாநி யச்
ச்ருண்வந்தி காயந்தி க்ருணந்தி ஸாதவ: ॥ ”

என்று அபசப்தம் பகவத் விஷயமாயிருந்தால் ஸர்வபாப ப்ரணாசநமாயிருக்கும் என்றும்.

“ ந யத்வசஶ்சித்ரபதம் ஹரேர்யஶோ ஜகத்
பவித்ரம் ப்ரக்ருணீத கர்ஹிசித் ॥
தத்வாயஸம் தீர்த்தமுஶந்தி மாநஸா ந யத்ர
ஹம்ஸா நிரமந்த்யுஶிக்க்ஷயா: ॥ ”

என்று சப்தாலங்காரங்கள் பொதிந்து கொண்டிருந்தாலும் பகவத் விஷயமன்றிக்கே யொழிந்தால் வாயஸதீர்த் துல்யமென்றும் ப்ரமாணங்கள் சொல்லுகையாலும், “அதஸ்து ஸர்வவிஷய ஸாவஶ்யே ப்ரயோமா நந்தாவி நிஷித்த:” என்று ஒன்பதினாயிரத்திலே உபநிஷத் பாஷ்யகாரர் அருளிச் செய்கையாலும் த்ரமிட பாஷை அப பாஷையானாலும் உபஜீவ்யமாகக் குறையில்லை. ஸத்தம: த்ரமிட பாஷை “ஸம்ஸ்க்ருத ப்ரஸித்தா ஸவித்ரி பரிஜஷ்யதே ॥ என்கிறபடியே வைதிக பரிக்ருஹீதமாகையாலே அப பாஷை என்னவொண்ணாது. இது தானும் ஸம்ஸ்கிருதத்தோபாதி ஸித்யமாயிருக்கும். ஆகையாலேயிறே “விப்ருத்த ஹேது விஷதமதேதவிஷ்டா வாக வியோ: காஶீ ஸமேநாம ஸாம. கஸ்ய ப்ராவிந: வேஷ்ய ஹாஷா ॥ நித்யம் ஜாதா” என்று பிள்ளை அருளிச் செய்தது. சதுர்முகன் ஸம்ஸ்க்ருதத்துக்குப் போலே அகஸ்த்ய பகவான் இந்த பாஷைக்கு ப்ரவர்த்தகர் என்றே திருவுள்ளம், ஆகையாலே நம் தர்சநத்திலே அருளிச் செயல் வ்யாக்யாநமான திருவாராயிரம் முதலானதுகளையும் ரஹஸ்யத்ரய வ்யாக்யாநங்களையும் விலக்ஷணமான மணிப்ரவாள நடையிலே அருளிச் செய்திருக்கிறது. ஆயையால் ‘நம் லேச்சிதவை’ இத்யாதிகளுக்கு இந்த பாஷை விஷயமன்று கீழ்ச் சொன்ன ப்ரமாணங்களாலே அந்வய வ்யதிரேகாப்யாம் ஸம்ஸ்க்ரு-



தத்வாப பாஷாத்வங்கள் அநுபயுக்தங்களாய் பகவத் விஷயத்வ ததபாவங்களே பரிக்ராஹ்யத்வாபரிக்ராஹ்யத்வ நிமித்தமாக வேண்டியதால் இதிஹாஸ புராணங்களுடைய பரிக்ராஹ்யதைக்குங் கூட பகவத் விஷயத்வமே ஹேதுவாகையாலே இது தான் ஆழ்வார் ஸ்ரீ சூக்திகளில் திருமாலவன் கவியாது கன்றேனென்கிறபடிக்கு பரிபூர்ண மாகையாலே பராசராதி ப்ரபந்தங்களைக் காட்டிலும் இதுவே வேதாந்தார்த்தவைசத்யாதிசய ஹேது என்று திருவுள்ளம். நம் தர்சநத்திலே ஆழ்வார் ப்ரபந்தம் பௌருஷேயம் என்றும் அபௌருஷேயமென்றும் இரண்டுபடி ஸம்ப்ரதாயம் நடக்கும். இதில் பௌருஷேயம் என்றவர்களுக்கு கடவல்லி படிதமாயிருந்த த்வயத்தை பூர்வாசார்ய வாக்யமென்று ஆதரணீயத்வாதிசயார்த்தம் சொல்லுகிறாப்போலே ஆழ்வார் அருளிச் செயல் என்று அத்யாதரணீய தாயாம் தாத்பர்யம். அபௌருஷேய மென்றவர்களுக்கு பௌருஷேயங்களிற்போலே புருஷ தோஷங்கள் ஒன்றும் இப்ரபந்தத்திலே சொல்லவொண்ணாது என்று திருவுள்ளம். இப்படி இவ்விரண்டும் ஸத்ஸம்ப்ரதாய மாகையால் பரஸ்பர விரோதமில்லை. இவ்விஷயத்தில் இதுக்கு மேல் விசாரிப்பதெல்லாம் மாத்ருயோநிபரீக்ஷையோடொக்கு மென்றருளிச் செய்யக்கேட்டிருப்பதுண்டு.

அவ—ஆனாலும் ஆழ்வார் சதுர்த்த வர்ணத்தில் அவதரித்தவாகையாலே அந்த வர்ணம்தான் “யேऽபி ஸ்யு: பாபயோநய: ॥ ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ரா:” என்று ஸ்ரீகீதாசார்யன் பாபயோநி என்று சொல்லிவைக்கையாலே “பாபம் ப்ரணாஶயதி” என்று பாபம் ப்ரணாசகமாயிருக்க ப்ராஹ்மணோத்தமாளான பராசராதி மஹரிஷிகளைக்காட்டிலும் வேதாந்தார்த்த விசதீகரணம் பண்ணும்படி எங்ஙனேயென்ன இதுக்கு பரிஹாரமாக இதிஹாஸ விருத்தாந்தம் காட்டுகிறார்.

மூ—தர்மவ்யாத துலாதாராதி வ்ருத்தாந்தங்களையும் இங்கே அநுஸந்திப்பது.

வ்யா—தர்மவ்யாதராகிறார். மிதிலாவாஸியாய் தர்மிஷ்டராயிருந்த வேடர். இவர் கடைத்தெருவில் மாம்ஸவிக்ரயம் பண்ணி ஜீவிப்பாராயிற்று. இவர் பர்த்ரு சுச்ரூஷாநிரதையாயிருந்த ப்ராஹ்மணீவாக்யத்தாலே தன்னைக்கிட்டிவந்த, கௌசிகன் என்பானொரு ப்ராம்மணனுக்கு, ஸ்வஜாத்யநுகுண தர்மாநுபாலநம், ஆவச்யகம் என்றும் ஸர்வாவஸ்தைகளிலும் மாதாபித்ரு சுச்ரூஷை ஆவச்யகம் என்னும் இப்படிக்குப்பலதர்ம சூக்ஷ்மங்களை உபதேசித்தார்.

துலாதாரர் என்பார் காசிவாஸியான ஓர் அத்தைவர்ணிகர். இவரை ம்லேச்சஜாதி என்பார் சிலர். அதுக்காகரம் கண்டுகொள்வது. ஜாஜலி

என்பான் ஒரு ஜபசிலனான ப்ராம்மணன். தான் தர்மிஷ்டன் என்று கர்விஷ்டனாயிருக்க, அசரீரவாக்கொன்று, "நீ தர்மத்தில் துலாதாரருக்கு ஒப்பன்று" என்ன இவனும் கோபங்கொண்டு துலாதாரரைப்பார்க்கவென்று காசிக்குப்போக விபணியிலே பண்யவிக்ரேதாவாயிருந்தவிவர், ப்ராம்மணன் வரவைத்தாமே கண்டு ப்ரத்யுத்தாந பூர்வகமாய் ஸ்வாகத ப்ரச்நம் பண்ணி, உம்முடைய வரவை அறிந்தேன் செய்ய வகுப்பது என்னென்று கேட்க, ப்ராம்மணனும் ஆச்சர்யப்பட்டு, வர்த்தகராயிருந்த உமக்கு இந்த புத்தி உண்டாகைக்கு, நிதாநம் சொல்லலாகாதோ வென்ன தர்மார்த்த தத்துவ வித்தமரான விவர், இதே வ்யாஜமாக அவச்யம் ஜ்ஞாதவ்யமாயிருந்த சூக்ஷ்ம தர்மங்களை எல்லாம் ஸ்வாநுஷ்டாந கதந புரஸ்ஸரமாக வெளியிட்டார். இவ்விருத்தாந்தங்களால் ப்ராம்மணரும் அறியாத சூக்ஷ்மதர்மதத்துவ ஜ்ஞானங்கள் ஜாத்யந்தரங்களில் கண்டிருக்கிறாப்போலே ஆழ்வாருக்கும் பராவரதத்துவ யாதாத்ம்ய ஜ்ஞாநம் உண்டாகக் குறையில்லை என்று இவ்வளவுக்கே இங்கு இவ்விருத்தாந்தோபாதாநம் பண்ணினது. ஆழ்வாருக்கு முக்யாசார்யக நிஷேதத்திற்காகவன்று. ப்ரபாவ வ்யவஸ்தையிலே ஜாத்யந்தரங்களிலே ஆசார்யத்வ நிஷேதம் பண்ணினது வித்யா மந்த்ராதி க்ரஹண விஷயம் என்று அங்ஙனே தானே வெளியிட்டிருப்பதாலும் அவ்யவஹித மோக்ஷோபாயவ்யவஸாயம் பிறப்பிக்கை ப்ரதாநாசார்ய க்ருத்யம் என்று இங்ஙனே அருளிச் செய்கையாலும் இரண்டிடமும் பிந்ந விஷயமாயிருக்கும்.

அவ—வர்ணாவரரும் ஜ்ஞாதாக்களாய் ப்ராம்மணருக்கும் கூட சொல்லலாமாயிருந்தால் "சூத்ரயோநௌ" இத்யாதி வாக்யத்துக்கு கதி எதென்ன வருளிச் செய்கிறார்.

மூ—"ஶூத்ரயோநாவஹம் ஜாத: நாதோந்யத்வக்துமுத்ஸஹே" என்கிறது விஷய பேதத்தாலே பரிஹ்ருதம் என்று."

வ்யா—"நாதோந்யத்வக்து முத்ஸஹே" என்கையாலே இவரறியாமையில்லை என்று கொள்ளவேணும். விஷய பேதத்தாலே என்றது வித்யா மந்த்ராதி விஷயபேதத்தாலே என்றபடி. இத்தால் "தத்விஜ்ஞாநார்த்தம் ஸகுருமேவாபிகச்சேத்" இத்யாதிகளிலே, "ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம்" என்றோதப்பட்ட வித்யா விசாரமும் தத்விஷயங்களான ஸதக்ஷர தஹராதி வித்யைகளும் தத்கரணங்களான மந்திரகலாபங்களும், மற்றுள்ள மந்த்ர விசேஷங்களும் ப்ராம்மணாதிகள் பக்கலிலேயாக வேண்டுமேயல்லாது, ஸத்ய வசநாதிகள்போல ஸர்வ ஸாதாரணமான ந்யாஸ வித்யையும் ப்ராம்மணாதிகள் பக்கலிலேயாக வேணுமென்று நிர்பந்தமில்லை. இதுக்கு கரணமந்த்ர க்ரஹண பூர்வகமாகவே அநுஷ்டிக்க வேண்



டும் என்கிற நிர்பந்தமுமில்லை. "மைத்ரேய நாமஸு வர்ணவைஷ்ணவேஷ்வபி ஶ்ரத்தா வைநயிகீ யாஸ்ய ஸாக்ஷித்வைதேய விவார்த்ய ஸர்வத்ரைவ ஜ்ஞாநாயகவந்த்யவர்ணாள ஶரணம் மதா நாஸ்" என்றிறே பிள்ளையுமருளிச் செய்தது. யத்வா—விஷய பேதத்தாலே என்றது—வக்தாவான விதுராதிகள் போல்வார் விஷயமாய் விதுராதிகளிலும் உத்க்ருஷ்ட ப்ரபாவரான வாழவார் வித்யா மந்த்ராதிகளையும் உபதேசிக்கலாம் என்று திருவுள்ளமாகவுமாம்.

"ஶ்ருதிஶ்சோபநிஷத்ஸ்ஸர்வஸ்ய ஸாஹாத்ஸ்யஸ்ய ஹ்ருதம் ।
ஸஹ்ய ஸ்ம்ருதவதாம் நாத்ர ஶங்கநீய உபப்லவ: ॥"

என்றும், "ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்று மிவர் விஷயத்தில் ஜாதி சிந்தநம் ஆகாதென்றும் ததவனவாவாய கவநிவாய நாவஸ்வமஹெ யொன்றும் வாராதென்றும் அருளிச் செய்தாரிறே. இத்தாலே ஆழ்வார் விஷயத்திலே ஜாதி சிந்தநம் பண்ணி அபசூத்ராதிகரண விரோதம் ப்ரஸங்கிப்பதும். விஷய நிரூபணாதிகாரத்திலே "வாக்யஶாஸ்த்ரவர வாராவதிவக்ஷிதா ரஹஸ்யத்ரயம் வ்யவதிவாரம் நதா ஸாயநவ்யவதி ஸம்ப்ராஹகவே ந வெஷாஜஶாஸ்த்ராஜ ஶாஸ்த்ர. ஸவைத்ரவணக்கோவஷிஷஸ்வாஸ" என்கிற நிர்ணயமும் ததநுகுண சூத்ரப்ராணயநமும் ஸத்ஸம்ப்ரதாயமன்றென்று சூசிதமாயிற்று.

அவ—ஆனாலும் "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்" என்கிறபடிக்கு ஸ்ரீமந் நாதமுநிகள் தொடக்கமாக வருகிற இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ஆழ்வார் ஆசார்யராம்படி எங்ஙனே? மதுர கவிகளுக்கு ஆழ்வார் ஆசார்யர் ஆனாலும் அவருக்குப் பின்பு இந்த ஸம்ப்ரதாயத்திற்கு வெகுகாலம் பரவர்த்தகாள் இல்லாமல் இருந்தன்றோ ஸ்ரீமந் நாதமுநிகள் ப்ரவர்த்தகரானது. அப்போதாழ்வாரில்லையே. இந்த யுகாரம்பத்தில் முப்பத்திரண்டு திருநக்ஷத்திரங்களிலே திருவவதாரஸமாப்தி பண்ணினதாகவன்றோ ஸம்ப்ரதாயத்திலே சொல்லிப் போருகிறது. என்ன வருளிச் செய்கிறார்.

மூ—இப் பரம்பரையாலும் ப்ராதுர்ப்பாவ விசேஷத்தாலும் நாதமுநிகளுக்கு ஆழ்வார் ஆசார்யரானார்—என்று,

வ்யா—இப்பரம்பரையாலும் = மதுரகவிகள் முதலாக உண்டான ஸம்ப்ரதாய பாம் பரையாலும் நாதமுனிகளுக்கு ஸ்ரீ மதுரகவிகள் வம்ச்யரான ஸ்ரீ பராங்குசதாசர் என்கிறவர் மதுரகவிகள் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு உபதேசிக்கையாலே ஸ்ரீ மதுரகவிகள் பரம்பரை உண்டென்னக் குறையில்லை. இது உபலக்ஷணம். ஆராவமுதே திருவாய்மொழியாலே இவருக்கு ஞாநோதயமாகையாலே அதுவும் விவக்ஷிதம்-

திருவாய் மொழி முகத்தாலும் என்றித்தை சேர்த்து குரு பரம்பரையிலே அருளிச் செய்தாரிறே. ப்ரபந்தமுகங்களாலே பரம்பரயா உபகரித்தவர்களும் ஆதரணீயரென்று இங்கு மருளிச் செய்யப்போகிறார். ப்ராதுர்ப்பாவ விசேஷத்தாலும் = இவருக்கென்று தனியே வ—நஹூ ஓரவதார விசேஷம் ப்ராதுர்ப்பாவ விசேஷம். தந்மாத்ர ஸாக்ஷாத்கார விஷயமாகையாலே விசேஷம் என்றது. யோக தசையிலே நிரந்தர ஸ்ம்ருதி ஜந்ய தர்சந மைாநாகாரம் போலன்றிக்கே அதே சரீரத்திலே சாக்ஷு—ஷ ஜ்ஞாந விஷயமாகையாலே ஸ்வாப்ந வைலக்ஷண்யம் தோற்றும்படி ப்ராதுர்ப்பாவ விசேஷம் என்றது. இவ்விருத்தாந்தத்தை ஸம்ப்ரதாயத்திலே கேட்டுத் தெளிவது. ஆழ்வார் திருவவதார ஸமாப்தி பண்ணிக்கிடக்கச் செய்தேயும் திருநகரியில் திருப்புளியாழ்வாரடியிலேயே ஸ்ரீமந்நாதமுனிகள் யோகாநுஷ்டாநம் பண்ணும்போது இவரிடத்தில் அநுக்ரஹ விசேஷத்தாலே காரி ஸூநுவாக திருவவதரித்த திருமேனிக்கு ஸஜாதீய ஸம்ஹநநாந்தர பரிக்ரஹத்தாலே அதே திருமேனியாக இவருக்கு ஜாக்ரத் தசையிலே ஸாக்ஷாத்க்ருதராய் அபேக்ஷித ஸகலார்த்தங்களையும் உபதேசித்து ஆசார்யரானார். ப்ராதுர்ப்பாவ விசேஷத்திலே ஸாக்ஷாதாசார்யரானார் என்று திருவுள்ளம்

அவ—இப்படி ஆழ்வார் பக்கல் ஜாதி நிரூபணம் பண்ண வொண்ணாது என்னாலும் ப்ராமணஜாதி என்று சொல்ல வொண்ணாதாகையாலே ப்ராம்மணோத்தமராயிருந்த ஸ்ரீமந் நாதமுனிக்குத் திருப்பேரனான ஆளவந்தார் குலபதி என்று ஆழ்வாரை நிர்தேசிக்கலாமோ என்ன வருளிச் செய்கிறார்.

மூ—இவரை ப்ரபந்த ஸந்தாநகூடஸ்ததையாலே ஆளவந்தார் "ஆத்யஸ்ய ந: குலபதே:" என்று அருளிச்செய்தார்.

வ்யா—இவரை = ப்ராதுர்ப்பாவத்திலே காரிகுலோத்பந்நராய் ப்ராதுர்ப்பாவ விசேஷத்திலே இன்னஜாதி என்று சொல்லவொண்ணாதென்னும்படி யிருக்குமாழ்வாரை. ப்ரபந்த ஸந்தாந கூடஸ்ததையாலே = ப்ரபத்தி வித்யை இவர் முதலாகத்தான் சாகோபசாகமாய் வளர்ந்து வருகையாலே ப்ரபந்த ஸந்தாந கூடஸ்தரானார். ப்ரபந்த ஸந்தாநம் = ப்ரபத்தி வித்யாநுஷ்டாநம் பண்ணுமவர் வம்சம். இது ஞாநவம்சமாயிருக்கும். கூடஸ்தர் = சாகைக்கு மூலாதாரபூதர். பெரிய ரஹஸ்யத்திலே பரதேவதாபாரமார்த்தியத்திலும் இந்த ரஹஸ்யத்திலும் ப்ரபந்த ஸந்தாந கூடஸ்தர் என்று அருளிச்செய்திருக்கையாலே ப்ரபந்நஜந கூடஸ்தர் என்று சொல்லுமது நம் ஸம்ப்ரதாயத்தில் சேராது. ஆளவந்தார் பெரிய முதலியார், ஆளவந்தாரை பெரிய முதலியாரென்றிறே பெரிய ரஹஸ்யத்திலே பிள்ளையருளிச்செய்தது. நாதமுனிகளை பெரியமுதலியார் என்று சொல்லுமது நம் ஸம்ப்ரதாயமன்று. "குலபதே:" ஜாதிசப்தமும் குலசப்தமும்



பிந்நார்த்தமாகவும் ப்ரயுக்தமாகையாலே இங்கு ஜாதிவாசியன்றிக்கே ஸமுதாய வாசியாயிருக்கும். "ஆத்யஸ்ய" என்றது ப்ரபந்த குலத்துக்கு இவர் மூலபுருஷர் என்கிறது ந: குல என்றது பரமைகாந்திகளாயிருந்த நம்முடைய குலத்தைச் சொல்லுகிறது. தேவதாந்தர ப்ரயோஜநாந்தர ஸங்கீர்ணகுலமன்றிறே பரமை காந்திகுலம்.

ராஜ்நிஷ்ட ஸந்நாவம்ஸ ஜாதோவா ஸ்ராஹ்விஷ்ணுதா: ।
ஸ்ரஜந்நாரணம் யஸ்ய வாஸுதேவோ நதேவத: ॥

என்றிறே பரமைகாந்தி குலத்தின் பாசுரம். "கேசவன் றமர் கீழ்மேலெமரேழெழு பிறப்பு மாசதிரிது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றனவா" என்று அருளிச்செய்கையாலே இவரே குலபதி என்னக் குறையில்லை.

அவ...ஆனாலும் நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் என்று இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகர் என்று சொல்லப்படுகிற ஸ்ரீமந் நாதமுனிகள் தமக்குத் திருப்பேரனாயும் "பஹு மந்யேவ மிதம் யாமுநேய ப்ரபந்தேந:" என்று இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரபந்த நிர்மாண முகங்களாலே மஹோபகாரகராம்படி மஹா ப்ராஜ்ஞராயுமிருந்த ஆளவந்தாருக்கு தாமே உபதேசியாதே ஆளிட்டந்தி தொழுமாப்போலே வேறொருத்தரைக் கொண்டு உபதேசம் நடத்திப் போந்தது. ஸம்ப்ரதாய ப்ரவசநத்தில் இவருக்கு அநாதரம் தோற்றுகைக்காகவன்றோ. ஆகையால் இது ஸம்ஸம்ப்ரதாயமாம்படி எங்ஙனே யென்ன வருளிச் செய்கிறார்.

மூ—நாதமுனிகள் தம்முடைப் திருப்பேரனான ஆளவந்தாருக்குத் தாமுபதேசியாதே தம்முடைய சிஷ்யர்களை இவருக்கு ஆகாங்க்ஷை பிறந்தபோது உபதேசியுங்கோளென்று ஆஜ்ஞாபித்தது குரு புத்திர பௌத்திராதிகளும் வித்யாப்ரதாநத்திற்கு ப்ரசஸ்த பாத்திரங்கள் என்றும் ஞாநஸந்ததியாலே முற்பட்டவர்களும் குருக்களாக வாதரணீயரென்றும் 'ஆகாங்க்ஷையன்றிக்கே யிருக்கச் செய்தே சொன்னால் சிஷ்யபுத்தியில் அர்த்தம் ப்ரதிஷ்டித மாகாதென்றும் தெரிவித்தபடி." என்று

வ்யா—"தம்முடைய திருப்பேரனான" இதி. ஸ்தோத்திரத்தில் முடிவிலே "பிதாமஹம் நாத முநிம்" என்று ஆளவந்தார்தாமே அருளிச் செய்திருக்கையாலே நாதமுனிகள் திருப்பேரனாகிறார் ஆளவந்தார். தாமுபதேசியாதே என்றது இவருக்கு உபதேசயோக்யதை உண்டான காலத்திலே யாகவேணும். சிஷ்யர்களை என்றது. உய்யக்கொண்டாரை. பூஜாயாம் பஹுவசநம். சிஷ்யப்ர சிஷ்யர்களை என்று சிலகோசங்களில் பாடம் அதுக்குக்காரணம் காணவேணும். இவருக்கு ஆகாங்க்ஷை பிறந்த

போது. உபதேசியுங்கோள் என்று ஆக்ஞாபித்தது இதி. நாதமுனி நிகள் த்ரிகாலஜ்ஞராகையாலே ஆளவந்தார் ஆக்கியாழ்வான் என்கிற பண்டிதனை ஜயித்து ராஜ்யபோகாஸக்தராகப் போகிறார். இப்போது உபதேசித்தால் அர்த்தம் ப்ரதிஷ்டிதமாகாது. போகாநுபவ காலத்திலே போகத்தில் அருசியை விளைப்பித்து உபதேசிக்க வேண்டும் என்று திருவுள்ளத்தாலே இப்படி ஆக்ஞாபித்தார். ஆகையால் அத்யாதரம் தோற்ற ஸாவதாநராக அவர் ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணினார் என்னக் குறையில்லை. உபதேசியுங்கோள் என்று சொன்னது என்னாதே ஆக்ஞாபித்தது என்றத்தால் இதுவும் ச்ருதி ஸ்ம்ருதிரூப பகவதாஜ்ஞா துல்யமான விதிரூபமாய் அகரணே சிஷ்யர்களுக்கு ப்ரத்யவாயாவஹமா யிருக்கும் என்கைக்காக. ப்ரசஸ்த பாத்திரங்கள் இதி தமக்கு உபதேசித்தவாசார்யனுக்கு அபிமதாளான புத்திர பௌத்திராதிகள் இருக்க இவர்களை அநாதரித்து ஸ்தலாந்தரத்திலே ப்ரவசநம் பண்ணினால் குருத்ரோஹியாமாகையாலே தனக்கு அந்த தோஷம் வாராமல் பண்ணுவார் ஸ்வாசார்ய புத்திர பௌத்திராதிகள் ஆகையாலே 'வித்யாப்ரதாநத்திற்கு இவர்களே உத்க்ருஷ்ட பாத்திரமாயிருக்கு மென்னத் தட்டில்லை, அந்யத்ரோபதேசம் இப்படி தன்னை குருத்ரோஹத்தில் நின்றும் நிவர்த்திப்பியாதாகையாலே ப்ரசஸ்த பாத்திரங்கள் என்ன வொண்ணாது. ஞானஸந்ததியாலே முற்பட்டவர்களும் குருக்களாக வாதரணீயர் இதி. ஞானாதிகராய் முற்படத் தம்மை ஆச்ரயித்தவர் இருக்க பிற்பாடரானார்க்கு அவாள் முக மில்லாதே தாமே உபதேசித்தால் ஸ்வஸாம்யப்ராந்த்யா அவர்கள் பக்கல் அநாதரமுண்டாய் அநர்த்தாவஹமா யிருக்கு மாகையாலே அதாகாதென்று இவர்களைத் திருத்தத் திருவுள்ளத்தாலே அவர்களையு மிவர்களுக்கு ஆசார்யராக்குகிறது என்றிங்ஙனே திருவுள்ளம். ஆகாங்க்ஷையன்றிக்கே யிருக்கச் செய்தே இதி. வித்யாப்ரதாநத்திற்கு ப்ரதாநபாத்ரராளானாலும் ஜிஜ்ஞாஸை இல்லையானால் "நாப்ருஷ்ட: கஸ்யசித் ப்ரூயாத்" என்கிறபடிக்கு வருந்திச் சொல்லலாகாதாகையாலும் சொல்லும் போதும் "ந்யாயேந ப்ருச்சதே" என்று முறை தப்பாதே கேட்க்க வேண்டும் என்னும் ப்ரமாணங்கள் காட்டுகையாலும் இப்படியன்றிக்கே இருக்கச் செய்தே சொன்னால்,

"யஶ்சாதர்மேண விப்ரூதே யஶ்சாதர்மேண ப்ருச்சதி।
தயோரந்யதர: ப்ரைதி வித்வேஷம் வாதிகச்சதி॥"

என்று இருவருக்கும் அநர்த்தகரமாகையாலும் ஜிஜ்ஞாஸை உண்டானாலும் உபதேஷ்டாவான வாசார்யன் திறத்தில் ச்ரோதவ்ய விஷய கௌரவத்தாலே

இளங்குழந்தை முதல் கிழவரீறாக
சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

# ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

**சுவையில் தேனினும் இனிது.**

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப்பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கியெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கி, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், ஸிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைகொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக்கூடியதென்று விசேஷ அநுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

**வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.**
**வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.**

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

**ஆர்யன் பார்மஸி,**
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

**Registered No. M. 3778.**


சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

## வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



" ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.

**SURAJMAL'S**
**The Jewellers**
**313 ESPLANADE, MADRAS.**



Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

# SRI VEDANTA DIPIKA

VOL. 27] FEBRUARY 1938 [PART 2


4- APR 1938

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

ஈசுவர ௵



மாசி ௴


பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர்



**CONDUCTED BY**

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS 4–5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஶ்ரீ:

ஶ்ரியை நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

## விஷய ஸூசிகை


1. வேதாந்தத்தின் வேதாந்தம் — 39
   [பத்திராதிபர்]
2. ஸப்தாந்த ப்ராஹ்மணம் — 41
   [ஸ்ரீ. உ. வே. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர், மாம்பலம்]
3. கரண த்ரய ஸாமரஸ்யம் — 46
   [ஸ்ரீ. உ. வே. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வகேட், மைலாப்பூர்]
4. ப்ராமண்யாதி ஜாதிகளின் ஸ்வரூபம் — 51
   [ஸ்ரீ. உ. வே. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஆஸ்தான வித்வான் அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்.]
5. அஹிம்ஸா தர்மம் — 58
   [ஓர் பரமை காந்தி பக்ஷபாதீ]
6. மணி வண்ணன் — 62
   [ஆரியூர் வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்]
7. சரீர சிந்தை — 72
   [பத்திராதிபர்]
8. க்ரந்த விமர்சம் — 75
   [ஸ்ரீ. உ. வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்]
9. अभीतिस्तवः — 1—8
   [ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்யர், M. A., B. L., அட்வகேட், திருச்சி.]
10. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி — 57—64



4 APR 1938

अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"

"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்! எப்படி?

**L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.**

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

**விலை மலிவு! சுவை பெரிது!**

**நன்மை தரும்!**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு !!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

**SRI L. N. SHIYALI CONFECTIONARY, LTD.,**

*MADRAS OFFICE*:—**Phone No. 3658 : Res. No. 4258**

304, Thambu Chetty St., G. T. Madras.

Chennai-600 008.

---

**L** **காயம்—பெருங்காயம்** **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ர வேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।

कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

OFFICE OF THE REGISTRAR
4 APR 1938
MADRAS

# வேதாந்தத்தின் வேதாந்தம்

[பத்திராதிபர்]

வேதம் எனப்படுவது நாம் நான்கு வேதங்களென்று ஒப்புக்கொண்டு கொண்டாடும் ச்ருதிகளைக் குறிக்கும். ஆயினும் அதே பதம் ஞாந சர்வத்தையுங்கூட குறிக்கக் கூடும். முற்காலத்தில் மனுஷ்யர்களுக்கு ஞானகோசரமான யாவற்றுமே வேதத்தில் சேர்க்கப் பட்டிருந்ததால் வேதம் என்கிற பெயரே ச்ருதிகளுக்கு சரியானவும் அன்வர்த்தமுமான பெயராக இருக்கக் கூடுமென்று நினைக்க இடமுண்டு.

வேதாந்தம் எனப்படுவது வேதத்தின் அந்தம். அந்தமாவது முடிவைக் குறிக்கும். பலனை சூசிப்பிக்கும். தீர்மானத்தை தெரிவிக்கும். உட்கருத்திலும் அதற்கு நோக்குண்டு. ஆதலால் வேதாந்தமெனப்படுவது வேதங்களுடையவோ ஞான ஸர்வஸ்வத்தினுடையவோ முடிவான அர்த்தத்தையும் தீர்மானத்தையும் பலனையும் இன்னதென்று சித்தாந்தப் படுத்துவதாகும்.

மனுஷ்யர்களாக இந்த கர்ம பூமியில் ஜனித்துப் பசி, பிணி, மூப்புத் துன்பங்களால் இதுதான் நரகமோ என்று பரிதபித்துக் கொண்டிருக்கும் நமக்கு—நாம் யார்? ஏன் இங்கு வந்தோம்? எங்கு செல்லுகிறோம்? எங்கு செல்லவேண்டும்? எதர்க்காக? ஏன்? எவ்வழியாய்?—என்று இவ்விதமான அனேக கேள்விகளுக்கு கூடியவரையில் திருப்திகரமான பதில் உரைக்கும் சாஸ்த்ரத்தையே வேதாந்த சாஸ்த்ரமென்று சொல்வது சரி. இது விஷயத்திலும் இதர்க்கு மேலும் ஒரு யோசனை உண்டாகக் கூடும். நாம் யாராயிருந்தாலென்ன. எங்கிருந்து வந்தாலென்ன. எங்கே போகவேண்டுமானாலென்ன. காரணம் ஏதாயிருந்தாலென்ன. போகும் வழி மாத்திரம் சரியாயிருந்து விட்டால் மற்று விசாரமாவது விசாரணையாவது அவச்யமே இல்லை என்று கூட ஒரு விதமாய் நிர்த்தாரணம் செய்யலாம். போகும் வழி சரியாயில்லா விட்டால் மற்றெல்லாம் தெரிந்தும் நிஷ்ப்ரயோசனம். போகவேண்டிய சரியான மார்க்கத்தில் நிச்சயமும் நம்பிக்கையும் விடாமுயர்ச்சியும் உண்டாயிருப்பதர்க்காகவே, மற்ற கேள்விகளுக்கு உத்தரங்கள் உபகாரகமாகும். இருவர் காசிக்குப் போகவேண்டுமானால், காசிக்குப் போவதாக சொல்லிக் கொண்டு ராமேச்வர மார்க்கம் செல்லுகிறவன் புத்திமானோ அல்லது கண் மூடியாய் சொன்ன வழி சரியாயிருக்க அதையே அவலம்பித்து காசிக்கே செல்பவன் புத்திமானோ என்பதில் சந்தேகத்துக்கே இடமில்லை.

தற்காலத்தில் நான் அநேக இடங்களில் பார்த்து யோசித்தத்தில் ஸம்ஸ்க்ருதத்தில் அப்யஸிக்கப்படும் சாஸ்த்ரங்களான வியாகரணம், தர்க்கம், மீமாம்ஸை, வேதாந்தமும்கூட அவைகளே புருஷார்த்தங்களாக கருதப்பட்டு அத்யயன ப்ரவசனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதில் முதல் மூன்ருக சொல்லப்பட்ட சாஸ்த்ரங்கள் வரையில் அவைகள் ஒரு விதமான ப்ரஸித்திக்கும் வ்ருத்திக்கும் ஏற்படுவதே யன்றி ஸ்வ ப்ரயோஜனங்களாகக் கணிசிக்க முடியாது. ஆனுல் நாலாவதான வேதாந்த சாஸ்த்ர விஷயத்தில் அதைப்படிப்பதும், பாடம் சொல்லுவதும், அநேக விதத்தில் ஸ்வப்ரயோசனங்களாகவே அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. சில வேளைகளில் அந்த சாஸ்த்ராப்யாஸமே புருஷார்த்த ப்ரஸாதகமாக கணிசித்து வருகிருர்களோ என்று என் மனவில் சந்தேகம் ஜனித்ததுண்டு.

இது ஒரு க்ஷேத்ரத்தைக் குறித்து யாத்திரை போகிற ஒருவன் நடுவழியில் ஒரு சத்திரத்தில் தங்கி விட்டால் எப்படியோ அவ்விதமே யாகும். ப்ரஹ்மஜ்ஞானமானது தத்வம் இன்னதென்று தெரிவித்து புருஷார்த்தத்தைக் காட்டி ஹிதத்தை உபதேசிப்பதாகும். ஆதலால் ஞானம் அவச்யம் ஆனுல் அந்த ஞானத்தை பெருவதர்க்கு எல்லா விதமான பூர்வ பக்ஷ ஸித்தாந்த ப்ரபந்தங்களையும் வாத க்ரந்தங்களையும் ஒவ்வொருவரும் படிப்பது அவச்யமாகாது. ஸ்ரீ பாஷ்யத்தையும் இதர பாஷ்யங்களையும் க்ரஹித்து விசேஷமாய் வாக்யார்த்தம் சொல்லி வாதங்களில் ஜெயிக்க சக்தி பெற்ற ஒரு வ்யக்திக்கு பரமபத ப்ராப்தி நிச்சயம் என்று யார்தான் சொல்லக்கூடும். அதிலும் இப்பேர்க்கொத்த க்ரந்தங்களை கால க்ஷேபும் செய்வதே ஆமுஷ்மிகத்துக்கு அவச்யமென்று வழக்கொன்று உண்டாயிருக்கிறது. அவ்விதம் காலக்ஷேபம் செய்ய அசக்தர்கள் ஆத்யந்தம் சேவிப்பதாம். இவை எல்லாம் காலானுகுண்யத்தாலும் யோசிக்காமையாலும் நேரிட்ட குற்றம் குறைகள்.

சில நாள்களுக்கு முன் நடந்ததோர் வ்ருத்தாந்தம் கேள்விப்பட்டேன். அதாவது ஒரு நாள் காலக்ஷேபத்தில் காமக்ரோதங்களைப் பற்றி, ஆசார்யன் அநேக விதமாய் உபதேசித்த தத்வங்களை எல்லாம் பக்தி ச்ரத்தையுடன் கேட்ட இருவர் வெளி வந்து ஏதோ சில்லரை பண விஷயமாய் ஒருவர்க்கொருவர் ஆக்ரோஷப் பட்டு நடுத் தெருவில் வந்து குடுமியைப் பிடித்துக்கொண்டு சண்டை செய்தார்களாம். இவ்வித காலக்ஷேபமானது பலத்தையே உத்தேசிக்காமல் கர்மாக்களை செய்யவேண்டுமென்கிற கீதாசார்யனுடைய உபதேசம் பலிக்கவும் ப்ரதிபலிக்கவும் செய்யப்படுவதோ என்று எண்ணலாம் படியாயிற்று.



முற்காலத்தில் எவ்விதமிருந்தாலும் தற்காலத்தில் ஸித்தாந்த ஸ்தாபனம் பரமத பங்கம் முதலானவை எப்பொழுதாவது அவச்யமானுலும் அதற்கு அதிகாரிகள் சிலரே. அந்த சாஸ்த்ரங்களில் அபேக்ஷித்தவர்க்கு பாடம் சொல்வதற்காக சிலர் சிரோமணிகளானுல் போதும். வேதாந்தம் எனப்படுவது அநுஷ்டான பர்யவஸானமானுலொழிய வேதாந்தமாகாது. ப்ராணவாயுவும் அன்னமும் எவ்விதம் இந்த சரீரத்துக்கு அத்யாவச்யங்களாய் அந்த சரீரத்தினுடைய ரத்தம் சதை எலும்பு முதலியவைகளின் ரக்ஷண அபிவிருத்தி விஷயத்தில் இன்றியமையாதவைகளாய் இருக்கின்றனவோ, அவ்விதமே வேதாந்தம் எனப்படுவது சரீரியின் போஷணத்துக்கும் அபிவிருத்திக்கும் இன்றியமையாதது. அதாவது எவ்விதம் நாம் புஜிக்கும் அன்னமானது உருவே மாறி நம்முடையதாய், ரத்தம், சதை, நரம்பு, எலும்பாய் மாறி சரீரத்தின் வ்யாபாரங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றதோ அவ்விதமே. வேதாந்தமும். இந்த சரீரிக்ரு ப்ராணன் போலவும் அன்னம் போலவும் அமையவேண்டுவது அவச்யம். எவ்விதம் சரீரத்துக்கு அதர்க்குறிய அன்னத்தால் ரத்தம் 'முதலானவைகள் ஏற்படுகின்றனவோ அவ்விதமே வேதாந்த போஜனத்தை ஜீர்ணிப்பதால் சரீரிக்கு ஏற்படக்கூடியவை ஆத்ம குணங்கள். இதுவே வேதாந்தத்தின் வேதாந்தம்.

---

ஸ்ரீ:

# ஸப்தாந்ந ப்ராஹ்மணம்

[ஸ்ரீ. உ. வே. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர், மாம்பலம்]

உபநிஷத்துக்களெல்லாம், நமது இந்த்ரியங்களுக்குப் புலப்படாமலிருக்கும் வஸ்துக்களுடைய ஸ்வரூபத்தையும் ஸ்திதியையும் ப்ரவ்ருத்தியையும் பற்றியே பேசுகின்றன வென்பது உண்மையே யாயினும், பல விடங்களில் ப்ராஸங்கிகமாக ப்ரத்யக்ஷங்களான சில லௌகிக விஷயங்களைப் பற்றியும் ப்ரஸ்தாவிக்கின்றன வென்பதை உபநிஷத்துக்களைப் படிக்குமவர்களெல்லாரும் அறிவார்கள். கேவலம் யுக்தியை மாத்ரம் ஸஹாயமாகக் கொண்டு லௌகிக விஷயங்களின் தத்வத்தைப் பற்றி விசாரிக்கும் இக்காலத்திய நிருபகர்கள் அந்த விஷயங்களைப்பற்றி எவ்வித விசாரம் செய்கிருர்களோ, அவ்விதமாகவே விஷயங்களை விசாரித்து, அவர்களுக்கு எட்டாமலுள்ள பல அருமையான நிர்ணயங்களையும் தெளிவாக எல்லாருக்கும் சித்த ஸமாதாநம் உண்டாகும்படி உபநிஷத்துக்கள் விவரிக்கின்றன. சிற்சில விடங்களில் உபநிஷத்துக்கள் சொல்லும் ஸமாதாநங்கள் மிகவும் ஆச்

சர்ய கரங்களாகவும் இருக்கின்றன. இதற்கு நிதர்சநமாக நாம் இவ்விடத்தில் ஒரு ப்ரகரணத்தை உதாஹரிக்கிறோம்.

ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் 'ஸப்தாந்ந ப்ராஹ்மணம்' என்று ஒரு பாகம் உண்டு. ஜகத்தில் தென்படும் வஸ்துக்களெல்லாம் பரப்ரஹ்மத்தினிடமிருந்தே ஜநிக்கின்றன வென்பதைச் சொல்லி வரும் ப்ரகரணத்தில், முதலில் சேதந வர்க்கங்களைப் பற்றிப் பேசிவிட்டு, பிறகு அசேதந வர்க்கத்தைப் பற்றி பேசும்பொழுது, 'அந்தச் சேதந வர்க்கத்திற்கெல்லாம் உபஜீவ்யமாயிருக்கும் வஸ்துக்கள் பல வுள; அவைகளும் ப்ரஹ்மத்தினிடமிருந்தே உண்டாகின்றன' என்பதை அந்த பாகம் விவரிக்கின்றது. அந்த வஸ்துக்கள் அப்படி உபஜீவ்யங்களாக இருக்கின்றன வென்னும் காரணத்தைக்கொண்டே, அவைகளை ஜீவன்களுடைய அந்நங்களாகவும் வ்யவஹரிக்கின்றது. அந்நங்கள் ஏழு வகைப்படுமாம். அவையாவன :—மநுஷ்யர்களுக்கு உபகாரகங்களாக இருக்கும் நெல், கோதுமை முதலிய தாந்ய வர்க்கம் காற்று தீர்த்தம் ப்ரகாசம் முதலியவைகளும் ஒன்று; தேவர்களுக்கு உபகாரங்களாக இருக்கும் ஹவிஸ்ஸுகள் இரண்டு; இவைகள் ஔபாஸந ரூபமென்றும் அக்நிஹோத்ர ரூபமென்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன; திர்யக்குகள் ஸ்தாவரங்கள் [அதாவது, பசு பக்ஷிகள் மரம் செடிகள்] இவைகளுக்கு உபகாரமாயிருக்கும் பயஸ் ஒன்று [க்ஷீரமும் ஜலமும்]; ஸகல ஜீவன்களுக்கும் உபகாரகங்களாயிருக்கும் மநஸ் வாக் ப்ராணன் என்னும் மூன்று வஸ்துக்கள்: ஆக ஏழு. மநஸ் வாக் ப்ராணன் இம்மூன்றும் ப்ரஸித்த அந்நம் போலவே ஜீவர்களுடைய ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு அவச்யம் அபேக்ஷிதங்களாகையால், இவைகளும் ஜீவன்களுக்கு அந்நங்களென்றே வ்யவஹரிக்கப்படுகின்றன. இந்த ஏழு வகைப்பட்ட அந்நங்களும் ப்ரஹ்மத்தையே உபாதாந காரணமாக உடைத்தாயிருக்கின்றன வென்பதை வற்புறுத்துவதே இந்த உபநிஷத்தின் தாத்பர்யம்.

இதில் தென்படும் விசேஷாம்சங்களை ப்ரஸ்தாவிப்பதற்கு முன் இதன் வாக்ய பங்க்தி எப்படி இருக்கின்றது என்பதை பார்ப்பது உசிதமாகும். உபநிஷத்துக்களின் வாக்சைலி அந்யாத்ருசமன்றோ?

𑌯𑌤𑍍𑌸𑌪𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌨𑌿 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌤𑌪𑌸𑌾𑌽𑌜𑌨𑌯𑌤𑍍𑌪𑌿𑌤𑌾—ஸர்வஜநகனாக இருக்கும் பரமாத்மா தனது ஜ்ஞாந ரூபமாகிற ஸங்கல்பத்தால் ஜீவவர்க்கத்திற்கு உபகாரகங்களாக ஏழுவித அந்நங்களை ஸ்ருஷ்டித்தான். [ப்ரஜைகளுக்கு அந்நத்தை ஏற்படுத்துவது பிதாவின் தர்மமென்பதை ஸூசிப்பிக்கின்றது இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கும் 'பிதா' என்னும் சப்தம்.]



𑌏𑌕𑌮𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌇𑌦𑌮𑍇𑌵𑌾𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌮𑌨𑍍𑌨𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑌦𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿—அவைகளுள் ஒன்று மநுஷ்யர்களுக்காக ஸ்ருஷ்டிக்கப்பட்டது; அது மநுஷ்யர்களெல்லாருக்கும் பொது. அது ப்ரதிதிநம் மநுஷ்யர்களால் புஜிக்கப்படும் அந்நமே. [நெல் கோதுமை முதலிய தாந்ய வர்க்கமும் தீர்த்தம் காற்று வெளிச்சம் முதலியவைகளும் இந்த அந்நத்தில் உட்பட்டவை.]

𑌸 𑌯 𑌏𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌨 𑌸 𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑍋 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇—இப்படிப் பொதுவாயிருக்கும் அந்நத்தை எவன் மற்றவர்களுக்குக் கொடாமல் தானே புஜிக்கிறானோ அவன் பாபத்திலிருந்து விடுபட்டவனாக மாட்டான்.

𑌦𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌨𑌭𑌾𑌜𑌯𑌤𑍍 𑌹𑍁𑌤𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌹𑍁𑌤𑌂 𑌚—இரண்டை தேவர்களுக்கென்றே ஏற்படுத்தினான். அவை ஔபாஸநமும் அக்நிஹோத்ரமும்; அதாவது, ஔபாஸந ரூபமாகவும் அக்நிஹோத்ர ரூபமாகவும் ஸமர்ப்பிக்கப்படும் ஹவிஸ் தேவர்களுக்கு அந்நமாகின்றது என்று சொன்னதாயிற்று.

𑌪𑌶𑍁𑌭𑍍𑌯 𑌏𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌤𑍍 । 𑌤𑌤𑍍𑌪𑌯𑌃—மற்றொன்றை பசு பக்ஷி முதலிய திர்யக்குக்களுக்குக் கொடுத்தான். அது பயஸ்.

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂, 𑌯𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌤𑌿 𑌯𑌚𑍍𑌚 𑌨—பசு பக்ஷி முதலியவை போல ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஸஞ்சரிக்கக்கூடிய திர்யக்குகளும் வ்ருக்ஷம் செடி முதலிய ஸ்தாவரங்களும் இந்த அந்நத்தாலேயே வளருகின்றன. [வ்ருக்ஷங்கள் ஜலத்தால் வளர்கிறபடியால், அவை போன்ற ஸ்தாவர விஷயத்தில் 'பய:' என்பதற்கு 'ஜலம்' என்று பொருள் கொள்ளவேண்டும்.]

𑌤𑍍𑌰𑍀𑌣𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍇𑌽𑌕𑍁𑌰𑍁𑌤, 𑌮𑌨𑍋 𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑍍—மற்றை மூன்றையும் ஜீவனுக்குக் கொடுத்தார். அவையாவன—மநஸ், வாக், ப்ராணன். [ஸுக துக்கங்களை அநுபவிக்கும் ஸகல ஜீவன்களுக்கும் இவை அவசியம் அபேக்ஷிதங்கள். எல்லா ஜீவன்களுக்கும் இவை கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், ஒவ்வொருவனுக்குக் கொடுக்கப்பட்டவை அவனவனுக்கே உபகாரகங்களாகும் என்பது குறிக்கத்தகுந்தது. நம்முடைய மநஸ்ஸைக் கொண்டு நாமே ஸுக துக்கங்களை அறியலாமே தவிர்த்து, நம்முடைய மநஸ் மற்றொருவனுக்கு அம்மாதிரி உபகரிக்க மாட்டாதன்றோ?]

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇𑌽𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 । 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑌾 𑌅𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌃 𑌸 𑌹𑍀𑌦𑌮𑌨𑍍𑌨𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑌯𑌤𑍇—பரமாத்மா அக்ஷிதி [அதாவது, அக்ஷதன், எவ்வித குறைவுமற்றவன்]. அவன் இந்த அந்நங்க

ளெல்லாவற்றையும் குறையக் குறைய ஸ்ருஷ்டிக்கிறான். ஆகையால், ப்ரஜைகளால் எப்பொழுதும் இவை புஜிக்கப்பட்டு வருகையிலும், இவை ஒருபொழுதும் இராமற் போகமாட்டா.

யொவெதாஉக்ஷிதிம் வெஉ ஸொ<ஞஉத்தீ, ஸ ெஉவா நவி மஹுதி, ஸ ஊஜ-ஃஉ~வஜீவதி—எவன் இந்தப் பரிபூர்ணமான பரமாத்மாவை இவ் விதம் அறிந்துகொண்டு உபாஸிக்கிறானோ, அவன் யதேஷ்டமாக அந்நத் தைப் புஜிக்கிறான்; தேவதா ஸாயுஜ்யரூபமான ஆமுஷ்மிக பலத்தையும் அடைகிறான்; பரப்ரஹ்மானுபவமாகிற மோக்ஷ பலத்தையும் அடைகிறான்.

இதில், முதல் அந்நமாகிற நெல் கோதுமை முதலியவை எல்லாம் மநுஷ்யர்களுக்கு பொது வென்றும் அவை அப்படிப் பொதுவாக இருக் கிறபடியால் எவன் அவைகளை மற்றவர்களுக்குக் கொடாமல் புஜிக்கிறானோ அவன் பாபத்தை அடைகிறானென்றும் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத் தகுந்தது. இதற்கு, நாம் அந்நத்தை பிச்சையிட்டே புஜித்தல் வேண்டு மென்பது மாத்ரம் தாத்பர்யமன்று. நாம் 'இந்த அந்நம் நம்முடையது; இதற்கு நான் ஸ்வாமி; இது நம்முடைய ஸ்வம்' என்று நினைக்கக் கூடாது என்பதும் கருத்தாகும். ஜலம் காற்று வெளிச்சம் இவைகளும் இந்த அந்நத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியால், இவைகளை எப்படி நாம் புஜிக் கிறோமோ அம்மாதிரியே தநதாந்யங்களையும் புஜித்தல் வேண்டுமென்ப தன்றோ இதிலிருந்து ஏற்படுகின்றது; அதாவது, ஒவ்வொருவனும் தன் தன் தேஹதாரணத்திற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு மாத்ரத்தை எடுத்துக் கொள்ளலாமே தவிர்த்து, அதற்கு மேல்பட்டு தநதாந்யங்களைக் குவிப்பது அக்ரமமென்று சொன்னதாயிற்று. இதுவே தர்ம சாஸ்த்ரங் களாலும் சொல்லப்படுகின்றதன்றோ? ஜலம் காற்று வெளிச்சம் இவைகள் பங்கிட்டுக் கொள்ளத்தகாதவைகளாகவும் தநதாந்யங்கள் பங்கிடக்கூடிய வைகளாகவும் இருக்கிபடியாலன்றோ, ஜநங்கள் இவைகளில் அக்ரமத்தை செய்து விட்டார்கள். 'திஞம் ஹெஉதஃ' என்பதை நாம் மறக்கக்கூடாது.

இரண்டாவது—இந்த உபநிஷத், மநஸ்ஸையும் வாக்கையும் ப்ராணனை யும் அந்தந்த ஜீவன்களுடைய அஸாதாரண உபகாரக வஸ்துவாகச் சொல்லுகின்றது. மநஸ்ஸைக் கொண்டு நாம் ஸுகதுக்கங்களை அறிவது போல மநஸ்ஸினாலேயே வஸ்துக்களின் நன்மை தீமைகளையும் நாம் அறி கிறோம். நாம் விஷய விசாரம் செய்வதற்கும் அவைகளைப்பற்றி அபிப்ரா யங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கும் அது உபகரணமாகின்றது. ஆகையால்



அதை ஒவ்வொருவனுக்கும் அஸாதாரண மென்று சொல்லக்கூடும். அதாவது, நாம் நம்முடைய அபிப்ராயங்களை நாம் ஸம்பந்தப்பட்டபர் யந்தம் மாத்ரம் செலுத்தலாமே தவிர்த்து, நம்முடைய அபிப்ராயத்தை மற்றவர்கள்மீது நிர்பந்திப்பதாவது, மற்றவர்களுக்காக நம்முடைய அபிப் ராயத்தை விட்டுக்கொடுப்பதாவது சரியன்று என்று சொன்னதாயிற்று. இப்படி ஒரு பழய க்ரந்தம் பேசுகின்றது மிகவும் ஆச்சர்யகரமன்றோ?

மூன்றாவது 'பரமாத்மா அக்ஷிதன். அவனன்றோ இந்த அந்நங் களெல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிறான்? குறையக்குறைய இவைகளை அவனே பூர்ணம் செய்கிறான்' என்று சொல்லியிருப்பது ஒரு சிறந்த விஷயம். 'காலம் செல்லச் செல்ல ஜநங்கள் எண்ணிக்கையில் அதிகரிக் கிறார்களே; ஒரு காலத்தில் இந்த ஜகத்தில் அகப்படும் அந்நம் ப்ரஜை களுக்குப் போதாமற்போய்விடுமோ?' என்று பயந்து சிலர் ப்ரஜாவ்ருத் தியைத் தடுக்கவேண்டுமென்று வாதிக்கிறார்கள். இவர்கள் இந்த உபநிஷத் சொல்லுவதைச் சற்று கவனித்தல் வேண்டும். ஸூர்யனுடைய வெளிச்சம் ஒரு காலத்தில் மங்கி, ஜகத் இருளில் மூழ்கி விடுமோ வென்றும் ஜகத்தில் தென்படும் ஜலமும் ஜநங்களுக்கு ஒரு காலத்தில் போதாமல் போய் விடுமோ வென்றும் இவர்கள் ஏன் பயப்படக்கூடாது? கொள்ளக் குறை விலன் கொடுக்கக் காத்திருக்கையில் நாம் ஏன் கரைதல் வேண்டும்?

இன்னும் இம்மாதிரி பல அருமையான சொற்கள் உண்டு. நமது சாஸ்த்ரங்களெல்லாம் பண்டைய காலத்தியவை யென்றும், ஆகையால் அவைகளில் உதாரங்களான மநோபாவங்களைக்காண முயல்வது வீண் ச்ரமமாகுமென்று அவைகளை அநாதரித்துப் பேசும் நமது பண்டிதம் மந்யர்கள் இம்மாதிரி உபநிஷத்தாற் சொல்லப்படும் அர்த்தங்களைப் பொறுமையுடன் அவதாநிப்பாராக.

"ஹ்ரீணாஉ க்ஷதகமிரா° கீஷ்யஶ் விதுவ்யத்தீஃ"

ஸ்ரீ:

# கரண த்ரய ஸாமரஸ்யம்.

[ஸ்ரீ. உ. வே. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வகேட், மைலாப்பூர்.]

த்ருஷ்டத்திற்போல் அத்ருஷ்டத்திலும் கரண த்ரய ஸாமரஸ்யம் பெருமைக்குக் காரணமாகவல்லது. அதாவது எப்படி இந்த லோக நடவடிக்கைகளில் மனதில் எண்ணும் எண்ணமும் வாயாற் சொல்லும் சொல்லும் கையால் செய்யும் செய்கையும் ஒற்றுமையுடையவர்களுக்கே பெயரும், புகழும், மதிப்பும் ஏற்படுகின்றனவோ, அப்படியே பரலோக ஸாதனங்களை அவலம்பிக்கிறவர்களுக்கு, முக்கரணங்களும் வெவ்வேறு படாது எம்பெருமான் பால் ஒரு வழிப்பட்டு நிற்கவேண்டும். சொல்லினும் தொழிற்கணும் தொடக்கரு த அன்பினும் திருமாலின் திருப்பாதங்களைப் போற்றவேண்டும்.

நன்னடைக்கையை விதிக்க வந்த மனுவும் தமது தர்ம சாஸ்திரத்தில் ஒவ்வொருவனுக்கும் வயதிற்கும் குலம் தொழில் முதலியவைகளுக்கும் தகுந்தபடியான வேஷ, வாக், வ்ருத்தி ஸாரூப்யம் இருப்பது அவசியம் என்று சொல்லியிருக்கிறார். தன்னிருப்புக்குத்தக்க வேஷமும், பேச்சும், நடத்தையும் இருப்பது மாத்திரம் போதாது; அவைகள் ஏகரூபமாயிருந்தால் தான் அழகு. ஒருவனுக்குச் செய்கையொன்றும், சொல்லொன்றுமாய் இருந்தால் இகழ்ச்சிக்கே அவன் விஷயமாய் விடுவான் என்பது எல்லாவற்றையும் ஒளிக்கும் இயல்புடைய இந்த நாகரீகத்திலும் தெளிவாய்த் தெரிகிறது. "உண்மை" யென்னும் பதத்திற்கே பொருள் தெரியாத காலம் இது. "உண்மை யென்றால் என்ன ?" என்று பரிஹஸித்தானும் ஒரு மேனாட்டுப்ரபு [What is Truth ?—said Jesting Pilate]. முக்ககாணங்களின் ஏகரூபந்தான் உண்மை யென்பது நம்மவரால் வெகு காலத்துக்கு முன் உரைந்து ஓதப்பட்டிருக்கிறது. ஒன்று வேறுபட்டாலும் உண்மை நிலை தவறிவிடுகிறது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசினாலும், செய்தாலும், சொன்னவண்ணம் எண்ணாமல் செய்யாமலிருந்தாலும், செய்கையினின்று நினைவும் சொல்லும் வேறு பட்டாலும் விளைவது பொய்யே. இந்த மனு நீதியைத்தவறினவர் லோக மரியாதையே தவறின வராவார் என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ஸ்தோத்திரரத்ன பாஷ்யத்தில் அருளிச் செய்கிறார்.

ஒருவர் மனதை ஒருவர் அறிய மாட்டாத நிலையில் இவ்வளவு உண்மை அவசியமானால், உள்ளுவார் உன்னிற்றெல்லாம் நினைத்தவர்



நினைவுகள் எல்லாம் உடனிருந்து அறிய வல்ல ஸர்வாந்தர்யாமியான ஸர்வேச்வரன் விஷயத்தில் இந்த கரணத்ரய ஸாமரஸ்யம் எவ்வளவு அவசியம் இருக்கவேண்டும். அவனைப் பொய்யால் வஞ்சிக்கப்போமோ? "உள்ளன மற்றுளவாப்புறமே சிலமாயம் சொல்லி, வள்ளல் மணிவண்ணனே என்றென்றே உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனது" என்று நம்மாழ்வார் அவனை ஏமாற்றலாம் என்ன எண்ணத்தைப் பழித்துப் பேசியிருக்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார் :—

"உள்ளத்தேயுறையும்மாலை உள்ளுவான் உணர்வொன்றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய் தொண்டுக்கே கோலம் பூண்டேன்
உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறிதியென்று
வெள்கிப் போய் என்னுள்ளே நான் விலவறச்சிரித்திட்டேன்"

என்று தாம் அவனை ஏமாற்ற முடியாது போனமையைப் பரிஹாஸமாய்ப் பேசுகிறார். வஞ்சனபர: (वञ्चनपरः) என்கிற ஸ்ரீ ஆளவந்தார் வாக்கியத்திற்கு ஸ்வாமிதேசிகன் "ஸ்வதஸ்ஸர்வக்ஞம் த்வாமபி விப்ரலப்துகாம:" எல்லாமுணர்ந்த உன்னையே மோசம் செய்யும் கருத்தையுடையவன் என்று பாஷ்யமிட்டருளுகிறார்.

நீதியல்லாத துஷ்ட விஷயங்களில் கரண த்ரய ஸாமரஸ்யம் ஏற்படுவது வெகு சுலபம். ஆனால் அது கேடு விளைக்கும் என்று சொல்லவேண்டுவதில்லை. "நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் நீதியல்லாதன செய்தும் துஞ்சினார் செல்லும் தொல் நெறி" நரகமார்க்கம் கேட்டு துளங்குகிறார் (நடுங்குகிறார்) திருமங்கை மன்னன். எம்பெருமான் இன்னருளுக்கு ஆசைப்படுமவர் அவன் விஷயத்தில் கரணத்ரய ஸாமரஸ்யம் அடைய வேண்டும், மனம் வாக்கு காயம் மூன்றையும் அவன் விஷயமாய் அர்ப்பணம் செய்யவேண்டும். செய்யாத போது ஏன் பிறந்தோம் என்று தொண்டரடிப் பொடியாழ்வாரைப் போல் துக்கிக்க வேண்டும்.

"போதெல்லாம் போது (புஷ்பம்) கொண்டு உன் பொன்னடி புனைய [மாட்டேன்
தீதிலாமொழிகள் கொண்டு உன் திருக்குணம் செப்பமாட்டேன்.
காதலால் நெஞ்சம் அன்பு கலந்திலேன், அது தன்னாலே
ஏதிலேன். அரங்கர்க்கு, எல்லே! என் செய்வான் தோன்றினேனே"

ஐயோ! அவன் திருவடிக்கன்பு பூணாத மனதாலும், அத் திருவடிகளில் எண்டிசையுமுள்ள பூக் கொண்டு பணியாத சரீரத்தாலும், அத் திருவடி

களின்-பெருமையை இன்ப முறப்புகழாதவாயாலும் கெட்டேனே என்று பரிதபிக்கிறார். இந்த துர்தசை நேரிடாத வண்ணம் நம்மைக் காத்துக் கொள்ளவேண்டும் என்று நம்மாழ்வார் திருவாய் மொழியின் ஆரம்பத்திலேயே உபதேசிக்கிறார்.

" உள்ளம் உரை செயல், உள்ள இம் மூன்றையும்
உள்ளிக்கெடுத்து இறையுள்ளிலொடுங்கே "

மனம் வாக்கு காயம் இம் மூன்றும் நமக்குள்ளன. பாடு பட்டு ஸம்பாதிக்கவேண்டுவனவன்று. அதை நினைந்து இம் மூன்றையும் எம்பெருமானுக்கே யென்று சங்கற்பித்து இவைகளுடைய விஷயாந்தர ஸம்பந்தத்தை நிவர்த்தித்து பகவத் விஷயத்தில் புகுத்தவேண்டியது. இதுவே சரியான உபாயம் என்று முதல் பத்தில் அருளிச் செய்தவர் இதுவே பரம புருஷார்த்தமென்று எட்டாம்பத்தில் அநுபவிக்கிறார்.

" இங்கே திரிந்தேற்கிழுக் குற்றென் இருமா நிலமுன்னுண்டுமிழ்ந்த
செங்கோலத்த பவளவாய் செந்தாமரைக்கண் என்னம்மான்
பொங்கேழ் புகழ்கள் வாயவாய் புலன் கொள்வடிவு என் மனத்ததாய்
அங்கேய் மலர்கள் கையவாய் வழிபட்டோட அருளிலே "

நமது ஸர்வ இந்திரியங்களையும் தன் வசப்படுத்தி இன்ப சுகந்தரும் சுந்தரமான திருமேனி பொருந்திய ஸ்ரிய: பதியினுடைய திவ்ய மங்கள விக்கிரஹத்தை மனதில் கொண்டு அவன் பெருங்கீர்த்திகளை வாயாரப் புகழ்ந்து, அவனடியிணைக்கு ஆர்வம் பெருகி அர்ச்சிப்பதற்கான நறுமணம் கமழும் புஷ்பங்களைக் கையில் ஏந்தி நிற்கும் நிலை நமக்கு இவ் வுலகத்திலேயே நேரும்படி அவன் அருள் செய்தால், பின்பு இவ்விருள் தருமா ஞாலத்துள் இருப்பதால் என்ன குறையுண்டு என்று பொருள் படும் இப் பாசுரத்தால் நமக்கு கரணத்ரய ஸாரூப்யமே ப்ரமோத்தேச்யம் என்பதை தெளிவாய் அருளிப் போந்தார். இமையோர்கள் இனம் இனமாய் மெய், நா, மனத்தால் வழிபாடு செய்வதுபோல் நம்மாழ்வாரும் சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தை தாயென்றடைந்தபடியால் தான் அவருக்கும் அவரது திவ்ய ப்ரபந்தத்திற்கும் அவ்வளவு ஏற்றம்.

இந்த கரணத்ரய ஸாரூப்யம் ஏற்படாத போது பெரியோர்கள் மனங்கலங்குவதை கவனிக்கவேண்டும். " சித்தமும் செவ்வை நில்லாது என் செய்கேன் தீவினையேன் " என்று தாம் பாடும் கவிகள் மனப்பூர்வமாகயில்லையே யென்று திருமங்கை மன்னன் மனம் தளும்புகிறார், வெகு



அழகான ஸ்தோத்திரரத்நத்தை அருளிச் செய்த ஸ்ரீ ஆளவந்தார் இது என்னிச்சையோடு செய்ததில்லை, வெறும் சப்தங்களை அடுக்கிவிட்டேனேயன்றி மனம் இசையவில்லையே மனம் இசையவில்லையே யென்று சோகிக்கிறார் ' ஜநிஜநெவ்யவம் ' என்கிற ச்லோகத்தில்

" ஶரணவரணவாகியம் உயோக்தா நஹவதி ஸாவி யீவஸவிகா "
என்று ஸ்ரீகூரத்தாழ்வான் தமது சரணாகதியும் கேவலம் வாக்கால் உச்சரிக்கப் பட்டதேயன்றி மனம் ஒருமைப் படவில்லை யென்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறார். அம் மஹான்கள் தம்மிடத்தில் இவ் வண்ணம் அதிசங்கை பண்ணியது சரியாகாது. ஆயினும் நம் முள்ளம் இவ்விஷயத்தில் எத்தனை தெளிவாக இருக்கவேண்டும் என்பதை மேல் குறித்த வாக்கியங்கள் விளக்கக்கூடியவை.

எம்பெருமான் உகந்த கைங்கர்யங்களில் மனோவாக்குக் காயங்களை ஒருமைப்படுத்தினால் ஸகல பாபங்களும் பறந்தோடும் என்கிற இந்த ஸித்தாந்தத்தை ஸ்ரீ ஆண்டாள் தமது திருப்பாவையின் ஐந்தாம் பாசுரத்தில் எளிதாய் தெரிவிக்கிறாள். " தூயோமாய் வந்து நாம் தூமலர்கள் தூவித்தொழுது, வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்று. தூய்மை யென்பது இம் முக்கரணங்களின் ஏக ரூபம். அவைகளின் ஏக திருஷ்டி திருமால் ஒருவனே யாயிருத்தல் வேண்டும் என்பது இப்பாசுரத்தில் தெளிந்த கருத்து.

" உடநாவாக்காயொர நாகிகாஹவ்யவ்ரஸு " என்று தொடங்கும் சரணாகதிகத்ய வாக்யத்தில் சொல்லப்பட்டபடி அபசாரம் செய்வதில் கரண த்ரயங்களை செலவிடாது எம்பெருமான் விஷயத்தில் அவைகளை உபயோகிக்கவேண்டும். அபசாரம் நேராது பகவத் விஷய ப்ராவண்யம் ஏற்பட்டால் அதுவே ஸாகரூபம் என்று நம் தேசிகோத்தமன் ஒரு காரிகையால் அருளிச் செய்கிறார்.

" உபயாசெத்ஷவெராஹ்யம் த்ரிவர்க நிரபெக்ஷதா ।
கரணத்ரயஸாரஸ்யமிதி ஸௌவ்ரஸாயநம் ॥

த்ரிவர்க்க நிரபேக்ஷமான கரண த்ரய ஸாமரஸ்யம் இங்கே ஸௌக்யத்திற்கு நல்ல மார்க்கம் என்று சொல்லப்பட்டிருப்பதால் பகவத் விஷய மொழிந்த விஷயங்களில் கரணங்களுடைய ப்ரவ்ருத்தி ஓய வேண்டுமென்பதாயிற்று. இது புத்தி தெளிவினால் ஏற்பட்ட ஸாமரஸ்யமாயிருந்

தல் அவசியம் என்பதை யுணர்த்த உபயுக்தேஷு வைசத்யம் என்று அருளிச் செய்யப்பட்டது. இந்த அபிப்பிராயத்தையே சரணாகதி தீபிகையில் இன்னும் அழகுபட அருளிச் செய்கிறார்.

"தத்த்வாவபோதஶமித வ்ருஜிநோபருத்தம்
கைங்கர்ய ஸித்த கரணத்ரய ஸாமரஸ்யம் ।
க்ருத்வா ததந்ய விமுகம் க்ருபயா ஸ்வயம் மாம்
ஸாதிம்ந ஶ்ரியோ: ப்ரதிமமஸ்து ஜகந்நிவாஸ: ॥"

உபயுக்தமான தத்வ ஞானத்தால் அபசாரத்திலிருந்து கரணங்களை விலக்கி உமது கைங்கர்யத்தில் அக்கரணங்களை ஸமரஸம் பெறும்படி செய்து உம்மையன்றி யறியாதவனாய் அடியேனைச் செய்து, இந்த ரக்ஷணத்தால் திருவுள்ள முகந்து விளங்கும் திருவின் கடாக்ஷத்திற்கு நீர் லக்ஷ்யமாகவேண்டும், என்று தமக்குக் கரண த்ரய ஸாரூப்யம் பகவத் கைங்கர்யத்தில் ஏற்பட்டால் எம்பெருமானுக்கும் அது பெரிய லாபத்தை விளைவிக்கும் என்று வெகு ரஸமாக அருளிச் செய்கிறார்.

இவற்றையெல்லாம் கவனிக்குமிடத்து நம் ஸம்பிரதாயத்தில் நமக்கு எவ்வளவு அநுகூல மிருக்கிறது என்பது விளங்கும். கரணங்கள் ஸதா கார்யம் செய்துகொண்டே யிருக்கும். அவைகளுடைய காரியத்திற்கு பரப்ருஹ்மம் லக்ஷ்யமாகும் தசையில் அந்த ப்ருஹ்மத்தைக் கற்பனை செய்து ஏனைய சித்தாந்திகள் என்ன பயன் பெறுகின்றனரோ அறியோம். ஆழ்வார்களும் ஆசார்யர்களும் நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கும் தெய்வமோ நம் கரணங்களைத்தாலும் கால தத்வ முள்ளளவும் அடைந்தநுபவித்தாலும் திகட்டப் போவதில்லை. நமக்கு கரணங்கள் உள்ள காலம் வரையில் ருசிப்பது எம்பெருமானுடைய திருவடி மலர்களே. கரணங்களில்லாத நிலை ஏற்படும் போது இதரர்களுடைய கொள்கைகளை ஆராய்ந்து பார்ப்போம். அதுவரை பரமோத்தேச்யமாயிருப்பது பகவத் கைங்கர்யலப்த கரண த்ரய ஸாமரஸ்யந்தான்.

---

ஸ்ரீ:

# ப்ராமண்யாதி ஜாதிகளின் ஸ்வரூபம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஆஸ்தான வித்வான்,
அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்]

புருஷஸூக்தத்தில்- ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத், பாஹூ ராஜந்ய: க்ருத:, ஊரூ ததஸ்ய யத்வைஶ்ய:, பத்ப்யாம் ஶூத்ரோ அஜாயத' என்கிற வாக்யங்களினால் ப்ரம்மரூபியான பகவானுடைய முகத்திலிருந்து பிராமண ஜாதியும் கைகளிலிருந்து க்ஷத்ரியஜாதியும் துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும் கால்களிலிருந்து சூத்ரஜாதியும் உண்டானதாகச் சொல்லப் படுகிறது. இந்த விஷயம் பாத்மஸம்ஹிதை சர்யாபாதத்தில் வ்யக்தமாகச் சொல்லப்படுகிறது.

ஶ்ருதவாநு—

"ஸத்த்வம் ரஜஸ்தமஶ்சேதி த்ரைகுண்யம் கமலாஸந ।
ததீயம் தந்மயோ பூத்வா ஸஸர்ஜாஹம் புரா ப்ரஜா: ॥

ஸமுத்கடேபி ஸத்வே விப்ராநஸ்ருஜம் ஸ்த்ரியாந்விதாந் ।
ரஜோகுணேऽதிஶயிதே பாஹுப்யாம் க்ஷத்ரியாம்ஸ்ததா ॥

ஊருப்யாம் குணஸாம்யே து வைஶ்யாந் ஸ்த்ரீஸஹிதாந் விஶ: ।
ஶூத்ரே து தமஸி பத்ப்யாம் ஸ்த்ரீஸஹிதாந் ருதேவிண: ॥

ஸந்தே ச வர்ணா: ஶ்ரேயாம்ஸ: பூர்வபூர்வே யதோதிதா: ।
ஹேதுப்யாம் ஜந்மகர்மப்யாம் ஶ்ரைஷ்ட்யமேஷாம் ப்ரகீர்த்யதே" ॥

இங்கு முதல் ச்லோகத்தில் ஈச்வரன் உலகத்தை ஸ்ருஷ்டிக்கும் பொழுது ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணமயமான தேகத்திலிருந்து ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லுகிறது.

2-வது ச்லோகத்தில் தனது தேகத்தில் ஸத்வ குணம் விருத்தியடைந்த ஸமயத்தில் தனது முகத்திலிருந்து பிராமண ஜாதி ஸ்த்ரீ புருஷர்களையும் ரஜோகுணமானது விருத்தியடைந்த ஸமயத்தில் தனது புஜங்களிலிருந்து க்ஷத்ரிய ஜாதி ஸ்த்ரீ புருஷர்களையும் ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லுகிறது.

3-வது ச்லோகத்தில் மூன்று குணங்களும் ஸமமாக இருந்த ஸமயத்தில் துடைகளிலிருந்து வைச்யஜாதி ஸ்த்ரீபுருஷர்களையும் தமோகுணமானது அதிகமாக இருந்த ஸமயத்தில் சூத்ரஜாதி ஸ்த்ரீபுருஷர்களையும் ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லுகிறது.

4-வது ச்லோகத்தில்—ஈச்வரனுடைய முகம் கை துடை கால் என்கிற நான்கு அவயவங்களிலுண்டான நான்கு ஜாதிகளுக்குள் ஸத்வ குணம் அதிகமான பாகத்திலுண்டானது முதலிய காரணத்தினாலும் முன் ஜந்மத்தில் பண்ணப்பட்ட புண்ய கர்மங்களுடைய தாரதம்யமாகிற காரணத்தினாலும் ப்ராமண க்ஷத்ரிய வைச்ய சூத்ர தேகங்கள் வரிசையாக மேன்மையை உடையன என்று சொல்லுகிறது.

இந்த பாத்ம ஸம்ஹிதையில் ஸத்வ ரஜஸ் தமோகுணங்களுடைய ஸாம்யாவஸ்தையில் வைச்ய ஜாதி ஸ்ருஷ்டிக்கப் பட்டதாகச் சொல்லப் பட்டிருப்பதுக்கு வேறாக கீதை அத்—18—ச்லோகத்தில் தமோகுணம் கொஞ்சம் அதிகமான அவஸ்தையில் வைச்ய ஜாதி ஸ்ருஷ்டி என்று பாஷ்யகாரர் அருளிச் செய்திருப்பது வேறு ஸம்ஹிதையை அனுஸரித்தாவது அல்லது குணங்களினுடைய விஷமாவஸ்தையில் தான் ஸ்ருஷ்டி ஸம்பாவிதமென்கிற அபிப்பிராயத்தினாலாவது விருத்தமாகாது.

இந்த விஷயம் கீதை அத். 4—13 ச்லோகம்

“சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ:”

என்கிற ச்லோகத்திலும் சுருங்கச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ச்லோகத்திலிருக்கிற குண சப்தத்திற்கு கீழ்ச் சொல்லப்பட்ட பாத்மஸம்ஹிதை வசனத்தின்படி ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் தான் அர்த்தமாகும். இக்காலத்தில் சிலர் சொல்லுகிறபடி சமம் தமம் முதலிய ஆத்ம குணங்கள் தான் இந்த குண சப்தத்திர்க்கு அர்த்தமென்கிற பக்ஷத்தில் நான்கு ஜாதிகளை ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லுவது பொருந்தாது.

இந்த விஷயம்—ஆச்வமேதிக பர்வத்தில் அனுகீதையில்

தம: ஶூத்ரே ரஜ: க்ஷத்ரே ப்ராஹ்மணே ஸத்த்வமுத்தமம் ।
இத்யேவம் த்ரிஷு வர்ணேஷு விவர்தந்தே குணாஸ்த்ரய: ॥

என்று ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணங்களும் ப்ராம்மண க்ஷத்ரிய சூத்திர ஜாதிகளில் அதிகரித்திக்கின்றன என்று வ்யக்தமாகச் சொல்லப்படுகிறது.



அநுகீதையில்—அர்ஜுநனைக் குறித்து முன்பு யுத்த ஸமயத்தில் சொன்ன விஷயத்தையே தான் இப்பொழுதும் சொல்லுகிறேன் என்று ஸ்ரீ க்ருஷ்ணன் சொல்லுவதால் அதர்க்கு விபரீதமாக சிலர் 2 அத்யாய ச்லோகத்திலும் குணசப்தத்திற்கு வ்யாக்யானம் பண்ணுவது சரியல்ல. ஆகையினால்தான் எல்லா பாஷ்யகாரர்களாலும் இந்த குண சப்தம் ஸத்வாதிகுண பரமாகவே வ்யாக்யானம் பண்ணப்பட்டிருக்கிறது.

இதை ஸ்ரீ தேசிகன் ஸேச்வர மீமாம்ஸை என்கிற கிரந்தத்தில்

“ஶரீராரம்பகத்ரவ்யஸத்த்வாதீநாம் ஸத்த்வாதிகுணாநாம் தாரதம்யவிஶேஷ ஏவ ப்ராஹ்மண்யாதிஜாதி: இதி ஸம்க்ஷேபதோ விபஜ்யதே”...என்றும் “தத: ஸ்ருஷ்டிகாலே தத்தத் கர்மாநுரூப பரிணாமாவஸ்தை: ஸ்வபாவவிஶேஷை: ப்ராஹ்மணாதீந் ஸ்ருஜதி” என்கிற வாக்யங்களினால் நமது தேகத்தை உண்டு பண்ணுகிற பஞ்ச பூதத்ரவ்யங்களிலிருக்கும் ஸத்வ ரஜஸ் தமோகுணங்களுடைய தாரதம்யமே ஜாதி என்றும், அப்படிப்பட்ட குணங்களையுடைய பஞ்ச பூதத்ரவ்யங்களை அந்தந்த ஆத்மாக்கள் பண்ணி இருக்கும் புண்ணியங்களின் தாரதம்யத்தை அனுஸரித்து ஒரு ஆத்மாவுக்கு அதிக ஸத்வகுணமுள்ள ப்ராமணதேகத்தையும் மற்றொரு ஆத்மாவுக்கு அதிக ரஜோகுணமுள்ள க்ஷத்ரிய தேகத்தையும் மற்றொரு ஆத்மாவுக்கு குணத்ரய ஸாம்யமுள்ள வைச்ய தேகத்தையும் மற்றொரு ஆத்மாவுக்கு தமோகுணமதிகமுள்ள சூத்ர தேகத்தையும் ஈச்வரன் கொடுப்பதாக அருளிச் செய்தார். ஆக இங்கு கீழே சொல்லப்பட்ட எல்லா ப்ரமாணங்களினாலும் அதிக ஸத்வ குணமுடைய த்ரவ்யத்தினாலுண்டான தேகம் ப்ராம்மண தேகம் என்றும் அதிக ரஜோகுணமுள்ள த்ரவ்யத்தினாலுண்டான தேகம் க்ஷத்ரிய தேகம் என்றும் குணத்ரய ஸாம்யமுள்ள த்ரவ்யத்தினாலுண்டான தேகம் வைச்ய தேகம் என்றும் அதிக தமோகுணமுள்ள த்ரவ்யத்தினாலுண்டான தேகம் சூத்ர தேகம் என்றும் நிச்சயிக்கப்பட்டதாகிறது.

ப்ராம்மண்யாதி ஜாதி பேதங்கள் தேவைகளிலுமுண்டு.

ப்ருஹதாரண்யகே அத் 3, 4

“ப்ரஹ்ம வா இதமக்ர ஆஸீதேகமேவ ததேகம் ஸந்ந வ்யபவத் । தச்ச்ரேயோரூபமத்யஸ்ருஜத க்ஷத்ரம் யாந்யேதாநி தேவத்ரா க்ஷத்ராணி இந்த்ரோ வருண: ஸோமோ ருத்ர: பர்ஜந்யோ யமோ ம்ருத்யுரீஶாந இதி ।.....ஸ நைவ வ்யபவத் ஸ ஶௌத்ரம் வர்ணமஸ்ருஜத” இதி । தேவத்ரா என்பதற்கு தேவஜாதிக்குள்ளே என்று

பொருள். இந்த ச்ருதியில் தேவத்ரா க்ஷத்ராணி என்று தேவர்களுக்குள் பட்ட க்ஷத்ரிய ஜாதிகளை ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லி அவர்களையும் இந்த வர்ணுதிகளாகக் குறிப்பிட்டுச் சொல்வதாலும் அடுத்த வாக்யத்தில் வைச்யர்களை ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லி அவர்களை வஸுக்கள் ருத்ரர்கள் ஆதித்யர்கள் விச்வதேவர்கள் என்கிற தேவ கூட்டங்களாகச் சொல்லுவதாலும் தேவதாதிகரண ச்ருத ப்ரகாசிகையில் (தேவதைகளுக்குள்) ப்ரஹஸ்பதியை ப்ராமணனென்றும் இந்த்ரனை க்ஷத்ரியன் என்றும் மருத்துக்களை வைச்யர்கள் என்றும் சொல்லி இருப்பதாலும்; பாரதத்தில் சாந்தி பர்வத்தில்—அத்—207

"ஆதித்யா: க்ஷத்ரியாஸ்தேஷாம் விஶஶ்ச மருதஸ்ததா ।
அஶ்விநௌ து ஸ்ம்ருதௌ ஶூத்ரௌ தபஸ்யுக்ரே ஸமாஹிதௌ ।
ஸ்ம்ருதாஸ்த்வங்கிரஸோ தேவா: ப்ராஹ்மணா இதி நிஶ்சய: ।
இத்யேதத் ஸர்வதேவாநாம் சாதுர்வர்ண்யம் ப்ரகீர்திதம் ॥

ஆதித்யர்கள் க்ஷத்ரியர்கள் என்றும் மருத்துக்கள் வைச்யர்கள் என்றும் அச்விநீ தேவதைகள் சூத்ரர்கள் என்றும் அங்கிரஸ்ஸுக்கள் பிராமணர்கள் என்றும் சொல்லி—இப்படி தேவதைகளுக்குள் 4 ஜாதிகள் சொல்லப்படுகிறது என்று எழுதி இருப்பதாலும், தேவர்களுக்குள்ளும் பிராமணுதி பேதங்களுண்டென்பது நிச்சயம்.

ஜ்யோதிஷசாஸ்திரங்களில் நவக்ரகங்களுடைய ஜாதிகளைச் சொல்லுமிடத்தில் குரு சுக்கிரர்கள் பிருமணர்கள் என்றும் சூரியன் அங்காரகன் க்ஷத்ரியர்கள் என்றும், சந்திரன் புதன் வைச்யர்கள் என்றும், ராகு, கேது, சனி, சூத்ரர்கள் என்றும், அனேக விடங்களில் சொல்லப்பட்டிருக்கிறதாலும் இது நிச்சிதமாகிறது. இங்கு காயத்ரீ தேவதையான சூரியனை க்ஷத்ரியனுகச் சொல்லுவதாலும் உக்ரமான தபஸ்ஸிலிருக்கிற அச்வினி தேவர்களை சூத்ரர்களாளாகச் சொல்லுவதாலும் ஜாதி குணத்தினுலுண்டாகிறதல்ல பிறவியினுல் தானுண்டாகிறதென்று தோன்றுகிறது.

இப்படி பிரஸித்தமான வேதங்களிலும் அனேக விடங்களில் பிரம்மதேவன் இந்த நான்கு ஜாதிகளை ஸ்ருஷ்டித்ததாகவே சொல்லப்படுகிறபடியினுலும் ஸ்ருஷ்டி என்கிற சப்தம் தேகத்தின் பிறவியையே சொல்லுகிறது என்றது ப்ரஸித்தமாகையினுலும் ஜாதி என்பது ஜன்மஸித்தமென்று நிச்சயிக்கப்படுகிறது.



யசுர்வேதம் காண்டம் 7—பாஷ்யம்—ப—4241—ல்

ப்ரஜாபதிரகாமயத ப்ரஜாயேயேதி ஸ முகதஸ்த்ரிவ்ருதம் நிரமிமீத—தமக்நிர்தேவதா அந்வஸ்ருஜ்யத காயத்ரீ சந்தோ ரதந்தரம் ஸாம ப்ராஹ்மணோ மநுஷ்யாணாமஜ: பஶூநாம் தஸ்மாத்தே முக்யா: முகதோ ஹ்யஸ்ருஜ்யந்த-ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கவேணுமென்று நினைத்த ப்ரஜாபதியானவர் தன்னுடைய முகத்திலிருந்து முதலில் த்ரிவ்ருத்ஸ்தோமத்தையும் பிறகு தேவதைகளுக்குள் அக்னியையும் பிறகு காயத்ரீ சந்தஸ்ஸையும் பிறகு ரதந்தர ஸாமத்தையும் பிறகு மனுஷியர்களுக்குள் பிராமணனையும் பிறகு பசுக்களுக்குள் ஆட்டையும் ஸ்ருஷ்டித்தார். இவைகள் எல்லாம் முகத்திலிருந்து ஸ்ருஷ்டிக்கப்பட்டபடியினுல் மற்றவைகளைக் காட்டிலும் உயர்ந்தவை ஆகின்றன.

இப்படியே மற்ற மூன்று ஜாதிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டதாக மேலே வ்யக்தமாகச் சொல்லப்படுகிறது.

உரஸோ பாஹுப்யாம் பஞ்சதஶம் நிரமிமீத । தமிந்த்ரோ தேவதா அந்வஸ்ருஜ்யத த்ரிஷ்டுப்சந்தோ ப்ருஹத்ஸாம ராஜந்யோ மநுஷ்யாணாமவி: பஶூநாம் தஸ்மாத்தே வீர்யாவந்த: வீர்யாத்த்யஸ்ருஜ்யந்த ।

(வி. பா.) பிறகு இரண்டாவது ஸ்தானத்திலிருந்து உத்பத்தியை காட்டுகிறது. வீர்யத்தை உடைய கைகளிலிருந்து உண்டானதினுல் அவர்களுக்கு அதிக ஸாமர்த்தியம்.

மத்யதஸ்ஸப்ததஶம் நிரமிமீத தம் விஶ்வேதேவா தேவதா அந்வஸ்ருஜ்யந்த ஜகதீ சந்தோ வைரூபம் ஸாம । வைஶ்யோ மநுஷ்யாணாம் காவ: பஶூநாம் தஸ்மாத்த ஆத்யா அந்நதாநாத்த்யஸ்ருஜ்யந்த ॥

வி—பா—எந்த காரணத்தினுல் பெரிய கூட்டமான விச்வதேவர்களுக்குப் பின் வைச்யர்கள் ஸ்ருஷ்டிக்கப் பட்டார்களோ ஆகையினுல் வாணிஜ்யம் செய்பவர்கள் உலகத்தில் அதிகம். என்று.

பத்த்யாமேகவிம்ஶம் நிரமிமீத தமநுஷ்டுப்சந்தோ அந்வஸ்ருஜ்யத வைராஜம் ஸாம ஶூத்ரோ மநுஷ்யாணாமித்யாதி—

வி—பா—காலிலிருந்து சூத்ரர்கள் ஸ்ருஷ்டிக்கப் பட்டார்கள் என்று சாந்தோக்யத்திலும்

ரமணீய சரணா: அப்யாஶோ ஹ யத்தே ரமணீயாம் யோநிமாபத்யே-ரந் ப்ராஹ்மணயோநிம் வா க்ஷத்ரிய யோநிம் வா வைஶ்யயோநிம் வா

[illegible]

ஸ்வர்க்காதி லோகங்களில் சுகங்களை அனுபவித்துவிட்டு திரும்பி இவ்வுலகத்திற்கு வருகிற ஆத்மாக்கள் புண்ய கர்மாக்களுடனிருந்தால் அதின் பலமாக பிராமண க்ஷத்ரிய வைச்ய ஜாதிகளில் பிறக்கிறார்கள். அவர்கள் பாபகர்மமாக்களுடனிருந்தால் அதின் பலமாக நாய் பன்றி சண்டாள ஜன்மாக்களை அடைகிறார்கள் என்றும் சொல்லுகிறது.

இப்படி பிராமணாதி ஜாதிகள் பிறவியிலேயே உண்டாகின்றன என்பதைக் காட்டக்கூடிய வேதவாக்யங்கள் இங்கு விஸ்தாரமாகுமென்று எழுதப் படவில்லை.

தர்மசாஸ்திரங்களும்—ஜாதிகள் ஜன்மஸித்தங்கள் என்றே சொல்லுகின்றன. மனுஸ்ம்ருதி அத். 10.

[illegible] ।
[illegible] ॥

ஜாதிகளுக்குள்ளும் விதிப்படி விவாஹம் செய்யப்பட்டவர்களாய் தோஷமில்லாத அந்தந்த ஜாதி கன்னிகைகளிடத்தில் அந்தந்த ஜாதி புருஷர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அந்தந்த ஜாதிகள் என்று அறியப்படுகிறார்கள். இங்கு அந்தந்த ஜாதியில் பிறந்தவர்கள் அந்தந்த ஜாதியாகிறார்கள் என்று சொல்வதால் ஜாதி பிறவியினாலுண்டாகிறதென்று தோன்றுகிறது.

ஷை-- அத்—1-- [illegible] ।
இதில் 4. ஜாதிகளும் ஈச்வரனுடைய முகம் கை துடை கால் இந்த இடத்தில் உண்டானதாகச் சொல்லுகிறபடியினால் ஜாதிகள் பிறவியினாலுண்டாகின்றன என்று தோன்றுகிறது.

ஷை 94—[illegible] பிராமண ஜாதியை பிரம்மாவானவர் தவத்தைச் செய்து—முகத்திலிருந்து உண்டாக்கினர். இப்படி மற்றும் அனேக வசனங்கள் 4 ஜாதிகளும் ஆதிகாலத்தில் ஈச்வரனுடைய ஒவ்வொரு அங்கங்களிலிருந்து உண்டானதாகவும், அந்தந்த வம்சத்தில் பிறகு பிறந்தவர்கள் அந்தந்த ஜாதிகள் என்றும் சொல்லுகின்றன.

யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதௌ—
[illegible] ஜாயந்தே ஹி ஸஜாதய:—



அந்தந்த ஜாதி ஸ்திரீகளிடத்தில் அந்தந்த புருஷர்களிடத்திலிருந்து தான் அந்தந்த ஜாதிகள் உண்டாகின்றன.

[illegible] । பிராமண ஸ்த்ரீயிடத்தில் பிராமண புருஷனால் உண்டாக்கப்பட்டவன் பிராமணனாகிறான். அப்படியே க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்களினால் அந்தந்த ஸ்த்ரீகளிடத்தில்—பிறந்தவர்கள் அந்தந்த ஜாதிகளாகிறார்கள்.

[illegible]—ஸமமான ஜாதிகளான ஸ்த்ரீகளிடத்தில் ஸமமான ஜாதிகள் உண்டாகிறார்கள். ஷை—ப்ராயச் சித்தாத்யாயத்தில்,

[illegible] ।
[illegible] ॥

எந்த ஆதிதேவன் என்னால் ஆயிரக் கணக்கான சரீரங்களை உடையவனாகச் சொல்லப்பட்டானோ அவனுடைய முகம் கை துடை கால்களிலிருந்து நான்கு ஜாதிகளும் க்ரமமாக உண்டாயின.

ஔசநஸ ஸ்ம்ருதியில்—

[illegible]—சூத்திரஜாதி புருஷனால் சூத்ர ஜாதி ஸ்த்ரீயிடத்தில் உண்டானவன் சூத்ரனாகிறான்.

கௌதம ஸ்ம்ருதியில்—[illegible] ।

அந்தந்த ஜாதி ஆச்ரமத்திலிருக்குமவர்கள் தங்கள் தங்களுடைய தர்மங்களை அனுஷ்டித்து வந்தால் அவர்கள் இறந்து போன பிறகு புண்ணிய லோகங்களில் சென்று புண்ய பலத்தை அனுபவித்து பாக்கியிருக்கும் கர்மங்களின் பயனாக உயர்ந்த புண்ய க்ஷேத்ரம் ஜாதி குலம் அழகு ஆயுள் ஜனாநம் பணம் தர்ம அனுஷ்டாநம் சுகம் புத்தி சக்தி இவைகளை அடைகிறார்கள்.

இந்த விதமே ஆபஸ்தம்ப தர்ம சாஸ்திரத்திலும் ஜாதியில் பிறப்பது முன் கர்ம பலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹாரீத ஸ்ம்ருதியில்—அத்—1—ல்

𑌯𑌜𑍍𑌞𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌨𑌘𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌮𑍁𑌖𑌤𑍋𑌽𑌸𑍃𑌜𑌤𑍍 ।
𑌅𑌸𑍃𑌜𑌤𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍 𑌬𑌾𑌹𑍍𑌵𑍋𑌃 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌨𑌪𑍍𑌯𑍂𑌰𑍁𑌦𑍇𑌶𑌤𑌃 ।
𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑌾𑌦𑌯𑍋𑌸𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌚𑍈𑌵𑌾𑌨𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ॥
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨𑍈𑌵𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

இதி । பிரம்மாவானவர் யஜ்ஞங்களுடைய ஸித்திக்காகக் முகத்திலிருந்து பிராமணர்களையும் கைகளிலிருந்து க்ஷத்ரியர்களையும் துடைகளிலிருந்து வைச்யர்களையும் கால்களிலிருந்து சூத்ரர்களையும் ஸ்ருஷ்டித்தார்.

ப்ராம்மண ஸ்த்ரீயினிடத்தில் பிராமணனுக்குப் பிறந்தவன் பிராமணனாகிறான்—

இப்படி மற்றும் அனேக ஸம்ருகளிலும் பாரதாதி இதிகாஸங்களிலும் பிராமண்யாதி நான்கு ஜாதிகளும் பிறவியினாலேயே உண்டாகின்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறன.

இதனால் சமம் தமம் முதலிய ஆத்ம குணங்களினால் ஜாதி ஸித்திக்கிறதென்று சொல்லப்பட்டதாகிறது.

(தொடரும்)

---

# அஹிம்ஸா தர்மம்

[ஓர் பரமை காந்தி பக்ஷபாதி].

(1) மேற்குறித்த விஷயத்தைக் குறித்து சில காலமாய் ச்ருதி ஸ்மிருதி. சிஷ்டா சாரங்களில் விவாதங்கள் ஏற்பட்டு தீபிகையிலும் கட்சி ப்ரதி கட்சிகளுடன் வ்யாசங்கள் ப்ரசுரப்படுத்தி வந்திருப்பது அனைவருக்கும் ஞாபகம் இருக்ககூடும். இது விஷயத்தில் கட்க்ஷி ப்ரதி கட்க்ஷிகள் உண்டானது ஆச்சரியமில்லை. விவாதங்களும் விமர்சங்களும் ஏர்பட்டால் தான் விஷய விவேசனம் உண்டாகி தத்வத்தை அறியக்கூடும். ஆனால் இது விஷயத்தில் அடியேன் சிற்றறிவில் இவ்வளவு சச்சரவு அனவச்யம் என்று தோன்றுகிறது. ஏனெனில் பகவத் ராமானுஜதர்சனமானது ச்ருதியை அனுசரித்திருந்த போதிலும் ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கும் யாவற்றையும் அனுஷ்டானத்துக்கு அவச்யம் என்று கைக்கொண்டதன்று. பூர்வ காலத்தில் ப்ராமணர்களும் மாம்சபுக்குகளாய் இருந்தார் என்றால் அனேக காரணங்களால் மதா



பிப்ராயங்களும் மாறி ம்மாம்ச போஜனம் வர்ஜ்யமானால் அது ச்ருதிக்கு விரோதமென்று சொல்லக்கூடுமோ? த்ரைகுண்யவிஷயா: வேதா:, யாவானர்த்த உதபானே என்கிற கீதா வாக்யங்களுக்கு அபிப்பிராயந் தான்யாதோ? இதை எல்லாம் யோசிக்கும் பொழுது ச்ருதிஸ்மிருதியாவற்றும் ப்ரமாணம் என்று ஒப்புக்கொள்ளுவது ப்ரமாணமாயிருந்தாலும் அவச்யம் அனுஷ்டேய மாகாது. பிற்காலம் நமது தர்சனத்தில் அதிகாரிகளாயும் ஆசார்யர்களாயும் ஏர்பட்டுள்ள மகான்களுடைய தர்சனமே நமது தர்சனமாதலால் ப்ரபன்ன ஜனங்களென்றும் பரமை காந்திகளென்றும் ப்ரசித்தி பெற்ற ஸ்ரீ வைஷ்ணவர்களான முமுக்ஷுக்களில் ஆசார அனுஷ்டான விஷயத்தில் சிறிது சந்தேகத்துக் கூட இடமில்லை என்று தோன்றுகிறது. (ஸ்ரீ)

வேதாந்த தீபிகை முன் ஸஞ்சிகையில் யாகத்தில் ஸாக்ஷாத் பசுஹிம்ஸையே செய்யத்தக்கதென்றும் பிஷ்டபசுவிதி உபரிசரவஸு ஒருவனுக்கே ஏற்பட்டதென்றும் நிரூபிக்கப்பட்டது. இவ் விஷயத்தில் ச்ருதி ஸ்மிருதிகளும் ஸ்ரீ வைஷ்ணவ தர்ம சாஸ்திரங்களும் நிற்கும் நிலையை வெளிப்படுத்துவதற்குத் தக்க சந்தர்ப்பம் வாய்ந்திருப்பதால் சொல்ல வேண்டிய விஷயத்தை சொல்லாமல் இருக்க முடியவில்லை. நாம், ப்ரமாணமாக ஒப்புக்கொண்ட சாஸ்திரங்களில் ஒன்றோடொன்று முரண்டு நிற்பதாய் காணப்படும் பாகங்களை கூடியவரை ஸமரஸப்படுத்த வேண்டியது அவச்யம். ஸர்வதா ஸமரஸப்படுத்த முடியாதவற்றை வைகல்பிகமாகவோ அதிகாரி விசேஷ நியதமாகவோ, நயநம் செய்வது சாஸ்திரக்காரரின் வழி. இங்கு பரமை காந்திகளுக்கு அஸாதாரணமான ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்திரத்தை தூரத்தில் வைத்தே பேசுவோம். ஸர்வ சாதாரணமான மநுஸ்மிருதியையே எடுத்துக் கொண்டாலும் "பிஷ்டபசுவும் ஸாக்ஷாத் பசுவும் இரண்டும் காணப்படுகின்றன. மநு நான்காவது அத்யாயம் 37வது ச்லோகம் "குர்யாத் பிஷ்டபசும் ஸங்கே" என்ற ச்லோகத்தில், கேவலம் ஆத்மார்த்தமாய் சிற்சில பலத்தைக் கருதி யாகத்தில் பசுஹிம்ஸை செய்யக்கூடாது. பிஷ்டத்தாலோ க்ருதத்தாலோ பசுவைச் செய்து கொள்ளவேணும். என்று கூறப்பட்டது. அதே அத்யாயம் 39வது ச்லோகத்தில் யாகத்திற்காகவே பசுக்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன, யாகத்தில் பசுக்களை வதைப்பது வதையாகாது, என்றும் கூறபபட்டது. முன் கூறிய விதியில் உபரிசர வஸுவுக்கென்றாவது மற்ற வ்யக்தி விசேஷத்திற்கென்றாவது குறிக்கவில்லை. அந்த விதியும் ஸர்வஸாதாரணமாகவே காணப்படுகிறது இதன் தத்துவ மென்னவென்றால் காம்ய பலார்த்தியானவன் பிஷ்டபசு யாகத்திற்கு அதிகாரியாகான். காம்ய பலமும், அதற்கு உபாயமான ஹிம்ஸாயாகமும் வேதவிஹிதங்களே அவனுக்கு யாகத்தில் பசு ஹிம்ஸையில் பாபம் அணுவேனும் இல்லை என்பதை ஆசார்யர் அனைவரும் அறுதியிட்டார்கள். ஆனால் ஸாக்ஷாத் மோக்ஷோபாய நிஷ்டனான வதி

காரிக்கு ஹிம்ஸாயாகத்தில் அதிகாரமில்லை. அஹிம்ஸா யஜ்ஞத்திலும் ஜப யஜ்ஞம் முதலியவற்றிலும் தான் அதிகாரம் என்பதை ஸ்வாமி தேசிகன் 'யஜ்ஞாநாம் ஜப யஜ்ஞோஸ்மி என்ற கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் வெகு தெளிவாக நிரூபித்திருப்பதை வித்வான்கள் கவனிக்க வேண்டுகிறேன். உபரிசரவஸு ஒருவனே அப்படிப்பட்ட அதிகாரி என்பதை ஸ்ரீ தேசிகன் ஒப்பவில்லை.

**वचनबलात् अहिंसात्मकयज्ञानर्हाणां हिंसात्मकयज्ञानुष्ठानम्** என்று தொடங்கி தாத்பர்ய சந்திரிகையில் அமுமுக்ஷுக்களான ஸகாமாதிகாரிகளுக்கு ஹிம்ஸாயாகத்திலேயே அதிகாரம் என்றும், அதனால் அவர்களுக்கு ப்ரத்தியவாயமில்லை. ஏனெனில் சாஸ்திரவிதியின் பேரில் ப்ரவர்த்திப்பதாலும், அவர்களுக்கு ஒரு ஜந்துவுக்கு ஹிம்ஸை உண்டாக்க வேணும் என்ற எண்ணமில்லாததாலும் ஹிம்ஸிக்கப்படும் ஜந்துவுக்கு உபகாரம் உண்டாவதாக ச்ருதி சொல்லுவதாலும் அதனால் தேவதைகளுக்கு திருப்தி உண்டாவதாலும் என்றும் சொல்லி ஆனால் சுவர்க்காதி பலத்தை விரும்புமவர்க்கு அந்த பலம், அல்பம், அஸ்திரம், துக்கம் கலந்தது, என்றும், அஹிம்ஸா ரூபமான யஜ்ஞம் விலக்ஷணாதிகாரிகளுக்கு உரியது. பகவானுக்கு அத்யந்தம் ப்ரீதிகரமானதால் மோக்ஷத்திற்கு ப்ரத்யாஸந்நம் அதாவது ஸமீபமானதென்றும், கூறப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளத்தை அடியொற்றிப் பார்த்தால் ஹிம்ஸாத்மகமான யஜ்ஞத்தில் அதிகாரியாவது ச்ரம ஸாத்யம். அதில் நேரக்கூடியதான ஹிம்ஸாதோஷத்திற்குப் பரிஹாரம் சொல்லுவதற்காக சாஸ்திரங்களையும் யுக்திகளையும் பலவாறாய்த் தேட வேண்டியக்லேசம் உண்டென்றும் அஹிம்ஸாத்மகமான யஜ்ஞத்தில் அவ்வித க்லேசம் இல்லை என்றும், உபரிசரன் முதலான பலர் இதற்கு அநுஷ்டாதாக்கள் என்றும் நன்கு விளங்கும். இதில் ஸந்தேகமுண்டாக இடமே இல்லை. ஸ்ரீ பகவச் சாஸ்திர சித்தாந்தம் நம்முடைய ஆசார்யர்களுக்கு அநபிமதம் என்று சொல்லுவதை இப்போதான் புதிதாய் கேட்கிறோம். இதுவும் ஒரு ஆச்சர்யமே.

## ஸ்ரீ பகவச் சாஸ்திர சித்தாந்தம் ம்றைதல்

ஒரு சிந்தாந்தம் மறைதலும் தோன்றுவதும் விசித்ரமாயும் அநாதியுமான காலப்ரவாஹத்திற்கு ஒற்றதேயாகும். பகவத் கீதையில் கூறப்பட்ட யோகம் மறைந்து திரும்பவும் தோன்றவில்லையா? நமது நாதமுனி முதலியவர்களால் புநருத்தாரணம் செய்யப்பட்ட இந்த பகவச் சாஸ்திர சித்தாந்தத்திற்கு எப்படி குறை சொல்லமுடியும்? ஒன்றுக்கொன்று ஒவ்வாத



பல தர்மங்கள் சாஸ்திரோக்தமானால் அவற்றில் ஒன்றில் அதிகாரியாவதற்கு நம்முடைய இச்சை தவிர வேறு ப்ரமாணம் உண்டோ? ஒரு தர்மத்தை அநுஷ்டிக்கையில் அதற்கு விரோதமான மற்றொரு தர்மத்தை அநுஷ்டிக்காததால் தோஷமுண்டென்று சொல்லுவது ந்யாய்யமாகுமோ? நாம் த்ரயீ தர்ம நிஷ்டாள், பஞ்சராத்திர நிஷ்டாள் அல்ல என்று சொல்லிக்கொண்டு, சிவராத்திரி, விநாயக சதுர்த்தி—ரிஷிபஞ்சமி, நவராத்திரி தேவீ பூஜை முதலிய விருதங்களை விடலாமா? அவை நித்யமென்றும், அகரணே ப்ரத்யவாயாவஹம் என்றும் கூறப்படவில்லையா? இதற்கு நம்முடைய விலக்ஷணாதிகாரம் தவிர வேறு ஆதாரம் என்ன சொல்ல முடியும்?

ஆகையால் ஸாமாந்யாதிகாரிகளுக்கும் விலக்ஷணாதிகாரிகளுக்கும் தனித்தனியே ஏற்பட்ட சாஸ்திர வ்யவஸ்தையை குலைப்பது அஸஹ்யாபசாரமாகும். பிஷ்டபசு விஷயம் வேதத்தில் இல்லை என்று கூறப்படுகிறது. இங்குதான் உப ப்ரும்ஹணங்களுக்கு கார்யம். பசுநாயஜேத, அக்நீஷோமீயம் பசுமாலபேத, முதலிய விதிகளில் காணப்படும் பசு என்னும் பதத்தை ஸ்மிருதிகள் ஸாக்ஷாத் பசு விஷயமாயும், பிஷ்டபசு விஷயமாகவும், அதிகாரி பேதேந வ்யவஸ்தை செய்கின்றன. ஆக்நேயோஷ்டாகபால:" இத்யாதி மந்திரங்களில் அக்நி சப்தத்தை அந்தர்யாமி பரமாக நாம் சொல்லுவது எப்படி? ச்ருதியில் இதற்கு ப்ரமாணம் உண்டா? ஸ்மிருதியைக் கொண்டு தானே நிர்ணயிக்க வேணும், அதுபோல் இங்கும் ச்ரௌதமான பசு சப்தத்தை பிஷ்டபசுவிஷயமாக நயநம் செய்வது உசிதமே.

கார்த்தயுகதர்மம் என்றும் பதத்திற்கு கிருத யுகத்திற்கு மாத்திரம் உரியதாகிய தர்மம் என்று பொருள் கொள்வதாகத் தோன்றுகிறது. அது உசிதமல்ல. கிருத யுகத்தில் விசேஷமாய் வழங்கி வந்த விலக்ஷண தர்மங்கள் என்று அர்த்தம் கொள்வது மிகவும் உசிதமானது. ஸ்ரீ தேசிகன் இந்த பதத்தை எந்தெந்த விடங்களில் உபயோகப்படுத்தி இருக்கிறாரோ அந்த விடங்களை ஆராய்ந்து பார்த்தால் மேற்சொன்னது நன்கு விளங்கும்.

விரிவுக்கஞ்சி நின்றது.

# “மணி வண்ணன்”

(ஆரியூர் வ. பத்மநாப ராமானுஜ தாஸன்)

மலர் மகள் விரும்பும் நம் அரும் பெறல் அடிகள் ஆகிய திருநாராயணனுக்கு, அப் பெருமானது மெய்யடியார்கள் சூட்டிப் போற்றியுள்ள திருப்பெயர்கள் பற்பல. ‘ஆயிரம் பெயரால் அமரர் சென்றிறைஞ்ச அறிதுயில் அலைகடல் நடுவே—ஆயிரம் சுடர்வாய் அரவணைத் துயின்ற’ தனிமுதற் பரம்பொருளாகிய எம்பெருமானது கல்யாண குணங்கள் பலவற்றை, அவனது திருநாமங்கள் இனிது உணர்த்தி நிற்கின்றன. அத் திருநாமங்கள் பலவற்றிலும் பெரிதும் சிறந்து விளங்குவன, அப் பெருமானால் ‘மயர்வற மதிநலம் அருள’ப் பெற்ற ஆழ்வார்கள் சூட்டிய தனித் தமிழ்த் திருப்பெயர்கள். அத்தகைய திருப்பெயர்களில் ஒன்றாகிய ‘மணி வண்ணன்’ என்பது, அப் பெருமானது ஸௌந்தர்ய விசேஷத்தையும் ஸௌலப்ய விசேஷத்தையும் வெகு அழகாக உணர்த்துவதாக விளங்குகிறது. பகவத் கல்யாண குணக்கடலிலே படிந்து குடைந்தாடிய பரம பக்த சிகாமணிகளாகிய ஆழ்வார்கள், அம் ‘மணி வண்ணன்’ என்ற திருப்பெயரை—எத்தகைய் சந்தர்ப்பங்களில்—எவ்வளவு ஈடுபட்டுப் பேசியிருக்கிறார்களென்பதை ஒருவாறு ஆராய முயல்வதே, இக்கட்டுரையின் நோக்கம்.

‘மணி’—என்னும் சொல்லுக்கு, நீலமணி—அழகு—கருமை முத்து—இரத்தினம்—நன்மை—அடிக்கும் மணி என்று பல பொருள்கள் உண்டு. ‘வண்ணம்’—என்னும் சொல்லுக்கு, தன்மை—குணம்—நிறம்—வடிவு—அழகு—செயல் முதலிய பல பொருள்கள் உண்டு. எனினும், ‘மணி’ என்னும் சொல்லுக்கு ‘நீலமணி’ எனும் பொருளும், ‘வண்ணம்’ எனும் சொல்லுக்கு ‘குணம்’ ‘நிறம்’ ‘வடிவு’ ‘அழகு’ முதலிய பொருள்களுமே இங்கு எடுத்துக்கொள்ளத் தகுந்தனவாகும். நவமணிகளுள் பெரிதும் சிறந்து விளங்கும் நீலமணியைப் போன்று, நிறத்திலும் குணத்திலும் ஒளியிலும் வடிவிலும் அழகிலும் பெரிதும் சிறந்து விளங்குபவன் எம்பெருமானென்பது ஆழ்வார்களின் திருவுள்ளம். எம்பெருமானது ஸௌந்தர்ய விசேஷத்தையும் ஸௌலப்ய விசேஷத்தையும் வியந்து போற்றவேண்டி வரும் இடங்களில், ‘மணிவண்ணன்’ எனும் திருப்பெயரை வாய் குளிர—மனம் குளிரப் பாடியிருக்கிறார்கள் நமது ஆழ்வார்கள். அத் திருப்பெயரைக் கூறும்பொழுதே, ஆழ்வார்களின் திருவுள்



ளத்தை எம்பெருமானது ஸௌந்தர்யமும் ஸௌலப்யமும் பெரிதும் உருக்கி விட்டிருக்கின்றன. அத் திருப்பெயர், இன்னும் மெய்யன்பர்களின் உள்ளத்தை உருக்குவதற்கும் குளிர்விப்பதற்கும் ஒருங்கே காரணமாக விளங்குகிறது.

நவமணிகளுள் சிறந்த நீல மணி ஒன்றை வைத்துக் கொண்டிருக்கக் கூடிய பொருட்செல்வம் மிகுந்த ஒருவனிடம், அவனது அன்பையும் உதவியையும் பெறக் கருதி பலர் வந்து பணிந்து நிற்பது உலக இயல்பு. விலை மதிப்பிட முடியாத ஒப்புயர்வற்ற அற்புதத் திருவாபரணமாகிய ஐந்து பெரிய நீலமணிகளால் அமைந்த நீல நாயகத்தைத் தமது திருமார்பில் அணிந்துகொண்டிருக்கும் என்றும் குன்றாத தனிப்பெரும் அருட்செல்வரான திருவரங்கச் செல்வனாரிடம், இன்றும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் சென்று ஏத்திப் போற்றி வழிபட்டு வருவது பலரும் அறிந்ததே. ஒரு பொருள் எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், அது எளிதில் கையாளப்படக் கூடியதாக இல்லாவிட்டால், அதன் சிறப்பு பெரிதும் பயன்படுவதில்லை. அதுபோல், கருணைக் கடலாகிய எம்பெருமான், ‘குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர்’ பரம்பொருளாக மட்டும் இருந்திருப்பின், ‘மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து’ இவ்விருள் தருமாஞாலத்தில் இருவினைகளால் கட்டுண்டு உழலும் ஸம்ஸாரிகளாகிய சேதனர்களால் அநுபவிக்கப்படுவதற்குப் பெரிதும் அரியனாய் விட்டிருப்பான். அவ்வாறாகாமல், தனது கல்யாண குணங்களை அனைவர்க்கும் இனிது உணர்த்தி உய்வித்தருளவேண்டுமென்னும் கைம்மாறு கருதாத தனிப்பெருங் கருணைப் பெருக்கினாலேயே, அப்பெருமான் ராம கிருஷ்ணாதி அவதாரங்களால் தனது ஸௌலப்ய விசேஷத்தை உலகுக்கு உணர்த்தவேண்டி நேர்ந்தது. ‘அந்தமில் பேரின்ப’ப் பெருவீடாகிய திருநாட்டிலே, பற்றற்ற நெஞ்சினராகிய நித்ய ஸூரிகளும் முக்தர்களும் தொழுதேத்த, என்றும் குன்றாத பேரழகுக்கு இருப்பிடங்களாகிய பிராட்டிமார் மூவரின் திருக்கண்களுக்கும் என்றும் திகட்டாப் பெருவிருந்தாகக் குளிர் சுடர் பரப்பி விளங்கிய எம்பெருமானாகிய நீல மணி, இடையர் சேரியிலும் பிறந்து ‘கண்ணிக் குறுங் கயிற்றால் கட்டுண்டு’ ‘உரலினோடு இணைந்து இருந்து ஏங்கி’ ஆயர் குலமணியாய் வளர்ந்த எளிமையைச் சிந்திக்கும்போது, எவர் மனந்தான் உருகாது?

மணிவணிகன் ஒருவனிடம் மற்ற மணிகளிலும் சிறந்த நீலமணியொன்று இருக்குமானால், அவன் தன்னிடமுள்ள அந்த சீரிய நீலமணியைக் குறித்துப் பெரிதும் செருக்கடைவது இயல்பு. அவ்வாறே, அஞ்ஞானப் பேரிருள் மிகுந்து பல வழிகளிலும் மயங்கிக் கிடக்கும் ஸம்ஸாரி

கள் நிறைந்த இப் பூவுலகிலே, முன்பு என்றுமில்லாத இணையற்ற ஞானப்பேரொளி வீசித் தனது திருவருட்சுடரை எங்கும் பரப்பிய நம்மாழ்வாராகிய நீல மணியை என்றென்றும் தமது திருவடிகளை விட்டுப் பிரியாதவாறு பாதுகை வடிவில் சந்நிதிகள் தோறும் கொண்டிருக்கும் எம்பெருமான், இன்றும் தனது வீர ஞானச் செருக்கு முழுவதும் தோன்ற அர்ச்சாவதாரத் திருமேனியுடன் அன்பர்களுக்கு சேவை சாதித்தருள்கிறான். எத்தகைய குற்றமுமின்றிப் பலவகைப்பட்ட லட்சணங்களும் பொருந்திய சிறந்ததொரு நீல மணியை ஒருவர் வாங்க விரும்பினால், அதன் லட்சணங்கள் அனைத்தையும் தெளிவாக உணர்ந்த தாகர் ஒருவரின் துணைகொண்டு வாங்குவதே சிறப்பு. அவ்வாறே, எம்பெருமானாகிய நீல மணியை அடையவேண்டுமானால், அந்த எம்பெருமானது கல்யாண குணங்களை ஐயந்திரிபற விளக்கிக் காட்டக் கூடிய ஞானாசிரியர் ஒருவரின் திருவருள் துணையை நாடவேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது. அணி வடிவில் அமைந்துள்ள நீலமணி, உடலின் வெளியங்கங்களை மட்டுமே அலங்கரிக்கக்கூடும்; எம்பெருமானாகிய நீலமணியோ, மற்ற எந்த மணியாலும் அலங்கரிக்கப்பட முடியாத அன்பர்களின் ஹ்ருதயம்—நாக்கு பேச்சு—பாட்டு முதலியவற்றையும் இனிது அலங்கரிக்கக்கூடிய அற்புதத் திருமணியாகும். சாதாரண நீலமணி எல்லோரது கண்களையும் கருத்தையும் ஒருங்கே குளிர்வித்து மகிழ்வூட்டுவதாக இருப்பினும், அதன் மதிப்பு எத்தகையதென்பதை உள்ளபடி உணர்ந்த மணிவணிகனின் கண்களுக்கே அது ஒப்புயர்வற்ற மஹத்தான ஆனந்தத்தை அளிக்கக் கூடியதாகும். அவ்வாறே, திவ்ய தேசங்கள் தோறும் ஸௌலப்யத்தின் எல்லை நிலமான அர்ச்சாவதாரத் திருமேனியுடன் சேவை சாதித்தருளும் எம்பெருமான் எல்லோர் கண்களுக்கும் இன் பூட்டுபவனாக இருந்தாலும், ஆழ்வார்களின் அருட்பாசுரங்களை ஓதி உணர்ந்து உட்பொருள் தெளிவது அவ்வெம்பெருமானது பேரழகையும் பேரருட்குணங்களையும் ‘அடியவர்க்கு எளியவ’னாயிருக்கும் கைம்மாறு கருதாத தனிப் பெருங்கருணைப் பெருக்கையும் ‘நினைந்து நைந்து உள் கரைந்து உருகி’ நிற்கும் மெய்யடியவர்களின் கண்களுக்கும் கருத்துக்குமே வர்ணிக்க முடியாத மஹத்தான ஆனந்தத்தை அளிப்பவனாக விளங்குகிறான்.

‘வாரணமேல் மதுரை வலம் வரவே வானில், மால் கருடவாகனனாய்த் தோன்ற’—யானைக் கழுத்தின் மேற்கிடந்த மணிகளையே தாளங்களாகக் கொண்டு மங்களாசாசனம் செய்தருளிய பெரியாழ்வாரின் திருவுள்ளத்தை, முதன் முதலில் கவர்ந்துகொண்டு குளிர்வித்து உருக்கி அவரது திருவாயினின்றும் முதல் முதலில் வெளிப்பட்ட அருமைத் திருநாமம் ‘மணிவண்ணன்’ எனும் திருநாமமே. ‘எல்லாப் பாட்டுக்கும் இதுதான்



முகவுரை போலே இருக்கிறது’—என்று பெரியவாச்சான்பிள்ளை அருளியதற்கிணங்க, திவ்ய ப்ரபந்தாநு ஸந்தானத்திற்கு முன்பு அநுஸந்திக்கப்படவேண்டியிருக்கும் ப்ரதம ப்ரபந்தமாய்—ஸம்ஸ்க்ருத வேத பாராயணத்திற்கு முன்பு ஓதப்படும் ப்ரணவம் போல் தமிழ்மறைகளை ஸேவிப்பதற்கு முன்பு ஓதப்படவேண்டிய ‘உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்த் தான் மங்கள’மான மங்களாசாசன ப்ரபந்தமான திருப்பல்லாண்டின் முதற் பாசுரத்திலே, ‘மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம்—உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு”—என்று எம்பெருமானைப் ‘பொங்கும் பரிவாலே’ வாழ்த்தி நின்றார், புதுவையர் கோனாகிய பட்டர்பிரான். “அதி ரமணீயமாய் அத்யுஜ்வலமாய் அதி ஸுகுமாரமாய் அதி ஸுலபமாயிருந்துள்ள வடிவைக் கொண்டு முரட்டு அஸுரர்களுடைய ஸகாசத்திலே செல்லுவதே!”

“ஸ்ரீ யளவநொந்ஸவீஹெித ஸுகுமார தநுஹஸிஃ ।
ஸ்ரீ வஜ்ர கடிநாஹொம ஶரீரொயம் ஓஹாஸுரஃ ॥

—என்று வெண்ணெய் அமுது செய்து வளர்த்த சிறுபிள்ளையை, முரட்டு வடிவை உடைய மல்லரோடே ஒக்கப் பொர விடுவதே! நீ தான் உன்னைக் கண்ணாடிப் புறத்திலே கண்டால், ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான நீயும் கலங்கிப் பரியவேண்டுமன்றோ உன் வடிவிருப்பது!”—என்பது வ்யாக்யான ஸ்ரீஸூக்தி. ஜகன் மோஹன சக்தியால் பக்தர்களின் ஹ்ருதயத்தைக் கவர்ந்து மயக்கி மற்றவனைத்தையும் மறப்பித்து இன்பக்கடலில் படிந்து குடைந்தாடச் செய்விக்கும் வடிவழகின் சிறப்பையும், உற்றுப் பார்க்கப் பார்க்கக் கண்களைக் கூசச் செய்வதாக அல்லாமல் கண்களையும் நெஞ்சையும் ஒருங்கே குளிர்விக்கும் குளிரொளியின் அற்புதத்தையும், என்றும் குன்றாமல் பெரிதுப் சிறந்து விளங்கும் நித்ய யௌவன ஸௌந்தர்யத்தின் அதிசயத்தையும், நள்ளிருளில் வெஞ்சிறையில் பிறந்து—நந்தன் மனையை அடைந்து—இடையர்களுடன் கலந்துறவாடி—அன்னையாகிய யசோதை ஊரார்களெல்லாம் காண உரலோடே தீரா வெகுளியளாய்ச் சிக்கென ஆர்த்து அடிப்ப’ ‘தறியார்ந்த கருங்களிறே போல நின்று தடங்கண்கள் பனி மல்க’ ஏங்கியிருந்து—‘உடையும் கடியன ஊன்று வெம்பரர்களுடை கடிய வெங்கானிடைக் காலடி நோவச் சென்று’ ‘கானகமெங்கும் கரிய திருமேனி வாடத் திரிந்து’—‘சாருடனே முனிவர்களும் சுருதி நான்கும் தேடுகின்ற பதம் சிவப்பத் திருநாடு பெறத் தூது’ நடந்து சென்று—‘கையும் உழவுகோலும் பிடித்த சிறுவாய்க் கயிறும் ஸேநாதூளி தூஸரிதமான திருக்குழலும் தேருக்குக் கீழே நாற்றின திருவடி’களும் கொண்டு பார்த்தனது திருத்தேரை நடத்தி ‘பார்த்த ஸாரதி’ எனும் திருநாமத்

தைப் பெற்று நின்ற அஸாதாரண ஸௌலப்ய விசேஷத்தையும் மணி வண்ணன்—என்ற அழகிய திருப்பெயர், எவ்வளவு அழகாக உணர்த்து கிறது!

திருமாலிருஞ்சோலைமலை அழகப்பிரானுரைத் துதித்து நின்றபோது, “மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா!”—என்று அழைக்கிறார் நமது பெரியாழ்வார். எம்பெருமானாகிய மணிவண்ணன், “மருந்தும் பொருளும் அமுதமும் தானே”! அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே”; “மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கென்று—பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான்”—என்ற அருளிச் செயல்களுக்கிணங்க, தனக்குத் தானே நிகரான சிறந்த மருந்தாகவும் பிறவிக் கொடும்பிணியை நீக்கக் கூடிய சீரிய மருத்துவனாகவும் விளங்குகின்றான். இணையற்ற மருத்துவனாக விளங்கும் மணிவண்ணனைச் சரணாகதி அடைவோமாயின், அம் மருத்துவத் தனித்தலைவன் நமது பாவப்பிணிகளனைத்தையும் தீர்த்தருள்வானென்பது திண்ணம்.

“மேருமந்தரமாத்ரோऽபி ராஶி: பாபஸ்ய கர்மண: ।
கேஶவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நஶ்யதி ॥

என்பது இங்கு கவனித்தற்கு உரியது.

‘மணி’—என்பதைச் செம்மணியாகிய இரத்தினமாகக் கொண்டு, இரத்தினத்தை யொத்துச் செக்கச் செவேலென்று சிவந்து விளங்கும் செங்கனிவாயிதழ்களுடைய செல்வனென்றும் பொருள் கொள்வதுண்டு. ‘அரங்கனுர்க்குத் துழாய் மாலை முடி சூடிக் கொடுத்த’ வில்லிபுத்தூர்ச் செல்வியாகிய கோதை நாயகி திருவாய்மலர்ந்தருளிய திருப்பாவையின் பதினாறாம் பாசுரத்தின் ஐந்தாம் அடியாகிய “மாயன் மணிவண்ணன் நென்னலேவாய் நேர்ந்தான்”—என்பதற்கு, “தாழ நில்லாவிடிலும் விடவொண்ணாத வடிவழகு; பூ அலர்ந்தபோல வார்த்தை சொல்லுகிறபோதை ஓஷ்ட ஸ்புரணம் (திருவாயிதழ்களின் செவ்வொளி) என்னவுமாம்”—என்று பொருள் கண்டார் பெரியவாச்சான் பிள்ளை. இருபத்தாறுவது திருப்பாசுரத்தின் முதலடியிலுள்ள ‘மணிவண்ணா!’—என்ற ஸம்போதனத்திற்கு, “அபரிச்சேத்யனாய் இருக்கச் செய்தேயும், முன்தானையிலே முடிந்து ஆளலாம்படியிருக்கை. கீழ்ச்சொன்ன வ்யாமோஹம், வடிவிலே நிழலிடுகை. இந் நீர்மையின்றிக்கே, காதுகனாலும் விடவொண்ணாத வடிவழகு. பெண்கள் பிச்சுக்கு நிதானமான வடிவென்னவுமாம்”—என்று அவர் கூறியுள்ள அரிய உரையின் அழகு, ஆழ்ந்து சிந்தித்து அனுபவித்தற்கு உரியது.



‘அங்கை ஆழி அரங்கன் அடியிணை தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்த’ராகிய குலசேகரப் பெருமாள், தாம் அருளிய ‘முகுந்தமாலை’யில் எம்பெருமானை இணையற்றதொரு தனிப்பெரும் மணியாகவே வர்ணிக்கிறார்.—

“பக்தாபாய புஜங்க காருடமணி: த்ரைலோக்ய ரக்ஷாமணி:
கோபீலோசன சாதகாம்புதமணி: ஸௌந்தர்ய முத்ராமணி: ।
ய: காந்தாமணி ருக்மிணீ கனகுசத்வந்த்வைக பூஷாமணி:
ஶ்ரேயோ தேவ ஶிகாமணிர் திஶது நோ கோபால சூடாமணி: ॥

மங்கையர் நெஞ்சை மயக்கும் செங்கனிவாய்ச் செல்வனாகிய மணிவண்ணன், தனது மெய்யன்பர்களைப் பயமுறுத்தும் கோரதுக்கங்களாகிய பாம்புகளுக்கு வீர கருட மணியாகவும்; மூவுலகங்களுக்கும் ஒளியளித்து எல்லா உயிர்களையும் வாழ்வித்தருளும் தனிப்பெருந் தலைமணியாகவும்; ஆய்ச்சியரின்-நீலவிழிகளாகிற சாதகப்பறவைகளுக்கு அருள் மழை பொழியும் கருமுகில் மணியாகவும்; புருஷோத்தமன்’ எனும் திருப்பெயரை தனக்கே உரிய் தனிப்பெருஞ் சிறப்புப் பெயராகக் கொண்டு, ஸர்வாவயவ ஸௌந்தர்ய லக்ஷணங்களும் பொருந்தியிருப்பது தன்னொருவனிடத்திலேயே என்பதை உணர்த்த ‘அழகிய மணவாளன்’—எனும் அழகு முத்திரையிட்ட திருப்பெயர் கொண்ட எழில் மணியாகவும்; மங்கையர் மணியாகிய ருக்மணிப் பிராட்டியாரின் கொங்கைகளுக்கிடையில் கிடந்த சிங்காரச் செல்வமணியாகவும்; தனது பரத்வத்தின் சிறப்பை விளக்க, அமரர்களின் முடிகளை அலங்கரித்தருளும் அடிகளையுடைய ஸர்வலோக நாயகமணியாகவும்; தனது ஸௌலப்யப் பெருக்கை இனிது உணர்த்த, ஆயர்களுக்கு எளியவனாய் அவர்களுடன் கலந்து உறவாடிய ஆயர் குலமணியாகவும் விளங்குபவனென்பதை, குலசேகரப் பெருமாள் எவ்வளவு அழகாக வர்ணித்திருக்கிறார். பாருங்கள்!

“தந்தை என நின்ற தனித் திருமால் தாளில் தலை வைத்தோம் சடகோபன் அருளாலே”—என்று ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம் குளிர்ந்து பேச நின்ற நம்மாழ்வார் அருளிய ஸாமவேத ஸாரமான திருவாய்மொழியிலே, ‘மணிவண்ணன்’—என்ற திருப்பெயரை பலவிடங்களிலும் காணலாம். “வானோர் சோதி மணிவண்ணா! மதுசூதா! நீ அருளாய்!” 1—எனுமிடத்தில், “குப்பியில் மாணிக்கம்போல, த்ரிபாத் விபூதியிலும் அடங்காதே விம்மும்படியாயிற்று—வடிவில் புகர் இருப்பது” என்றும்; “வைகுந்தா! மணிவண்ணனே! என்பொல்லாத் திருக்குறளா!” 2—என்

1—1-ப; 5-தி; 5-பா; 3-அ; 2—2-ப; 6-தி; 1-பா; 1-அ.

னும் இடத்தில், (மணிவண்ணனே !') அணைத்த போதை ஸ்பர்சத்தாலே திமிர்த்துச் சொல்லுகிறார், 'நீல ரத்னம் போலே குளிர்ந்தவடிவை உடையவனே !'—என்று. 'வைகுந்தா'—என்று மேன்மை சொல்லிற்று; 'மணி வண்ணனே ;—என்று வடிவழகு சொல்லிற்று. என் பொல்லாத் திருக்குறளா'—என்று ஸௌலப்யம் சொல்லிற்று. இம் மூன்றும் கூடினதாயிற்று, பரத்வமாவது"—என்றுமுள்ள ஈட்டு வ்யாக்யான ஸ்ரீ ஸூக்திகள் இங்கு கவனிக்கத்தக்கன.

தனது மெய்யன்பர்களை விஷயாந்தர ப்ரவணர்களாகாதவாறு தடுத்து மயக்கி வலைப்படுத்தி என்றென்றும் திகட்டாத பேரின்பத்தை அளித்து உய்விக்கக்கூடிய அருட்பெருமணி, நமது தனிப் பெருந்தலைவனாகிய திருமால் மணி. தனது ஒப்புயர்வற்ற அற்புதப் பேரழகினாலும், உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே குளிர்விக்கும் குளிரொளியினாலும், தனது பாத்வ வ்யூஹ விபவ அந்தர்யாமித்வ நிலைகளைக் கண்டு அநுபவிப்பதற்கின்றி பிறவிப் பெருங் கடலில் சிக்கி 'ஆவார் ஆர் துணை என்று அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல்' சிந்தை கலங்கித் திகைத்து நிற்கும் சேதநர்களுக்கு அருள் புரிய வேண்டுமென்றும் கருணைப் பெருக்கினாலும் அடியவர்களைத் மனக்கோயிலில் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருக்கும் அருள் மணியின் திருமேனி முழுவதும் கண்டாரை மையலேற்றி மயக்கும் மாய மோகன வடிவழகில் சிறந்து விளங்குவதாக இருப்பினும், முதன் முதலில் அடியவர்களைத் தன் வயப்படுத்தி மயக்கி மகிழ்வூட்டுவது அவ்வருள் மணியின் திருமுகத்திலுள்ள கண்மணியேயாம். திருவரங்கப் பெரு நகரிலே, நம் பெருமாள் திருவோலக்கத்திலே; ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் "மணிமண்ணன் வாசுதேவன் வலையுளே"—[1] என்ற திருவாய்மொழியைப் பாடிநின்றபோது, அவ் வலையை வெறும் வலையாக அபிநயித்துக் காட்டிப் பாடினாராம்; அப்பொழுது, அங்கு எழுந்தருளியிருந்த எம்பெருமானார், தமது திருக்கண்களைத் தொட்டுக் காட்டியருளினாராம். "உன் தாமரைத் தடங்கண் விழிகளில் அகவலைப் படுப்பான்"—[2]என்ற விடத்தில், "தாமரை போலே பரிமளத்தையும் குளிர்த்தியையும் சிவப்பையும் உடைத்தாய், போக்தாக்களால் உண்டறுக்க வொண்ணாத போக்யதா ப்ரகர்ஷத்தை உடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. 'கண்ணென்னும் நெடுங் கயி'[3]றிறே; கண்ணிலே அகப்பட்டால், ஜ்வர ஸந்நி பதிதரைப் போலப் பிதற்று மித்தனையிறே."—என்றுள்ள ஈட்டு ஸ்ரீ ஸூக்தி, மணிவண்ணனது கண்வலையின் மோஹன சக்தியை எவ்வளவு அழகாக உணர்த்துகிறது!

1—5–ப ; 3–தி ; 6–பா ; 4–அ ; 2–6–ப ; 2–தி ; 9–பா ; 1–2–அ ; 3–நாச்சியார் திருமொழி–14—தி ; 4—பா ; 1—அ ;



பகவத் விஷயத்தில் உண்டான ப்ராவண்யாதிசயத்தால் தாமான தன்மை இழந்து ஒரு பிராட்டி தசையை அடைந்த நம்மாழ்வார், பராங்குச நாயகியாகி;

"உரைக்க வல்லேன் அல்லேன் ; உன் உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்
கரைக்கண் என்று செல்வன் நான் ? காதல் மையல் ஏறினேன்"—[1]

என்று, மணிவண்ணனது அருட்குணக் கடலில் சிக்கிக் கரைகாண முடியாமல், கங்குலும் பகலும் கண் துயில் அறியாது' 'நெஞ்சு இடர் தீர்ப்பார் இனியார் ?' என்று பெரிதும் கரைந்துருகி நின்றார். தனது நெஞ்ச நிலையைத் தானே தன் வாய்விட்டுச் சொல்ல இயலாமல் பெரிதும் கலங்கி நின்ற பராங்குச நாயகி, தனது காதலில் தான் பெற்ற அனுபவங்களை, ஒரு தோழியாக மாறித் தாய்மார்க்குக் கூறலானாள். அவ்வாறு தோழியின் பேச்சாக அமைந்துள்ள திருவாய் மொழிகளுள் தலை சிறந்து விளங்குவது, "துவளில் மாமணி மாடம்"—என்று தொடங்கும் தொலைவில்லிமங்கலத் திருப்பதியின் மங்களாசாசனமாகிய திருவாய்மொழி. "இத் திருவாய்மொழி ஆழ்வார் ப்ரகிருதி சொல்லுகிறது"—என்று நம் முதலிகளெல்லோரும் போர விரும்பியிருப்பர்கள்"—என்பது, இத் திருவாய்மொழியின் வ்யாக்யான அவதாரிகை வாக்யம்.

தனது செல்வப் புதல்வியின் கண்ணீர் கண்டு கலங்கி நிற்கும் அன்னையை நோக்கி, பராங்குச நாயகியின் ஆருயிர்த் தோழி பின்வருமாறு கூறுகிறாள் :—

"தாயே! இவள் எவ்வளவோ நாட்களில், தனது 'நெஞ்சும் உயிரும் உள் கலந்து' நின்ற வஞ்ச மா மாயக் கள்வனைக் 'கூவிக் கூவி நெஞ்சு உருகிக் கண் பனி சோர' நின்றாள். அங்ஙனமிருந்தும், அந்த 'கடிய கொடிய நெடிய மால்' இவளிடம் சிறிதும் திருவுள்ளம் இரங்காமல் இருந்து வருவதை எண்ண எண்ண, இவளது நெஞ்சு அனலிடைப்பட்ட மெழுகுபோல் நிலையழிந்து பெரிதும் கரைந்து உருகுகிறது. தினந்தோறும் இவளது வாயினின்றும் என்னென்னவோ பிதற்றல்கள் வெளிப்படுகின்றன. இவளது கருவிழிகளிலிருந்து அடிக்கடி பெருகும் நீர், ஒரு அருவி போல் இழிந்து இவளது உடல் முழுவதையும் நனைத்து விடுகிறது. அக் கண்ணீரருவியைக் கண்டும், இவளது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வனது நெஞ்சம் சிறிதும் இரங்கவில்லை. நேற்று மாலையிலே, பூஞ்சோலையிலே, புல் தரையிலே அமர்ந்திருந்த இவள், அடக்கமுடியாத கொடுந் துயரால் இருவிழிகளினின்றும் நீர் பெருகி வழிய—தனது நெஞ்சில் பொங்கிக் குமுறிக்கொண்டிருக்கும் கொடுந்துயர் முழுதும் வெளிப்படும்படி—தனது மெல்லிய இனிய குரலின் முழு சக்தியையும் கொண்டு,

1—4—ப ; 3—தி ; 9—பா ; 1—2—அ.

‘ஓ! மணிவண்ணா!’—‘ஓ! மணிவண்ணா!’—‘ஓ! மணிவண்ணா!’—என்று மும்முறை கதறித் துயர்ப் பெருக்கினால் மூர்ச்சையடைந்து விழுந்து விட்டாள். அப்போது, அவளது ஓலத்தைக் கேட்டு நின்ற நெடு மரங்கள்கூட, தமது இலைகளின் வழியே கண்ணீர் சொரிந்து கலங்கி நின்றன; செடிகளும் கொடிகளும் புல்லினங்களுங்கூட, கண்ணீர் சொரிந்து கரைந்து உருகி நின்றன. அப்பொழுதுகூட, அந்த மணிவண்ணனது மனம் சிறிதும் இரங்கவேயில்லை. ‘உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்து நிற்கும்’ மணிவண்ணனது செவிகளில் மட்டும், இவளது ஓலம் கேட்கவில்லையா என்ன? பாஞ்சாலி ஒருத்தியின் கலங்கிய கண்களையும் விரித்த கூந்தலையும் காணச் சகியாமல், ‘கொல்லா மாக்கோல் கொலை செய்து, பாரதப்போர் எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்த,’ பேருளாளனாகிய மணிவண்ணன், இரவும் பகலும் தன்னையே நினைந்து உருகிக் கொண்டிருக்கும் இவளது விழிகளினின்றும் பெருகிக்கொண்டிருக்கும் கண்ணீரருவியையும் இவள் பொருட்டு மலர்களும் மரங்களும் கானமும் கலங்கி நிற்கும் காட்சியையும் காணவாவது, இன்னும் இவளெதிரில் வராத தன் காரணந்தான் என்னவென்பது சிறிதும் விளங்கவில்லை. இவள் படும் நோயைத் தீர்க்கவல்ல மருந்தை உடைய மருத்துவன், மணிவண்ணன் ஒருவனே தான். அவனது திருவுள்ளம் இரங்கும் நாள், எந்த நாளோ தெரியவில்லை.”

—இத்தோழிப் பேச்சுக்கு ஆதாரமான திருவாய்மொழியடிகளையும், அவற்றிற்கு உறையாக அமைந்துள்ள பின்வரும் ஈட்டு வ்யாக்யான ஸ்ரீ ஸூக்தியையும் அன்பர்கள் பன்முறை சிந்தித்துச் சிந்தித்து அனுபவிக்க வேண்டும்.

“இரங்கி நாள் தொறும் வாய் வெரீஇ இவள் கண்ணநீர்கள் அலமர
மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ! என்று கூவுமால்”. 1

—“சேதநா சேதந விபாகமற அழியும்படி காணும், இவள் வாய் விட்டுக்கூப்பிடும்படி. எம்பாரை, “மரங்களும் இரங்கக்கூடுமோ?”—என்று கேட்க, “இது அருளிச்செய்த அன்று தொடங்கி எத்தனை ஹாவபாவத்தி யில்லாதார் வாயிலே புக்கதென்று தெரியாது; இங்ஙனேயிருக்கச் செய்தே யம நியாமதி க்ரமத்தாலே பதஞ் செய்யப்பார்த்தாலும் சுக்கான் பருக்கை போலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சுகளும் இன்று அழிகிறபடி கண்டால், ஸமகாலத்தில் மரங்கள் இரங்கச் சொல்லவேணுமோ?”—என்று அருளிச் செய்தார். “மரங்கள் நின்று மது தாரைகள் பாயும்; மலர்கள் வீழும்; வளர் கொம்புகள் தாழும்”—என்று அவதாரத்தில் திருக்குழலோசையிற்பட்டதெல்லாம், இவ்வார்த்த நாதத்திலே படுமாயிற்று;

1—6-ப; 5-தி; 9-பா; 1–2–அடிகள்;



“க்ஷவிவ்ருக்ஷா: வரிஞீநா:” என்று ராமவிச்லேஷத்தில் பட்டதெல்லாம் இவள் பேச்சில் படாநின்றன. பகவத் குணங்களிலும், குண நிஷ்டர் பாசுரம் அழிக்கும் போலே. இவளையோ தான் நீங்கள் மீட்கப் பார்க்கிறது! வடிவழகைச் சொல்லியன்றோ, கூப்பிடுகிறது!”

பராங்குச நாயகிக்கு ஏற்பட்ட ‘வானோர் தலைமகனாம் சீராயின தெய்வ நன்னோய்’க்கு மருந்தளித்து மகிழ்வித்தவனும் மணிவண்ண மருத்துவனே; மூப்பு இறப்பு-முதலிய பலவகைப்பட்ட பிணிகளுக்கும் தகுந்த மருத்துவனே. ஆதலின், ‘குல முதல் அடும் தீவினைக்கொடுவன் குழியினில் வீழ்க்கும் ஐவரை—வல முதல் கொடுக்கும் வரம்’ பெறவேண்டுமானால்—நம்மை எதிர்த்து நிற்கும் ஐம்புலப் பகைவர்களின் செருக்கொடுங்க, நாம் அவர்கள் நோக்கி “பிடித்தேன்; பிறவி கெடுத்தேன்; பிணி சாரேன்; பிடித்தேன்—மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை”[1]—என்று வீர ஜயகோஷம் செய்யவேண்டுமானால்—திருவருளையே உருவாகக் கொண்ட எம்பெருமானது ‘மணிவண்ணன்’—எனும் திருநாமத்தின் பலவகைப் பட்ட சிறப்புகளையும் அது உணர்த்தும் அறிய தத்வங்களையும் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிந்து உணர்ந்து, ‘மன்னிய சீர் மாறன் கலையையே உணவாக’க்கொண்டு, ஸ்வாமி தேசிகன் அருளியவாறு—“திருமால் அடியிணை சேர்ந்து திகழ்ந்த அடிமை பெறத்—திருநாரணன் சரணே சரணாகத் துணிந்தடைந்து” மகிழ்ந்திக்கக் கடவோம்.

(ப—ர்) இந்த வ்யாஸத்தில் முகுந்தமாலை என்னும் வடமொழி நூல் ஸ்ரீ குலசேகரப்பெருமாளால் இயற்றப்பட்டது. என்று கூறப்படிருக்கிறது—இது குலசேகரப்பெருமாளதல்லவென்பது விமர்சக வித்வான்களின் அபிப்ராயம். இவ்விதம் நிர்ணயிப்பதற்கு பற்பலகாரணங்கள் உண்டு. ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளிய தமிழ் திவ்யப்ரபந்தத்திற்கும் இதற்கு எவ்விதத்திலும் சேர்த்தியைக் காணோம். பாஷை வேறு ஆயினும் அபிப்ராயத்திலாவது ஒற்றுமையிருக்கவேண்டாமா? இது ஆழ்வாருடையதாயிருந்தால் நமது ப்ராசீனாசார்யர்கள் இதை கையாளாமல் இருப்பார்களா? பலர் வ்யாக்கியானம் செய்திருக்கக்கூடும். ஆழ்வார் திவ்யஸூக்திகளை தலைமேல் வைத்துக்கூத்தாடும் இயல்புள்ள நமது நமது பூர்வாசார்யர்கள் இதிலே இருந்து ப்ரமாணங்களை எடுத்து உதாஹரித்திருக்க மாட்டார்களா, இந்த க்ரந்தத்தினுடைய பெயரைக்கூட ஆசார்யர்கள் தமது கிரந்தங்களில் எடுத்ததாகத் தெரியவில்லை. ப்ரபந்தஸாரத்தில் ஆழ்வார்கள் அருளிய நூற்களைச் சொல்லும் போது இதையும் சேர்த்திருக்கவேண்டாமா? இந்நூலில் பக்திரஸம் நிறைந்திருக்கிறது என்பதில் ஆக்ஷேபமில்லை. வாக் ஸரளமானது. கம்பீரமுமானது. ஆனாலும் அலங்கார புஷ்டியில்லை. வியாகரணப்பிழைகளும் பல காண்கிறன. ஆதலால் இதை பிற்காலத்திய கேரள தேசத்தரசர்களில் ஒருவன் இயற்றியிருக்கவேண்டும். “அவ்வரசன் இந்த ஆழ்வாருடைய வம்சத்தில் ஜநித்தவராய் இருக்கவும் கூடும்” என்பது சில விமர்சகரின் அபிப்ராயம்.

1-10-ப; 8-தி; 3-பா; 1-2-அடிகள்.

# சரீரசிந்தை

[பத்திராதிபர்]

காலையில் எல்லா மனுஷ்யர்களும் மல மூத்திர விஸர்ஜந சிந்தையுடன் எழுந்திருக்கிறார்கள். அவ்விதம் எழுந்திருப்பதே ஸஹஜம். அதுவே சுகாதாரமுமாகும். அவ்விதம் எழுந்திராவிட்டால் நம்முடைய தேகமானது இருக்கவேண்டிய ரீதியில் இல்லாமல் தோஷமும் ரோகமும் ஸம்பந்தப் பட்டதாகவே நிச்சயிக்க வேண்டும். தற்காலத்தில் நாகரீகம் என்னும் பதம் நகரவாசிகளிடத்தில் விசேஷமாய் அந்வயிக்குமாகையால் அப்பேர்க் கொத்த நகர வாசிகளுக்கே மல மூத்திர விஸர்ஜந விஷயத்தில் அநேக தோஷங்கள் நேரிடுகின்றன. அதில் முதல் தோஷமானது மிகவும் ப்ரபலமான தொன்று. அது யாதெனில்—விஸர்ஜநத்துக்கு தேஹத்தில் அறிகுறி தோன்றினவுடன் அடக்காமலும் அவகாசப்படுத்தாமலும் விஸர்ஜநம் செய்து விடவேண்டியது. ஜீவராசிகளில் மனுஷ்யாள் தவிர யாவஜ்ஜந்துக்களும் அவச்யமுண்டான க்ஷணத்தில் விஸர்ஜநம் செய்துவிடுகின்றன. காலதேசங்களை எதிர்ப்பார்ப்பதில்லை. ஆதலால்தான் அநேகமாய் அவ்வித பக்ஷிகளும் ஜந்துக்களும் நோயற்று வாழுகின்றன. மலஜலாதிகளை அடக்கிக் கொள்வதால்தான் நம்முடைய தேஹம் வ்யாதி க்ரஸ்தமாகிறது என்று எல்லாதேசத்து வைத்திய சாஸ்திரிகளும் முறையிட்டிருக்கிறார்கள். ஒரு வேலை நடுவில் இருக்கிறோம். ஒரு ஸபையில் இருக்கிறோம். வண்டியில் போய்க்கொண்டிருக்கிறோம். நித்திரையில் நடுவில் இருக்கிறோம். ரயில் வண்டி போய்விடும். ஒரு மரியாதை மனுஷ்யனுடன் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று இவ்விதமான பல காரணங்களைக் கொண்டு மலஜலங்களை அடக்குவது தத்கால நாகரீகத்தில் ஒரு பெரிய வழக்கமாய் ஏற்பட்டிருக்கிறது. ஒரு வீட்டில் இருக்கும் சாக்கடையை சிறிது காலம் அடைத்து விட்டால் வீடு முழுவதும் துர்நாற்றமெடுத்து மூச்சு விடுகிறதுக்குக் கூட அந்தவீடு அஸஹ்யமாய் போய்விடுகிறதல்லவா. அதைவிட நூறு பங்கு அதிகமான தோஷத்திற்குக் காரணமாகிறது மலஜலத்தை அடக்கிக்கொள்வதால் இரத்தம் எப்போதும் ஓடிப் பரவிக்கொண்டிருக்கிற நம்முடைய இந்த தேகத்தில்.

இந்த மலவிஸர்ஜநா காங்க்ஷையையே சரீர சிந்தை என்று அழகாய் நம்முடைய ஆயுர்வேத க்ரந்த கர்த்தாக்கள் வ்யவஹரித்திருக்கிறார்கள் மல மூத்திர விஸர்ஜநத்திற்காக தேகத்தில் ஒரு அருவருப்பு உண்டாகிறதல்லவா ? அவ்வித அருவருப்பு இல்லாதபோது நாம் சரீர சிந்தையைப்



பற்றி கெவனிக்கவேண்டியதில்லை. அவ்வித அருவருப்பு உண்டானதும் நம்முடைய மனதில் அது காரணமாக சிந்தையும் உண்டாய் விடுகிறது. அவ்வித சிந்தையானது பகவானால் நம்முடைய ஆரோக்யத்திற்காக அளிக்கப் பட்டிருக்கிறது. இது நமது தேகத்தில் பெரியதோர் தத்துவம். தேகத்தில் அந்நாஹாரக் குறைவினால் பசி உண்டாகிறது; வேண்டிய அளவு திரவம் இல்லாததால் தாஹம் உண்டாகிறது, அவ்விதமே மேற் சொன்ன அருவருப்பு மல விஸர்ஜந ஆவச்யகதையை தெரிவிக்கிறது. அவ்வித அருவருப்பு நமக்குத் தோன்றாவிட்டால் நமது தேஹம் எந்த ஸ்திதியில் இருக்கும் என்பதை விவரித்துச் சொல்லவேண்டியது அவசியமில்லை. ஸ்ருஷ்டிகர்த்தாவினால் அத்தியாச்சர்யமாய் நமக்கென்று ஸ்ருஷ்டிக்கப் பட்டு ஒப்புக்கொடுக்கப்பட்ட இந்த தேஹத்தில் தானே விஸர்ஜந ஆவச்யகதை தெரிவிக்கப்பட்டிருந்தாலும் நாம் அதை உபேக்ஷிப்பது, அநாரோக்யம் மாத்திரமேயல்லாமல் அந்தர்யாமி விஷயத்தில் ஆஜ்ஞாதிலங்கந ரூபமான பாபமும் ஆகும். ஆதலால், கிராமவாசிகள் நகரவாசிகள் உள்பட அனைவரும் கூடியவரையில் இவ்விஷயத்தில் ச்ரத்தை செலுத்தி, தேஹத்திலேயே உண்டாகும் அறிகுறிகளை அசட்டை செய்யாமல் அவ்வப்பொழுது விஸர்ஜநம் செய்வதை அப்யாஸமாக்கிக் கொள்வது ஆயுர்வேத சாஸ்திர ரகஸ்யம் மாத்திரமின்றி, பரம வேதாந்த தத்துவமுமாகும்.

இந்த மல விஸர்ஜநத்திற்கும், மலப்ரக்ஷாளநத்திற்கும் நமது சாஸ்திரங்களில் பலவித நியமவிதிகள் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விஷயம் சிறுவர்களுக்கு முதன் முதல் கற்பிக்க வேண்டியதாகும். முக்கியமுமாகும்.—

**आचार्यः प्रथमं स्वस्य शिष्येभ्यः शौचमादिशेत्** என்று மநு கூறுகிறார்.

## மலவிஸர்ஜந ஸ்தலம்

நாம் வசிக்கும் வீட்டுக் கட்டிடத்தின் ஒரு பாகத்தில் மலமூத்திர விஸர்ஜநம் செய்யக்கூடாது. ஒரு வில்லில் அம்பைத் தொடுத்து ப்ரயோகித்தால் அது எவ்வளவு தூரத்தில் போய் விழுமோ, அதைப்போல் இரண்டு அல்லது மூன்று வில்லடிதூரம் வீட்டிற்கு அப்புறத்தில் செல்ல வேணும் என்பது தர்ம சாஸ்திரங்களில் விதி. இந்த விதி கிராமவாசிகளுக்குப் பொருந்துமேயல்லாது நகரவாசிகளுக்குப் பொருந்தாது.

இவ்விஷயத்தில் ஜந நெருக்கமுள்ள நகரவாசிகள் எப்படி நடப்பது என்ற விஷயத்தில் தர்ம சாஸ்திரங்கள் மௌநமாயே இருக்கின. இதற்குத் தக்க விதிகளை நாமே ஏற்படுத்திக் கொள்ளவேணுமேயல்லாது வேறு மார்க்கமில்லை. புதிதாக ஒரு விதியை நாம் ஏற்படுத்திக் கொள்ளும்போது நமது தர்மசாஸ்திரங்கள் இயற்றிய முன்னோர்களின் கொள்கைக்கு விரோதமின்றி விதிகளை அமைக்கவேணும். மலமூத்திர விஸர்ஜந ஸ்தலம், வசிக்கு

மிடத்திற்கு தூரத்தில் இருக்கவேணும் என்பது மனுவின் விதி. ஒரே ஆவரணத்தின் கீழ் ஒரு பாகத்தில், நாம் வசிப்பதும் மற்றொரு அறையில் கக்கூஸையும் அமைப்பது சாஸ்திர விருத்தமாகும். நாம் வசிக்குமிடத்திற்கும் கக்கூஸுக்கும் நடுவே ஆகாசத்தினாலும் பூமியாலும் ஒரு பிளவு ஏற்பட்டிருக்கவேணும். பூமியில் பிளவு என்பது ஒரே கட்டிடம் என்று தோன்றக்கூடிய நிலைமையில் கல்லு சுண்ணம்பு முதலியவற்றால் பூமியை தளவரிசை செய்து அதில் ஒரு பாகத்தில் கக்கூஸும் மற்றொரு பாகத்தில் நாம் வசிப்பதும் தவறு. மண்பூமி இடையில் இருந்தால் இரண்டுக்கும் பூமி வேறு என்று சொல்லலாம். சுகாதார சாஸ்திரங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் அநுசரித்தே நடப்பது முக்கியம். இப்படிப் பார்த்தால் ஆகாசத்தினாலும் பூமியாலும் பிளவு பட்டதான இடத்தில் கக்கூஸை ஏற்படுத்திக் கொள்வது உசிதமாகும்.

## மலவிஸர்ஜந காலம்

**नवेगंधारयेत्** என்று சுச்ருதர் கூறுகிறார். வேகம் என்பது வைத்திய சாஸ்திரத்தில், மலமூத்திரங்களின் போக்கு எனப்படும். அதை எக்காரணம் கொண்டும் அடக்கக்கூடாது. அவை வெளியில் செல்ல யத்நிக்கும் போது தாமதமின்றி சரீரத்தினின்று அகற்றிவிடவேணும். தர்ம சாஸ்திரக்காரர்களின் கொள்கையும் இதுவே. வேகம் இருக்கும்போது சரீரம் அசுத்தமாகும். அசுத்தமான சரீரத்தோடு நாம் ஒரு காரியமும் செய்யக் கூடாது. உபயோகமுள்ள கர்மங்களைச் செய்வதற்காகவே இந்த சரீரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சரீரத்தில் ஒரு ஆச்சர்யமான குணமுண்டு. அதாவது—நாம் பழக்கிவைக்கும் பழக்கங்களையே அது பின்பற்றுகிறது. ஆகையால் நமது தேகத்திற்கு ஸ்நாநம் பாநம் ஆகாரம் நித்திரை முதலிய எல்லா வ்யாபாரங்களுக்கும் இன்னின்னது காலம் என்பதை நாம் திட்டம் செய்து கொடுக்கவேணும். இல்லாவிட்டால் அந்த சரீரத்தின் போக்கை நாம் பின் பற்றவேண்டி வரும். அது நமது கார்யங்களுக்கு இடையூறாகத் தீரும். ஆகையால் நமது சாஸ்திரகாரர் அனைவரும் விடியற்காலையில் நித்திரையின் நின்றும் எழுந்தவுடன் மல விஸர்ஜநம் செய்யவேணும் என்று குறிப்பிட்டார்கள். இது மிகவும் உசிதமே. இவ்விஷயத்தில் தர்ம சாஸ்திரக்காரர் பலவித நியமங்களைக் கூறினார்கள். அவையெல்லாம் நமது சுகாதாரத்திற்கு இன்றியமையாதவை. அவற்றை சிறிதேனும் உபேக்ஷிப்பது தவறு. ஆனால் அவற்றில் சிலவற்றிற்கு ப்ரத்யக்ஷகாரணம் புலப்படக் கூடும். சிலவற்றிற்கு புலப்படாமலிருக்கக்கூடும். காரணம் புலப்படாமல் இருக்குமவற்றிற்கு காரணத்தைக் கண்டு பிடிக்க முயலவேணும். நமக்கு காரணம் புலப்படாததைக் கொண்டு அதைத் தள்ளி விடக்கூடாது.

# புத்தக விமர்சம்

## (1)

### ஸ்ரீ வேதாந்த தேசிகன் பதினேரு சில்லரை ரஹஸ்யங்கள்

"ஒரொன்று தாப்புல் திருவேங்கட முடையான் பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்றுதானே யமையாதோ"—என்கிற கணக்கில் நிச்ரேயஸ ஹேதுத்வேந அபேக்ஷிதமான ஸகல புருஷார்த்தங்களைத் தெளிவிக்க ஸ்ரீ தேசிகனுடைய ஒவ்வொரு க்ரந்தமுமே தனித்தனியே பர்யாப்தமாகும். ரஹஸ்யங்கள் என்று வ்யவஹரிக்கப்படும் 32 க்ரந்தங்களின் உபகாரவிசேஷம் அந்யாத்ருசமானது. அவைகளில் சில்லரை ரஹஸ்யங்கள் என்று சொல்லப்படும் 28 ரஹஸ்யங்கள் மிக்க எளிய நடையில் பண்டிதபாமர ஸாதாரணமாக அபேக்ஷிதமான ஸகலார்த்தங்களையும் போதிப்பவையாகும். அவற்றிலும் ப்ராக்ருதம் வெளிவந்துள்ள ஸாரஸாரம் முதலிய பதினேரு சில்லரை ரஹஸ்யங்களின் உபகாரம் அதிவிலக்ஷணமானது. ஒரு அபயப்ரதாநஸாரமொன்றே அதற்குத் தக்கசான்றாகும். ஸ்ரீமத் ராமாயணம் வேதோப ப்ரஹ்மணத்திற்கு ஏற்பட்டதென்பதையும் அதிலும் அத்யந்த ஸாரமான சரணாகதிவித்யையை நிரூபிக்க வந்ததென்பதையும் உபக்ரமோபஸம்ஹாராதி ரூப தாத்பர்ய லிங்கங்களைக் கொண்டு ஸ்ரீமத் ராமாயணாவதாரம் தொடங்கி ஒவ்வொரு காண்டத்திலும் அந்தந்த ப்ரகரண விசேஷங்களை நன்கு எடுத்துக்காட்டி (1) ப்ரபந்தாவதார நிரூபணம் (2) பரதத்வ நிர்த்தாரணம் (3) சரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்சநம் (4) ப்ரகரண தாத்பர்ய பராமர்சம். (5) சரண்ய சீல ப்ரகாசநம் (6) சரண்ய வைபவ ப்ரபஞ்சநம் (7) பரம தர்ம நிர்ணயம் (8) சரண்யனின் வ்ரத விசேஷம் சரணாகதி ஸங்கமம் (10) பகவத் ப்ராப்தி ப்ரகாரம் என்கிற பத்துப் படிகளாலும், ஸ்ரீமத் ராமாயணம் ஒரு புராண கதையென்றோ அல்லது ஒரு உத்தம காவ்யமென்றோ உலகத்தாருக்கிருந்த கொள்கையை மாற்றி இது ஸர்வோப ஜீவ்யமான சரணாகதி வேதம் என்ற எண்ணம் நிலைக்கும்படி செய்தருளிய நம் ஸ்ரீதேசிகனுடைய பெருமை நம்மால் பேசப்போமோ.

அப்படியே ந்யாஸ சதகத்தில்—அதிகாரிகளுக்கு ந்யாஸ ந்யாஸவிவேக முண்டாகாதவரை த்ரைவர்ணிகாதிய ஹேதுவில்லாமல் இவர்கள் ஸம்பாதித்த ஜ்ஞாநம் ஸபலமாகாமல் போக ப்ரஸங்கிக்க, அதைத் தவிர்த்துவைக்கும் பொருட்டு நம் தர்சநத்தில், ப்ரமாணங்கள், ப்ரமேயங்கள், திருமந்த்ராதிகள், ப்ரபன்னர்கள், அவர்களின் உத்தர க்ருத்யம், கைங்கர்யங்கள், அதற்குரிய தேசகாலங்கள் தத்விரோதிகள், அபசாரங்கள் அதிகாரிகள் முதலிய விஷயங்களில் ப்ரதாநமான நூறு அர்த்தங்களை ஐதம்பர்யமாக எடுத்துரைத்து தெளிவு பிறப்பித்த மஹான் நம் ஸ்ரீ தேசிகனொருவரே.

அப்படியே விரோதபரிஹாரத்தில் ஹிதபுருஷார்த்த விஷயத்திலும் மந்த்ரார்த்த விஷயத்திலும் மற்றும் அவற்றைச் சார்ந்து வரும் விஷயங்களிலும் ஸம்பாவிதங்களான ஸமஸ்தவிரோதங்களையும் தாமே எடுத்துக் காட்டி அவைகளுக்குத் தக்க ஸமாதானங்களையும் ஸாதித்து விச்வாஸமில்லாதவரை விச்வாஸமுள்ளவர்களாகவும் விச்வாஸம் குறைந்தவர்களை பூர்ணவிச்வாஸமுள்ளவர்களாயும் செய்து உபகரித்தருளிய ப்ரகாரம் அந்த க்ரந்தங்களை ஸேவித்து அறிய வேண்டுமேயல்லது இங்கு அவைகளை குறிப்பிடுவது சக்யமாகாது.

அத்தகைய பெருமை வாய்ந்த சில்லரை ரஹஸ்யங்களில் பின்பாகமாகிய இந்த ஸாரஸாரம் முதலிய 11-ரஹஸ்யங்கள் இதுவரை நம் தேசத்தில் அச்சில் பதிப்பித்திருந்தபோதிலும் திருத்தமான முறையில் முத்ரிதமாகாமையையும் தத்காலம் ப்ரதிகள் கிடையாமலிருப்பதையும் நினைத்து, தத்ஸமயம் புதுகோட்டை மகாராஜா காலேஜில் ஆசிரியராயிருக்கிற ஸ்ரீ. உப. சர்க்கை ஏ. ஸ்ரீநிவாஸராகவன் என்பவரால் அனேக மஹான்களின் ஸ்ரீ கோசங்களைக்கொண்டு சோதித்து கும்பகோணம் கவர்ன்மென்ட் வக்கீல் ஸ்ரீநிவாஸய்யங்கார் குமாரத்தியான ரங்கத்தம்மாள் செய்த த்ரவ்ய ஸஹாயத்தைக் கொண்டு சுத்தமாகப் பதிப்பித்திருக்கிறார். அங்கங்கு சில கடின பதங்களுக்கு விவரணமும் எழுதியுள்ளார். ஹாயெண இதில் உதாஹ்ருதங்களான ப்ரமாண வாக்யங்களுக்கெல்லாம் ஆகரம் காட்டியிருக்கிறார்.

இந்த க்ரந்தம் மாத்ருகா தசையில் ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியால் தம்முடைய ஸ்ரீ கோசத்தைக் கொண்டு சோதிக்கப் பட்டது. அச்சான பிறகும் அந்த ஸ்வாமியாலேயே அனுப்பப்பட்ட உத்தமமான சில பாடபேதங்களும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இதைப் பதிப்பித்தவர் இதற்கு விரிவான முகவுரையொன்று எழுதியிருக்கிறார். அதில் ஸ்ரீதேசிகனுடைய எல்லா ரஹஸ்ய க்ரந்தங்களிலுமுள்ள விஷயங்களை சுருக்கமாகக் காட்டியும் அவைகளுள் பரஸ்பரம் காலக்ருதமான பௌர்வாபர்யத்தை நன்கு விசாரித்தும் அவைகளில் சில நூற்களின் சிலரை விசேஷித்து அநுக்ரஹிப்பதற்காகவே செய்யப்பட்டவை என்றும் எடுத்துக் காட்டியுள்ளார். இதற்கு சுத்தாசுத்த பத்ரிகை மிகச் சுருக்கமாக அமைந்துள்ளது பரிசோதகரின் பரிச்ரமத்தை தெளிவிக்கிறது.

இதில் கடைசியில் ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் என்கிற ரஹஸ்ய க்ரந்தமும் சேர்க்கப்பட்டு இரண்டு ஸம்புடமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றின் கடைசியிலும் அகாராதி க்ரமத்தில் உதாஹ்ருத ப்ரமாணங்களுக்கு ஒரு ஸூசிகை (ஸம்ஸ்க்ருத ப்ரமாணங்களுக்கு வேறாகவும் தமிழ் உதாஹரணங்களுக்கு தனியாகவும்) கோர்க்கப்பட்டிருப்பதுடன் ஸ்ரீ தேசிகன் இந்நூற்களில் எத்தனை க்ரந்தங்களை உதாஹரித்திருக்கிறாரோ அவைகளுக்கு ஒரு பட்டிகையும், ஆகரம் தெரியாத ப்ரமாணங்களுக்கு தனி ஒரு அகாராதி பட்டிகையும்



கோர்க்கப் பட்டிருக்கிறது. கடைசியில் இந்நூற்களில் காணப்படும் பலவித ப்ரஸித்த பெயற்ச் சொற்களுக்கு ஒரு அகாராதி ஸூசிகை தயாரித்திருப்பது நவீந முறையில் மிகவும் உபயோகமுள்ளது. இதை பதிப்பித்தவர் 'பரம பதஸோபாநம்' என்ற க்ரந்தத்தையும் சீக்கிரத்தில் அச்சிட்டு இவைகளுடன் சேர்த்துக் கொள்ளும்படி கொடுக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்.

சாஸ்திர பரிசயம் அதிகமில்லாதவர்களுக்கும் சீக்ர காலத்திலேயே முக்யமான விஷயங்களை சுருக்கமாக அறிய விரும்புவோர்களுக்கும் இந்த ரஹஸ்ய க்ரந்தங்கள் மிக அவச்யமானவை. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸகல விஷயங்களுமடங்கி யிருக்கின்றன. ஆயினும் அதிலில்லாத சிற்சில அபூர்வ விஷயங்களையும் இவைகளில் காணலாம். எளிதமாயும் சுருக்கமாயும் விஷயங்களைத் தெறிவிப்பதில் இவை நிகரற்றவை. மந்தாதிகாரிகளுக்கும் இவைகளில் ப்ரவேசம் ஸுலபம். அத்யந்தம் உபயுக்தாம்சங்களை இவைகளின் மூலம் எளிதில் தெறிந்துக் கொள்வதுபோல் மற்ற க்ரந்தங்களைக் கொண்டு அறிவது ச்ரமஸாத்யம். ஆகையால் நம் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஒவ்வொரு க்ருஹத்திலும் இப் புத்தகமிருந்து தீரவேண்டியது மிக அவச்யமானது. இது அழகிய எழுத்தில் உயர்ந்த க்ளேஸ் காகிதத்தில் பிதிப்பிக்கப்பட்டு பார்போர் மனதைக் கவரக்கூடியதாயிருக்கிறது.

இதன் விலை முதல் பாகம் (தனியே) ரூ. 1—8—0
2-வது. பாகம் (தனியே) ரூ. 1—4—0
இரண்டு பாகங்களையும் சேர்த்து வாங்குமவர்களுக்கு ரூ. 2—8—0

இந்த விலையிலேயே பரமபத ஸோபாநமும் உள்ளடங்கியது. இவை இதைப் பதிப்பித்தவரிடமும் (ஏ. ஸ்ரீநிவாஸ ராகவன். M. A. மகாராஜாஸ் காலேஜ் புதுக்கோட்டை) அல்லது மதராஸ் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ராசார ஸபையாரிடமும் (4. பத்ரய்யா கார்டன் தெரு. பார்கடவுன் சென்னை) கிடைக்கும்.

வே.

(2)

## ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகர் புகழ் மாலை

இது ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது திவ்யாஸ்தாநத்தில் மூர்தாபிஷிக்தராய் ஜகத்விக்யாதமாய் ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணம் செய்து ஸர்வேச்வரனுடைய க்ருஷியை ஸபலமாக்கிக்கொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய சில குண விசேஷங்களை ப்ரஸ்தாபிக்கும் ஒரு க்ரந்தமாகும். இது நாநாவித விசித்ர ஸுகந்த புஷ்பங்களால் அமையப் பெற்ற மாலைபோல் நாநா பாஷைகளில் கத்ய பத்ய வசந ரூபங்களான விசித்ர ஸூக்தி குஸுமங்களால் கோர்க்கப்பட்டு உண்மையில்

அடியார்களின் ஹ்ருதயங்களில் தரித்து ப்ரகாசிக்கவேண்டிய ஒரு மாலை யென்றே நினைக்கக் கூடிய ரீதியில் வாய்ந்திருக்கிறது. இதைக் கண்டு உள்ளம் குளிர்ந்து ஸர்வேச்வரன் இம்மாலையைத் தானே தன் மார்பிலும் தரிக்கக்கூடும்.

இதில் பல மஹான்கள் ஸ்ரீ அழகிய சிங்கரின் குணங்களை தாங்கள் நேரில் அநுபவித்தபடி பிற்காலத்தியவர்களையும் அக்குணங்களி லீடுபட்டு அதன் மூலம் ஸர்வேச்வரனுடைய கடாக்ஷத்திற்கு இலக்காகும்படி செய்யும் பொருட்டு விஷயங்கள் எழுதியுள்ளார்கள். இதில் முக்யமாக ஜாயமான தசையிலே ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஏற்பட்ட பாகவதாநுக்ரஹ விசேஷமும் அதன் பின் ஆசார்யத்வோபயோகியான குணங்களின் பௌஷ்கல்யமும் அதற்கு ப்ரயோஜகங்களாயிருந்த ஸதாசார்ய ஸம்பந்த விசேஷங்களும், ஸ்ரீ நரஸிம்ஹாராதனத்தில் ஸ்ரீ அழகியசிங்கருக்கிருந்த ஊக்கமும் ஆச்ரிதர்களிடமிருந்த ப்ரீதியும் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆஸ்திக்யம் முற்றிலும் குறைந்த இக்காலத்திலும் இப்படிப்பட்ட ஆசார்யவர்யரின் குணாநுஸந்தாநாதிகளை எல்லோரும் செய்து உஜ்ஜீவிக்கும்படி பரம க்ருபையுடன் இப் புகழ்மாலையை வெளியிட்டவர் 'கவி: ஸாயுஃ' என்கிற வசநார்த்தத்தை உலகத்தாருக்கு நன்கு நிரூபித்துக் காட்டியவராகிறார் என்றே நமது அபிப்ராயம். இவ்வாசார்யவர்யரின் கல்யாண குணங்கள் இப் புகழ்மாலையில் சொல்லியபடி அபரிச்சேத்யங்களே. இதைப் போல் எத்தனை மாலைகள் வெளியிட்டாலும் அப்போதும் அவை ஸ்ரீ அழகியசிங்கரின் குணங்களின் ஏகதேசப்ரஸ்தாவத்திலேயே விச்ராந்தமாகும் என்பது யாவருமறிந்ததே. சில குணங்களின் திங்மாத்ர ப்ரதர்சனமே இங்கு செய்யப்பட்டிருக்கிறது. சீக்கிரத்திலேயே மற்றொரு இத்தகைய ப்ரசுரத்தையும் எதிர்ப் பார்க்கிறோம்.

இதற்கு ஸ்ரீ. உ.வே. கமலாபுரம் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ஒரு அழகான முன்னுரை எழுதி இருக்கிறார். அவர் லௌகிகத்தில் மிகப் பெரிய ஸ்தாநத்திலிருந்தும் இவ்வுயர்ந்த கைங்கர்யத்திலீடுபட்டு மற்ற லௌகிகர்களையும் இத்தகைய ச்ரேயோ ஹேதுவான உயர்ந்த கார்யங்களில் அந்வயிப்பித்து அவர்கள் தங்கள் ச்ரேயஸ்ஸை இழக்காமலிருக்கும்படி அவர்களுக்கு ஒரு மார்க ப்ரதர்சநம் பண்ணும்படி முன் வந்தது போற்றத்தக்கது. உண்மையில் இத்தகைய முயற்சிகள் ஸர்வேச்வரனுடைய க்ருபோத்தம்பக வ்யாபாரங்களில் தலைமை வகிக்கக்கூடியவை என்றே நமது ஹார்தமான விச்வாஸம்.

இப் புத்தகம் காரகுரிச்சி ஸ்ரீ. உ.வே. ஸுந்தராராஜாசார்ய ஸ்வாமியால் ப்ரசுரிக்கப்பட்டு இனமாக பலருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டியவர்கள் சென்னை தம்பு செட்டி வீதி 34-ம் நம்பர் க்ருஹத்திலிஷை ஸ்வாமியிடம் பெறலாம்.

வே.

॥ श्रीः ॥

# अभीतिस्तवः

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

अभीतिरिह यज्जुषां यदवधीरितानां भयं
भयाभयविधायिनो जगति यन्निदेशे स्थिताः ।
तदेतदतिलङ्घितद्रुहिणशम्भुशक्रादिकं
रमासखमधीमहे किमपि रङ्गधुर्यं महः ॥ १ ॥

அபீதிரிஹ யஜ்ஜுஷாம் யதவதீரிதாநாம் பயம்
பயாபய விதாயிநோ ஜகதி யந்நிதேசே ஸ்திதா: ।
ததேதத் அதிலங்கித த்ருஹிண ஶம்பு ஶக்ராதிகம்
ரமாஸகம் அதீமஹே கிமபி ரங்கதுர்யம் மஹ: ॥ 1 ॥

## ஸ்தோத்ராவதாரிகை.

'அபீதி:' என்று தொடங்கி, 'அபயஸித்திக்காக இந்த ரங்கநாத விஷயமான ஸ்துதியைப் படியுங்கள். அந்தக் கேசவன் 'பயத்தை விடுங்கள்; உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்.' என்று சொல்லிக்கொண்டு அருள் நிரம்பிய தன்னுடைய குணங்களால் உங்களைக் காப்பாற்றுவான்' என்று இத்துதியை முடிக்கிறார். 'அபீதி' என்பது பயமில்லாமையைச் சொல்லும். 'பயத்தை விடுங்கள்' என்றதால் ஏதோ ஒரு பெரிய பயம் நமக்கெல்லாம் வந்ததாயும், அந்த பயம் போகவேண்டுமென்று பெருமாளிடம் சரணாகதி பண்ணிப் பிரார்த்தித்து, அந்த பயத்தை போக்கப் பெருமான் கிருபை பண்ணி, அதிலிருந்து நமக்கு அபயம் அளிப்பதாயும் தெரிகிறது. "அபயம் வை ஜநக ப்ராப்தோऽஸி" (अभयं वै जनक प्राप्तोऽसि) என்றபடி, ப்ரஹ்மவித்க்ரேஸரரான ஸ்வாமி அபயமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் நிலையுடையவர். "உதரம் அந்தரம் குருதே, அத தஸ்ய பயம் பவதி" (उदरमन्तरं कुरुते, अथ तस्य भयं भवति) அத்ருஶ்யமானதும், ஸர்வாத்மாவானதும், ஸர்வாதாரமானதுமான ஆநந்தமய வஸ்துவிலேயே த்யாநத்தால் நிலை கொண்டவராயிருப்பார் அபயமடைந்தவரே; அல்பமேனும் அந்த

த்யான நிஷ்டையில் விச்சேதத்திற்கு இடம் கொடுப்பாராயின், அவருக்கு பயம் உண்டாகும்; 'வித்வானுக்கு அதுதான் பயம்' என்று தைத்திரீய சுருதி பேசுகிறது. அத்ருச்யமான பரம காரணப் பொருளே க்ருபை வெள்ளத்தால், கோயில், திருமலை, பெருமாள்கோயில் முதலிய திவ்ய தேசத் தெம்பெருமான்களாக ஸேவை ஸாதிப்பதால், 'தத்' என்று வேத மோதும் அந்த ஸூக்ஷ்ம காரணப்பொருள் 'ஏதத்' (இது) என்று சொல்லலாம்படி ஸகல மநுஜநயந விஷயமாயுள்ளது. 'ததேதத்' என்று இங்கே முதலிலேயே த்யேயமான பரம காரணப்பொருளே 'இது' என்னலாம்படி ப்ரணவரங்கத்திலே சக்ஷுர்விஷயமாகி, த்ருஸ்யமாயுள்ளது என்று ஸூசிப்பிக்கிறார், 'க:' என்ற ப்ரஹ்மாவுக்கும், 'ஈஸ:' என்ற ஈச்வரனுக்கும் காரணமான பரமகாரணவஸ்துவே இங்கே கோயில் கொண்டிருப்பதால், அதை 'அதிலங்கித த்ருஹிண ஸம்பு ஸக்ராதிகம்' (ப்ரஹ்மா, ஈச்வரன், இந்திரன் முதலியவர்களை தாண்டியது' என்று அருளிச் செய்கிறார். முடிவு சுலோகத்திலும் 'கேஸவ:' என்று குறித்தலால், 'க:' 'ஈசன்' முதலிய வர்களுக்குக் காரணம்' என்று உபக்ரமத்தை அனுஸரித்தே உபஸம்ஹாரத்தையும் அழகாக வர்ணித்தார். 'உம்முடைய பாத மூலத்தில் என் பரத்தை ஸமர்ப்பித்துவிட்டு, நான் நிர்பரனும் நிர்ப்பயனும் ஆனேன்' என்று வரதனிடம் முன்பே விஜ்ஞாபித்துள்ளார். "**निरन्तरं निर्विशतस्त्वदीयं, अस्पृष्टचिन्तापदमाभिरूप्यं** (நிரந்தரம் நிர்விஸத: த்வதீயம், அஸ்ப்ருஷ்ட சிந்தாபதம் ஆபிரூப்யம்) என்று வரதராஜ பஞ்சாஸத்தில் ஸாதித்தருளினார். தைத்திரீய சுருதி 'அல்பமேனும் த்யானத்தில் அந்தரம் செய்யக்கூடாது' என்று ஓதியதை அநுஸரித்து, இடைவிடாமல் நிரந்தரமாய் பேரருளாளனை மனத்தினால் அனுபவித்து வந்தார். பெரிய பெருமாளையும் அப்படியே அபிநமாக த்யானித்து வந்தார். ஆழ்வார்கள் நெஞ்சில் போல திவ்ய தேசத் தெம்பெருமான்கள் இவர் நெஞ்சில் கோயில் கொண்டவர்கள். அர்ச்சாமூர்த்திகளின் திவ்ய மங்கள விக்ரஹங்களுக்கு ஒருக்கால் பயம் ப்ரஸக்தமானதுதான் இவருக்கு பயம். அந்த பயத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று இங்கே ஸ்தோத்திரம் முழுவதிலும் அபயப்பிரார்த்தனை. பெருமாள் திருமேனிக்கு வந்த பயத்திலிருந்து நம்மைக் காப்பாற்ற வேணுமாகப் பெருமாளையே பிரார்த்திப்பதுதான் இந்த ஸ்தவத்தின் ப்ரதான கார்யம். உலகத்தாரின் பயங்களை நீங்கள் நீக்குவதெல்லாம் ஆநுஷங்கிகம். கோரமான ஸம்ஸார பயம் ஒரு பயமல்ல; ஏதோ ஒரு நாள் அது தொலையக்கூடும். எம்பெருமான் திவ்ய மங்கள விக்ரஹங்களுக்கு அபாயம் நேரிடுமாயின் அதனால் வரும் ஹானிக்கு ப்ரதீகாரம் மாயனும் காணகில்லான். இதை நினைத்து நடுங்கிப் பெருமாளையே சரணம் புகுகிறார்.



இருபதாவது சுலோகத்தில் 'இந்த ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் மற்றொன்றையும் வேண்டாத எமக்கு வந்திருக்கும் பயத்தை சமனம் செய்யும். இந்த ரங்கஸ்ரீயை விருத்தி பண்ணும். இந்த ரங்க விஷயமாக ஆச்ரிதர்களுக்கு சத்ருக்களாயிருப்பாரை உந்மூலநம் செய்யும்; இப்பூலோகத்திலேயே ஸ்வயம் வ்யக்தமான உம்முடைய திருமேனியை '**सदा पश्यन्ति सूरयः**' (ஸதா பஸ்யந்தி ஸூரய:) என்றபடி நிரந்தரம் ஸர்வ காலமும் ஸேவித்துக் கொண்டு முக்தர்களின் பேரின்பத்தை நாங்கள் அனுபவிக்கும்படி அருளவேணும்' என்று ப்ரார்த்தித்து, இருபத்தோராவது சுலோகத்தில் 'ஸ்ரீ காந்தனாகிய உம்மிடத்தில் நாங்கள் இப்படி எங்கள் பரத்தை ஸமர்ப்பித்தோம்' என்று மிகவும் ஸ்பஷ்டமாக பெருமாள் திருமேனியின் ரக்ஷணபரத்தைப் பெருமாளிடமே ஸமர்ப்பிப்பதாக ஸாதிக்கிறார். அநேக சுலோகங்களில் இந்த மதத்தையே பேசுகிறார். அர்ச்சா மூர்த்திகளில் ஈடுபட்டு த்யானம் செய்யும் எங்களுக்கு அம்மூர்த்திக்கு ஏதேனும் அபாயம் வந்தால், எங்கள் த்யானத்திற்கு விச்சேதம் நியதம். த்யேயமே நஷ்டமானால் தர்சனம் கூடுமோ? 'த்யான விச்சேதம் தானே வித்வானுக்கு பயம்' என்று சுருதி ஓதுகிறது. இதனிலும் கொடிய பாபமுண்டோ? கோகுலத்தில் சிசுவான கண்ணனுக்கு அபயத்திற்காக ரக்ஷை கட்டுகிறவர்கள் கண்ணன் திருநாமங்கள், விஷ்ணுகவசமந்திரங்கள் இவற்றைச் சொல்லி ரக்ஷை செய்தார்கள். **तेनैव रक्षां परमार्थ वेदी**" (தேநைவ ரக்ஷாம் பரமார்த்த வேதீ) என்று யாதவாப்யுதயம். வேறு ரக்ஷகனில்லையல்லவா? அந்த சுலோகத்தில் இதையெல்லாம் க்ரமமாகக் காட்டுவோம்.

யஜ்ஜுஷாம்—எவருடைய ப்ரீத்ய நுக்ரஹமுடையவருக்கு

இஹ—இங்கேயே

அபீதி:—பயமில்லாமையும்,

யதவதீரிதாநாம் — எவரால் உபேக்ஷிக்கப்பட்டவர்களுக்கு

பயம்—பயமும் (உண்டோ).

ஜகதி—உலகத்தில்

பயாபய விதாயிந: — பயத்தையும் அபயத்தையும் கொடுப்பவர்கள்

யந்நிதேசே—எவருடைய ஆக்ஞையில்

ஸ்திதா:—இருக்கின்றார்களோ,

அதிலங்கிதத்ருஹிண—ஸம்பு ஸக்ராதிகம் — ப்ரஹ்மா, ஈச்வரன் இந்திரன் முதலியவர்களைத் தாண்டியதும்,

ரமாஸகம்— பெரிய பிராட்டியாருடைய தோழமை கொண்டதும்,

தத்— அந்த

ஏதத்— இந்த

கிமபி—சொல்லுக்கு அடங்காததையும்

ரங்கதுர்யம்—ரங்கதுரத்தை நிர்வஹிக்கும்

மஹ:—தேஜஸ்ஸை

அதீமஹே—அத்யயநம் செய்கிறோம் (அநுஸந்திக்கிறோம்).

பெரியதோர் பயத்திலிருந்து விமோசகமாகும்படி அபய ப்ரார்த்தனை செய்வதால் பெருமாளுடைய ரக்ஷணத்தை ‘ஸ்வாஶ்ரிதாபயப்ரதன்’ என்று துவக்குகிறார். அந்வயவ்யதிரேகங்களாக முதலடியில் லக்ஷணங்கள் ஸாதிக்கிறார். ‘எங்களுக்கு அபயமே தான் ந்யாய்யம்; பயத்திற்குப் ப்ரஸக்தியே இல்லை. பெருமாள் க்ருபைக்குப் பாத்திரமான எங்களுக்கு அபீதி நியதமாயிருக்கவேண்டுமே. பெருமாளுடைய உபேக்ஷைக்கு (அவதீரணத்திற்கு, திரஸ்காரத்திற்கு) விஷயமானுருக்கல்லவோ பயம் வரலாம். நாம் அவரால் அவதீரிதரல்லவே; பயம் வந்த காரணம் அறிகிலோம். வந்திருக்கும் பயத்தை உடனே போக்கவேணும். “यदनुग्रहतस्सन्ति न सन्ति यदुपेक्षया” (யதநுக்ரஹத: ஸந்தி ந ஸந்தி யதுபேக்ஷயா) என்று நித்யமான பொருள்கள்கூட எவர் அநுக்ரஹத்தால் இருக்கின்றனவோ, எவர் உபேக்ஷித்தால் இல்லாமற்போமோ என்று சுகர் ஸாதித்ததை அநுஸரித்தது இந்த முதலடி லக்ஷணம். இந்த லக்ஷணத்தை மனத்திற்கொண்டே இவரை நாம் ப்ரீதியோடு ஸேவித்தால், நம்மிடம் இவருக்கு அநுக்ரஹம் உண்டாகி நம் பயம் தீரும் என்று தீர்மானித்து, இவரை ஸேவித்து மல்லுக்கட்டி அபயம் பெறுவோம் என்று முதலிலேயே தேற்றிக் கொள்ளுகிறார்.

அபயஸித்தி என்னும் ப்ரயோஜனத்திற்காக அவனை ஸேவித்து, அவனை ஜுஷ்டனாக (ப்ரீதனாக)ச் செய்வோம். பெருமாளுடைய ப்ரீதியுமிருக்கட்டும், அவருபேக்ஷையும் இல்லாமலிருக்கட்டும். உலகத்தில் பயமுண்டாக்கக்கூடிய அதிகாரிகளான வாயு, ஸூர்யன் முதலியவர் பயமுண்டாக்கினால், என் செய்வோம் என்று கேட்பீரோ? அவர்களிடமிருந்து பயத்திற்குப் ப்ரஸக்தி இல்லை. உலகத்தில் பயாபய காரணர்களான அவர்கள் இவருடைய ஆக்ஞையில் (ப்ரஶாஸநத்தில்) நிற்பவர். இதுவும் ஓர் லக்ஷணமாகப் பணிக்கப்படுகிறது. இரண்டாமடியைத் திருப்பி மாற்றி அந்வயிப்பதில் மிக ரஸமுண்டு: ‘எவருடைய கட்டளைப்படி நடக்கும் பக்தர்கள் உலகத்திற்கு பயத்தையும் அபயத்தையும் கொடுக்கவல்லரோ. பகவதாஶ்ரிதராய், அவர் கட்டளையில் நிற்பர் இட்டது சட்டம் உகலத்தின் பயாபயங்கள். ப்ரஹ்ம நிஷ்டருக்குத் தேவர்களும் கெடுதல் செய்யமுடியாது; தேவர்கள் அவர்களுக்கு பலி ஸமர்ப்பித்துப் பூஜை செய்கிறார்கள்’ என்று உபநிஷத்து கூறுகிறது. இதனால் வாயு, ஸூர்யன் முதலிய தேவர்களிடமிருந்து பயம் வராதென்று கைமுத்யத்தால் ஸித்தம். ‘எவனுடைய, எவனுடைய, எவனுடைய’ என்று மும்முறை படித்துவிட்டு, ‘அந்த இச்சுடர்’ என்கிறார். ‘அதை இதுபோல் ப்ார்த்தார் ரிஷிவாமதேவர்,’ என்று உபநிஷத். மூன்று லக்ஷணங்களால் குறித்து, ‘அது ப்ரஹ்மம்’, என்றது போல, இங்கு ‘அது இந்த ரங்க ஜ்யோதிஸ்’ என்கிறார். ப்ரஹ்மா



ருத்ரன், இந்திரன் முதலானவர்களால் பயம் வந்தாலென்ன செய்கிறது என்றும் பயப்படவேண்டாம்; இது அதையெல்லாம் மீறிய மஹஸ். இது அப்ரமேயமான தேஜஸ். ‘கிமபி’ என்பதற்கு ‘மாநாதீதம்,’ ‘அப்ரமேயம்’ என்று கருத்து. ‘அந்த தேஜஸ் (ராமன்) அப்ரமேயமே; ஏனென்றால் ஜானகி அதனுடைய வளல்லவோ’ என்ற மாரீசன் வார்த்தையை நினைத்து, ‘ரமாஸகமான ஏதோ ஒரு அப்ரமேயமான தேஜஸ்’ என்கிறார். சரணாகதியான இந்த ஸ்தவத்தில் ப்ரணவாந்தஸ் ஸ்திதமான ப்ரஹ்ம தேஜஸ்வினிடம் பரத்தை ஸமர்ப்பிக்கையில், ‘லக்ஷ்மீ ஸஹாயமான தேஜஸ்’ என்கிறார். சரணாகதியைப் பண்ணினதாகச் சொல்லும் இருபத்தோராம் ச்லோகத்திலும் ‘ஸ்ரீ காந்தனிடம் பரத்தை ஸமர்ப்பித்தோம்’ என்கிறார். मकारस्तु तयोर्दासः (மகாரஸ்து தயோர் தாஸ:) என்ற ப்ரணவ சுருதியை நினைக்கிறார். எந்த மஹஸ் என்றால், ரங்க துரத்தை (ரங்க பாரத்தை) வஹிக்கும் தேஜஸ். ரங்கமென்பது ப்ரணவம்; ப்ரணவதுரத்தை நிர்வஹிக்கும் தேஜஸ். ப்ரணவத்திலுள்ள தேஜஸ்ஸைப் பணிக்கையில், ‘அதீமஹே’ என்கிறார். ப்ரணவ தேஜஸ்ஸான ரங்க தேஜஸ் அத்யயனம் செய்ய யோக்யமானது. வேதம் முழுவதும் ப்ரணவத்திற்குள் உள்ளது. ‘ரங்கதுரத்தை நிர்வஹிக்கும் தேஜஸ்’ என்பதில் வேறு ரஸமுமுண்டு. ரங்கத்தை ரக்ஷித்து அதற்கு அபாயமில்லாமல் நிர்வஹிக்கவேண்டும் என்பது தான் இந்த ஸ்தவத்திற்குப் பயன். ரங்கத்தின் பாரத்தை அவரை வஹிக்கப் ப்ரார்த்திக்கிறோம் என்றும் ஸூசகம். மற்றொன்றும் வேண்டாம்; ரங்க துரந்தரன் என்னும் திருநாமம் அந்வர்த்தமாக இருக்கவேணும். ‘துர்ய’ என்பது அச்வத்தையும் சொல்லும்; ‘ஹயமஹஸ்’ என்று தமக்குப் ப்ரியமான ஹயக்ரீவ தேஜஸ்ஸையும் சேர்த்து அபிந்நமாக நினைக்கிறார்.

दयाशिशिरिताशया मनसि मे सदा जागृयुः
श्रियाध्युषितवक्षसः श्रितमरुद्वृधासैकताः।
जगद्दुरितघस्मरा जलधिडिम्भडम्भस्पृशः
सकृत्प्रणतरक्षणप्रथितसंविदः संविदः ॥ २ ॥

தயாஶிஶிரிதாஶயா மநஸி மே ஸதா ஜாக்ருயு:
ஶ்ரியா த்யுஷிதவக்ஷஸ: ஶ்ரிதமருத்வ்ருதாஸைகதா:।
ஜகத்துரிதகஸ்மரா: ஜலதி டிம்ப டம்பஸ்ப்ருஶ:
ஸக்ருத்ப்ரணதரக்ஷண ப்ரதிதஸம்வித: ஸம்வித: ॥ 2 ॥

தயா—க்ருபையால்,
ஶிஶிரித—குளிர்ந்த
ஆஶயா:—திருவுள்ளத்தையுடையவர் [மயமாயும்

ஶ்ரியா—பிராட்டியால்
அத்யுஷித—வாஸம் செய்யப்படும்
வக்ஷஸ:—திருமார்பு மயமாயும்,

ஶ்ரித மருத்வ்ருதா ஸைகதா: } — காவேரி மணலில் சயனித்திருப்பவர் மயமாயும்,

ஜகத்—உலகத்தின்
துரித—பாபத்தையெல்லாம்
கஸ்மரா:—விழுங்கிவிடுபவர் மயமாயும்,

ஜலதிடிம்ப டம்பஸ்ப்ருஶ: } — குட்டி ஸமுத்ரம் போன்றவர் மயமாயும்

ஸக்ருத்—ஒருதடவை
ப்ரணத—சரணமடைந்தவரையும்,

ரக்ஷண ப்ரதிதஸம் வித: } — { ரக்ஷிப்பதாகப் பிரஸித்தமாக ப்ரதிக்ஞைசெய்தவர் விஷயமாயும்

ஸம்வித:—புத்திவ்ருத்திகள்,
மேமஃவஸி—என்னுடைய மனதில்
ஸதா—எப்பொதும்,
ஜாக்ருயு:—ஜாகரூகமாகக் குடிக்கொண் [டிருக்கவேண்டும்.

இந்த சரணாகதியை மிகவும் கெட்டியாய்ச் செய்ய வேணும். இந்த சரணாகதிக்குப் பலம் உடனே தப்பாமல் கிடைக்கவேணும். ஸமுத்ரக் கரையில் புளிநத்தில் (மணலில்) நடந்த விபீஷண சரணாகதி அவஸரத்தை நினைத்து, அத்தோடொக்கப் பெருமாளுடைய ரங்கசயநத்திலுள்ள அம்சங்களை மனதில் பாவனை செய்கிறார். அங்கே கடற்கரை மணல், இங்கே ஸமுத்ர பத்நியாகிய காவேரியின் மணலில் சயநம். பதியாகிய ஸமுத்ரத்தைக் காட்டிலும் பத்நிகளான யமுனைபோன்ற புண்யநதிகளுக்கு சுத்தி அதிகம். "தூயபெருநீர் யமுனைத் துறைவனை." 'மருத் வ்ருதா' என்று காவேரிக்கு சுருதியில் திருநாமம். வேதப் பிரஸித்தமான புண்யநதி என்று வ்யஞ்ஜநம். ப்ரணவப் பெருமாள் வேதப் பிரஸித்த நதியில் சயனித்தார். கடற்கரையில் நீர்க்கடலுக்கு எதிரில் ஓர் நீல தேஜோ வெள்ளமாய் பெருமாள் ப்ரதிஶயனம் செய்ததை நினைக்கிறார். இங்கே அரங்கன் ஓர் குட்டிக் கடலாகப் பிரகாசிக்கிறார். 'பச்சைமா கடல்போல் மேனி' என்று இங்கே ஒருவாறு அநுபவம். अर्णवतर्णकम् (அர்ணவதர்ணகம்) என்றார் ஸ்ரீ பட்டர். ஆச்ரிதர்களின் பாபக்கடலை அப்படியே உறிஞ்சி விடுவதாக ஸங்கல்பம். உலகத்தின் பாபக்கடலுக்கு எதிரியாக இக்குட்டிக்கடலின் சயனம். सकृदेव प्रपन्नाय.........अभयं सर्वभूतेभ्यो ददामि एतद्व्रतं मम (ஸக்ருதேவ ப்ரபந்நாய.........அபயம் ஸர்வபூதப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம) என்று ப்ரதிக்ஞை செய்த அவஸரத்தையும் காட்டுகிறார். கடற்கரையில் எல்லோரும் பார்க்கும்படி பிராட்டியின் ஸந்நிதாநம் இல்லை. பிராட்டி அக்கரையிலும் பெருமாள் இக்கரையிலுமாயிருந்த அவஸரம். ஆனால் பிரிந்திருந்த பிராட்டியைச் சேர்த்து வைப்பதற்காகவே தம்மை அங்கீகரிக்கும்படி விபீஷணன் பிரார்த்தித்தான் என்றும் சொல்லலாம். இருவரையும் சேர்த்துவைத்து இருவருயிரையும் காப்பாற்றி தாமும் பிழைக்க அங்கே ஆஶ்ரயணம். "ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ" என்று தம்பதிகளைக் கூட்டவே அவர் மநோரதம். இங்கு இருவர் திருமேனியையும் காப்பாற்ற சரணாகதி; அங்கும் அது உண்டு. ஸ்ரீ உறையும் திருமார்பை யுடையவர். "பூமன்னும் மாது உறை மார்பன்'. பிராட்டி திருமார்பை ஆஶ்ரயித்திருப்பதால் தான் ஹ்ருதயம் தயையினால் குளிர்ந்திருக்கிறது. பெருமாள் திருவுள்ளம் சீதளமானதுதான்; நாம் தான் அதன் ப்ரயோஜநத்தை அடையாமல், அந்தத் தயையைத் தகைகிறோம். 'ஸம்வித்' என்னும் புத்திகள் என் மனதில் தூங்காமல் விழித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று ப்ரார்த்தனை. பெருமாள் தூங்குவது போலிருந்தாலும் அவர் விஷயமான என்னுடைய பாவனைகள் தூங்காமல் ஸதா விழித்திருக்கவேண்டும். பெருமாளுக்கு விசேஷணங்களாகக் கூறப்பட்டதெல்லாம், நம்முடைய பாவனையில் ஆகாரங்களாகக் கூடி, ஸமாநாதிகரணமாகின்றன. விஶிஷ்டமான ஸம்வித்துக்களே; நிர்விஶேஷ நிராகார புத்தி யல்ல. இந்த விசேஷணங்களையுடைய பெருமாளால் உபரக்தமான புத்திகள்; திருக் காவேரியில் பள்ளிகொண்ட பெருமாள் விஷயமான பாவனை எனக்கு எப்போதும் இருக்கவேண்டும் என்று ப்ரார்த்திப்பதால், பாவனைக்கு விஷயமான பெருமாள் திருமேனியும் விசேஷணங்களும் நித்யமாய் நிரபாயமாயிருக்கவேண்டும் என்று முக்கியக் கருத்து ஸூசிதமாகிறது. இந்த மநோரதத்தைப் பூர்த்தி செய்ய பெருமாள் க்ருபை செய்யவேணடும் என்று ஆசையை விளக்குகிறார். காயத்ரியில் சுபமான புத்தி வ்ருத்திகளின் ப்ரசோதநத்தின் ப்ரார்த்தனை போல் இங்கும் முன் ச்லோகத்தில் 'அபீமஹே' என்று பேசி, அடுத்தாற் போல் அங்கு போல இங்கே யீகளாகிய ஸம்வித்துக்களின் ஜாகரணத்தையும் பிரார்த்திக்கிறார். காயத்ரீஜபம் எப்படி நித்யமோ, அப்படியே ஸ்ரீ ரங்க ஸ்ரீ யின் வ்ருத்தியின் பிரார்த்தனையும் நித்யம். அதற்கு லோபம் வருவதை ஸஹிக்க மாட்டோமல்லவா ?



यदद्य मितबुद्धिना बहुलमोहभाजा मया
गुणग्रथितकायवाङ्मनसवृत्तिवैचित्र्यतः ।
अतर्कितहिताहितक्रमविशेषमारभ्यते
तदप्युचितमर्चनं परिगृहाण रङ्गेश्वर ॥ ३ ॥

யதத்ய மிதபுத்திநா பஹுள-மோஹ-பாஜா மயா
குண-க்ரதித-காய-வாங்-மநஸ-வ்ருத்தி-வைசித்ர்யத:।
அதர்க்கித-ஹிதாஹித க்ரமவிஶேஷம் ஆரப்யதே
ததப்யுசிதம் அர்ச்சநம் பரிக்ருஹாண ரங்கேச்வர ॥ 3 ॥

ரங்கேச்வர—ஸ்ரீ ரங்கராஜனே!
அத்ய—இன்று,
குண—முக்குணங்களால்
க்ரதித—வரிந்து கட்டப்பட்டிருக்கும்
காயவாங் மநஸ — தேஹம், வாக்கு, மநஸ்
வ்ருத்தி—இவற்றின் போக்குகளின்
வைசித்ர்யத:—வைசித்ர்யத்தால்,
பஹுளமோஹ பாஜா — எத்தனையோ மோஹத்தை யடைந்த
மிதபுத்திநா—சிறிய புத்தியையுடைய
மயா—என்னால்,

அதர்க்கித ஹிதாஹித க்ரமவிசேஷம் — எது நல்ல வழி, எது தவறானது என்று ஊஹித்துத் தெரிந்து கொள்ளாமல்,
யத்—எது (எந்த இந்தத் துதி),
ஆரப்யதே—ஆரம்பிக்கப்படுகிறதோ,
தத் அபி—அதையும்
உசிதம்—தகுதியான
அர்சனம்—பூஜையாக,
பரிக்ருஹாண—ஏற்றுக்கொள்ளவேணும்.

சரணாகதி பூர்ணமாயின் பலிக்குமென்பது திண்ணம். பெருமாள் திருமேனியின் க்ஷேமத்திற்காகச் செய்யும் சரணாகதி ரூபமான அர்ச்சனை ஸ்துதி குறைவில்லாமல் பூர்ணமாயிருக்கவேண்டுமே என்று அபாரமான கவலை. எங்கே குறைவு வந்து சரணாகதி அபூர்ணமாகி, கோரிய பலம் தவறி விடுமோ என்று பயம். பெருமாளுடைய தயாதி கல்யாணகுணங்களைப் பூர்ணமாய் நெஞ்சில் தரிக்கவேணும். என் அல்ப விஷயமான மதி எங்கே? பெருமாளின் எண்ணிறந்த கல்யாண குணங்களெங்கே? பெருமாளுடைய தயை என்னும் குணம் என் புத்தியில் நிரம்பியிருக்க வேண்டும் என்கிறார். அவர் தயை எல்லையற்றது; என் புத்தி பரிமிதமானது. அதுதான் சூந்யமாக இருக்கிறதோ? அவ்விதமிருந்தால் அதில் பெருமாள் தயை கொஞ்சமேனும் புகுரலாம். புத்தி மிதம்; அதிலுள்ள மோஹத்திற்குக் கணக்கில்லை என்கிறார். மிக்க மோஹத்தால் நிரம்பின சிறு புத்தியில் பெருமாள் அளவற்ற பெரும் குணம் புகுந்து நிற்க இடமில்லையே. நிரந்தரமாகப் பெருமாளைப் பஜிக்கப் பெறவில்லை. மோஹ பஜநத்திற்குக் குறைவில்லை. அதிகம் மோஹத்தால் மூடப்பட்டிருப்பதற்குக் காரணமென்ன? குணம். என்ன குணம்? நல்ல குணமாயின் பெருமாள் குணம் குடியேற விரோதமில்லை. அவர் குணத்திற்கும் என் குணத்திற்கும் நாமம் மட்டும் தான் ஒன்று. என் தோஷத்திற்கே என் குணம் என்று பெயர், முக்குணப் பிரகிருதி என் குணம். "தோஷக்ருஹீதகுணாம்" (दोषगृहीतगुणाम्) என்று ச்ருதி இதை தொடக்கத்தில் சுகர் 'அஜை' என்னும் பிரகிருதிக்குத் த்ரிகுணம் என்று பெயர் மட்டுமே; தோஷத்திற்கே குணம் என்று பெயர் க்ரஹிக்கப்படுகிறது என்று வேடிக்கையாய்க் காட்டினார். குணத்தால் என் உடலம், வாக்கு, மனஸ் எல்லாம் விசித்திரமாய்க் கட்டப்பட்டு, ஒன்றொன்று விசித்திரமாய்க் காடுபாய்கிறது. முன் சுலோகத்தில் ப்ரார்த்தித்தபடி பெருமாள்



[illegible] விஞ்சி, [illegible] என்று ஓதினபடிக்கு அர்த்தங்களும் ப்ரதிஷ்டிதமாயிருக்கும் என்று திருவுள்ளம். ஆகாங்க்ஷையன்றிக்கே யிருக்கச்செய்தே சொன்னால் அர்த்தம் ப்ரதிஷ்டிதமாகாது என்று இப்படி வ்யதிரேகமாகச் சொன்னது, ஆகாங்க்ஷை உள்ளபோதே சொல்லவேணும் என்கையில் [illegible]

அவ—ஆகில் மணக்கால் நம்பியை ஆளவந்தார் அநுவர்த்தியாதே இருக்க "[illegible]" என்றும், "[illegible]" என்னும், "[illegible]" என்னும் "[illegible]" என்னும் "[illegible]" இத்யாதிகளில் நிஷேதங்கள் கிடக்கச்சொல்லுமளவில் "[illegible]" என்னும் "[illegible]" என்னுமிப்படி ப்ரமாணங்கள் இருக்க, இதுகளுக்கு விபரீதமாக, மணக்கால் நம்பிகள் தாமே ஆளவந்தாரை பஹுகாலம் அநுவர்த்தித்து ஆகாங்க்ஷையை உண்டாக்கி உபதேசித்தது கூடுமோ என்னவருளிச் செய்கிறார்.

மூ—மணக்கால் நம்பி ஆளவந்தாருக்கு நெடுநாள் பச்சையிட்டு ஒரு விரகாலே ஆகாங்க்ஷை உண்டாக்கி உபதேசித்தது, ஆசார்ய குலத்திற்குத் தாமொரு கிஞ்சித்காரம் பண்ணுகையிலும் பரமாசார்ய நியோகத்தை கடுகத் தலைக்கட்டுகையிலும் உண்டான த்வரையாலும் சிரகால பரீக்ஷாதிகள் வேண்டாதபடி "[illegible]" என்கிற யுக தர்மாநுஸாரத்தாலும் உபபந்நம் என்று.

வ்யா—மணக்கால் நம்பியாகிறார்—ஸ்ரீமந் நாதமுநிகள் திருவடிகளான உய்யக்கொண்டார் ஸ்ரீ பாதத்து முதலிகள். ஆள்வந்தாருக்கு நெடுநாள் பச்சையிட்டு இத்யாதி—ஆளவந்தாருக்கு உபதேசிக்கும்படி ஸ்ரீமந் நாதமுநிகள் நியமநம் உய்யக்கொண்டாருக்கானாலும் ப்ராப்த காலத்திலே ஆளவந்தார் ராஜ்யபோகாஸக்தராய் இருக்கையாலும் தாம் யோகாநுஷ்டாந பரராகையாலே உத்தான காலமறியப்போகாதாகையாலும் எப்படியாவது ஆளவந்தாரை நல்வழி நடத்தி வைக்கையிலே தம்மாசார்யருக்குத் திருவுள்ளமாகையாலும். இவர் மணக்கால் நம்பிகளுக்கு நியோகிக்க இவர் உபதேசித்தாராயிற்று. ஆளவந்தாருக்கு என்றது—இவருடைய ராஜ்ய போகாஸக்திக்கு ஜ்ஞாபகம். இது இவர் வ்ருத்தாந்த ப்ரதிபாதகமான பூர்வாசார்ய க்ரந்தங்களிலே அநுஸந்தேயம். நெடுநாள் பச்சையிட்டு என்றது—சங்காத்யோதகம்—பச்சை = உபஹாரம். இது ரஸோக்தியாயு

யிருக்கும். பச்சையான தூதுவளையிட்டு வசீகரித்தார் என்று ஸம்ப்ரதாயம்.

"ஶிஷ்யஸ்யாபி நிராஶஸ்ய ஸாஜாதம் தைவதம் குரு:" என்று சிஷ்யனுக்குச் சொல்லியிருக்க ஆசார்யராயிற்று உபஹாரமிட்டு சிஷ்யரை அநுவர்த்தித்தது, நெடுநாள் என்றது—ஸம்வத்ஸரவாஸி நே ஸம்வத்ஸரம் தத்அர்தம்வா இத்யாதிகளிலே சிஷ்ய சிக்ஷார்த்தமாகச் சொன்ன காலத்தைக் காட்டிலும் இவர் அநுவர்த்தித்தகாலதைர்க்யத்தைச் சொல்லுகிறது. ஒரு விரகாலே என்றது, இவர் பச்சையிடும் காலமெல்லாம் ஒரு கேள்வி பிறவாதேயிருந்து ஓரளவிலே அதை நிறுத்தினவாறே இன்று ஏன் இல்லை என்று ப்ரஸ்தாவம் உண்டாய் அம்முகத்தாலே மணக்கால் நம்பிகளுக்கும் ஆளவந்தாருக்கும் ஸம்வாதமுண்டாய் அத்தாலே என்றபடி; விரகு=காரணம்; ஆகாங்க்ஷை உண்டாக்கி இதி—நீர் போகாஸக்தராயிருந்தீர். போக்ய வஸ்துவை ஆராய்ந்தீரில்லை. இதுமக்கு வந்தேறி—பித்ரு பிதாமஹாதி பரம்பராப்ராப்தமன்று. இதோப்யுத்க்ருஷ்டமாய் உம்முடைய பித்ரு பிதாமஹா த்யநுபூதமாய் அத எவ உமக்கும் ப்ராப்தமாயிருப்பதொரு போக்யவஸ்து என்னிடமுண்டு. அதை உம் பாட்டனார் உமக்குக் கொடுக்கும்படி சொல்லிப் போந்தார். அதைப்பெற்று அநுபவிக்கப் பாரும் என்று இப்படி ப்ரரோசநம் பண்ணி ஆகாங்க்ஷை பிறப்பித்தார் என்றபடி, உபதேசித்தது என்றது—ஆளவந்தார் தம்மை அநுவர்த்திப்பதற்கு மத்யே அவகாசம் கொடாதே உபதேசித்தது என்றபடி. ஆசார்ய குலத்திற்கு=தம் பரமாசார்ய குலத்திற்கு—குலத்துக்கென்றது—ஆசார்ய புத்திர பௌத்திராதிகளும் உத்தேச்யர் என்று அறிவிக்கைக்காக. தாமென்றது. உய்யக்கொண்டார் தாம் ஆசார்ய நியோகத்தைத் தலைக்கட்டாதே இவரை, நியோகித்தாப்போலே இவரும் மற்றொருவரை நியோகியாதே என்றபடி. ஒரு கிஞ்சித்காரம—விழிகண்குருடனை தென்னை அயர்வருமமரர்கள் பரிஷத்துக்கு அர்ஹராம்படி பண்ணின ப்ரீதிக்குப் போக்கு வீடாக செய்யும் கிஞ்சித்காரம்; கைங்கர்யமென்றபடி. ஒரு என்றது விலக்ஷணமென்னதாய் "ஸம்வத்ஸரம் தத்அர்தம்வா" "ஶரீரமர்தம் ப்ராணம்ச" இத்யாதிகளிலே சாஸ்திரங்களிற் சொன்ன கிஞ்சித்காரங்கள் அன்றிக்கே தம்மை அயர்வருமமரர்கள் பரிஷத்துக்கு அர்ஹராம்படி உய்யக்கொண்டார் கடாக்ஷித்ததற்கு அநுகுணமாக ஆளவந்தாரையும் ஹேய போகங்களை த்யஜிக்கும்படி பண்ணி உயர்வற வுயர்நல முடையவனநுபவத்துக்கு அநுகுணமாக மயர்வற மதிநல மருளின கிஞ்சித்காரமென்றதாயிற்று, பரமாசார்ய நியோகத்தை—மணக்கால் நம்பிகளுக்கு ஸ்ரீமந் நாதமுனிகள் பரமாசார்யராகையாலே உய்யக் கொண்டாருக்கு நியோகித்ததை பரமாசார்ய நியோகம் என்கிறார்.



பரமாசார்யர் ஸ்வாசார்யருக்கு நியோகித்ததை என்றபடி. கடுகத் தலைக்கட்டுகையிலும் உண்டான த்வரையாலும் இதி—ஸ்வாசார்யர் ஆளவந்தாரை திருத்திப்பணி கொள்ளும்படி நியமிக்கையாலே தமக்கு ப்ராப்தி உண்டாய் குரு காவலப்பன் உய்யக் கொண்டாரோபாதி தாமும் யோகாஸக்தியாலே யோகத்திலே புகுந்தால் உத்தாந காலமறியப் போகாதாகையாலும்,

ஸ்நாகவ்ருஷ்டிஸஹஸ்ரம் வா நாராயண த்ருஷ்டிகாக்ஷணம் ।
ஸ்வஜனே வா ஸம்பந்தே விதி ஸம்த்ருஜீவனம் ததஸ்து ॥

என்று விஷயம் பரமபோக்யமாகையாலே அதிலே புகுறவேணும் என்று த்வராதிசயத்தாலே அதற்கு முன்னமே தானே ஆளவந்தாரை இத்தர்சந ப்ரவர்த்தகராக்க வேண்டுமென்கிற நினைவாலேயுமாயிற்று கடுகத்த்வரை, ஸாதநமாக வாதல் ஃபலமாகவாதல் யோகாநுஷ்டாநம் வேணுமென்றிறே ஸம்ப்ரதாயம். ஆகையாலேயிறே பெரியரஹஸ்யத்திலே ஸாத்யோபாய சோதநத்திலே இக்காலத்திலும் உபாஸநத்துக்கு அதிகாரிகள் ஸ்வயம் ப்ரயோஜநமாக நிஷ்டரான பூர்வாசார்யர்கள் போலே ஸம்பாவிதரிறே, என்று பிள்ளையருளிச் செய்தது. ஸ்ரீ பாஷ்யகாரரும் நித்யத்திலே கதந்த்ர விஶ்ராமித விஶததமப்ரத்யக்ஷாநுப்ராப்தா நாநுத்யாநயோகநிரதோபவ ஸ்யாமீத என்று அருளிச்செய்தார். ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு முன்பு ஸாதநதயாநுஷ்டாநமுண்டாய் ஆழ்வார் நாதமுனிகளுக்கு ஆசார்யரான பின்பாயிற்று ஃபலதயாநுஷ்டாநம்வருவது, இதுதான் ப்ராப்யருசி குலையாதே வளர்ந்து போருகைக்காக வாயிருக்கும். ஆகையாலே யாயிற்று, ஸ்ரீவைகுண்டகத்யத்திலே ப்ரபந்நஸந்தாந கூடஸ்தரான எம்பெருமானார் "ததஸ்ஸ்வப்ருத்ய ஹரோத்ராஜீவநாயைவ ஸ்தநாஸ்மரேத" என்று தொடங்கியருளிச் செய்தது, தலைக்கட்டுகையிலுமென்றது. தாம் கொஞ்சம் சொல்லி தவிலி என்று ஒரு போக்கு வீடு சொல்லிவிடாதே "ஸ்வஸ்ரு ஸாதாந்நி ஸ்ரஷ்டார ஸ்நாத ஸதம்ஸம் । வக்ஷ்ய தித்ஸ மாஜ்ஞேஷு" என்கிறபடியே ச்ரோதவ்யசேஷமில்லாதே பூர்த்தி செய்கையிலும் என்றபடி. உண்டான த்வரையாலும் இதி—மணக்கால் நம்பிகளுக்கு, ஆளவந்தாருக்கும் தமக்கும் அவதாரஸமாப்திகாலம் அறியப்போகாதாகையாலே ஜீவஞ்சோம் ஸ்யாமா: ஸம்ஹாவயதி கீர்த்தி ஸக்யாஹ நாஸ்மா: என்கிறபடியே இப்போதே உபதேசிக்கவேண்டு மென்கிற த்வரை உண்டாயிற்றென்றபடி, சிறகால பரீக்ஷாதிகள் வேண்டாதபடி இத்யாதி. இந்தயுகத்திலே நரகத்திற்கு நாற்றங்காலான ஸம்ஸாரமண்டலத்திலே நல்வழி நடப்பார் துர்லபராயிருக்கையாலே அபிமுகராய் இருப்பாருக்கு பரீக்ஷைகள் கொண்டால் புத்தி பேதங்கள் உண்டாய் இருந்த ஆபிமுக்யமும் கூடப்போய் விடலாமா,

கையாலே அதாகாதென்று திருவுள்ளம் "பொயநம ப்ரஹ்ம: குருராஜு" என்றது ஆகாங்க்ஷை உண்டாக்குவதில் ப்ரமாணம். உபதேசத்துக்கு ப்ரமாணமன்று. இங்கு "ஸம்வத்ஸரம் தத்யர்த்தம்வா" இத்யாதிகளில் சொன்ன பரீக்ஷாதி மூல் குண நிச்சயபூர்வகமாக என்று பெரிய ரஹஸ்யத்திலே ஆசார்யக்ருத்ய ஸ்ரீ ஸூக்தி விரோதம் சொல்ல வொண்ணுது. சாஸ்திரங்களில் சொன்ன பரீக்ஷை எல்லாம் குண நிச்சயத்துக்காகையாலே இக் குணவானுக்கல்லது ஆகாங்க்ஷை உத்தம்பியாதாகையாலே ஆகாங்க்ஷை உத்தம் பித்தவாறே குணபூர்த்தி உண்டென்று கொண்டு பரீக்ஷை வேண்டாதபடி உபதேசிக்கலாமென்று திருவுள்ளம். ஆசார்யக்ருத்யத்திலே "ஸம்வத்ஸரம் தத்யர்த்தம்வா" இத்யாதி ப்ரமாணே பாதாநாநந்தரம்.

யஷ்ப்ஜ்ஞயொவஸனாநாம் ஜெஶாஸா நிவாஸிநாம் ॥
ஐஷெரவஷெஶ: கதவ்ய: நாராயணா தாக்ஷநாம் ॥

என்கிற ப்ரமாணத்துக்கு

ஸத்விஶேஷமாஹ—யஷ்ப்ஜ்ஞயெதி, நாராயணெ வெஷகாஸ்யம் ஹஜதாம் யஷ்ப்ஜ்ஞயொவஸனாநாம் விரவரீக்ஷாம் 'விநாவி ஐஷெரவஷெஶ: கதவ்ய ஐத்யர்த்த:" என்று ஸ்ரீஸாராஸ்வாதி நியமிட்டருளினது. முஹு: போதநம் என்றது உபதேசத்தில் ஸ்வரஸமாகாது.

அவ—ஆனாலும் மணக்கால் நம்பிகள் ஆளவந்தாருக்கு இத்தனை உபகாரகராயும் ப்ரதாநாசார்யராயுமிருக்க, "யமாதெவெதமாகாரள" "தெவதிவாஉாயத்ஆவாஸீத" "கூரமாவுகாமயெஜீாநு" "ஹமவத்ந்நம் ஸூாக்ஷ்யம்த்ரவ்வந்நவமெவக்கம்" என்று ப்ரமாணகதிகளிருக்க, ஆளவந்தார் தாம் ஸ்தோத்திரமருளிச் செய்யும்போதும் சரணம் புக்கபோதும் நம்பிகளை முன்னிடாதே அவருக்காசார்யராயிருந்த உய்யக்கொண்டாரையும் முன்னிடாதே வ்யவஹிதராயிருந்த ஸ்ரீமந் நாதமுனிகளை முன்னிட்டது சேரும்படி எங்ஙனே என்னவருளிச்செய்கிறார்.

மூ—ஆளவந்தார் தாம் நாதமுநிகளை முன்னிட்டு ஸ்தோத்திரம் பண்ணித்தும் சரணம் புக்கதும் தம்முடைய ஆசார்யருக்கு இது ப்ரியதமமென்றும் தமக்கு ஆசார்யவத்த்த முதலான ஸம்பத்துககளுக்கு மூலம் நாதமுனிகள் வம்சத்தில் பிறவி என்றும் தோற்றுகைக்காகவும் ஆசார்ய விஷயத்தில் போலே பரமாசார்ய விஷயத்திலும் க்ருதஜ்ஞதாதிகள் வேணும் என்கைக்காகவும்.

வ்யா—நாதமுனிகளை முன்னிட்டு ஸ்தோத்திரம் பண்ணித்தும் இதிஸ்தோத்ராரம்பத்திலே—"நமோऽசிந்த்யாத்புதாக்லிஷ்ட" த்யாதிகளான மூன்று ச்லோகங்களாலே நாதமுனிகளை திருவடிதொழுது அப்புறமாயிற்று ஸ்தோத்ராரம்பம் பண்ணினது. சரணம் புக்கதுவும்,—நாதமுநிகளை முன்னிட்டு சரணம் புக்கதுவுமென்று அந்வயித்துக்கொள்வது. ஸ்தோத்திரத்திலே "ஸகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே" என்று தாம் சரணம் புக்கபோது, இவ்வுபாயத்திற்கென்று ஸர்வஸாதாரணமாய் தம்மிடத்திலுமுள்ள ஆகிஞ்சந்யா நந்யகதித்வங்களைக் காட்டிலும் தமக்கு அஸாதாரணமாய் எம்பெருமானுக்கு மநதிக்ரமணீயமாயிருந்த, குணயோகத்தைச் சொல்லுகிற, ஸக்ருதி த்வச்சரணாரவிந்த என்கிற ச்லோகத்தாலே சரணம் புக்கதுவு மென்றபடி. இந்த ச்லோகத்தில் ப்ரஸீத என்றது பரஸ்வீகார ப்ரார்த்தனை என்று திருவுள்ளம் ஆகையாலிறே ஸ்தோத்திர பாஷ்யத்திலே "அநாத்யநந்தமஹாபராத ஜநித காலுஷ்யம் விஹாய மயி ப்ரஸாதம் குரு ஸ்வகீயத்வேநாங்கீகுரு" என்றருளிச் செய்தது—



இத்தால் அல்பஜ்ஞனாய் ஸாங்கபரஸ்மர்ப்பணாநுஷ்டாநத்திலே சக்தியில்லாதே இருப்பானும் ஆசார்ய புரஸ்கார பூர்வகமாக ப்ரபத்தி பண்ணினுகில் இவன் பண்ணின ப்ரபத்தி விகலமானாலும் அவிகலப்ரபத்தியிலே மூட்டி. ரக்ஷிக்குமென்று சொன்னதாகிறது. இத்தால் 'ஸ்தோத்திரத்தில், த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே" என்று தாம் பண்ணின ப்ரபத்தி அபராதகோடியிலேயாய் இந்த ச்லோகத்தால் அந்த அபராதக்ஷாபணம் பண்ணுகிறாரென்று சொல்லுகிறதெல்லாம் ஸத்ஸம்ப்ரதாய த்வேஷத்தாலேயாயிருக்கும். அல்லாதபோது நாதமுநிகளும் ப்ரபந்நராகையாலே அவர் ப்ரபத்தியும் அபராதகோடியிலேயாய் அவரை முன்னிடுவது அபராதியை முன்னிடுவதாய் தலைக்கட்டும். ஆழ்வார் ப்ரபந்நராகையாலே அவர் ப்ரபத்தியும் அபராதமேயாய் இவரை ப்ரபந்நஸந்தாந கூடஸ்தர் என்கிறது அபராதிகளுக்கு கூடஸ்தர் என்றதாமாகையாலே இதற்குமேலே ஆசார்யாபசாரத்துக்கு எல்லை நிலம் காண்கிறிலோம். இத்தாலே இது தன்னைப் பார்த்தால் நெடுநாள் அந்யபரையாய் போந்தாளொரு ஸ்திரீ லஜ்ஜாபயங்களின்றிக்கே, பர்த்ருஸகாசத்திலே நின்று என்னை அங்கீகரிக்க வேணும் என்றாப்போலே இருக்கிறதிறே இவன் பண்ணும் ப்ரபத்தி, இத்யாதிகளான ப்ரபத்தி தூஷணவாக்யங்கள் எல்லாம் யாதவ ப்ரகாசீய பக்ஷாபிநிவிஷ்டாளுடைய க்ஷேபமூலமாகையாலே ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்க்கு உபஜீவ்யமாகாதென்று திருவுள்ளம், தம்முடைய வாசார்யருக்கு இது ப்ரியதமம் என்றும்" இதி—

ஸூமுமாணாம் ஸூஸிஷ்யாணாம் ப்ராவநம்வாக்யதம் தயா। என்று தம்மை யாச்ரயித்தாரோடு ஸ்வாசார்ய ப்ரபாவத்தை வெளியிடாதபோது த்வாத்ரிம் சதபசாரங்களிலிதுவு மொன்றுமாகையாலே வெளியிடும்போது

தமக்கு பரமாசார்யரான நாதமுநிகள் ப்ரபாவத்தை விசதமாகச் சொல்லி இவரே நமக்கு பரமோத்தேச்யரென்று அருளிச் செய்திருக்கையாலே அவர் புரஸ்காரமாக ஸ்தோத்ராரம்பம் தம்மாசார்யருக்கு ப்ரியதமமாயிருக்கக் குறையில்லை. ஆசார்யவத்தை முதலான ஸம்பத்துக்களுக்கு மூலம்.' இதி. ராஜ்ய போகாஸக்தராய் உண்டுடுத்துத்திரிந்த தம்மை தம்மாசார்யராயிருந்த நம்பிகள் நெடுநாள் பச்சையிட்டு அநுவர்த்தித்து விசேஷ கடாக்ஷம் பண்ணினது ஆசார்யவத்தை. இந்த கடாக்ஷ விசேஷம் ஸத்துக்களுக்கு பெரிய ஸம்பத்தாயிருக்கும். முதலான ஸம்பத்துக்கள் என்கிறது. அதடியாக, " [illegible] " என்னும்படியான அத்யாத்மஜ்ஞாநவிசேஷங்கள் பகவதநுபவம் தொடக்கமானவைகளை ஸம்பத்துக்களுக்கு மூலம் என்று சில ஸ்ரீ கோசங்களிலும் ஸம்பத்துக்களுக்கு நாதமுநிகள் வம்சத்தில் பிறவி ஹேதுவென்று சில ஸ்ரீ கோசங்களில் காண்கையால் [illegible] இந்த வந்யதரஸ்தலங்களிலே அந்யதர பதங்கள் இல்லாதபோது வாக்யமந்வயியாது. நாதமுநி வம்சத்தில் பிறவி என்று தோற்றுகைக்காகவும் இதி. இந்த வம்சத்திலே தாம் திருவவதரியாதபோது தாமே சாஸ்த்ரார்த்தங்கள் தேறி ஆசார்ய ஸமாச்ரயணம் பண்ணவேண்டிவருமாகையாலே அந்யபராய் போருகிற தமக்கு இது கடிப்பது அறிதாயிருக்கும். "செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வானென்றும்படி நம்பிகள் நெடுநாள் அநுவர்த்தித்துத் திருத்திப் பணி கொண்டதெல்லாம் நாதமுநிகள் விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்திராம்படி அவருக்குத் திருப்பேரனாய் அவதரிக்கை வம்சத்தில் பிறவி என்று அருளிச் செய்ததால் நாத முநிகளுக்குத் தம் திருக்குமாரனை ஈச்வர பட்டாழ்வானிடத்திலும் இத்தனை கடாக்ஷம் இல்லை என்று தோன்றுகிறது. ஆசார்ய விஷயத்தில் போலே இதி "[illegible]" இத்யாதிகளிலே உபாஸநத்துக்கும் க்ருதஜ்ஞதாதிகளுக்கும் ஆசார்யனை மாத்திர மெடுத்துச் சொல்லுகையாலே ப்ராசார்யாதி விஷயங்களிலே இதுகளநாவச்யகமென்று சங்கை வாராமைக்காக என்று திருவுள்ளம். பரமாசார்யர்களும் நமக்கு பரம்பரயா உபகாரகர்கள் ஆகையாலும் "[illegible]" என்று ப்ரமாண மிருப்பதாலும் தான் பரமாசார்ய விஷயங்களில் க்ருதக்நனாகாமைக்காக, க்ருதஜ்ஞதை வேண்டுமென்று திருவுள்ளம். என்றறியப்படுமென்று சிலகோசங்களில் அதிக பாடம் காண்கிறது. இதில்லாமலே வாக்யாந்வயம் ஸ்வரஸமாகையாலும் இதுண்டானால் அஸ்வரஸமாய் அந்வயிக்க வேண்டியவத்தாலும் உபேக்ஷணீயம்—

அவ—ஆனாலும் நாம் க்ருதஜ்ஞனாயிருக்கவேண்டியதில் ஆசார்ய



ப்ராசார்யர்களில் பேதமன்றிக்கே, ஸர்வத்ர துல்யமாயிருக்கவேண்டியிருக்க, விசேஷம் தோற்றும்படி சிலரை தாம் பண்ணும் க்ரந்தங்களிலே விசேஷமாக அநுஸந்திப்பதும் சிலரை உபேக்ஷை பண்ணுவதாய் இப்படி காண்கையாலே இப்படி செய்யுமவர் க்ருதக்நராகவாகாரோவென்ன வருளிச் செய்கிறார்.

மூ—ஆசார்ய பங்க்தியிலே சிலரை க்ரந்தங்களிலே வ்யபதேசித்தவர்களும் மற்றுள்ளவர்களையும் அநுஸந்திப்பார்கள்.

வ்யா—சிலரை என்றது க்ரந்த முகத்தாலேயோ அநுக்ரஹவிசேஷத்தாலேயோ தமக்குமவருக்கு முண்டான சரீராதி விசேஷப்ரத்யாஸத்தியாலேயோ அதிகோபகாரகராயிருக்குமவரை என்றபடி—வ்யபதேசித்தவர்களும் என்கிறது ஆசார்ய பங்க்தியில் எல்லாரிடத்திலும் ப்ரதிபத்தி ஸமமாயிருக்கவேண்டியிருக்க அப்படி இல்லாதே சிலரிடத்தில் க்ரந்தவ்யபதேச ததபாவ நிபந்தநவைஷம்யம் காண்கையாலே வந்த விரோதத்தைக் காட்டுகிறது. மற்றுள்ளவர்களையும்=க்ரந்த வ்யபதேசாவிஷயீபூதரான ஆசார்ய ப்ராசார்யாதிகளையும், "அநு ஸந்திப்பார்கள்" ச்லோக நிபந்தநரூபேண அநு ஸந்திக்காதே போனாலும் மாநஸமாகவோ வாசிகமாகவோ ஸாமாந்யமாக அஸ்மத் குருபரம் பராப்யோ நம: என்றோ அநு ஸந்தாந மிருக்குமாகையாலே க்ருதக்நதை வாராதென்று திருவுள்ளம். அநுஸந்திப்பார்கள் என்று, ப்ரசித்தி தோற்ற வ்ருத்த கீர்த்தநம் செய்தருளுகையாலே க்ரந்தாரம்பங்களிலே ஸாமாந்யமாயோ விசிஷ்யவோ ஸகலாசார்யாநு ஸந்தாநம் அவச்யகர்த்தவ்யமென்றே ஸம்ப்ரதாயம் தோற்றுகிறது. ஆகையாலேயிறே "[illegible]" "[illegible]" "[illegible]" இத்யாதிகள் பிள்ளையருளிச் செய்தது. இத்தால் ஆசார்ய பரம்பரையில் சிலரை ஆசார்யராகக்கொண்டு மற்றுள்ளவர்களை தத்ஸம்பந்த ஸம்பாதகராகக் கொண்டு ஆசார்யனன்றென்று சொல்லுமது ஸத்ஸம்ப்ரதாயமன்றென்று கொள்ளவேணுமாயிற்று. இங்ஙனே சிலர் க்ரந்தங்களிலே வ்யபதேசித்து அவர்களையும் மற்றுள்ளவர்களையும் அநுஸந்திப்பார்கள் என்று படிப்பது அநுஸந்தாநமும் வ்யபதேசமும் ஏகார்த்தமாகையாலே அத்தினை ஸ்வரஸமாகாது என்று தோற்றுகிறது.

அவ—ஆனாலும் முன்னமேதானே. ஸ்ரீ பாஷ்யகாரர் பக்கல் விசேஷ கடாக்ஷம் பண்ணி இவரையே இத்தர்சந ப்ரவர்த்தகராக்க வேண்டுமென்று திருவுள்ளமுகந்து ஆளவந்தார் தம்முடைய ஸ்ரீ பாதத்து முதலிகளான பெரிய நம்பிகளை ஸகலார்த்தங்களையும நீரே இவருக்குச் சொல்லுமென்று தம்மவதார ஸமாப்தியிலே நியமித்திருக்க அந்யமந

மடியாக இவரை அங்கீகரித்த நம்பிகள் தாமே ஸகலார்த்தங்களையும் சொல்லாதே "ஸஷவத்ராவிஷஷ்ணாஸேஷ யாஸ்யதிகோஸமாது" என்றுப்போலே அநாதரம் தோன்றும்படி ஒவ்வொருத்தர் பக்கலிலே ஒவ்வொரு அர்த்தத்தை கேட்க நியமித்தது இந்த ஸம்ப்ரதாயத்தில் இவருக்கு அநாதர முண்டென்றுவது அத்தினை ஆசார்ய ப்ரதிபத்தி இல்லை என்றுவது சொல்ல வேண்டாவோ வென்ன வருளிச் செய்கிறார்.

மூ—ஆளவந்தாருடைய நியோகத்தாலே ஸ்ரீ பாஷ்யகாரரை அங்கீகரித்த பூர்ணரான பெரியநம்பி இவரை தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான திருக்கோட்டியூர் நம்பிபக்கலிலே அர்த்தசிக்ஷை பண்ணவும் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய் மொழி கேழ்க்கவும் ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் பக்கலிலே நல்வார்த்தை கேழ்க்கவும் நியோகித்ததும், "ஸஹஸ்ரஸ்ய ஸ்ரோதவ்யம் ஸஹஸ்ராய ஸ்ரோதவ்யம்" "ஜ்ஞாநவ்ருத்தாவயோ ராஜ்ஞ ஸாஹஸ: வயஸ்தவாஸிதா:" இத்யாதிகளையும் சுகாதி வ்ருத்தாந்தங்களையும் பார்த்து சிஷ்யபூதரை பஹுமுகமாகத் திருத்தவேண்டும் என்கிற அபிஸந்தியாலே உபபந்நதமம்.

வ்யா —"ஆளவந்தாருடைப் நியோகத்தாலே ஸ்ரீ பாஷ்யகாரரை அங்கீகரித்த பூர்ணரான பெரிய நம்பி" இதி—ஸ்ரீ பாஷ்யகாரரும் ப்ராப்த வித்யராய் ஆளவந்தார் ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயிக்கவேண்டுமென்றிருக்க, ஆளவந்தாரும் இவரை அழைத்துவரும்படி திருவுள்ளமுகந்து ஸ்தோத்திரம் அநுஸந்தித்து பெரிய நம்பிகளைக்கொண்டு நம்பேறருளாளன் ஸன்னிதியில் இவர் திருமுன்பே அநுஸந்திக்கும்படி அனுப்பிவிட அந்த ஸ்தோத்திரம் இவர் திருச்செவிப்பட்டவாறே ஸ்ரீபாஷ்யகாரருக்கும் நம்பிகளுக்கும் ஸம்வாதமுண்டாய், ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே அபிநிவேசம் விஞ்சி, சடக்கெனவவர் ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித்து பேறுபெற வாசைப்பட்டு நம்பிகளோடு கோயிலுக்கெழுந்தருள பெரிய பெருமாளும் ஆளவந்தாரை தன்னுடைச் சோதிக்கு வரும்படி நியமிக்க அது மறுக்க வொண்ணாத நியமநமாகையாலே அப்போது தாம் நினைத்துவந்த கார்யத்தை முடிக்க வல்லாரிவரென்று பெரிய நம்பிகள் பக்கல் திருவுள்ளமுகந்திருக்கையாலே ஆளவந்தாருடைய நியோக முண்டாய் ஸ்ரீ பாஷ்யகாரரை அங்கீகரித்தாராய்த்து நம்பிகள்.

ஆளவந்தாருடைய நியோகமாகிறது பெரிய நம்பிகளுக்கு ஸ்வ ஸப்ரஹ்மசாரிமுகேந ஆளவந்தாருடைய நியமநம். இத்தால் ஆளவந்தார் அவதார ஸமாப்தியில் பெரிய நம்பிகள் பக்கத்திலே இல்லாதபடியாலே ஆளவந்தார் எப்படி நியமிக்கிறதென்கிற சங்காவகாசமில்லை. அங்கீகரித்த பூர்ணரான என்றது—அங்கீகரிக்கையாலே பூர்ணரானவென்று ஹேதுகர்ப்பமாயிருக்கும்.

இளங்குழந்தை முதல் கிழவரீறாக
சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

# ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.
சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால்
தயார்செய்யப்பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சாக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீகந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அநுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மையுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.
வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

## வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் யற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸுராஜ்மல் கம்பெனியாரே.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE. MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

1- APR 1938

अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

" अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । "

" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । "




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம் ! எப்படி?

**L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.**

குழந்தைகளின் சிநேகிதர்கள் ! பெற்றோர்களின் களிப்பு !!

**விலை மலிவு ! சுவை பெரிது !**

**நன்மை தரும் !**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

**வாங்க முந்துங்கள் ! கொடுக்கும் பணத்திற்கு**

**நல்ல பெப்பர்மெண்டு !!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

**SRI L. N. SHIYALI CONFECTIONARY, LTD.,**

*MADRAS OFFICE* :—**Phone No. 3658 : Res. No. 4258**

304, Thambu Chetty St., G. T. Madras.

---

**L** காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

**ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை**

ஆபீசில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த ந்யாய ஸித்தாஞ்ஜ ம்—ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் வெ ளியிடப்பட்டது; ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி அருளிய வ்யாக்யானத்துடன் கூடியது. விலை ரூ. **5—0—0**

(2) ஷை ஷை தத்வடீகை **5—0—0**

(3) வேதாந்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) ஸ்ரீ. உப. வாசுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் **3—0—0**

(4) ஸ்ரீ பஞ்சஸ்தவம்—(ஸ்ரீ ஸ்துதி—ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்) ஸ்ரீ. உப. வாசுதேவாசார்யரின் உரையுடன் **1—0—0**

(5) ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்தோத்திரங்கள், தேவநாகரத்தில் அச்சிட்டது **1—0—0**

(6) ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ ஸ்துதி, V. அனந்தாசாரியன் எழுதிய தமிழுரையும் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதிய முகவுரையும் **0—8—0**

(7) ஸ்ரீ ஸூக்தபாஷ்யம்—ஸ்ரீநஞ்சீயர் அருளிச் செய்தது. சதுச்லோகி, சரணாகதி கத்யம், ஸ்ரீ ஸ்துதி, ஸ்ரீ ஸ்தவம், ஸ்ரீ குணரத்நகோசம், லக்ஷ்மீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம், அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம் இவ்வனைத்துக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு; by A. Srinivasa Raghavan, M.A. (புதுக்கோட்டை மகாராஜா காலேஜ்) **1—8—0**

(8) ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த சில்லரை ரஹஸ்யங்கள்—Edited with notes and introduction by A. Srinivasa Raghavan M.A. (புதுக்கோட்டை மகாராஜா காலேஜ்)—2 பாகங்கள் **2—8—0**

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகங்கள்

(1) கோபால விம்சதி, பகவத் த்யாந ஸோபாநம் **0—1—0**

(2) மகா வீர வைபவம், சுதர்சநாஷ்டகம், கருட தண்டகம் **0—1—0**

(3) அர்ச்சாவதார வைபவம் விக்ரஹாராதநத்தில் ஆக்ஷேபங்களும் ஸமாதாநங்களும் தேவநாகரியில் அச்சிட்டது; மகா மஹோபாத்தியாய R. V. கிருஷ்ணமாசாரியர் இயற்றியது **0—10—0**

வி. அனந்தாசாரியர்

கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் போஸ்டு, சென்னை.

வியாபாரிகளுக்கும் வித்தியார்த்திகளுக்கும் 25% கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஸ்ரீ:

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சென்னை-600 0

## விஷய ஸூசிகை


1. பிஷ்டபசு — 79
   [ஸ்ரீ. உ. வே. செட்லூர் ராஜகோபாலன்]

2. காலாநுகுண ஆஹ்நிகம் — 81
   [பத்திராதிபர்]

3. ஒருதார விவாகம் — 83
   [ஸ்ரீ. உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர்]

4. ராம ராஜ்யத்தின் காலமானம் — 86
   [ஸ்ரீ. உ.ப. வே. டி. சுந்தராசாரியர், சீர்காழி]

5. பட்டரின் த்நமஞ்சனக்கவிகள் (2) — 88
   [ஸ்ரீ. ஸ்ரீ.]

6. புத்தக விமர்சம் — 91

7. ஜாதி நிர்ணயம் — 95
   [ஸ்ரீ. உ. வே. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீரங்கம்.]

8. பிரபந்த ஸாரம் — 101
   [ஸ்ரீ. உ. வே. D. T. தாதாசார்யர், திருப்பதி]

9. ஸப்தராத்ர ப்ராஹ்மணம் — 103
   [ஸ்ரீ. உ. வே. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர், மாம்பலம்]

10. விருத்தாந்தங்கள் — 108

11. அபீதிஸ்தவ — 9—16
   [ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்யர், M. A., B. L., அட்வகேட், திருச்சி]

12. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி — 65—72

13. வேதாந்த ஸாரம் — 41—48

# பிஷ்டபசு

[ஸ்ரீ. உ. வே. சேட்லூர் ராஜகோபாலன், ஸாஹித்ய சிரோமணி; ஸம்ஸ்கிருத பண்டிட், கலவல கண்ணன் செட்டியார் ஹைஸ்கூல், பெறம்பூர், சென்னை.]

சென்ற கார்த்திகை மாத தீபிகையில் பிஷ்டபசு நமக்கு உபாதேயமல்ல என்ற தலைப்பின் கீழ் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசார்யர் ஸ்வாமியால் எழுதப்பட்ட வ்யாஸத்தின் சுருக்கமொன்று வெளியிடப்பட்டது எல்லா தீபிகாபிமானிகளுக்கும் தெரிந்திருக்கலாம். அதில் அவர் பிஷ்டபசு நமக்கு உபாதேயமல்ல வென்பதை நிரூபித்திருக்கிறார்.

இவர் பிஷ்டபசு யாகத்தை அவைதிகமென்று நிரூபணம் செய்வதர்க்காக நம் முன்னோர்களும் நம் பூர்வாசார்யர்களுமான ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்ரீ ஆளவந்தார் இவர்களுடைய திவ்ய ஸூக்திகளுக்கு அஸம்ப்ரதிபன்னமான பொருளை கல்பிக்க எண்ணம் கொண்டது மிகவும் வருந்தத்தக்கதே—அதாவது இவர் தன் வ்யாஸத்தில் மஹாபாரதப் பிரமாணத்திலும் பாரமேச்வர ஸம்ஹிதாவசனத்திலும் உபரிசரன் த்ரயீபஹிர்பூதன் என்று சொல்லுகிறார். பாரமேச்வர ஸம்ஹிதையில் த்ரயீ என்பது தேவதாந்தர மிச்ரமாதலால் அதில் தமக்கு நிஷ்டை ஏற்படவில்லையென்றும் அதனால்தான் சித்திர சிகண்டிகளால் செய்யப்பட்ட மூலவேதமென்று சொல்லப்படும் ஏகாயநசாகையை அத்யயனம் செய்ததாக சாண்டில்யர் சொல்லியிருப்பதாகவும். கூறியுள்ளார். இதனால் ஏகாயந சாகா என்பது வேதபஹிர்பூதமென்று சொல்லப்பட்டால் சாந்தோக்யோபநிஷத்தில் பூமவித்யையின் உபதேசமும் வேத பஹிர்பூதமென்றே க்ருத வேண்டி வருமல்லவா?

மேலும் ஏசாயந சாகை வேதபஹிர்பூதமென்றால் கீழ்சொன்ன பூம வித்யாப்கரணத்தில் ஏகாயநம் என்னும் பதத்திற்கு இவர் என்ன அர்த்தம் சொல்லுவார். இந்த ஏகாயநம் ருகாதிகளுடன் ஸமமாகவே தான் சாந்தோக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. போஜராஜனும் காச்மீராகமப்ராமாண்யத்தில் ஏகாயந சாகையை வேதத்துடன் சேர்ந்ததாகவே நிர்ணயம் செய்திருக்கிறார்.

ஸ்ரீ ஆளவந்தார் தன்னுடைய ஆகம ப்ரமாண்யத்தில் பாஞ்சராத்ரத்தை வேதபஹிர்பூதமென்று ஸாதிக்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

மேலும் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளம் பாஞ்சராத்திரத்தில் சொல்லியிருக்கும் கர்மங்களை நடத்தக் கூடாதென்பதே என்று இவர் வ்யாஸத்திலிருந்து தெளிவாகிறது. அப்படியிருப்பது உண்மையா?

நம்பெரியோர்கள் அனேகமாக உடையவர் நித்ய க்ரந்தமென்றும் ஓர் கிரந்தத்தை பரிசீலனை செய்வது வழக்கமென்பது இவர் அறியார்போலும். அதன் வ்யாக்யாதாக்கள் அந்த கிரந்தத்துக்கு மூலம் பரம ஸம்ஹிதை என்று கூறியிருக்கிறார்கள்.

உபரிசரவசு என்பவர் அவைதிகர் என்று இவர் தைர்யமாய் கூறியுள்ளார். அவர் அவைதிகரானால் தேவலோகத்தில் எப்படி தேவஸபையினராகக்கூடும். அவரை தேவதைகளும் பிராமணர்களும் எப்படி மத்யஸ்தராக நியமிப்பார்கள். இவைகளை இவர் ஏன் யோசனை செய்யவில்லை. க்ருதயுகத்தில் இருந்தவர்கள் அவைதிகர் என்றும் அவர் பிஷ்டபசுவை ஆசரிப்பவர் என்றும் சொன்னால் வேதம் என்பது கிருதயுகத்தில் இல்லை போலும். கிருதயுக தர்மத்தை அனுஷ்டிக்கும் சில அதிகாரிகள் செய்யக் கூடியது பிஷ்டபசு யாகம் என்று பொருள் கூறுவது பொருந்தும்.

இங்கு பகவான் தான் யாக ஸ்வரூபி என்றும் அதிலும் எல்லா யாகங்களிலும் ஜப யாகம் தான் தனக்கு மிகவும் பிரியமென்றும் சொல்லுகிற விடத்தில் உபரிசரவசுவை உதாஹரித்த ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் எவ்வாறென்று சொல்லவும் வேண்டுமா? மேலும் இங்கு आद्य: என்னும் பஹுவசனத்தினால் உபரிசரன் மட்டுமில்லை என்பது சொல்லாமலே விளங்கவில்லையா? ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீ தேசிகன் முதலிய நம் பூர்வாசார்யர்கள் ஸ்ரீ பாஞ்சராத்ரம் வைதிகமென்றும் அது ஏகாயந சாகா மூலமென்றும் வேதங்களில் அனேகம் சாகைகள் லோபத்தை அடைந்ததுபோல் அந்த சாகையும் லோபத்தை அடைந்திருக்கலாமென்றும் திருவுள்ளம் பற்றினார்களே தவிர அவைதிகமெனத் திருவுள்ளம் பற்றவில்லை. இவரை அடியேன் மிக்கத் தாழ்மையுடன் ஸ்ரீ ஆகமப்ராமாண்யம் ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷா ஸச்சரித்ரரக்ஷா நித்யக்ரந்தம் ஸ்ரீ பாஷ்யத்தில் உத்பத்தி அதிகரணம் முதலிய கிரந்தங்களை நன்றாய் பரிசிலனை செய்து மஹா பாரதத்திலும் உபரிசர வஸுவின் உபாக்யானத்தையும் நன்றாய் விசாரித்துத் தெரிந்துக் கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

# காலாநுகுண ஆஹ்நிகம்

## மலாதி விஸர்ஜநாப்யாஸம்

சென்ற ஸஞ்சிகையில் சரீரசிந்தை என்று மல விஸர்ஜநத்தின் ஆவச்யகதையைப் பற்றியும், விஸர்ஜநதேச காலங்களைப் பற்றியும் எழுதியுள்ளோம். ஆதுநிக காலத்தில் நூற்றில் தொண்ணூறுக்கு அதிகமாக ஸ்திரீ புருஷர் யாவற்கும் உண்டாகும் நோய் யாவற்றுமே மலஜலங்களை சரியாய் விஸர்ஜநம் செய்யாமல் தேஹத்தில் நிறுத்தி வைப்பதால் உண்டாகும் தோஷத்தினாலேயே என்று மேல் நாட்டு கீழ் நாட்டு வைத்தியர் அனைவரும் சொல்லுகிறார்கள். இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. ஒரு வீட்டில் சாக்கடை அடைபடுமேயானால் வீடு முழுவதும் துர்நாற்றமெடுப்பதுமன்றி அக்கம்பக்கத்தில் இருப்பவருக்கும் அஸஹ்யமாய் ஏற்படுவதன்றோ. தற்கால நவீந நாகரீகத்தில் மலச்சிக்கல் இல்லாதவர் சிலரே என்று நிச்சயமாய் சொல்லக்கூடும். இவர்களில் வெகுமாய் எல்லாருக்குமே காலையில் காபி சாப்பிட்ட பிறகே பஹிர் ஜலத்திற்குப் போவது என்று மிகவும் ப்ரசித்தமான விஷயம், ச்ராத்தாதிகாரணங்களைக் கொண்டும் மற்ற வேறு காரணங்களைக் கொண்டும் காலையில் காபி சாப்பிட முடியாமல் போனால், அன்று நாளெல்லாம் தலை நோய் என்றும், ஒரு கார்யமும் செய்ய முடிவதில்லை என்றும் போஜநம் கூட வெறுப்பாய் தோன்றுகிறது என்றும், இவ்விதமெல்லாம் அவரவர் கஷ்டங்களை சொல்லிக் கொள்வதை நாம் கேட்டிருக்கிறோமல்லவா. இதற்கெல்லாம் காரணம் இரண்டுண்டு. முதலானது—தூரப்யாஸம் எனக் கூறலாம். ஒவ்வொருவரும் காலையில் எழுந்ததும் பஹிர்ஜலத்திற்குப் போவதை அப்யாஸமாகச் செய்துகொண்டால் நம்முடைய தேஹம் அந்தப் பழக்கத்தை அநுஸரித்து நடக்காமல் ஒரு நாளும் போகாது. இந்த ஸந்தர்ப்பத்தில் ப்ராசீந ச்லோகம் ஒன்று அநுஸந்திக்கத் தக்கது.

अनेकदोषदुष्टस्य कायस्यैको महान् गुणः ।
यो यथा वर्तयत्येनं तं तथैवानुवर्तते ॥

அதாவது—அநேக தோஷங்களால் நிபிடமான இந்த மனுஷ்ய தேஹத்தில் மஹத்தான நற்குணம் ஒன்று மாத்திரம் அமைந்திருக்கிறது—அதாவது எவனொருவன் இந்த தேஹத்தை எவ்விதமாய் அப்யாஸம் செய்து வைக்கிறானோ, அது அவ்விதமே அவனை அநுஸரிக்கிறது. ஆதலால் அப்யாஸமே இந்த தேஹத்திற்கு கார்யா கார்யம் எல்லாவற்றிலும் பலிஷ்டமானது.

ஜலமல விஸர்ஜநம் ஆன பிறகே மற்ற கார்யங்களை செய்வதென்பது அப்யாஸத்தில் வருமே யானால் அவ்விதமே நடக்கும் என்பதில் சிறிதும் ஸந்தேஹமில்லை. அதை விட்டு காபி சாப்பிட்ட பிறகே வெளிக்குப்போவது என்பதையே அப்யாசமாகக் கொண்டால் அதுவே நிவ்ருத்திக்க முடியாத அப்யாஸமாய் விடுகிறது. இதற்கு மற்றோர் காரணம் சொன்னது ஏதெனில், நமக்கு சரீரத்திலும் இந்த்ரியாதிகளிலும் ஸஹஜமாகவே கிடைத்திருக்கும் அதிகாரத்தின் இருப்பையாவது ரீதியையாவது நாம் நன்கறிந்து அநுஷ்டிக்காததே. மனோபலத்தால் நமக்கு இந்த தேஹ ஸம்பந்தமாய் சாதிக்கக்கூடாத அப்யாஸம் இல்லை என்றே சொல்லலாம். இது ஸம்பந்தமாய் வெகு நாளைக்கு முன் நடந்த இரண்டொரு ஸம்பவங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. காபி சாப்பிடும் வழக்கத்தால் ச்ராத்ததினத்தில் தனக்குத் தலை நோய் உண்டாகி ச்ரமப்பட்டுக் கொண்டிருந்த ஒருவர் திடீரென்று, அவ்வித ச்ரமத்திற்கு காரணம் துரப்யாசமே என்று கண்டறிந்தவராய் தமக்கு அதனால் நேரிட்டிருக்கும் சிறுமையை யோசித்து வெட்கி, அந்த க்ஷணம் முதல் காபி அப்யாஸத்தை ஜயித்தவரானார். அவ்விதமே ஸர்வ காலமும் சுருட்டுப் பிடிக்கும் வழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த ஒருவர் தன் பக்கத்லிருந்த ஸ்நேஹிதர் அந்த அப்யாஸத்தைப் பற்றி இகழ்ச்சியாகச் சொன்னதைக் கேட்டு உடனே தன் வாயிலில் இருந்த சுருட்டை எடுத்து 'இதே கடைசி சுருட்டு, எறிந்துவிடுகிறேன்' என்று சொல்லி, ஜன்னல் வழியாக எறிந்துவிட்டு, பிறகு தன் ஆயுஷ்காலம் வரையில் சுருட்டைத் தொட்டவரன்று. ஆதலால் அப்யாஸங்கள் யாவற்றிற்கும் நம்முடைய மநஸ்ஸாகிற யஜமாநன், இடம் கொடுத்து இடம் கொடுத்து வருவதாலேயே துரப்யாஸம் என்று தெரிந்த பிறகும் அதை நிவ்ருத்திக்க சக்தியில்லாமல் போகிறான். துரப்யாஸங்களாலன்றோ நாமே நமக்கு விரோதியாகிறோம். துர்ப்யாஸங்களை ஜயித்து நிர்மூலமாக்கும் விஷயத்தில் அவச்யமான சௌர்ய தைர்யங்கள், மற்றவிதமான சௌர்ய தைர்யங்களை விட மிகவும் விசேஷித்தவை ஆதலால் மலஜல நிவ்ருத்தி விஷயங்களில் சரியான ரீதியில் அப்யாஸம் உண்டாக்கிக் கொள்வது ஒவ்வொரு மனுஷ்யனின் முக்கிய கடமையாகும். ஒவ்வொரு மனுஷ்யனும் எல்லா விதத்திலும் மிகவும் பரிசுத்தமாய் இருக்கக் கடமைப் பட்டவன். துரப்யாஸங்களை நிவ்ருத்திக்கும் விஷயத்தில் ஆரம்பத்தில் ச்ரமமாயிருந்த போதிலும், நல்ல அப்யாஸங்களைக் கைக் கொண்டு அவற்றை நீடித்திருக்கச் செய்து துரப்யாஸங்களை எளிதில் நீக்கி விடலாம். மற்றெல்லா விஷயங்களிலும் போலவே அதிலும் மனதினுடைய பலாபலமே முக்கிய காரணமாகும்.

---

# ஒருநாள் விவாகம்

[ஸ்ரீ. உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர்]

மேற்கண்ட விஷயத்தைக் குறித்த இந்த வியாஸம் வைதிகர்கள் மாத்திரமேயன்றி எல்லா லௌகிகர்களாலும் கூட நன்றாய்க் கவனித்து யோசித்து அனுஷ்டானத்திற்கு அவசியம் கொண்டுவரத் தகுந்தது. சுமார் 20, 30 வருஷங்களுக்கு முன்கூட ஒரு நாள் விவாகம் என்றால் பரிஹஸித்தது வைதிக உலகம். முதல் முதல் திருமலையில் ஒரு நாளாய் பிறகு அநேக திவ்ய க்ஷேத்திரங்கள் எனப்படும் திருப்பதிகளில் ஒரு நாளாய் தத்காலத்தில் ஒவ்வொரு திருமாளிகைகளில் ஒருநாளாய் விட்டது.

தத்காலத்தில் 5 நாள் கலியாணம் என்பதே அறியதோர் ஆச்சர்யமாய் விட்டது. ஒருநாள் கலியாணங்களுக்குப் போவதில்லை யென்று வ்ரதம் செய்து கொண்டவர்கள ஸங்கல்பங்களும் முடியாமல் போய்விட்டன. இவ்விதம் சில வருஷங்களுக்குள்ளேயே மிகவும் அவைதிகமான அனுஷ்டானம் சிறிதும் கூச்சமின்றி வெகு சாதாரணமாய் ஏற்பட்டு விட்டதைக் கண்டு நாம் துக்கிக்கக்கூட அசக்தர்களாயிருக்கிறோம். இவ்விதம் ஆய்விட்டதற்கு காரணம் 5 நாள் கலியாணம் செய்வதால் அதிகம் த்ரவிய வ்ரயம் என்கிறார்கள் அநேகர். மற்றும் சிலர் 5 நாள் கலியாணம் வைத்துக்கொண்டு ச்ரமப்பட தத்கால ஸ்த்ரீ புருஷர்களுக்கு சக்தியில்லை யென்கிறார்கள். இவையெல்லாம் போதுமான காரணங்களாகத் தோன்றவில்லை. விவாகம் ஒரு முக்யமான ஸம்ஸ்கார மென்பதும் க்ருஹஸ்தாச்ரம ஸ்வீகாரணத்திற்கு அத்யாவச்யமான தர்ம பத்னியை பாணிக்ரஹணம் செய்து கொள்வது அவ்வாச்ரமத்திற்கே முக்யமான மகா வைதிக கர்ம மென்பதும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு விவாகமென்பது உத்ஸவைகப்ரதானமாயும், விளையாட்டாயும் கருதப்படுகிறது; தத்காலத்தில் கலியாணமென்பது ஸ்த்ரீ புருஷ ஸம்யோக ப்ராப்திக்காகவும், காமார்த்தமாயும், பசுக்களைப் போல் ப்ரஜோத்பத்திக்காகவும் ஏற்பட்டு விட்டது. இக்காரணங்களால் எல்லாம் கலியாணம் என்பதின் தர்ம ஸூக்ஷ்மமும் ஆத்ம பூதமான வைதிகாம்சமும் சுத்தமாய் மறக்கப்பட்டும் மறுக்கப்பட்டுமிருக்கின்றன. ஆயினும் பகவானுடைய மாயையில் ஒரு கெடுதலிலும் நன்மை யிருக்கக் கூடுமாகையால் ஒரு நாள் கலியாணம் தான் சாஸ்த்ரீயம், பெண் வீட்டில் நடத்தப்படவேண்டியது.

ஸப்தபதி யென்பது புருஷன் பெண் வீட்டை விட்டு பார்யையுடன் ஏழடி நடந்த பிறகு தான் பர்த்ரு பார்யாஸம்பந்தம் தர்ம சாஸ்த்ரப்படி பரிபூர்த்தியாகி ஸித்திக்கிறது. யாதொரு காரணத்தாலாவது கன்னிகா

தானத்திற்கு பிற்பாடு ஸப்தபதிக்கு முன் பர்த்ரு வியோகம் நேருமாயின் பெண்ணுக்கு வைதவ்யம் கிடையாதென்று சாஸ்த்ரத்தில் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள். ப்ரவிச்யஹோமம் என்பது தம்பதிகள் எத்தனை நாளானாலும் புருஷன் வீடு சேர்ந்தபிறகு க்ருஹப் பிரவேசாநந்தரம் செய்யவேண்டிய ஹோமம். இக்காலத்திலும் அந்த ஹோமம் முதல், பிள்ளை வீட்டார் சிலவென்று அனுஷ்டானமும் பிள்ளை வீட்டிலேயே நடக்க வேண்டுமென்பதை விசதமாய் சூசிப்பிக்கிறது. தர்ம சாஸ்திரப்படி தம்பதிகள் க்ருஹஸ்தாச்ரமத்தில் விஷயானுபவம் செய்வதற்குமுன் பூர்வாங்கமாக விரதமாயிருந்து புஷ்ப சந்தன தாம்பூலாதிகளையும் வர்ஜித்து சேஷ ஹோமமான பிறகே அவைகளை ஸ்வீகரிக்கலாமென்பது எல்லா க்ருஹ்ய ஸூத்ரகாரர்களாலும் நியமிக்கப் பட்டுள்ளது. ஆதலால் ஒருநாள் விவாஹத்தில் ஏற்படும் தோஷமானது மேற்சொன்ன த்ரிராத்ர விரதத்தை அனுஷ்டிக்காததும், சதுர்த்தீஹோம மெனப்படுகிற நாலாவது நாள் செய்ய வேண்டிய சேஷ ஹோமத்தை விவாஹ தினத்திலேயே முடித்து விடுவதாக ஸங்கேதம் பண்ணிக் கொள்ளுவதும்தான். இம்மூன்று நாள் ஹோமமானது, பெண் வீட்டில் நடக்க வேண்டிய விவாஹ வைகரிகள் முடிந்ததும் பிறகு பிள்ளை வீட்டிற்குப் போய் ஒரு விதமான ஆடம்பரமுமின்றி சிலவு கூட சிறிதுமின்றி வைதிக கர்மாவை விடாமல் அனுஷ்டிப்பதில் என்ன கஷ்டமோ எதனால் அநபிமதமோ தெரியவில்லை? யோசிக்குமிடத்தில் இரண்டு காரணங்களே ஏற்படக்கூடும். அவையாவனவெனில் நடக்க வேண்டியவைகளின் தத்வ ஸூக்ஷ்மம் தெரியாமையும், வைதிக கர்மாக்களில் அச்ரத்தையுமே. இதையெல்லாம் பரிசீலித்து இனிமேலாவது ஒருநாள் விவாஹம் செய்கிறவர்கள் பிள்ளை வீட்டில் ஏகாந்தமாய் ப்ரவிச்ய ஹோமம் வரையிலுள்ள ஹோமாதிகளையும் வைதிக கர்மங்களையும் விடாமல் செய்ய ஒரு நியாயமான வழி ஏற்படுத்தி எல்லாரும் அவ்வழியே நடக்கும்படி வழி காட்டுவார்களென்று பிரார்த்திக்கிறோம்.

ப—ர்]

இவ்வொருநாள் விவாஹம் செய்யும்படி சாஸ்திரமில்லாமலும் சீர்திருத்தக்காரர்கள் மூலம் அரசாங்கத்தில் சட்ட மிதுவரை ஏற்படாமலுமிருக்கச்செய்தேயும் ப்ரபுக்களாலும் ஏழைகளாலும் வைதிகர்களாலும் லௌகிகர்களாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஸநாதனிகள், சாஸ்திர விரோதமான சட்டங்களைத் தடுக்க முயற்சி செய்வதும் சட்ட மூலமான நிர்ப்பந்த மில்லாதிருந்தால், யாரேனுமொரு ஆஸ்திகர் அச்சாஸ்த்ரீயமான சடங்குகளைச் செய்ய ஸௌகரிய முண்டென்று மெண்ணமென்றே தோன்றுகிறது. அன்றேல் இவ்வேகாஹ விவாஹத்தையும் தடுக்க முயற்சி செய்ய வேண்டாமா? பண முடையினால் இது நடக்



கிறதெனச் சிலர் நினைக்கக்கூடும். உண்மையில் அது காரணமல்ல. ஏனெனில் ஒருநாளில் கலியாணத்தை முடித்து அதாவது ஆசீர்வாதத்தை (பச்சையை) நடத்தி பந்துக்கள் ஆப்தர்களிடம் வருமானங்களைப் பெற்று அவர்களை அனுப்பிவிட்டால் மீதி நான்கு நாட்களில் ஔபாஸனத்தையும் சேஷ ஹோமத்தையும் நடத்துவதில் அதிக சிலவிற்கிடமில்லை. இவர்களுக்கு விசேஷச் சிலவெல்லாம் வரதட்சிணையிலும், வரவேற்பதிலும், சீர் செய்வதிலும், ஊர்வலத்திலுமன்றோ ஏற்படுகின்றது. சிறிது சிலவு செய்யச் சக்தியற்றவரும் மாப்பிள்ளையை மட்டிலும் வைத்துக்கொண்டு ரூபாய் ஒன்றுக்குள் வாத்தியாரைக்கொண்டு 4நாள் சடங்குகளை நடத்தி விடலாம். சாஸ்திரமோ விவாஹ ஹோமமானபின் பெண்ணை யழைத்துக்கொண்டு விதேச (வேறு தேச) மானாலும் போய்ச் சேர்ந்து ப்ரவிச்யஹோம (விவாஹத் தன்றிரவில் வரன் சில விலிப்போது நடப்பது) த்தைச் செய்ய வேணுமென்று விதிக்கிறது. இவ்வாறு செய்யில் பெண்ணைப் பெற்றவருக்குத் தற்காலத்தில் ஏற்படும் ச்ரமங்கள் ஒன்றுமிருக்க நியாயமில்லை.

உத்தராயணம் வந்து ஆங்காங்கு கல்யாணங்கள் நடக்குங்காலமானதால் உலகம் உய்யும்படி உழைத்துவரும் ஸநாதனிகளான ப்ரமுகர்களும் மடாதிபதிகளும் ஆசார்ய புருஷர்களும் இவ்விவாஹமெனும் புனிதமும் தர்மத்திற்கு அடிப்படையுமான சடங்கை தம்பதிகள் வாணாள் முழுதும் செய்யும் தர்மங்கள் வீணாகாமல் விதிப்படி ஐந்து நாட்களில் நடக்கும்படியான ப்ரசாரங்களையும் நியமனங்களையும் செய்யவேணுமாய் விநயத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

சிலர் சாரதா சட்டக் கொடுமையினால் 14வயதிற்கு மேற்பட்ட பெண்களைக் கொள்ளவேண்டியிருப்பதால் விவாஹம் ஐந்து நாட்களில் அப்பெண் ருதுவாகி விடுமோ என்னும் பயத்தினால் ஒரு நாளில் முடித்து விடுகிறோமென்கிறார்கள். விவாஹ ஸமயத்தில் ருதுவானாலிவர்கள் என் செய்வார்கள்? ஆயிரம் தாய் தகப்பனைக் காட்டிலும் அன்புள்ள சாஸ்திரம் இதற்கெல்லாம் லகுவான பரிஹாரங்களைச் சொல்லியிருக்கிறது. ஆகையால் போலிச் சமாதானங்களைச் சொல்லாமல் அப்பெண் பிள்ளைகளின் வாட்சிக்குரிய மந்திர பூர்வமான இவ்வைந்து நாட் கலியாணத்தைத் தாட்சியின்றி ..த்திவைத்து அதனாலேற்படும் நன்மைகளை அவ் வதூவரர்கள் (பெண் மாப்பிள்ளை) அடையும்படி செய்து தாங்களும் கண்டு களிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

# ராம ராஜ்யத்தின் காலமானம்

[ஸ்ரீ. உப. வே. டி. சுந்தராசாரியர், சீயாழி.]

[இவ்வியாஸமானது ஸ்ரீமான் சுந்தராசாரியரால் அநேக மாஸங்களுக்கு முன் இப்பத்திரிகையில் பிரஸ்தாபிக்கப்பட்ட பெரியதோர் ஸந்தேகத்தைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. வியாஸகர்த்தா செய்திருக்கும் ஸந்தேக நிவர்த்தியானது இப்பொழுதும் த்ருப்தியாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஒன்றை நூறு மடங்காய் வியவகரிப்பதற்குச் சொல்லியிருக்கும் காரணமும் ஸரியாகத் தோன்றவில்லை. ஏனப்படி வியவகரிக்க வேண்டும் அநுக்ரஹங்களிலும் பிரார்த்தனைகளிலும் தவிர? அதுவுமன்றி அந்த ரீதியில் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் அதே இராமாயணத்திலிருந்து தசரதன் 600 வருஷங்கள் ஜீவித்திருந்ததாகவல்லவோ நாம் நம்ப வேண்டியிருக்கிறது. அதுவும் நம்பக் கூடியதாயில்லையே? அவர் விஷயத்தில் ஒன்றை ஆயிரமாகச் சொன்னதாக எண்ணி 60 வருடம் அவர் ராஜ்ய பாரம் செய்தார் என்றால் ஒரே சரித்திரத்தில் ஒருவர் ஸம்பந்தமாய் ஒரு கணக்கும் மற்றொருவர் ஸம்பந்தமாய் வேறே கணக்கும் போடுவது ஸரியல்லவென்று தோற்றுகிறது. ஆதலால் இது விஷயத்தில் இன்னும் தீர்க்கமாய் யோசிக்க இடமிருக்கிறதென்பது புலப்படுகிறது. ப-ர்]

ராம ராஜ்யத்தின் காலமானத்தைப் பற்றிச் சொல்லும்போது, பத்து ஆயிரம் வருஷங்களும், பத்து நூறு வருஷங்களும், அவர் அரசாண்டார் என்று ஸ்ரீ ராமாயணத்தில் வாசிக்கிறோம். ஒருவர் இவ்வுலகில் பதினோராயிரம் வருஷங்கள் ஜீவிக்க முடியுமா என்று, எவர் மனதிலும் ஒரு சங்கை உண்டாகிறது. மேலும் आत्मानं मानुषं मन्ये என்றபடி ஸர்வ ப்ரகாரத்தாலும் மனுஷ்ய பாவனையை புரஸ்கரித்தே ஏற்பட்ட இந்த அவதாரத்தில் இப்படிச் சொல்லுவது பொருத்தமுள்ளதா, என்றும் சிந்திக்கவேண்டி வருகிறது. பதினோராயிரம் வருஷங்கள் என்றிங்கு நேராக அர்த்தம் செய்வது பிசகு, வேறெதோ பொருளைக் குறித்துத் தான் இப்படிச் சொல்லி இருக்கவேண்டும், என்று அடுத்தபடி ஒருவர் புத்தியில் தோன்றத் தக்கதே. அப்பொழுது கருதத் தக்கதான யுக்தியின் சுருக்கமொன்றை இங்கெழுதுவோம்.

புருஷனுக்கு நூறு பிராயம் என்று சொல்லியிருக்கும் வேத வாக்யங்களில் அவன் சதேந்திரியன் என்று ஆயுள் முழுதும் இந்திரியத்திலேயே நிலை பெற்று நிற்கிறான் என்றும், சேர்த்தே உணர்த்தப் பட்டிருக்கிறது.



இதன் அர்த்தத்தை கவனித்தால், ஒரு புருஷனுடைய ஆயுளிலுள்ள வருஷங்கள் அதிலேற்படும், இந்திரிய சப்தத்தால் குறிக்கப்பட்ட ஆனந்தத்திற்கு, அளவாய் நிற்கின்றனவே ஒழிய, கேவலம் காலத்தை அளக்க மட்டில் அல்ல எனப் புலப்படும். அவ்வித ஆனந்தத்தின் தாரதம்யத்தை, நூறென்பதாலேயே பெருக்கிச் சொல்லும் ப்ரகாரத்தை தைத்திரீயம் ப்ரஹதாரண்யகம் முதலியதில் காண்கிறோம். அரசன் நரதேவன் எனப்படுகிறான். ஒரு விசிஷ்ட புருஷனுடைய ஆனந்தத்தை ஆரம்ப அளவாக எடுத்துக் கொண்டோமானால், அரசனுடைய ஆனந்தம் அதற்கு நூறு மடங்கென்பது, ஔபநிஷத க்ரமத்தைப் பின் பற்றிச் சொல்லுவதே ஆகும். ஆகவே நூறு வருஷங்களால் அளக்கப்படும் ப்ரஜானந்தம், ஒரு வருஷத்தால் அளக்கக் கூடிய ராஜானந்தத்திற்குச் சரியாகும். இவ்வளவின்படி, புருஷாயுளுக்கு எல்லையாயுள்ள நூறு வருஷங்கள் ராஜாயுளிலுள்ள ஓர் ஆண்டுக்குச் சரியாகிறது. ஒரு அரசன் ஒரு நூற்றாண்டு ஜீவித்திருப்பான் ஆனால், அவன் பதினாயிரம் வருஷங்கள் ஜீவித்த ஒரு ஸாமான்ய புருஷனுக்குச் சமானமாகிறான். ஓர் ஆண்டு ஜீவித்தால், நூறாண்டுகள் ஜீவித்தவனாயிற்று. இம்மாதிரி யோசனை ஒரு காலத்தில் வெகு ஸாதாரணமாய் இருந்திருக்கவேண்டும். முதல் முதல் ராமாயணம் உண்டானது எக்காலத்தில் என்று நிர்ணயமாகும்போது தான், அக் காலமும் இன்னதென்று ஏற்படும். இதைத் திறவுகோலாய் வைத்துப் பார்த்தால், ராமன் ஒரு நூறு வருஷங்களும், ஒரு பத்து வருஷங்களும், ஜீவித்து அரசாண்டார் என்று ஸித்தாந்தமாகும். சூத்ரகனைப் பற்றிச் சொல்லும்போது, மிருச்சகடிகையில் लब्ध्वा चायुः शताब्दं दशदिनसहितम् என்றிருப்பதுபோல் இங்கும் புருஷாயுளைத்தாண்டி பத்து வருஷங்கள் அதிகமாகவே ராம ராஜ்யம் நடைபெற்றது दश वर्षसहस्राणि दशवर्षशतानि च। भ्रातृभिः सहितः श्रीमान् रामो राज्यमकारयत्॥ எனக் கொள்ளவேண்டும். ஸ்ரீ கிருஷ்ண யுதிஷ்டிரர்களுக்கும் இதற்குச் சற்றேறக் குறையவே ஆயுளின் அளவென்பது மஹா பாரதத்தால் ஏற்படுகிறது, அஃதே போல் இங்குமே ஒழிய, பதினோராயிரம் என்று அர்த்தம் கூறுவது கூடாததே. குறிப்பிட்ட எண் ஆயிரமென்றிருப்பதற்கெல்லாம், அதிகம், பல, மிகுதி என்றே பொருள் கூறுதல் பொருத்தமாகும். விஸ்தார பயத்தால் இத்துடன் முடிப்போம். अत्यतिष्ठत् दशाङ्गुलम् என்பதிலுள்ள நியாயமும் இங்கு ஸ்மரிக்கத் தக்கது.

---

ஸ்ரீ:

# பட்டரின் திருமஞ்சனக்கவிகள் (2)

[ஸ்ரீ. ஸ்ரீ.]

॥ हरिः ओं ॥

पश्यत्सुरासुरगणं सुमनोविकास-
सत्सिद्धचारणसमूहनिषेव्यमाणम् ।
सन्दष्टचारुतरसारतरामृतौघं
त्वां रङ्गराज कलयामि हि मन्दराद्रिम् ॥[1]

[2]वैकुण्ठे तु परे लोके श्रिया सार्धं जगत्पतिः ।
आस्ते विष्णुरचिन्त्यात्मा भक्तैर्भागवतैः सह ॥

என்கிற படியே சுழிபட்டோடும் சுடர்ச்சோதியான நலமந்தமில்லதோர் நாட்டிலே ஒண்தொடியாள் திருமகளுடனே வைகுந்தத்து அமரரும் முனிவரும் வகுத்த அடிமை செய்ய, ஏழுலகும் தனிக்கோல் செல்ல கோப்புடைய சீரிய சிங்காசனத்தில் வீற்றிருந்து வீவிலின்பம் மிக எல்லை நிகழ்ந்திருக்கிற தேவரீர், நித்யஸூரிகளைப் போலே நிரதிசயமான புருஷார்த்தமான நித்யகைங்கர்யத்தில் இருவருமான சேர்த்தியிலே நிரதராய்

1. ஓ ரங்கநாத! தேவரீர் அமிருதமதனகாலத்தில் இருந்த மந்தாபர்வதம் போல் எழுந்தருளியிருக்கிறீர். மந்தாபர்வதமானது தேவாஸுரர்களால் வைத்தகண் வாங்காமல் பார்க்கப்பட்டும், ஆநந்தமடைந்த ஸித்தர், சாரணர் முதலான தேவஜாதிகளால் சூழப்பட்டும் அழகான உருவமும் இனிமையான அமிருதமும் உடையதாயும் இருந்தது. தேவரீரும் பக்தர்கள் அபக்தர்கள் என்கிற பேதமில்லாமல் எல்லாராலும் கண்டு அனுபவிக்கப்படுகிறவராயும், ஞானம் விரிந்த முக்தர்கள், நித்யஸித்தர்கள் முமுக்ஷுக்கள் எல்லோராலும் ஸேவிக்கப்படுகிறவராயும், தேவரீரால் கடாக்ஷிக்கப்பட்டு சிறப்பாளரான நித்யஸூரிகளாலே போற்றப்படுகிறவராயும் இருக்கிறீர்.

2. ஸ்ரீவைகுண்டம் என்கிற பரமபதத்தில் (கைங்கர்யம் செய்யும்) பக்தர்களாலும் (குணாநுபவம் பண்ணும்) பாகவதர்களாலும் சூழப்பட்டு, ஒப்பற்ற பெருமையையுடையவனும் ஸர்வஜகந்நாதனுமான ஸர்வேச்வரன் லக்ஷ்மியோடுகூட எழுந்தருளியிருக்கிறார்.



இருக்குகைக்கு நிருபாதிக-ப்ராப்தி உண்டாயிருக்கச் செய்தே, அத்தை இழந்து, ஆக்கையின் வழி உழன்று, பிறவி என்னும் கடலிலே விழுந்து அழுந்திக் கிடந்து அலைகின்ற சேதனர்படியைத் திருவுள்ளம் பற்றி அவ் விபூதியில் அனுபவம் உண்டது உருக்காட்டாதே, இவர்களையும் அவர்களோடு ஒரு கோர்வையாக்குகைக்காக [3]निषद्वर-दीर्घिका-निपतित-निजापत्य-आदित्सा-अवतीर्ण-पितृக்ரமத்தாலே, சேற்றில் அழுந்திக்கிடந்த பிரஜையைக் கண்ட பிதாவானவன் ஆதரத்தோடு எடுக்க வருமாப்போலே, இவ் விபூதியிலே அவதீர்ணராய், வன்பெருவானகம் உய்ய, தணியா வெந்நோய் உலகிற் தவிர்ப்பான் அணியார் பொழில் சூழ் அரங்கநகரிலே மணியார் மேனியுடன் விபீஷணர்க்கு வேறாக நல்லனுமை தோற்ற அன்போடு தென்திசை நோக்கிப் பள்ளிகொண்டருளி; அவ்வளவன்றிக்கே அகில லோகங்களுக்கும் அவலோகநதாநம் செய்தருளுகைக்காக திவ்யோத்ஸவ வ்யாஜேந திருவீதியிலே வடிவிணை யில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக் கொண்டு, எல்லாரும் ஈடுபடும்படி வல்லார் ஆடினாற்போலே உலாவியருளி; [4]லோசந-சர்ச்சா-ஸாஹஸ-அஸஹமாய் புஷ்ப-ஹாஸ-ஸுகுமாரமான திருமேனி இளைப்புத்தீரத் திருமஞ்சனமாடி யருளி, [5]ஸசந்த்ர-சந்தந-பங்க-மகரந்த-ஸுமநோ-ப்ருந்த-ஸுந்தரராய்க் கொண்டு எழுந்தருளி நிற்கிற நிலை மந்தர பர்வதம் என்று மதிக்கலாயிரா நின்றது.

அது எங்ஙனே யென்னில்-[பஶ்யத் ஸுராஸுர-கணம்] மந்தர பர்வதமானது 'பருவரை யொன்றி நின்று முதுகில் பரந்து சுழல' என்கிற படியே அமிருத-மதன-ஸமயத்தில் சுழன்று வருகிறபடியாலும், [6]ஸம்ஸ்தாந—விஶேஷத்தாலுண்டான தன்னுடைய ஶோபாதிசயத்திலே வைத்த கண் வாங்காதே பார்த்துக் கொண்டு நிற்கிற [7]மதநோத்யோக-பாரீணரான தேவாஸுர-கணத்தை யுடையதாயிருக்கும்.

தேவரீர், [8]साक्षात् मन्मथमन्मथः என்னும்படி மன்மதனுக்கும் மடலெடுக்க வேண்டும்படியாய் [9]पुंसां दृष्टिचित्तापहारियான ஸௌந்தர்யத்

3. சேற்றுமடுவில் விழுந்த தன் குழந்தையை எடுக்கப்பதறி இறங்கும் பிதாவைப்போல.

4. உறுத்தி நோக்கும் பார்வையையும் பொறுக்கமுடியாததாய், மலர்ந்த புஷ்பம் போல் மிருதுவாயிருப்பதான.

5. குளிர்ந்த சந்தனக்குழம்பினாலும் பரிமளம் மிகுந்த புதிய புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஸுந்தரராய்.

6. (உருவ) அமைப்பு.

7. (கடலைக்) கடைவதில் உள்ள முயற்சியில் ஆழ்ந்த தேவர்கள், அஸுரர்கள், இவர்களுடைய கூட்டங்களை.

9. புருஷர்களுடைய கண்ணையும் மனதையும் அபஹரிக்கிறவனை.

தாலே விவசராய் [10]கிண்ணகத்தில் இழிவாரைப்போலே திரள்திரளாய்க் கொண்டு திருமேனியை எப்போதும் கண்களாலே அநுபவியா நிற்கிற அநுகூல-ப்ரதிகூல-விபாகமற ஸர்வ-ப்ராணிகளை யுடையராயிரா நின்றீர்.

[ஸுமநோ-விகாஸ-ஸத்-ஸித்த-சாரண-ஸமூஹ-நிஷேவ்யமாணம்]—மந்தர் பர்வதமானது போக-யோக்ய-ப்ரதேச-தர்சநத்தாலே விகஸ்வரமநஸ்கராய், காம்பீர்யாநுகுணயௌவநாதி-வைலக்ஷண்யத்தையுடையராயிருக்கிற ஸித்த-சாரணாதி-தேவ-யோநி-விசேஷ-பரிஷந்நிஷேவ்யமாணமாயிருக்கும். தேவரீர் [11]स चानन्त्याय कल्पते என்றும், 'உள்ள உலகளவும் யானும் உளனாவன்' என்றும் சொல்லுகிற படியே ஸாம்ஸாரிக-ஸங்கோசம் தீர்ந்து, நமஸ்-ஸப்தோபலக்ஷிதரான ஞான-பக்த்யாதியுடையரான முக்தருடையவும், [12]सूरयो नित्यसंसिद्धाः सर्वदर्शिनः என்று சொல்லப்படுகிற விழுமிய வமரரான நித்யஸித்தருடையவும், ஸம்யக்-ஞான-பூர்வகமாக முக்தி-ஸாதநத்திலே முயலுகிற அரங்கம் திகழும் மனத்தவருடையவும் திரளாலே 'கலக்கமில்லா நல்தவ முனிவர் கரைகண்டோர் துளக்க மில்லாவானவரெல்லாம் தொழுவார்கள்' என்கிறபடியே நிரந்தரம் ஸேவிக்கப் படாநின்றீர்.

[ஸந்த்ருஷ்ட-சாருதர-ஸாரதராம்ருதௌகம்]-மந்தரமானது தன்னாலே சாருத்வாவஹ-ரூப-சாதுர்யத்தை யுடைத்தாய், மாதுர்யாதிசயத்தாலே ஸாரதரமான அம்ருத-ப்ரவாஹத்தை யுடைத்தாயிருக்கும். தேவரீர் 'தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை' என்கிறபடியே ஜ்வர-ஸந்நிபதிதரைப் போலே அடைவு கெட்டு அலற்றும்படி கடாக்ஷிக்கப்பட்டிருப்பாராய், அஸ்ப்ருஷ்ட-ஸம்ஸார-கந்தராகையாலே சாருதரரால், அஸ்தாந-ரக்ஷா-வ்யஸநிகளாம்படியான ப்ரேமாதிசயத்தாலே ஸாரதர்மான நித்ய-ஸூரி-ஸங்கத்தை யுடையீராய் இராநின்றீர்.

[த்வாம் ரங்கராஜ கலயாமி ஹி மந்தராத்ரிம்]-ஆக இப்படிகளாலே அமுதில் வரும் பெண்ணமுதான பிராட்டியைப் பிறப்பிக்கையாலே உண்டான உபகார-ஸ்ம்ருதி உள்ளே ஊற்றிருந்து பாவநா-ப்ரகர்ஷத்தாலே ஹர்ஷம் முற்றி, தேவரீரும் பிராட்டியுமாக ஸ்ரீரங்கத்தில் மந்தர—ஸாம்யத்தை அங்கீகரித்துக்கொண்டு எழுந்தருளி நிற்கிற நிலைபோலே இருந்தது.

॥ हरिः ओं ॥

---

10. வெள்ளம்.

11. எல்லையில் பேரின்பத்தை அடைபவனாகிறான்.

12. நித்யஸித்தமான பெருமையையுடையவர்களான (நித்ய) ஸூரிகள். எப்போதும் ஸேவித்துக்கொண்டிருப்பவர்கள்.

ஸ்ரீ:

# புத்தக விமர்சம்

## ஸ்ரீ அழகியசிங்கர் அருள்மொழியும் சதாபிஷேக மலரும்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 41-வது திவ்யாஸ்தாநத்தில் மூர்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய 84-வது திருநக்ஷத்திர மஹோத்ஸவம் சென்ற மார்கழி மாதத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இம்மலர் அதன் பரிவாஹமாய் சாச்வதமான ஒரு ஞாபகச்சின்னமாகும். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனிடத்திலும் அவனடியார்களிடத்திலும் பக்தி வாய்ந்த மஹான்களான சிஷ்யர்கள் பல வித்வான்களிடமிருந்து விஷயங்களைப் பெற்று இதைத் தொகுத்திருக்கிறார்கள். மதத்தில் பற்றும் நம்பிக்கையும் குறைந்து மற்ற விஷயங்களிலேயே ஆர்வம் மலிந்து கிடக்கும் இந்நாட்களிலும் ஆசார்ய ஜன்ம திநத்தைக் கொண்டாடி இம்மாதிரி ஒரு மலரை இயற்றுவது யாவரும் வறவேற்கத் தக்கதாகும்.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்ற திருநாமம் கொண்ட இவ்வழகியசிங்கர் 1855-ம் வருஷத்தில் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள காரக்குரிச்சியில் ஜனித்து, அங்கேயே தன் மடத்தில் 33, 34 பட்டங்களில் எழுந்தருளியிருந்த அழகியசிங்கர்களிடம் ஸமாச்ரயணம், வேதாந்த காலக்ஷேபம், பரந்யாஸம் முதலிய வற்றையும் பெற்று, பகவத் கைங்கர்ய ரூபமான திருவாராதனம் காலக்ஷேபம் முதலியவற்றைச் செய்துகொண்டு இல்லறத்தை நடத்திவந்தார். 1923ஆ பிப்ரவரி மாதத்தில் இவ்வாஸ்தாநத்திற்கு எழுந்தருளி, பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் 18, மலை நாட்டுத் திருப்பதிகள் 13, சோழ நாட்டுத் திருப்பதிகள் 40, நடுநாட்டுத் திருப்பதிகள் 2, இத்திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து, இப்போது சில வருஷங்களாக ஸ்ரீரங்கத்தில் வடதிருக்காவேரியின் கரையிலுள்ள தசாவதார ஸந்நிதியில், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆராதநத்தைச் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கிறார். ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளின பதினைந்து வருஷங்களுக்குள் சுமார் இரண்டரை லக்ஷ ரூபாய்க்கு கிராமங்கள் வாங்கியிருப்பதாகவும்,

புதிய மடங்கள் கட்டுவதற்காக ரூ 60440-யும் ஜீர்ணோத்தாரணத்திற்காக ரூ 48500-யும் எம்பெருமான்களுக்கு ஆபரணம் முதலியவற்றுக்காக சுமார் ரூ 8600-யும் செலவழித்திருப்பதாகவும் இம்மலர் கூறுகிறது.

இம்மஹானைப் பற்றி ஞானநுஷ்டான சீலர்களான வித்வான்களும் உயர்ந்த பதவியிலுள்ள ப்ரபுக்களும் வடமொழியிலும் தென்மொழியிலும், சுலோகமாகவும் கத்யமாகவும், செய்யுட்களாகவும் வசனமாகவும் இரண்டும் கலந்தும் எழுதியிருப்பதால் இது மலர்மட்டுமின்றி சீரிய கலம்பகமாகவும் திகழ்கின்றது. அவரவர்கள் இவ்வழகிய சிங்கர் விஷயத்தில் தாங்கள் ஈடுபட்ட துறைகளில் இறங்கி, அவருடைய பகவத் பக்தி, ஞானம், அநுஷ்டானம், உபதேச ஸாமர்த்யம், லௌகிக கார்ய நிர்வாஹச் சிறப்பு முதலான பல குணங்களை விரிவாக எழுதியுள்ளார்கள். இவர் ஆழ்வாரும் ஸ்ரீ ராமாநுஜரும் வேதாந்த தேசிகனும் ஒன்றி உருவெடுத்து வந்தாற்போல் இருக்கிறார் என்று நிர்ணயிக்கின்றனர்.

அழகியசிங்கர் அருள்மொழி என்ற முதற்பகுதியில் இப்பெரியார் அருளிச் செய்த ஆறு ஸ்தோத்ரங்களிலிருக்கின்றன. முதலாவதான **லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ த்யான ஸோபாநம்** லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை திருவடி முதல் திருமுடிவரை வர்ணித்து இவர் ஈடுபடுவதைக் கூறுகிறது. அடுத்த இரண்டும் ச்ருதி வாக்யங்களை நான்காமடியாகக் கொண்ட துதிகள்; அவை இவருடைய சுருதி பரிசயத்தையும் உபநிஷதர்த்தங்களிலுள்ள தேர்ச்சியையும், கவநஸாமர்த்யத்தையும் காட்டுகின்றன. ந்யாஸதசகம் வங்கிபுரத்து நம்பிகாரிகை இவற்றை நினைப்பூட்டும் ஆசார்ய திநசர்யையும், மஹாஸ்வாமிகத்யமும் நம்போலியருக்கு த்ருஷ்டாந்தமாக இவருடைய குரு பக்தியை எடுத்துக் காட்டுகின்றன. இவை எளிய நடையில் இருப்பது நம் பாக்யமே.

ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டத்திற்காக அபிஷிக்தராயிருக்கிற ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் அநுக்ரஹித்துள்ள பூமிகையில், சிஷ்யர்களும் தானும் இப்பெரியாருடைய ஸ்துதியில் ஈடுபடுவது பொருத்தமானதே என்பதை ராமாயணம் அயோத்யாகாண்டத்தில் குஹ பரத ஸமாகமத்திலிருக்கும் சுலோக வ்யாக்யான முகத்தாலே காட்டி, 'இம்மஹாசார்ய விஷயத்தில் ஸ்பர்த்தாவிப்லவ-விப்ரலம்பாதி தோஷங்கள் கலசாதபடி இம்மாதிரி கைங்கர்யங்களைச் செய்வதே சிஷ்யர்களுக்கு ஸகல க்ஷேமாவஹம்' என்ற கடைசி வாக்யத்தால் சிஷ்யர்கள் கைக்கொள்ள வேண்டியதையும் கைவிட வேண்டியதையும் மிக அழகாகக் காட்டியிருக்கிறார்.



இம்மலருக்கு வ்யாஸங்களை அளித்தவர்கள் எல்லோரும் வித்வான்களாதலாலும், நல்ல விஷயத்தில் சொல்லப்பட்டிருப்பதாலும், எல்லா வ்யாஸங்களுமே சிறந்தன. அவற்றுள் தாரதம்யத்தைக் காணலாகாதென்பது ஒருபுறமிருக்க, காணவும் இயலாது. இருந்தாலும் சிலவற்றின் விசேஷத்தை மட்டும் குறிப்பிடுகிறேன்.

ஸ்ரீ. உ. வே. வித்வான் வெங்கடராமாசாரியருடைய **வைபவ ப்ரகாசிகை** வடமொழியிலும் புதுக்கோட்டை ஸ்ரீ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் **அழகியசிங்கர் மாலை** தென்மொழியிலும் இவ்வழகிய சிங்கருடைய ஜீவிய சரித்திரத்தை சுருங்கக் கூறுகின்றன. வடமொழியில் 'எல்லை' என்ற பொருள் கொண்ட 'மர்யாதா' என்னும் சொல்லை தமிழ் வழக்குக்கிணங்க 'ஸந்மாநம்' என்ற பொருளில் ப்ரகாசிகையில் கூறியிருப்பது வடமொழிக்கு ஒரு சொல் லாபம் என்று காட்டுகிறது. திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ. வே. ஸௌம்ய நாராயணாசார்யர் தன் அஸாதாரண ரீதியில் 'அங்கண்மாஞாலம்' (பெரிய திருமொழி) என்ற பாசுரத்தை வ்யாக்யான முகத்தால் **சிங்கப்பிரானுடையவும் அவனை ஆராதிக்கும் ஆசார்யர்களுடையவும்** பெருமையைக் காட்டி, கௌண சதாபிஷேகத்தோடு நிற்காமல், முக்ய சதாபிஷேகமும் நடக்கவேண்டும் என்று ஆசாஸிக்கிறார்.

தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் இருக்கும் **குருமலர்க் கலம்பகம்** பல அரிய புதிய விஷயங்கள் கொண்டிருக்கிறது. இதில் 'ஸிம்ஹம்' 'கருடன்' என்ற வடமொழிச் சொற்களுக்கு முறையே 'அருள் மாரி' 'வேதம்' என்று பொருள் என்பதை வ்யாகரண ஸூத்ரங்களை யிட்டுக் காட்டியும், 'ஸ்ரீபாஷ்யம் நரஸிம்ஹத்தையே கூறுகிறது' என்பதை மங்கள சுலோக வ்யாக்யானத்தால் ஸூசிப்பித்தும் 'கருடாரூடனே வேதாரூடன்' என்றும் 'சொல்லினைத்துக்கும், சிங்கமே இலக்கு, பொருளனைத்துக்கும் சிங்கமே தலை' என்றும், இப்படியே 'கருடக் குன்றமாகிய சிங்கமே பரம்பொருள் என்றதை வேதமும் ஆழ்வாரும் எம்பெருமானாரும் தேசிகனும் விளக்கியுள்ளார்கள்' என்பதையும் மிகவும் அழகாக நிரூபித்திருக்கிறது.

**முக்கோற்பகவர்** என்னும் செந்தமிழ்க் கட்டுரை த்ரிதண்டிகளான ஸந்யாஸிகள் சங்க நூல்களின் காலம் தொட்டே தமிழ் நாட்டில் இருந்திருக்கிறார்கள் என்பது முதலான விஷயங்களை தமிழ்க் காவ்யங்களையிட்டு நிரூபித்து, இவ்வழகிய சிங்கரின் பெருமையை விளக்குகிறது.

**அழகியசிங்கர் வைபவத்தில்** அழகிய சிங்கரின் ஸஞ்சாரத்தையும் அவர் செய்த கைங்கர்யங்களின் ஒரு ஜாப்தாவையும் காணலாம்.

நம்மாழ்வாரின் அனுபவத்தை ஒரு புதிய முறையில் சித்தரித்துக் காட்டும் அடியேன் காணிக்கை எவரையும் இன் புறுத்தும். அடியேன் அனுபவம் ‘அழகிய சிங்கர்’ என்ற சொல்லில் ‘அழகிய’ என்ற பகுதியின் பாவத்தை சிக்கென எடுத்து உரைக்கிறது. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குத் திருவடியில் பாதுகை இருக்கிறதென்றும், காரணம் உபாயம், பலம் முதலிய எல்லா தசைகளிலும் லக்ஷ்மியோடு கூடிய வஸ்துவே பரப்ரஹ்மம் என்பதை விக்ரஹம் நேரில் காட்டிக் கொடுக்கிறதென்றும் இது முதலான பல அரிய விஷயங்கள் இதனின்றும் நாம் அறிகின்றோம்.

பல சிறந்த ஆழ்பொருள்களையுடைய வ்யாஸங்களை வித்வான்களிடமிருந்து சேகரித்து மிக அழகாகத் தொடுத்து இந்தக் க்ரந்தத்தை அதிகப் பிழையின்றி ஸ்வல்ப காலத்திலேயே வெளியிட்டிருப்பது நிர்வாஹகர்களின் ஊக்கத்தையும் ஆசார்ய பக்தியையும் காட்டுகிறது. முன்காலம் போல் திருநக்ஷத்திர தினத்தில் ததீயாராதனத்தோடும் பாராயணத்தோடும் நிற்காமல் ஸமீபத்திலில்லாதாருக்கும் பிற்பட்டாருக்கும் கூட உபயோகமாகும்படியான வழியில் இந்த மலரை அழகான க்ரந்த ரூபமாக மலர்த்தினவர்களுக்கு எல்லோரும் கடமைப்பட்டவர்கள். இப்படி பகவத்பக்தியிலேயே வயது முதிர்ந்த ஒரு மஹானைப் பற்றிக் கூறும் இம்மலரை எல்லோரும் பெற்று சிரமேற்கொண்டு அநுபவித்து பயன்பெறுவார்களாக.

இந்த நூலைத் தொகுத்தவர் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார், அட்வோகேட், சென்னை. ப்ரசுரகர்த்தாக்கள் :—ஸ்ரீமான்கள்—1. தேவனார் விளாகம். வித்வான் ப. வ. திருவேங்கடாசாரியர், 2. தோட்டாலம் ராஜகோபாலாசார்யர், 3. பருத்திச்சேரி. சே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார். இம்மலர் சென்னையில் ஷை ப்ரசுரகர்த்தாக்களிடம் கிடைக்கும்.

ஸ்ரீ:

# ஜாதி நிர்ணயம்

[ஸ்ரீ. உ.வ. புத்தங்கோட்டம், ஸ்ரீநிவாஸாசார்யர், ஆஸ்தான வித்வான் அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்.]

## பிழை திருத்தம்

[சென்ற ஸஞ்சிகையில் ‘ஜாதி நிர்ணயம்’ என்ற லேகநத்தின் கடைசி வாக்யத்தில் (58-வது பக்கம்) ஒரு சிறு பிழை நேர்ந்து விட்டதைப் பற்றி நாம் மிக வருந்துகிறோம். அதை அடியிற் கண்டவாறு திருத்திக் கொள்ளவும்.

“ஜாதி ஸித்திக்கிறதென்று சொல்லப்பட்டதாகிறது” என்றதை “ஜாதி ஸித்திக்கிறதென்று சிலர் சொல்லுவது பொருந்தாதென்று சொல்லப் பட்டதாகிறது என்று திருத்திக் கொள்க. (ப-ர்)

## இந்த ஜாதி விஷயத்தில் த்ருஷ்டாந்தம்

இங்கு சொல்லப்பட்ட ப்ராம்மண்யாதி ஜாதிகளுடைய பேதங்களை எளிதாக அறியும்படி ஓர் உதாஹரணம் காட்டுகிறோம்.

இவ்வுலகத்தில் மண்ணினால் (ப்ரதிமை) பொம்மைகளைப் பண்ணுகிற குயவன் முதலானவர்கள் வெண்மை நிறமுடைய மண் சிகப்பு நிறமுடைய மண் கருப்பு நிறமுடைய மண் இவைகளினால் ப்ரதிமைகளைச் செய்யும்பொழுது தன்னால் செய்யப் படும் பாதிமைகள் பலவிதங்களாக இருந்தால் அழகாக இருக்கும் என்று நினைத்து சில ப்ரதிமைகளை பாதிபாகம் வெளுப்பு மண்ணும் கால் பாகம் சிகப்பு மண்ணும் மற்றொரு கால் பாகம் கருப்பு மண்ணுமாகக் கலந்து செய்கிறான்.

வேரு சில ப்ரதிமைகளை பாதி பாகம் சிகப்பு மண்ணும் கால்பாகம் வெளுப்பு மண்ணும் மற்றை கால் பாகம் கருப்பு மண்ணுமாகக் கலந்து செய்கிறான். வேரு சில ப்ரதிமைகளை வெளுப்பு சிகப்பு கருப்பு ஆகிய மூன்று நிறமுள்ள மண்களை ஏறக்குறைய ஸமபாகங்களாகக் கலந்து செய்கிறான். வேரு சில ப்ரதிமைகளை பாதி பாகம் கருப்பு மண்ணும் கால் பாகம் வெளுப்பு மண்ணும் கால் பாகம் சிகப்பு மண்ணுமாகக் கலந்து செய்கிறான்.

இப்படியே துணி நெய்கிறவனும் வெளுப்பு சிகப்பு கருப்பு நிறமுள்ள நூல்களைக் கலந்து பலவித வஸ்த்ரங்களை நெய்வதையும் பார்க்கிறோம். அவைகள் வெவ்வேறாகவே இருந்து கொண்டு சேர்ந்து செய்யகூடிய காரியங்களில் ஒன்றாக இருப்பதையும் பார்க்கிறோம்.

இதுபோலவே ஈச்வரனும் ஸத்வம் ரஜஸ் தமஸ்—என்கிற மூன்று குணங்களுடன்கூடிய மண்போன்ற ப்ரக்ருதி த்ரவ்யத்தை ஒரு குணமுள்ள பாகம் அதிகமாகவும் மற்றொரு குணமுள்ள பாகம் குறைவாகவும் கலந்து பிராம்மணாதி தேகங்களை உண்டாக்கி அந்தந்த ஜீவாத்மாக்கள் முன் செய்த கர்மங்களுக்குத் தகுந்தபடி அவரவர்களுக்கு தேகங்களாகக் கொடுக்கிறான்.

இதுதான் 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃. என்கிறது முதலான ஸ்ருஷ்டியைச் சொல்லும் வாக்யங்களுடைய தாத்பர்யம்.

அநாதியா இருக்கின்ற ஜீவாத்மாக்களுக்கு அவரவர்கள் முன்பு செய்த கர்மங்களுக்குத் தகுந்தபடி தேகங்களைக் கொடுப்பதுதான் ஸ்ருஷ்டி என்னப்படுகிறது. இப்படி ப்ராம்மண்யாதி ஜாதிகளுடைய ஸவரூபம் சொல்லப்பட்டது.

இவ்விஷயத்தில் மனு யாஜ்ஞவல்க்யர் வேத வ்யாஸர் முதலிய மகர்ஷிகள் தங்களுடைய ஸ்ம்ருதி க்ரந்தங்களில் இந்த ப்ராம்மண்யாதி ஜாதிகளை கீழே சொல்லியபடி ஸத்வாதி குணங்களின் தாரதம்ய ரூபங்களாகச் சொல்லாமல்—

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌟𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌃 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌯𑍋𑌨𑌿𑌜𑌾𑌃 ॥

என்கிறபடியே அந்தந்த ஜாதி ஸ்த்ரீ புருஷர்களுக்குப் பிறந்தவன் அந்தந்த ஜாதியாகிறான் என்று எழுதி இருப்பது விருத்தமாகாதா என்று சிலருக்கு சங்கை உண்டாகலாம். அது விருத்தமன்று என்பதை இங்கு வ்யக்தமாகக் காட்டுகிறோம்.

தர்ம சாஸ்திரம் என்கிற சப்தத்திற்கு. தர்மங்களை உபதேசிக்கிற க்ரந்தம் என்று பொருள். அவையாவன மனு ஸ்ம்ருதி யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி போன்ற18-ஸ்ம்ருதிகளும் அவைகளுக்கு விருத்தமல்லாத இதிஹாஸ புராணங்களுமாம்.



இந்த எல்லா க்ரந்தங்களிலும் மனிதன் அவசியம் செய்யவேண்டியதாகச் சொல்லப்படும் தர்மங்கள் எல்லாம்

(மனுஸ்ம்ருதி)

𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌯𑌥𑌾𑌵𑌦𑌨𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌅𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑍋 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

[ஓ மனு மகர்ஷியே! நான்கு வர்ணங்களி (ஜாதிகளி) னுடைய தர்மங்களையும் இந்த நான்கு ஜாதி மனிதர்களுக்குள் ஒரு ஜாதி ஸ்த்ரீ அல்லது புருஷன் மற்றொரு ஜாதியின் புருஷன் ஸ்த்ரீகளோடு கலப்பதினால் பிறந்த மனிதர்களுடைய தர்மங்களையும் உள்ளபடியே வரிசையாக எங்களுக்கு உபதேசிக்கவேணும்]

என்கிற மனுஸ்ம்ருதி முதல் ச்லோகத்தில் சொல்லுகிறபடியே அந்தந்த ஜாதிகளையே முக்கியமாகக் கொண்டு உபதேசிக்கப்படுவதாலும் இது அந்தந்த ஆச்ரமங்களுக்கும் உப லக்ஷணமாகையினாலும்

தர்மங்களைச் செய்ய நினைக்கும் ஒவ்வொரு மனிதனும் அவைகளை ஆரம்பிப்பதற்கு முன் நாம் இந்த ஜாதியை உடையவன் இந்த ஆச்ரமத்தை உடையவன் நமக்கு இந்த தர்மங்கள் பொருந்தும் இந்த தர்மங்கள் பொருந்ாதவை என்று தீர்மானித்து பொருந்ாதவைகளைத் தவிர்த்து பொருந்துமவைகளை அனுஷ்டிக்கவேண்டியதே உசிதமாகிறது.

இவ் விஷயம் கீதை அத் 18. 𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌰𑌤𑌃 என்கிற ச்லோகத்திலும் வ்யக்தமாகச் சொல்லப்படுகிறது.

ஆகவே ஒரு மனிதன் தன்னுடைய ஜாதிக்கி அனுகுணமான தர்மங்களைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முந்தி தன்னை இன்ன ஜாதி என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டியதவச்யமாக முடிந்ததால் கீழே சொல்லிய ஜாதி லக்ஷணத்தின்படி நம்முடைய தேகத்தில்—ஸத்வகுணம் அதிகமாக இருக்கிறதா அல்லது ரஜோகுணமதிகமாக இருக்கிறதா அல்லது மூன்று குணங்களும் ஸமமாக இருக்கிறதா அல்லது தமோகுண மதிகமாக இருக்கிறதா, என்று ப்ரத்யக்ஷமாகக் காணமுடியாத ஸத்வாதி குணங்களை அறிய முடியாதாகையினால் தன்னை பிராமணனாகவோ அல்லது க்ஷத்ரியனாகவோ அல்லது வைச்யனாகவோ அல்லது நான்காவது வர்ணமாகவோ, நிச்சயிக்க முடியாததினால் ஷெ. நிச்சயத்தோடு அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களை எல்லாம் விட்டு விடவேண்டி வரும்.

அப்பொழுது தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஸர்வ தர்மங்களும் அனுஷ்டிக்கப்படாமல் வீணாகுமாதலால் தர்ம சாஸ்திர க்ரந்தங்களை ஆத்மாக்களுடைய க்ஷேமத்திர்க்காக எழுதி வைத்தது வ்யர்த்தமாக முடியும்.

ஆகையினால் பிராமண்யாதி ஜாதிகளுடைய வஸ்து ஸ்திதியானது, கீழே சொன்ன பாத்ம ஸம்ஹிதாதிகளில் சொல்லியபடி ஸத்வாதி குணத்ரயங்களுடைய தாரதம்ய ரூபமாக இருந்தபோதிலும் மகர்ஷிகள் தங்களால் எழுதப்பட்ட தர்ம சாஸ்திர க்ரந்தங்களில் ஒருவனாலும் கண்டறிய முடியாத அந்த ஜாதிகளை எழுதாமல் அறிவில்லாதவர்களும் தம் தம் ஜாதியை எளிதாகத் தெரிந்து கொண்டு அந்தந்த ஜாதிக்கு உசிதமான தர்மங்களை அனுஷ்டிக்கும்படி, அந்தந்த ஜாதி ஸ்த்ரீ புருஷர்களுக்குப் பிறந்தவன் அந்தந்த ஜாதியாகிறான் என்று எழுதி வைத்தார்கள். உதாஹரணம்:—பிராமண ஜாதி ஸ்த்ரீக்கும் பிராமண ஜாதி புருஷனுக்கும் பிறந்தவன் பிராமணனாகிறான். இப்படி மற்ற ஜாதி விஷயத்திலும் கண்டு கொள்வது.

இங்கு பெற்றவர்களான தாய் தந்தை தேகத்திலும் பிறந்த குழந்தை தேகத்திலும் கீழே சொல்லப்பட்ட ஜாதியான குணத்ரய தாரதம்யமிருப்பதால் இது விருத்தமன்று.

இது இந்த கர்ம பூமியிலுள்ள மனிதர்களுடைய தர்மானுஷ்டானத்தைக் குறித்து தம்தம் ஜாதிகளை எளிதில் அறிந்து கொள்ளும்படி மகர்ஷிகளால் சொல்லப்பட்டது. ஆகையினால் ஈச்வரனுடைய தேகத்திலுண்டான 4 ஜாதிகளிடத்திலும், தபோ மகிமையினால் பிறந்த சில ஜாதிகளிடத்திலும் அந்தந்தஜாதி தாய் தகப்பனுக்குப் பிறந்தமையாகிற லக்ஷணமில்லாவிட்டாலும் அது தோஷமாகாது.

ஆகையினால் பாத்ம ஸம்ஹிதா பாரத கீதாதிகளில் சொல்லப்பட்ட நான்கு ஜாதிகளின் லக்ஷணங்களுக்கும் தர்ம சாஸ்த்ரங்களில் மகர்ஷிகளினால் சொல்லப்பட்ட நான்கு ஜாதி லக்ஷணங்களுக்கும் விரோத லேசமில்லை.

தந்திரவார்த்திகம் என்கிற மீமாம்ஸா க்ரந்தத்தில் ப்ராமண்யாதி ஜாதிகளை ப்ரத்யக்ஷமாக அறிய முடியுமா அல்லது முடியாதா என்று விஸ்தாரமாக விசாரித்து கடைசியில் ப்ரத்யக்ஷமாகக் காண முடியுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இதின் ஸங்கிரகம்.

ஆண் குயிலுக்கும் பெண் குயிலுக்கும் தேகத்தின் உருவமானது ஸமானமாக இருந்தாலும் ஏதோ சில காரணங்களைக் கொண்டு இது



ஆண் குயில் இது பெண் குயில் என்று எப்படி பிரித்தறிகிறோமோ அப்படியே ஒவ்வொரு மனிதனுடையவும் வம்ச ஸ்மரணத்துடன் அதாவது இவன் இவனுக்குப் பிறந்தவன் என்கிற அறிவுடன்கூட அவனைப் பார்த்தால் அவனவனுடைய ஜாதியும் ப்ரத்யக்ஷமாக தோன்றும் என்று.

இதை ஸ்ரீ ஆளவந்தாரும் தாமருளிச் செய்த ஆகம ப்ராமாண்யத்தில் விஸ்தாரமாக விசாரித்து தங்கத்திலிருக்கும் நிறத்தைப் பார்த்து இது தாம்ரமல்ல என்று எப்படி நிச்சயிக்கிறோமோ உருகி இருக்கும் நெய்யை வாஸனையினாலோ அல்லது ரஸத்தினாலோ இது எண்ணெயல்ல என்று எப்படி அறிகிறோமோ அப்படியே அந்தந்த வம்சத்தில் பிறந்த ஞாபகத்துடன் கூட அந்தந்த மனிதனைப் பார்த்ததும் அந்தந்த ஜாதிக்கு ப்ரத்யக்ஷம் வரலாம் என்று தீர்மானித்திருக்கிறார்.

ஸ்ரீ தேசிகனும் ந்யாயஸித்தாஞ்சனகிரந்தத்தில், தாய் தகப்பனுடைய ஸம்பந்த ஸ்மரணத்தினால் ப்ராம்மண்ய ஜாதி ப்ரத்யக்ஷமாக அறியப்படுகிறதென்று சொல்லி ஆளவந்தாருடைய ஷி க்ரந்தங்களையும் எழுதி இருக்கிறார்.

பரமத பங்கம் என்கிற ரகஸ்யத்திலும் ஶப்தவிஶேஷ வ்யுத்பத்தர ணவிம்ஶஹம்ஸ ருத்வத்ருக்ஷத்தினாலே வ்யுத்பத்த விஶேஷ ஜாதிகளை காணுமாப்போலே ப்ராம்மண்யாதி ஜாதிகளையும் காணலாம் என்று அருளிச் செய்தார்.

அதாவது உருக்கி வைத்த நெய் எண்ணெகளுடைய ஸ்வரூபம் ஒரே மாதிரியாகக் கண்ணுக்கு தோன்றினாலும். வாஸனை அல்லது ருசி இவைகளைக்கொண்டு இது எண்ணெயல்ல நெய்தான் என்று நிச்சயிப்பது போலவும் சில ரத்நங்களை பாலில் போட்டால் பால் திரிந்து போகும் என்று ப்ரஸித்தம். அப்படி பால் திரிந்து போவதைக் கொண்டு இது நல்ல ரத்நமே கெட்டதல்ல என்று எப்படி தீர்மானிக்கிறோமோ அப்படியே ஒரு மனிதனைப் பார்க்கும்பொழுது இவன் இன்னாருடைய குமாரன் என்கிற நினைவுடன் பார்த்தால் அவனுடைய ஜாதியும் ப்ரத்யக்ஷமாகத் தோன்றும் என்று அபிப்பிராயம்.

இந்த ஜாதிகளுடைய ப்ரத்யக்ஷ விஷயத்தில் ஸேச்வர மீமாம்ஸை தத்வடீகைகளில் அபிப்ராயமிருந்தாலும் ப்ரும்மண்யாதிகள்-ஜாதிகள் என்பதிலும் தேக தர்மங்கள் என்பதிலும் ஜன்ம ஸித்தஙகள் என்பதிலும் ஸ்ரீ பாஷ்யகாரர் பர்யந்தமான பூர்வாசாரியர்களுக்கு அபிப்ராய பேதமில்லை.

ஸ்ரீ பாஷ்யகாரரும் கீதை அத். 18 ஸூரானுஷக்தியவியமா் என்கிற ச்லோகத்தில் ஜீவாத்மாக்களுக்கு முன் ஜன்மத்தில் பண்ணின கர்மங்களுக்கு அநுகுணமாக ப்ராமணாதி தேகங்கள் உண்டாகின்றன என்று சொல்லி அந்தந்த தேக ஸ்வரூபத்தை நிரூபிக்குமிடத்தில் ப்ராம்மண தேகத்தில் ரஜோகுண தமோ குணங்கள் குறைந்தாலும் ஸத்வ குணம் அதிகமாக இருக்கிறதென்றும் க்ஷத்ரிய தேகத்தில் தமோகுண, ஸத்வ குணங்கள் குறைந்து ரஜோகுணமதிகமாக இருக்கிறதென்றும் வைச்ய தேகத்தில் ஸத்வ ரஜோகுணங்கள் குறைந்து தமோகுணம் கொஞ்சம் அதிகமாக இருப்பதாகவும் நான்காவது வர்ண தேகத்தில் ஸத்வரஜஸ்ஸுக்கள் குறைந்து தமோ குணம் மிகவும் அதிகமாக இருப்பதாகவும் அருளிச் செய்திருக்கிறார்.

ஸ்ரீ பாஷ்யத்திலும் ஸஞ்ஜ்ஞாபரிஹாரா என்கிற ஸூத்ர பாஷ்யத்தில் எல்லா ஜீவாத்மாக்களுடைய ஸ்வரூபமும் பேதமில்லாமல் ஒரே விதமாக இருந்தால் இவ்வுலகத்திலிருக்கும் சிலர்களை மற்றவர்கள் தொடலாம் சிலர்களை மற்றவர்கள் தொடக்கூடாது சிலரை பார்க்கலாம் சிலரைப் பார்க்கவும் கூடாதென்று சாஸ்திரங்களில் சொல்லி இருப்பது நியாய்யமாகாதென்று சங்கித்துக் கொண்டு சாஸ்திரங்களில் சிலரைத் தொடலாம் சிலரைத் தொடக் கூடாதென்று சொன்னது ப்ராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ர ரூபங்களான சுத்தங்களாயும் அசுத்தங்களாயுமுள்ள தேகஸம்பந்தத்தினால் என்று அருளிச் செய்திருக்கிறார்.

இதனாலும் ப்ராம்மண்யாதி ஜாதிகள் தேக தர்மங்கள் என்பது வ்யக்தமாகச் சொல்லப்பட்டதாகிறது. இவ்விஷயத்தை மேல் விஸ்தாரமாக நிரூபிக்கிறோம்.

ஆக இதுவரையில் ப்ராம்மண்யாதிகள் ஜாதிகளே என்றும் சிலர் ஜாதிகளல்ல என்பதுக்கு ப்ரமாணமில்லை என்றும் இந்த ஜாதிகளை ச்ருதிகள் பஞ்சராத்ரங்கள் ஸ்ம்ருதிகள் கீதை முதலிய பல ப்ரமாணங்களும் ஜன்ம ஸித்தங்கள் என்றும் தேக தர்மங்கள் என்றும் சொல்லுகின்றன என்றும் ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீபாஷ்யகாரர்களுடைய திருவுள்ளங்களும் ப்ராம்மண்யாதிகள் ஜாதிகள் ஜன்ம ஸித்தங்கள் தேக தர்மங்கள் என்பதற்குத் தான் அநுகுணங்கள் என்று நிரூபித்தோம்.

இனிமேல் ப்ராம்மண்யாதிகள் ஜாதியல்ல ஜன்ம ஸித்தங்களல்ல, தேக தர்மங்களல்ல என்கிற சில பக்ஷங்களையும் விசாரித்து தீர்மானிக்கிறோம்.

---

# பிரபந்த ஸாரம்

[ஸ்ரீ. உ. வே. மீமாம்ஸார்ணவ மீமாம்ஸகேஸரி பண்டிதராஜ D. T. தாதாசார்ய சிரோமணி, M. O. L., பிரின்ஸ்பல், ஸ்ரீ வெங்கடேச்வரா ஸம்ஸ்கிருத காலேஜ், திருப்பதி]

இப்பேருள்ள தம் நூல் முடிவில் ஸ்ரீ தேசிகன் 'சந்தமிகு தமிழ் மறையோன்' என்று தம்மைச் சொல்லிக்கொள்ளுகிறார். இங்கு பெரியோர்கள் ஒரு ஸ்வாரஸ்யம் சொல்லுவார்கள். அபிவாதநம் செய்யும்போது 'ரிக்சாகாத்யாயீ, யஜுச் சாகாத்யாயீ' என்றிப்படி அவரவர் சாகையைக் குறிப்பது வழக்கம். இப்படி ஸம்ஸ்கிருத வேதத்தின் ஒரு சாகையைச் சொல்லிக் கொள்வது குல பரம்பரையாலே வருமாயினும் அதைத் தவிர்க்க முடியாதாயினும் 'தமிழ் சாகாத்யாயீ' என்று தம்மைக் குறிக்கக் கூடுமாயின் அது தமக்கு மிகுந்த உகப்பைத் தருமென்று ஸ்ரீ தேசிகன் இங்கு தம் ஆவலை வெளியிடுகிறார். தம் தகப்பனாரிட்ட பெயரும் இன்னும் ஸ்ரீ ரங்கநாதன் ஸ்ரீரங்க நாச்சியார் முதலானோர் வழங்கிய பல பட்டப் பெயர்களும் இருக்கச்செய்தேயும் கூட நம் தேசிகன், 'பாதுகா ஸேவக' என்று கூப்பிடும்படியான பாக்யம் தமக்குக் கிட்டவேணுமென்று பாதுகாஸஹஸ்ரத்தில் மனோரதித்தார். அதுபோல இங்கு இப்படி ஆசைப்பட்டார் என்பது மிகவும் பொருத்தமுடையதே.

ஸம்ஸ்கிருத வேத சாகைகளுக்கு சிதைவு ஏற்படாமல் அவைகளைக் காப்பதன் நிமித்தம் ரிஷிகள் 'அநுக்ரமணி' என்னும் நூல்களைச் செய்துளர். அம்மாதிரி தமிழ் வேத சாகையைக் காப்பதற்காக ரிஷிபோன்ற நம் தேசிகன் இப்பிரபந்த ஸாரத்தை இயற்றினார். இவ்விஷயத்தைத் தாமே 'செந்தமிழால் அருள்செய்த வகை தொகையும் சிந்தாமல்' என்றருளிச் செய்தார். 'ப்ருஹத் தேவதா' என்னும் நூலில் அதன் கர்த்தாவான சௌனக மகர்ஷி ரிக்வேத மந்திரங்களைக் கண்ட பல ரிஷிகளின் வரலாற்றைப்பற்றி பேசுகிறார். நம் தேசிகனும் இங்கு 'ஆழ்வார்களவதரித்த நாளூர் திங்கள் அடைவு திருநாமங்கள்' 'மற்றுமெல்லாம்' 'அவர் தாஞ்செய்த வாழ்வான திருமொழிகளவற்றுட்பாட்டின் வகையாகத் தொகையிலக்க'மோடு உரைக்கின்றார்.

இவ்வாறு ஸ்ரீ தேசிகன் திவ்ய ப்ரபந்தங்களில் தமக்குள்ள விசேஷப் பற்றுதலைக் காட்டி அவைகள் சிதையாமலிருக்க அநுக்ரமணி போன்ற இந்நூலைச் செய்தாரென்பது செவ்வனே விளங்குகின்றது. ஆனால் இந்நூலுக்கு 'ப்ரபந்தஸாரம்' என்கிற பெயர் எவ்விதம் பொருந்தும் என்பதைப் பற்றி சிறிது ஆராய்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. ஸாரஸாரம் த்ரமிடோபநிஷத்ஸாரம் ரஹஸ்யத்ரயஸாரம் என்றிப்படி பெயரிடப்பட்ட நூல்களில் அந்தந்த விஷயத்தில் சிறந்து தோன்றுகிற அர்த்தங்களை விளக்

158715

கிக் காட்டுதலால், 'ஸாரம்' என்ற பெயர் பொருந்துகிறது. நாம் இப்போது விமர்சிக்கும் நூலிலோவென்றால் திவ்ய ப்ரபந்தங்களைச் செய்தருளின ஆழ்வார்களவதரித்த நாளுந் திங்கள் முதலியன காட்டப்படுகின்றனவே யன்றி அப்பிரபந்தங்களின் ஸாராம்சங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன வல்ல. ஆதலால் இங்கு இத்திரு நாமத்தின் சேர்க்கை எங்கனமென்பது.

இதற்கொரு ஸமாதானம். 'ப்ரபந்தஸாரம்' என்ற பதத்திற்கு பிரபந்தங்களுடைய ஸாரம் என்று பொருள் கொண்டு மேற்சொன்ன கேள்வி கேட்கப்பட்டது. அவ்வாறன்றி திவ்யப்ரபந்தமே ஸாரம் என்றால் அதற்கு இடமிராது. 'பூதங்களுக்கெல்லாம் பிருதிவி ரஸம்' என்றாரம்பித்து மேல்மேல் ரஸத்தைச் சொல்லி 'ரஸங்களுக்கு ரஸதமம் இது' என்று சாந்தோக்யத்தில் ஓதிய ந்யாயத்தால் திவ்ய ப்ரபந்தம் உலகத்தில் மற்றெல்லாவற்றிலும் ஸாரம். 'ரஸோ வை ஸ:' எனப்பட்ட அவ்வுயர்ந்த பொருளுடையதாதலின் ப்ரபந்தம் தானே ஸாரமாகத் தட்டில்லை. வேதத்தின் பொருள் அறியப்படாமலிருப்பினும் வெறும் அத்யயனத்திற் மிகுந்த சிறப்புண்டு. வேத ஸ்வரூபத்தை க்ரஹிப்பது அவச்யம். பொருளுந் தெரிந்தால் விசேஷமுண்டு. அவ்விதமே திவ்ய ப்ரபந்தங்களையும் அத்யயனம் செய்யவேண்டியது அவச்யம். அதில்லாதவனுக்கு ஸத்தை கிடையாது. பொருள் தெரிந்து அனுபவிக்கப்பெற்றால் ரொம்பவிசேஷம். அதில் சக்தியில்லாதவர்களும், ஸ்ரீ வைஷ்ணவ த்வம் நிலைபெறவேணுமானால் பிரபந்தாத்யயனம் செய்யவேணும். ஆகப் பிரபந்தமே ஸாரமாகிறது. ஸ்ரீ தேசிகனுடைய இக்கருத்து அந்தந்த ஆழ்வாரை விரித்து அந்தந்த பாட்டின் முடிவில் அந்தந்த நூலை (பாட்டுகளை) எனக்கருள் செய்யவேணுமென்று செய்யப்படும் வேண்டுதலால் தெளிவாகப் புலப்படுகிறது.

இன்னொரு ஸமாதானம். பிரபந்தங்களுடைய ஸாரமே பிரபந்த ஸாரமென்பது. ஆனால் இங்கு பிரபந்தங்கள் என்பவை திவ்ய பிரபந்தங்கள் அல்ல. பின் வேதநூல்கள். அவற்றின் ஸாரம் திவ்ய ப்ரபந்தங்கள். இவற்றைப் பற்றியதாகையால் இந்த ஸ்ரீ தேசிகன் சிறு நூலும் பிரபந்த ஸாரம். 'அந்தமிலாவாரணங்கள் நாலாகி நின்ற வதன் கருத்தை ஆழ்வார்களாய்ந்தெடுத்துச் செந்தமிழாலருள் செய்தவகை தொகையும்' என்று ஸாதித்ததிலிருந்து இக்கருத்து வெளியாகிறது.

இந்நூலுக்கு 'ப்ரபந்தஸாரம்' என்று பெயர். 'வேதாந்த குரு மொழிந்த ப்ரபந்தஸாரம்' என்ற விடத்து யாப்பிலக்கண முறையால் 'காரொளி வண்ணனே—கண்ணனே கதறுகின்றேன்' இத்யாதி விடங்களில் வண்ணனே முதலிய பதங்களில் உள்ள ஏகாராதிகள் போல் 'ஸ' என்ற அகாரம் அளபெடுத்து நீண்டு நின்றது. அதனால் அப்பதம் 'ஸாரம்' ஆகி நூற்பெயரும் 'ப்ரபந்த ஸாரம்' ஆயிற்றென்கிற ஸமாதானம் அறிஞர் எளிதில் அங்கீகரிக்கக் கூடியதன்று. ஆகிலும்,

'சாதுசனம் வாழவென்று சாற்றிய நற்பிரபந்த சாரம்' என்ற தனியனில் 'பிரபந்தசாரம்' இருத்தல் வேண்டுமோ என்று பிறக்கும் ஐயமற சிந்தனை செய்து ஒருவித முடிவு செய்வது கற்றோர்க்குத் தகும்.

ஸ்ரீ:

# ஸப்தாந்ந ப்ராஹ்மணம்

[ஸ்ரீ. உப. வே. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர், மாம்பலம்]

சென்ற ஸஞ்சிகையில் ஸப்தாந்ந ப்ராஹ்மண வாக்யங்களை ப்ரஸ்தாவித்து வரும்பொழுது, 'பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள நெல் கோதுமை முதலான அந்நங்கள் மநுஷ்யர்களெல்லாருக்கும் பொதுவானவை. அவைகளைத் தமக்கே என்று எவர்கள் ஏகதேசத்தில் அநுபவிக்கிறார்களோ அவர்கள் பாபத்திலிருந்து விடுபட்டவர்களாகார்' என்று உபநிஷத் கூறுகின்றதென்று நாம் எழுதியிருந்தோம்.

"ஸாதாரணமஸ்ய தத் ஸாதாரணமந்நம் யதிதமத்யதே । ஸ ய ஏததுபாஸ்தே ந ஸ பாப்மநோ வ்யாவர்த்ததே । மிச்ரம் ஹ்யேதத் ”

என்பது உபநிஷத் வாக்யம். இதன் பொருளாவது :—' ஒன்று இவர்களுக்குப் பொதுவானது. அது எதென்றால், அவர்களால் புஜிக்கப்படும் அந்நமே. எவன் அதைத் தனதென்றே தானே அநுபவிக்கிறானோ, அவன் பாபத்திலிருந்துவிடுபட்டவனாகிறானில்லை. அது பொதுவான சொத்தன்றோ?' என்பதுதான். இவ்விடத்தில் 'இவர்களுக்குப் பொது' என்று ஒருவரையும் வ்யக்தமாக நிர்த்தேசியாமல் 'இவர்கள்' என்று மாத்ரம் ஸாமாந்யமாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும், ப்ரகரணத்திலிருந்து 'இவர்கள்' என்னும் சப்தத்தால் மநுஷ்யர்களே நிர்த்தேசிக்கப்படுகிறார்கள் என்று சொல்லவேண்டும். மேல் வாக்யங்களில் மற்றை அந்நங்களை விபஜிக்கையில் 'த்வே தேவாநபாஜயத்' என்று தேவர்களும் 'பசுப்ய ஏகம் ப்ராயச்சத்' என்று திர்யக்குக்களும் வ்யக்தமாகப் பேசப்படுகிறபடியால், இவ்விடத்தில் 'இவர்கள்' என்னும் ஸாமாந்ய சப்தத்தால் மற்றொரு ஸ்ருஷ்டியாகிற மநுஷ்யர்களே விவக்ஷிதர்கள் என்று நிர்ணயிக்கக்கூடும். 'அந்நம்' என்னும் சப்தமும் கேவலம் ப்ரஸித்த அந்நத்தை மாத்ரம் குறியாமல் அதன் லாபத்திற்கு உபகாரகமாயிருக்கும் தநதாந்யம் முதலியவைகளையும் குறிக்கிறதென்று சொல்வது உபபந்நமாகும். 'மிச்ரம்' [கலந்தது] என்னும் சப்தம் 'ஸாதாரணம்' என்னும் சப்தத்தின் அர்த்தத்தை விளக்குகின்றது. ஆகையால், மநுஷ்யர்களுடைய ஜீவநத்திற்காக ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள அந்நமும் அதன் ஸாமக்ரிகளாகிற தநதாந்யங்களும் எல்லாருக்கும் பொதுவானவை என்று உபநிஷத் அபிப்ராயப்படுகின்றதென்பது வ்யக்தம்.

'இப்படியும் உபநிஷத் அபிப்ராயப்படுமோ? லோகத்தில் 'ஸ்வம்' என்றும் 'ஸ்வாமி' என்றும் இத்யாதியான வ்யவஹாரங்கள் அநாதி காலமாக வழங்கி வரவில்லையா? அவனவனுடைய பரிச்ரமத்தால் ஸம்பாதிக்கப்படும் சொத்து அவனவனுக்கே உரியது என்னும் வ்யவஸ்தை குலைந்தால் ஜகத்தில் மஹத்தான க்ஷோபம் ஏற்பட்டு விடாதோ? இக்காலத்தியச் சில அதர்மிஷ்டர்களல்லவோ இவ்வாறு ஒரு கிளர்ச்சியைப் புதிதாகச் செய்து வருகிறார்கள்? இப்படிப்பட்ட அதர்மத்தை உபநிஷத் ஆதரித்துப் பேசுமோ?' என்று ஒரு சங்கைச் சிலருக்கு ஏற்படக்கூடும். அதற்கு ஸமாதானம் சொல்வோம்.

'ஸாதாரணம்' என்னும் பதத்திற்கு இரண்டு விதமாகப் பொருள் கூறக்கூடும். எந்த வஸ்துவில் நமக்கு ஏகாந்த பாத்யமில்லையோ, எதில் மற்றவர்களும் பாத்யதையைக் கொண்டாடக் கூடுமோ, அந்த வஸ்துவை லோகத்தில் பொதுவென்று வ்யவஹரிப்பார்கள். அதாவது, நமது இஷ்டப்படிக்கே, மற்றை ஒருவர்களுடைய அநுமதியையும் எதிர்பாராமலே, நாம் எவைகளை விநியோகிக்க அசக்தர்களாக இருக்கிறோமோ, அவையெல்லாம் பொதுவென்று கூறத்தக்கவையே என்று சொன்னதாயிற்று. இவ்விடத்தில் உபநிஷத் ப்ரயோகிக்கும் 'பொது' என்னும் சப்தம் இந்த அர்த்தத்தைப் போதிக்கின்றதென்று சொல்லும் பக்ஷத்தில் அது ஸங்கதமாகமாட்டாது என்பது உண்மையே.

"ஸப்த வித்தாகமா தர்ம்யா தாயோ லாப: க்ரயோ ஜய: ।
ப்ரயோக: கர்மயோகஶ்ச ஸத்ப்ரதிக்ரஹ ஏவ ச ॥"

[சொத்தைப் பெறுவதற்கு ஏழு விதமான தர்ம மார்க்கங்களுண்டு. அவையாவன, தாயமாகப் பெறுவது க்ரயத்திற்கு வாங்குவது முதலியவை] என்று சொத்துக்களின் தர்ம்யமான உரிமையைப் பற்றி மநு பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட உரிமையை ஒத்துக்கொள்ளாத பக்ஷத்தில் ஜகத்தில் அவ்யவஸ்தை ஏற்பட்டு மஹத்தான க்ஷோபமும் ஸம்பவிக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. 'பொது' என்னும் சப்தம் மற்றுமொரு அர்த்தத்திலும் லோகத்தில் ப்ரயோகம் செய்யப்படுவதுண்டு. ஒரு வஸ்து நம்முடைய யதேச்ச விநியோகத்திற்கு அர்ஹமாயிருக்கையிலும் அது நம்முடைய ப்ரயோஜநத்திற்கு மாத்ரமிராமல் மற்றவர்களுடைய ப்ரயோஜநத்திற்கும் உத்தேசிக்கப் பட்டதாயிருக்கும் பக்ஷத்தில் அந்த வஸ்துவை நாம் பொதுவென்றே சொல்லுகின்றோம். அதாவது, ஒரு வஸ்துவை நாம் தர்ம்யமான மார்க்கத்தில் பெற்றிருந்தபோதிலும், 'அது கேவலம் நமக்கு ஸ்வார்த்தமாக உபயோகித்துக் கொள்ளக் கூடியதன்று; அதை மற்றவர்களுக்கும் கொடுத்தே நாம் உபயோகித்துக் கொள்ள



வேண்டும்' என்று ஒரு நியமம் அந்தச் சொத்து விஷயமாக ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில், அதைப் பொதுவான சொத்தென்றே லோகம் வ்யவஹரிக்கின்றதென்று சொன்னதாயிற்று. இந்த அர்த்தத்தில் உபநிஷத் 'பொது' என்னும் பதத்தை இவ்விடத்தில் ப்ரயோகித்திருக்கின்றது என்று சொன்னால், அதில் ஒருவித அஸாங்கத்யமும் இல்லை. உபநிஷத்தின் அபிப்ராயமும் இன் வருவாறு இருக்கின்றது. லோகத்தில் 'ஸ்வம்' என்பதும் 'ஸ்வாமி' என்பதும் உண்டு. நமக்கு ஈச்வரனால் கொடுக்கப்பட்டுள்ள சரீரம் முதலியவைகளைக் கொண்டு நாம் தர்ம்யமான த்ரவ்யார்ஜநத்தில் ப்ரவர்த்திப்பது சரியானதே. அந்த ப்ரயத்நத்தின் பலமாகக் கிடைக்கும் த்ரவ்யமும் நம்முடையது தான். ஆனால் அந்த த்ரவ்யம் நம்முடைய ப்ரயோஜநத்திற்காகவே இருக்கின்றது என்று நாம் நினைக்கக்கூடாது. அந்த த்ரவ்யம் மற்றவர்களுடைய ப்ரயோஜநத்தை உத்தேசித்தும் நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்று அறிந்து, அதைச் சாஸ்த்ரவிதிக்குத் தக்கபடி மற்றவர்களுக்கு விநியோகித்து விட்டு, சிஷ்டமான அம்சத்தை ஈச்வரனால் கொடுக்கப்பட்டதென்று நாம் புஜிக்கலாம். இதுதான் 'மா க்ருத: கஸ்யஸ்வித் தநம்' என்று பேசும் உபநிஷத்தின் தாத்பர்யம். ஜகத்திலுள்ள ப்ரஜைகளெல்லாம் இந்த உபதேசத்தை அநுஸரித்து நடக்கவேண்டுமென்பதே உபநிஷத்தின் அபேக்ஷை. அப்படி அவர்கள் நடப்பாரேயாகில், ஜகத்தில் ஒரு வித கலக்கமும் துக்கமும் நேரவே மாட்டா. வ்யக்திகளுக்குள்ளோ ஸங்கத்தார்களுக்குள்ளோ ராஜ்யங்களுக்குள்ளோ ஸம்பவிக்கும் சண்டைகளும் சச்சரவுகளும் 'தாம்' 'தம்முடையது' என்னும் புத்தியையே மூலகாரணமாக உடைத்தாயிருக்கின்றன. அந்தக் காரணத்தை ஒழிக்கும் இவ்வுபதேசத்தை உபநிஷத்தைத் தவிர்த்து வேறு எதுதான் சொல்ல சக்தம்?

இதன் அர்த்தம் இப்படிப்பட்டதுதான் என்பது இதன் உப ப்ருஹ்மணமாகிற பகவத்கீதை முதலியவைகளைப் பார்த்தாலும் விளங்கும்.

"கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந"

என்னும் வாக்யம் முமுக்ஷுபரமாகும்பொழுது, 'பலத்தில் உனக்கு ஸங்கம் வேண்டாம்; கர்மங்களை மாத்திரம் கேவலம் பகவதாராதந ரூபமாகச் செய்து வா' என்று பகவத் ஸம்பந்தமாக நமக்குள்ள பாரார்த்யத்தை உபதேசிக்கின்றது. இந்த வாக்யம் புபுக்ஷுக்கள் விஷயத்திலும் அந்வயிக்கக்கூடும். அப்பொழுது, 'கர்மங்களால் ஏற்படும் பலங்களில் நீ ஸ்வார்த்த புத்தியை விட்டுவிடு' என்பதே அதன் பொருள். பல ஸங்கத்யாகம் இரண்டு இடங்களிலும் துல்யம். பலஸமர்ப்பணம் ஒரு இடத்தில் பகவானிடம் செய்யப்பட்டிருக்கின்றது; மற்றொரிடத்தில் அவனுடைய ஸ்ருஷ்டியில்

அகப்படும் மற்றை ப்ராஜைகளிடம் செய்யப்படுகின்றது. எல்லோரும் முமுக்ஷுக்களாக மாட்டாராகையால், மற்றவர்களுக்குத்தக்க ஹிதத்தைப் போதிப்பதும் சாஸ்த்ரங்களின் தர்மமே. இந்த ஸ்வார்த்த த்யாகம் ப்ரஜை களுக்கு அத்யந்தம் ஹிதமென்பதை எவர்தாம் மறுக்கக்கூடும்? உபநிஷத் தின் உபதேசத்தை இப்படிப்பட்டதென்றறியாதவர்களல்லவோ இந்த உப தேசத்தையும் இக்காலத்திற் சில மூடர்களாற் செய்யப்படும் தர்ம விருத்த மான கிளர்ச்சியையும் ஸமமாகப் பேசுவார்கள்? ஸ்வார்த்த பரதையை ஒழிக்க ப்ரயத்நப்படும் உபநிஷத்தின் உதாரமான நோக்கம் எங்கே? கேவலம் கீட ப்ராயர்களான மூடர்களின் அல்ப ப்ரவ்ருத்தி எங்கே?

இந்த ஸந்தர்ப்பத்தில் மற்றுமொரு விஷயம் நினைவுக்கு வருகின்றது. 'வேதாந்திகள் கேவலம் தம் தம் ஆத்ம ச்ரேயஸ்ஸைத் தேடிப் போகும் நோக்க முள்ளவர்களே தவிர்த்து ஜகத் முழுவதின் க்ஷேமத்தைத் தேடுபவர்களாகார்' என்று வேதாந்திகள் மீது சில பண்டிதம்மந்யர்கள் பெரியதொரு தோஷத்தை ஆரோபிக்கிறார்கள். அது ஸர்வ ப்ரகாரத் தாலும் நிராதாரமென்பதற்கு ப்ரஸ்துத உபநிஷத் உபதேசமொன்றே பர்யாப்தமாகும். உபநிஷதர்த்தத்தை உள்ளபடி விவரிக்கும் ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடைய கீதா சொற்களை ஊன்றிப் பார்த்தால், ஜகத் உண்மையான க்ஷேமம் பெறுவதற்கு ஸ்ரீ க்ருஷ்ணன் காண்பிக்கும் மார்க்கத்தைப்போன்ற வேறு மார்க்கமும் உண்டோ என்று தைர்யத்துடன் கேட்கலாம்.

"Nothing else is capable of cultivating and confirming the sense of human solidarity so well as the Vedantic idea of society; in that ideal alone can we see the play of a perfect co-operation and harmony between the life of the individual and that of society taken as a whole."

[குறிப்பு. 'ஸர்வஸ்ய ஸாதாரணம்' என்னும் வாக்யத்தாற் சொல்லப்படும் ப்ரவித்தாந்நத்தின் ஸாதாரணத்தன்மையை, "ஏதே தஸ்மாத் ஸ்ருஷ்டா ஏதேஷாம் யோஹ்யேஷ ஏஷ ஸர்வ ஸம்" என்கிறபடி தேவதை பித்ருக்கள் முதலிய ஸகல போக்த்ருவர்க்கத்திற்கும் இந்த அந்நம் பொது வென்று விளக்கி, அப்படி அது எல்லாருக்கும் ப்ரயோஜநப்படுகிறபடியால் உபநிஷத் அதைப் பொது வென்று சொல்லுகிறது என்று ஸமர்த்திக்கக் கூடாதோ? என்று சிலர் கேட்க லாம். அப்படி எடுத்துக்கொள்வது ஸங்கதமாக மாட்டாது என்று தோன்று கின்றது. இவ்விடத்தில் அந்ந சப்த வாச்யங்களான ஏழு வஸ்துக்களுக்கும் விநியோகம் சொல்லப்படுகின்றது. மேல்வரும் "த்வே தேவா அபாஜயத்" என்ப தால் தர்ச பூர்ணமாஸ ரூபங்களான இரண்டு அந்நங்களுக்கு தேவர்களிடத்தில் விநி யோகமும், அதற்குமேல் வரும் "பசுப்ய ஏகம் ப்ராயச்சத்" என்பதால் பயோரூபமான அந்நத்திற்கு திர்யக் ஸ்தாவரங்கள் இவைகளிடத்தில் விநியோகமும் அதற்கு மேல்வரும் "த்ரீண்யாத்மநே அகுருத" என்பதால் மநஸ் வாக் ப்ராணன்



இந்தரூபமான மூன்று அந்நங்களும் ஸர்வவித ப்ரவ்ருத்திகளுக்கும் ஹேதுவாகிறபடி யால் அவைகளுக்கு ஸாமாந்யமாக ஸர்வ போக்த்ரு வர்க்கத்தினிடத்தில் விநியோகமும் சொல்லப்படுகிறபடியால், "ஸர்வஸ்ய ஸாதாரணம்" என்னும் வாக்யத்தால் ப்ரவித்தாந்நத்திற்கு மநுஷ்யர்களிடத்தில் விநியோகமே சொல்லப்படுகின்றது என்று விவரிப்பது உபபந்நமாகுமே தவிர்த்து, இவ்விடத்திலும் கடைசி மூன்று அந்நங்கள் விஷயத்திற்போல ஸர்வ போக்த்ருவர்க்கமே விவக்ஷிக்கப்படு கின்றது என்று சொல்வது உபபந்நமாகமாட்டாது. நிற்க, "ஸர்வஸ்ய ஸாதாரணம்" என்னும் வாக்யத்தில் இருக்கும் 'ஸர்வஸ்ய' என்பது ஸாமாந்யமாக ஸர்வ போக்த்ருவர்க்கத்தையும் குறிக்கின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், இந்த வாக்யத்தின் சேஷமாகிற "ய ஏததுபாஸ்தே" என்பதில் இருக்கும் 'யம்' என்னும் சப்தமும் அந்த போக்த்ருவர்க்கம் முழுவதையும் குறிக்கின்றது என்று சொல்லவேண்டிவரும். அது மநுஷ்யர்களை மாத்ரம் குறிக்கின்றது என்பதே ஸ்பஷ்டமாயிருக்கின்றது. ஆகையால் ஆக்ஷேபிப்பவர்கள் சொல்லுகிறபடி விவரிப்பது சரியன்று. ச்ருதப்ரகாசிகாசார்யர் ஜ்யோதிரதிகரணத்தில் இந்த உபநிஷத்தை வ்யாக்யாநம் செய்துகொண்டுவரும்பொழுது,

"ப்ராதாந்நஸ்ய ஸர்வஜீவாநாம் உபஜீவ்யத்வேந ஸாதாரணத்வாத் அஸ்ய ஸர்வ ஸாதாரணத்வம் உக்தம், தத்ர ப்ரவித்தாந்நம் பரிசேஷ்ய, ஸாமாந்யேந ப்ரத்யேக்ஷம் ஸ்வதந்த்ர ஸர்வ விநியோகாபாவாத் மநுஷ்யாணாம் ப்ரத்யக்ஷ விநியோக ஏவ வ்யக்த: 'த்ரீண்யாத்மநே அகுருத' இத்யவசிஷ்டாந்நத்ரயஸ்ய ஸர்வ விஷய வ்ருத்திஹேதுத்வாத் ஸாதாரண்யேந ஸர்வ போக்த்ருவர்க விசேஷகதோ நிர்தேசாத்"

என்று அநுக்ரஹித்திருக்கிறார். இதிலிருந்து 'ஸர்வஸ்ய ஸாதாரணம்' என்னும் வாக்யத்தால் ப்ரவித்தாந்நத்திற்கு மநுஷ்யர்களிடமே விநியோகம் சொல்லப் படுகின்றது என்பதே அவர் விவரணமென்று தெரிகின்றது. அந்த விவரணமே நம்மால் இவ்விடத்தில் அநுஸரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த விவரண ப்ரகாரம் ப்ரவித்தாந்நம் மநுஷ்யர்களெல்லாருக்கும் பொது வென்று ஏற்படுகின்றபடியால், அது எவ்விதம் பொதுவாகக்கூடும் என்பதையும் நாம் யதாசாஸ்த்ரம் விவரித்தோம். வ. வா.]

# விருத்தாந்தங்கள்

## திருக்குடந்தை கதாதரபுரம் சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி

இந்த ஸ்வாமி இந்த மாசியீ 16உ ஞாயிற்றுக் கிழமை தினம் திருக்குடந்தையில் தமது திருமாளிகையில் பரமபதமடைந்தார். இவரது வியோகத்தால் ஸ்ரீ வைஷ்ணவ லோகம் மிக வருத்தமுறும். இந்த ஸ்வாமி ஸ்ரீ அஹோபில மடத்தில் 38-வது ஆஸ்தாநத்தை அலங்கரித்திருந்த ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் பூர்வாச்ரம குமாரர்களில் மூத்தவர். இவர் ஸாமாந்ய சாஸ்த்ரங்களில் நல்ல பயிற்சி பெற்று பால்யத்திலேயே ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலும் தக்க வல்லமை பெற்றிருந்தார். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனிடத்திலும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்திலும் விசேஷப் பற்றுதலுள்ளவர். இவருக்கு திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதனிடம் விசேஷ ஈடுபாட்டுடன் இவர் பிள்ளை பூதங்குடி ஆதனூர் என்ற இரண்டு திவ்ய தேசங்களிலும் விசேஷ கைங்கர்யம் பல செய்திருக்கிறார். அந்த ஸந்நிதிகள் தத் காலம் நல்ல ஸ்திதியிலிருப்பதற்கு இவர் ப்ரதான காரணமாவர். இத்துடன் வட நாட்டில் புஷ்கரக்ஷேத்ரத்தில் தென் நாட்டின் தேவாலயம் போன்றதொரு பெரிய தேவாலயத்தைக் கட்டி ப்ரதிஷ்டை செய்வதற்கு இந்த ஸ்வாமிதான் ப்ரதானமான ஸஹாயம் செய்தவர். ஸ்ரீ அஹோபில மடாஸ்தானாதிபதிகளாக எழுந்தருளத் தக்கவர்களில் இந்த ஸ்வாமியும் ஒருவராக பரிகணநம் செய்யப்பட்டிருந்தார். இந்த ஸ்வாமியின் பிரிவால் பொதுவில் ஸ்ரீ வைஷ்ணவ லோகம் வருந்துவதுடன் முக்யமாக நமது தீபிகாபிமானிகள் மிகவும் வருந்த ப்ராப்தம். நமது தீபிகைக்கு இந்த ஸ்வாமியால் விசேஷ உபகாரம் நேர்ந்திருக்கிறது. ஒரு ஸம்வத்ஸரம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஸமாவேசத்தை ஸ்ரீ பிள்ளை பூதங்குடியில் இந்த ஸ்வாமி எல்லோரும் வியக்கத் தக்க ரீதியில் நடப்பித்தருளினார். இவருடைய ஸஹோதரர்களில் ஒருவர் பம்பாயில் சீப் ப்ரஸிடென்ஸி போஸ்ட் மாஸ்டராக இருந்து ஸமீபத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். மற்றுமிருவர் திருக்குடந்தையிலும் சென்னையிலும் அட்வோகேட்களாக இருக்கிறார்கள். அவர்களும் இந்த ஸ்வாமியைப் போலவே வித்வான்களாகவும் பரமை காந்திகளாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது.

(வே.)

---



சுபவிக்ரஹகுணாதிகள் புத்தியில் எப்படிப் புகுந்து நிரம்பும்? இத்தனை விக்நங்கள் உளவே. செய்யும் சரணாகதியை ஓர் பாமாலைபால் ஸமர்ப்பிக்க உத்தேசம். பூமாலை போன்றதான பாமாலையாயிருப்பது உசிதம். குணமென்னும் நாரில் விசித்ரமாய்த் தொடுக்கப்பட்ட புஷ்ப மாலை போன்ற சப்த குணங்களாலும் அர்த்த குணங்களாலும் வைசித்ர்யம் என்னும் அலங்காரங்களாலும் பல சித்ரங்களாலும் க்ரதிதமான பாமாலையைக் கொண்டு தேவரீரை அர்ச்சிப்பது உசிதம். ‘குணக்ரதித’ என்பதாலும், ‘வாங் மநோவ்ருத்தி வைசித்ர்யத:’ என்றதாலும் அர்ச்சநம் இப்படி இருப்பதல்லவோ உசிதம் என்று வ்யஞ்ஜநம் செய்கிறார். அதற்கு விரோதமாக என் சரீரம், வாக்கு, மனம் எல்லாம் முக்குணங்களாலும் விந்தையாகக் கட்டப்பட்டு எனக்கு ஸ்வாதீனமேயில்லாமல் இருக்கிறதே என்கிறார். தேஹமும் அசுசி; வாக்கும் மனமும் சுத்தமல்ல; இப்படி இருந்தும், ‘எது ஹிதம், உசிதம்; எது அஹிதம், அநுசிதம்’ என்று ஆலோசிக்காமலே பயஸம்ப்ரமத்தினாலே க்ரமவிசேஷமெல்லாம் தடுமாறி ஏதோ ப்ரார்த்தநாஸ்துதி பிதற்ற ஆரம்பிக்கப்படுகிறது. அதை உசிதமான அர்ச்சனமாகக் கொள்ளவேணும். ‘ஆரம்பிக்கப் படுகிறது’ என்பதால் பயபாரவச்யத்தால் பலாத்கரிக்கப்பட்டு அதிஸம்ப்ரமத்துடன் ஆரம்பிக்கப்படுவதை வ்யஞ்ஜநம் செய்கிறார். ‘ரங்கேச்வர’ என்பதாலும், ‘உசிதம் அர்ச்சநம்’ என்பதாலும் ‘அர்ச்சக—பராதீநராக’க் கோயிலில் எழுந்தருளியிருக்கும் கருணையை இத்துதிவிஷயத்திலும் ஆவிஷ்கரிக்க வேண்டும்’ என்று வ்யஞ்ஜனம்.

இங்கே காவ்யக்ரதநத்திற்கும் ஒட்டும்படி ‘குண, க்ரதித, காய, வாக், வ்ருத்தி, வைசித்ர்யம், உசித’ சப்தங்களின் பிரயோகத்தின் அழகை காவ்யரஸிகர் ரஸிக்கவேணும். “ரீதிராத்மா காவ்யஸ்ய”—காயம் என்பது ரீதி. வ்ருத்தி என்பது “வ்ருத்திபிர் பஹுவிதாபிராச்ரிதா” என்பது போல காவ்ய வ்ருத்தி.

‘எவன், எவன், அவன், அவன்’ என்று பெரிய பெருமாளின் ஏற்றத்திற்கேற்ற லக்ஷணங்களைக் காட்டி, தன் ஸ்தோத்ரத்திற்கும், ‘எது, அது’ என்று பரிஹாஸமாய்த் தாழ்மையைக் காட்ட லக்ஷணம் அமைக்கிறார். அப்பெருமானுக்கு இத்துதி. ‘ரங்கேச்வர’—எத்தனையோ அரும்பெரும் காவ்யங்கள் உம் முன்னிலையில் அரங்கேற்றப் பட்டிருக்கின்றன. இது ஒரு த்ருஷ்டி பரிஹாரம். (3)

मरुत्तरणिपावकत्रिदशनाथकालादयः
स्वकृत्यमधिकुर्वते त्वदपराधतो बिभ्यतः ।
महत् किमपि वज्रमुद्यतमिवेति यत् श्रूयते
तरत्यनघ तद्भयं य इह तावकः स्तावकः ॥ ४ ॥

*மருத்-தரணி-பாவக-த்ரிதஶநாத-காலாதய:*
*ஸ்வக்ருத்யமதிகுர்வதே த்வதபராததோ பிப்யத: ।*
*மஹத்கிமபி வஜ்ரம் உத்யதமிவேதி யத் ஶ்ரூயதே*
*தரத்யநக தத்-பயம் ய இஹ தாவக: ஸ்தாவக: ॥* 4

அநக—மாசற்ற பிரபுவே!
மருத், தரணி, பாவக, த்ரிதஶநாத, காலாதய:—வாயு, சூர்யன், அக்நி, இந்திரன் யமன் முதலியவர்கள்,
த்வதபராதத:—உமக்கு அபராதிகள் ஆகிவிடுவோமோ என்று
பிப்யத:—பயந்து
ஸ்வக்ருத்யம்—தங்கள் வ்யாபாரத்தை,
அதிகுர்வதே—நடத்துகிறார்கள்.
உத்யதம்—ஓங்கின,
மஹத்—பெரிய,
கிமபி வஜ்ரமிவ—வர்ணிக்க முடியாத அத்தனை கொடிய வஜ்ராயுதம் போன்ற
பயம் இதி—பயம் என்று
யத்ஶ்ரூயதே—எது சுருதியில் கேட்கப்படுகிறதோ
தத் பயம்—அந்த பயத்தை,
ய:—எவன்,
இஹ—இங்கே
தாவக: ஸ்தாவக:—உன்னைத் துதிப்பவனோ,
தரதி—(அவன்) தாண்டுகிறான்.

பயம், பயம் என்றும், மஹத்தான பயம் என்றும், வஜ்ரம் என்றும், இடி மேல் விழுவதாக பயமுறுத்துவது போலவும், மிக்க பயத்தை ஆங்காங்கு பேசிக்கொண்டு வருகிறார். ‘என் விக்ரஹத்திற்கு வரும் அபாயத்தை விலக்கிக்கொள்ள வேறு யாரையாவது ப்ரார்த்திக்கலாகாதா?’ ‘ஸாத்யமில்லை. நானும் மற்றொருவரை யாசிக்கமாட்டேன். உம்மைத் தவிர வேறு பயநிவர்த்தகருமில்லை. உலகமே உம்மிடமிருந்து பயந்து நடக்கிறது. பயத்தைக் கொடுக்கக்கூடிய வாயு முதலிய தேவர்களும் ம்ருத்யு வென்னும் தேவனும் உமக்கு நடுங்கி நடக்கிறார்கள்.’ தைத்திரீய சுருதியில் ஆநந்தமயப் பொருளின் ஆநந்தத்தைப் பற்றி ஆநந்தமீமாம்ஸை செய்யப்போகும் அவஸரத்தில், அதற்கு அடுத்த முன்வாக்யம் ‘இவரிடமிருந்து பயத்தால் வாயு வீசுகிறான் (உலகத்தை பரிசுத்தமாக்குகிறான்.) (இவரிடமிருந்து பயத்தால் ஸூர்யன் உதிக்கிறான் இவரிடமிருந்து பயத்தால் அக்நியும் இந்திரனும் ம்ருத்யுவும் (நால்வரோடு) ஐந்தாவதாக ஓடுகிறார்கள்’ என்றது.



பெருமாள் ரங்கத்தில் ‘ரதிம்கத:’, ஆநந்தபூர்ணர்’’ என்பதால் ரங்கத்திற்கு ‘ரங்கம்’ என்று பெயர். ब्रह्मणः कोशोऽसि (ப்ரஹ்மண: கோஶோஸி) என்று ப்ரணவம் ப்ரஹ்மத்திற்குக் கோசம் (பெட்டி) என்றது சுருதி. ப்ரணவ-விமாந-கோசத்தில் காணப்படும் ப்ரஹ்மம் இப்பெருமாள். பயவிஷயமான தைத்திரீய சுருதியை இப்பெருமாள் விஷயமாகக் கொள்ளுகிறார். கடசுருதியில் ‘எந்த ஜகத்ப்ராணனிடமிருந்து இவ்வுலகமெல்லாம் ஓங்கப்பட்ட பயங்கரமான வஜ்ரத்தினிடமிருந்து பயப்படுவதுபோல நடுங்கி நடக்கிறதோ, அந்த இப்பிராணனை அறிந்தவர் அமிருதராவர். இவர் பயத்தால் அக்நி தன் வ்யாபாரமான தபநத்தைச் செய்கிறான்; பயத்தால் ஸூர்யன் ஜ்வலிக்கிறான்; பயத்தால் இந்திரனும், வாயுவும், நால்வரோடு ஐந்தாமவனாக ம்ருத்யுவும் ஓடித்திரிகிறார்கள்’ என்று உள்ளது. இந்த சுலோகத்தில் முன் பாதியில் தைத்திரீய சுருதியையும், பின் பாதியில் கடசுருதியின் பின் வாக்யத்தையும், முன் பாதியில் கடசுருதியின் முன் வாக்யத்தையும் ஸ்வல்பவேறுபாட்டோடு அமைக்கிறார். சுருதியில் பயம் பயம் என்று திருப்பித் திருப்பிப் பேசுவதுபோல, இத்துதியிலும் இம்மஹத்தான பயாவஸரத்தில் பேசுகிறார். ‘கம்பநாத்’ என்னும் ஸூத்ரத்தில் ‘அங்குஷ்டமாத்ரமாக ஹ்ருதய குஹையில் இருக்கும் பெருமாளுக்கு உலகமெல்லாம் நடுங்கி நடக்கிறது’ என்று அழகாக ஸூசிப்பித்தார். அப்படி உலகம் நடுங்கி நடப்பது ப்ரஹ்மத்திற்கு நிச்சயமான அடையாளம் (லிங்கம்) என்றார். ‘எனக்கல்லவோ அது அடையாளம்’ என்று ப்ரஹ்லாதாழ்வானை ஹிரண்யன் வெருட்டினான். ‘எவன் கோபிக்கும்போது மூன்று லோகங்களும் அவற்றின் ஈச்வரர்களும் நடுங்குகிறார்களோ (கம்பந்தே) அந்த என்னுடைய ஆஜ்ஞையை எந்த பலத்தைக்கொண்டு நீ மீறினாய்?’ என்று கோபத்தோடு கேட்டான். அம்மதயானைக்கு நீர் ஸிம்ஹமானீர். சுருதியின் பேச்சுத்தான் ஸத்யம்; அஸுரன் பேச்சு ஸத்யமாகுமோ? சுருதி ஸூத்ரங்களின் பேச்சை ந்ருஸிம்ஹப் பெருமாள் ஸத்யமாக்கினார். எமக்கு வந்திடும் பயத்தை நீர்தானே நிவர்த்திக்கவேணும்.

காற்றைப்பற்றி சுருதி எடுத்த ‘வாத:’, ‘வாயு:’ என்ற சப்தங்களை எடுக்காமல், ‘மருத்’ என்று முதலில் வைத்ததில் ரஸமுண்டு. ‘மருத்’ என்பது தேவர்களைப் பொதுவில் சொல்லும். ‘தேவர்’ என்று பொதுப் பொருளையும் கொள்ளவேணும். தேவர்களான இவர்களும், நீர் யுத்தத்தில் ஜாதரோஷரானபோது நடுங்குவாரே; விரோதிகளான அஸுரர்கள் நடுங்கவேண்டாவோ. ராமாயணஸங்க்ஷேபச் சுலோகத்தை நினைக்கவேணும்.

ஸூர்யனை ‘தரணி:’ என்பார்; ஸம்ஸாரபயத்தைத் தாண்ட அவருக்கு வேறு தரணி (= ஓடம்) வேண்டும்; தன் பயத்திற்குத் தான் தரணியாகார்.

நீர்தான் எல்லோருக்கும் பயதாரணத்திற்கு (பயத்தைத் தாண்ட) தரணி. உம்மைத் துதிப்பவன் பயத்தைத் தரணம் செய்வான் என்று இங்கே கடைசியடியில் பேசுகிறார்.

‘பாவகன்’ என்றால் பரிசுத்திசெய்வான். ‘பாவநம்’ பரிசுத்தி செய்வது. இவனையும் பெருமாள் பாவநம் செய்து அபஹதபாப்மா வாக்கவேணும். இந்த ரஸங்களை வ்யஞ்ஜிப்பிக்கச் சுருதி பதங்களை மாற்றினது. ‘இந்திரன்’ என்று சுருதிபதம். எல்லோருக்கும் மேற்பட்ட ஈச்வரனைச் சொல்லும் சப்த சக்தியைக் குறைத்து ஒடித்து அவனுக்கு அப்பெயர். பெருமாளுக்குத்தான் அப்பெயர் தகும். அது போலவே, இங்கே அவன் விஷயத்தில் ‘த்ரிதசநாதன்’ என்று பேசுகிறார். இதுவும் சப்தசக்தியைக் குறைத்துப்பேச்சு. ‘காலன்’ என்பதால் ‘காலனுக்கும் காலனாகிய காலகாலன் நீர்’ என்று வ்யஞ்ஜநம். தாங்கள் செய்ய வேண்டிய தங்கள் அதிகாரக்ருத்யத்தைச் செய்கிறார்கள். எங்கே உம் ஆக்ஞையை மீறும் அபராதம் வருமோ என்று நடுங்கிச் செய்கிறார்கள்.

இதில் மிக்க ரஸமுண்டு. அத்வைதாசிரியராகிய ஸுரேச்வரர் இந்த ரஸத்தைத் தைத்திரீயோபநிஷத்தில் ஸூசிப்பித்தார். ஸுரேச்வரருடைய நைஷ்கர்ம்யஸித்தியை ஸ்வாமி தத்வடீகையில் உதாஹரித்தார். ஆநந்தமயனுடைய எல்லையற்ற ஆநந்தத்தைப் பேசுவதற்கு முன் க்ஷணத்தில் வாயு முதலிய தேவர்கள் பயந்து நடுங்கி ஸ்வக்ருத்யத்தைச் செய்கிறார்கள் என்று சொல்லி ஆநந்தமயனுடைய ஆநந்தத்திற்கு எல்லையில்லை என்று சொல்லி முடிக்கையில், இந்த ப்ரஹ்மத்தின் எல்லையற்ற ஆநந்தத் தன்மையை அறிந்தவர் ஒன்றுக்கும் பயப்படார்கள் என்று முடித்தது. இப்படி ஆநந்தமயமானது ப்ரஹ்மம் என்று அறிந்தவர் பயப்படாமல் ஸந்தோஷமாய், ஆநந்தமாய், ஸ்வயம்ப்ரயோஜநமாய், தம் கைங்கர்யங்களைச் செய்யலாமே என்று சுருதியின் உட்கருத்து. இதை ஸுரேச்வரர் ஸூசிப்பித்தார். ஸ்வாமிக்கும் இந்த ரஸம் திருவுள்ளம். ‘ஸ்வக்ருத்யத்தை அதிகரிப்பதை பயப்பட்டுக்கொண்டே செய்கிறார்கள். ஆநந்தப்பட்டுக்கொண்டே செய்யலாமே. பயநிவர்த்தகமும் ஆநந்தமயமுமான ப்ரஹ்மத்தினிடமிருந்து ஏன் பயப்படவேண்டும்?’ என்று பாவம். அடுத்த சுலோகத்திலும் உம்முடைய ஆநந்தத்தன்மை என்னும் ஓர் வர்ணிக்க முடியாத குணத்தை அறிந்தவனுக்கு ஓர் பயமும் இல்லை என்று இதைக்காட்டுகிறார். ‘கிமபி’ என்பதைமட்டும் இங்கே மூன்றாமடியால் சேர்த்தார். இப்போது நேர்ந்திருக்கும் பயம் வாக்குக்கும் நினைப்புக்கும் சக்யமல்லாதது என்கிறார். எம்தலையில் இடிவிழுந்தாலென்ன? அதினால் எமக்குத்தானே அபாயம் வரும்; எம்முயிரான உமக்கல்லவோ அபாயம் இப்போது ப்ரஸக்தம். எம்மை நீர் ரக்ஷிப்பீர்.



எமக்கு எம்ரக்ஷணவிஷயமான பயமில்லை. உம்திருமேனியை ரக்ஷிப்பாரார்? உம்மைத் தவிர வேறு ரக்ஷகர் இக்காசினியில் இல்லையே. ‘சுருதி நம் காதில் ஓதும் பயம்’ என்கிறார். சுருதி ஓதக் கேட்டிருக்கிறோம். இப்போது மஹத்தான பயத்தை நேரில் அநுபவிக்கிறோம். உம்மைத் துதிப்பவன் பயங்களைத் தாண்டுவான்; கோரஸம்ஸாரபயத்தைத் தாண்டுவான் என்று வேதம் ஓதுகிறது. ‘தரதி சோகம் ஆத்மவித்’ ‘அத ஸோ(அ)பயம் கதோ பவதி’— तरति शोकमात्मवित्, अथ सोऽभयं गतो भवति । நானும் உம்மை துதித்து இப்பெரும் பயத்தைத் தாண்டவிரும்புகிறேன். அநக-மாசறுசோதியே! துதிக்கும் நான் தேஹவானாயிருந்தாலென்ன? என் துதி குற்றமுடையதானாலென்ன? உன் அநகத்வம் போதாதோ? என்று திருவுள்ளம். (4)

भवन्तमिह यः स्वधीनियतचेतनाचेतनं
पनायति नमस्यति स्मरति वक्ति पर्येति वा ।
गुणं कमपि वेत्ति वा तव गुणेश गोपायितुः
कदाचन कुतश्चन क्वचन तस्य न स्यात् भयम् ॥ ५ ॥

பவந்தமிஹ ய: ஸ்வதீ-நியத-சேதநாசேதநம்
பநாயதி நமஸ்யதி ஸ்மரதி வக்தி பர்யேதி வா ।
குணம் கமபி வேத்தி வா தவ குணேச கோபாயிது:
கதாசந குதச்சந க்வசந தஸ்ய ந ஸ்யாத் பயம். (5)

குணேச — குணங்களுக்கு ஈசனே (உடையவனே)!
ஸ்வதீ நியத சேதநாசேதநம்—தன்னுடைய ஸங்கல்ப மாத்ரத்தாலே நியமிக்கப்படும் சேதநா சேதநாத்மகமான உலகத்தை உடைய
பவந்தம்—தேவரீரை
ய:—எவன்
பநாயதி—துதிக்கிறானோ
நமஸ்யதி—நமஸ்கரிக்கிறானோ.
ஸ்மரதி—ஸ்மரிக்கிறானோ,
வக்தி—பேர்சொல்லுகிறானோ.
பர்யேதிவா—ப்ரதக்ஷிணம் செய்கிறானோ
கோபாயிது:—ரக்ஷகரான
தவ—தேவரீருடைய
கமபி—ஒரு
குணம்—குணத்தையாவது
வேத்தி—அறிகிறானோ (உபாஸிக்கிறானோ),
தஸ்ய—அவனுக்கு
கதாசந—எக்காலத்திலும்
குதச்சந—எங்கேயிருந்தும் (எக்காரணத்தை யிட்டும்)
க்வசந—எவ்விடத்திலும்
பயம்—பயமென்பது
ந ஸ்யாத்—உண்டாகமாட்டாது.

உம்மைத் துதி செய்பவனுக்கு எல்லா பயமும் போய்விடும். நீர் நிரபாயராக எழுந்தருளியிருக்க உம்மைத் துதி செய்யக்கூட வேண்டியதில்லை,

நமஸ்காரம் செய்தால் போதும். ஸ்மரித்தாலும் திருநாமத்தை உச்சரித்தாலும் ஒரு ப்ரதக்ஷிணத்தைச் செய்தாலும் கூடப் போதும். உம்முடைய திருமேனி குஶலமாய் எழுந்தருளியிருக்கவேண்டும் என்ற ஆசையையும் 'பவந்'நாக இருக்கும்படியான உம்மை என்று பொருள் கொள்ளுமதையும் உத்தேசிக்கிறார். நீர் 'பவந்'நாக (இருப்பவராக) இருக்கவேண்டும்; ராமக்ருஷ்ணாதி விபவங்கள் போலே பூததசையாகாமல் நித்ய—பவந்நாய் எழுந்தருளியிருக்கும் பாக்கியத்தை உலகம் பெறவேணும். இஹபவந்தம்—இங்கேயே இருக்கிற உம்மை. வைகுண்டத்திலிருக்கிறீரே போதாதோ என்னவொண்ணாது; இப்பூலோக வைகுண்டத்திலிருக்கவேண்டும். 'வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல' என்றபடி இங்கே இருந்து கொண்டே சேதனாசேதனாத்மகமான உலகங்களையெல்லாம் உம்முடைய ஸங்கல்ப மாத்ரத்தால் நியமிப்பவரல்லவோ? இந்த சுபாஶ்ரயத் திருமேனியோடுகூடிய உம்மை, 'விபந்யவ:' என்று பரமபதப்பெருமாளைத் துதிப்பது போல எவன் புநாயதி துதிக்கிறானோ? பாடத்தெரியாதாயினும், துதிபாடுமத்தனை சிரமப்பட ஸௌகர்யமில்லையாயினும், (நமஸ்யதி) நமஸ்காரம் செய்தால் போதுமே. ஸ்மரதி—தூரத்திலிருந்து ஸ்மரித்தாலும் போதும். வக்தி—ஸ்மரிக்கும் புத்திசிரமம் கூட வேண்டாம். 'ரங்கம்' என்று வாக்கினால் உச்சரித்தாலும் போதும். பர்யேதி வா—கோவிலையோ, திருவீதிகளையோ சுற்றி வந்தால் போதுமே. அப்படிச்சுற்றி வருவது '**स तत्र पर्येति जक्षत्क्रीडन् रममाण:**' (ஸதத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண:) என்பதுபோல் ஆநந்தாநுபவமாயிருக்குமே.

குணங்களோடுகூடிய உம்மை இவ்வளவு செய்யவேண்டுமென்பதுமில்லை; உம்முடைய ஒரு குணத்தை அறிந்தாலும் (உபாஸித்தாலும்) போதும். 'கம் அபி' என்பதால் 'வாய் மனத்திற்கு எட்டாத' என்று கொண்டு, 'ஆநந்த' குணத்தைவாங்குவது உசிதம். அந்த குணத்தை உபாஸிப்பவரைப் பற்றி ஸாக்ஷாத்தாக '**आनन्दं ब्रह्मणो विद्वान् न बिभेति कुतश्चन**', '**न बिभेति कदाचन**' (ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வான் ந பிபேதி குதஶ்சந', 'ந பிபேதி கதாசன') என்று சுருதி பேசிற்று; 'கதாசந' குதஶ்சந' என்பதோடு 'க்வசந' என்று சேர்த்து இங்கே பலத்தைப் படிக்கிறார்.
(5)

स्थिते मनसि विग्रहे गुणिनि धातुसाम्ये सति
स्मरेदखिलदेहिनं य इह जातुचित् त्वामजं ।
तयैव खलु सन्धया तमथ दीर्घनिद्रावशं
स्वयं विहितसंस्मृतिर्नयसि धाम नैःश्रेयसम् ॥ ६ ॥



ஸ்திதே மநஸி விக்ரஹே குணிநி தாதுஸாம்யே ஸதி
ஸ்மரேதகிலதேஹிநம் ய இஹ ஜாதுசித் த்வாமஜம் ।
தயைவ கலு ஸந்தயா தமத தீர்க்கநித்ராவஶம்
ஸ்வயம் விஹிதஸம்ஸ்ம்ருதிர்-நயஸி தாம நைஶ்ரேயஸம் ॥ (6)

இஹ—இங்கே (கோயிலில், பூலோகத்தில் இவ்வாயுளில்,)
ய:—எவன்
மநஸி—மனதானது
ஸ்திதே—ஒரு விஷயத்தில் நிலைநிற்க சக்தமாயிருக்கும்போது,
விக்ரஹே—சரீரம்
குணிநி—ஸ்வஸ்தமாய் நல்வழியிலிருக்கும்போது,
தாது ஸாம்யே ஸதி —தாதுக்கள் ஸமமாய் அரோகமாயிருக்கும் போது
தம்—அவனை
தயைவ ஸந்தயா —அந்த ஒரு நினைப்பைக் கொண்டே
ஸ்வயம்—நீராகவே

விஹிதஸம்ஸ்ம்ருதி: —அவனை உம்மை நன்றாய் நினைக்கச்செய்து
அகில தேஹிநம்—ஸர்வ சரீரியாயும்
அஜம்—பிறப்பற்றவருமான
த்வாம்—உம்மை
ஜாதுசித்—எப்பொழுதாவது ஒரு தடவை
ஸ்மரேத்—ஸ்மரிப்பானோ (ஸ்மரித்திருப்பானாகில்
அத—பிறகு
தீர்க்க நித்ராவசம் —நீண்ட தூக்கமான மரணத்திற்கு வசமாயிருக்கும்போது
நைஶ்ரேயஸம் தாம —தனக்கு மேற்பட்ட ஶ்ரேயஸ்ஸில்லாத மோக்ஷம் என்னும் ஸ்தானத்தை
நயஸி—சேர்ப்பிக்கிறீர்.

எல்லா பயங்களும் தொலைய 'ஸ்மரதி வா' என்று உம்மை நினைத்தால் போதும் என்று முன்பு ஸாதித்தார்; கோயிலில் வஸிக்கும் உம்முடைய திருமேனியை ஒருக்கால் நன்று நினைத்திருந்தால் போதும் அந்திம ஸ்மிருதியை உண்டாக்கி அவனை மோக்ஷம் சேர்க்க. 'கலு' என்று இந்த விஷயத்தில் ப்ரமாணப்ரஸித்தியைக் காட்டுகிறார். அதற்காக பெருமாள் திருவாக்கிலிருந்துவந்த ப்ரமாண வசநங்களின் பதங்களாலேயே சுலோகத்தை அமைத்து, பெருமாளுக்கு அவர் உக்தியையே நினைப்பூட்டுகிறார். '**स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः । धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजं**' என்று தொடங்கிய சுலோகங்கள் பெருமாளாலேயே அருளிச்செய்யப்பட்டவை. 'உம்மை' என்பதற்கு இங்கே, கோயிலில் எழுந்தருளியிருக்கும் அரங்கனை என்று கருத்து. 'துப்புடையாரை' என்னும் பாசுரத்தில் "எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கேதும் நான் உன்னை நினைக்கமாட்டேன் அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே" என்று பெரியாழ்வார் அருளிச்செய்ததை இங்கே நினைக்கிறார்.

உம்மை ஸேவித்தாலல்லவோ உம்ஸ்மரணம் அந்தியகாலத்தில் நேரும்; தேவரீர் எழுந்தருளியிருந்தல்லவோ எல்லோரையும் தேஹ வியோககாலத்தில் ஸ்மரணத்தை அநுக்ரஹித்துக் காப்பாற்ற வேண்டும். தேவரீர் இங்கே எழுந்தருளியிருந்தே எம்மை அங்கே அனுப்பிச் சேர்ப்பிக்கவேணும். 'ஸ்திதே குணிநி; விக்ரஹே' என்று 'உம்முடைய திருமேனி நிரபாயமாய் எழுந்தருளியிருக்கையில்'' என்றும் காட்டுவதில் திருவுள்ளமாய் முதலில் 'ஸ்திதே' என்கிறார். முன் சுலோகத்தில் 'பவந்தம்' என்று தொடங்கியதுபோல், இந்தக் கவலையே நெஞ்சில் ஓடிக்கொண்டிருப்பது ஓரொரு சுலோகத்திலும் தெரிகிறது. அகில தேஹிநம் த்வாம்—கிலத்திற்குப் பிரஸக்தியில்லாமல், பூர்ணமான திருமேனியுடைய உம்மை. அகில தேஹியான உம்முடைய திருமேனிக்குக் கிலம் ப்ரஸக்தமானால் எந்த தேஹியின் தேஹம் நிற்கும்? அஜம் த்வாம்—பிறந்தவனுக்கல்லவா அபாயம் த்ருவம்; பிறவாத தேவரீர் திருமேனிக்கு அபாயம் வர ஸஹிப்போமோ?

உம்மை ஆச்ரயித்தவனுக்கு ஒருக்கால் தேஹவியோகம் வருவதை 'மரணம்' என்று பேசோம்; 'தீர்க்கமான நித்ரை' என்போம்; ஒருதரம் எக்காலத்திலோ உம்மை ஸ்மரித்ததை நினைத்துக்கொண்டே இருந்து அவன் தேஹத்திற்கு அபாயம் வருங்கால் அவனுக்கு ஸ்மரணத்தை கொடுத்து ரக்ஷிக்கும் தயாளுவாயிற்றே. நாங்கள் இப்பொழுது கதறுவதைத் திருவுள்ளத்தில் கொள்ளாமல் திரஸ்கரிக்கலாமோ? 'உம்திருவுள்ளம் மட்டும்தான் வேண்டும் எம்மனோரதத்தைப் பூர்த்தி செய்ய' என்று 'ஸ்வதீநியதசேதநாசேதநம்' என்பதால் வ்யஞ்ஜனம் செய்கிறார். ஒருவிரோதி தன் கைகால்களை அசைக்க முடியுமோ? 'நான் அர்ச்சை, நான் பராதீநன்' என்று நீர் பேசவொண்ணாது. 'உம்முடைய அப்பெரிய வீட்டுக்கு எங்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கத்தானே நீர் இங்கே கோயில் கொண்டிருப்பது' என்பதைக் காட்ட 'நயஸி தாம' 'வீட்டுக்குக் கொண்டுபோகிறாய்' என்கிறார். உம்மலால் எம்மை வீடுசேர்ப்பார் ஆர்? (6)

रमादयित ! रङ्गभूरमण ! कृष्ण ! विष्णो ! हरे !
त्रिविक्रम ! जनार्दन ! त्रियुग ! नाथ ! नारायण ! ।
इतीव शुभदानि यः पठति नामधेयानि ते
न तस्य यमवश्यता नरकपातभीतिः कुतः ॥ ७ ॥

ரமாதயித! ரங்கபூரமண! க்ருஷ்ண! விஷ்ணோ! ஹரே!
த்ரிவிக்ரம! ஜநார்தந! த்ரியுக! நாத! நாராயண!!



யதீந்த்ரஸ்ய தேசிகம் பூர்ணம் என்கிற விடத்திலும் இவ்விவக்ஷை கொள்ளவேணும், பூர்ணரான—"யேநவிச்வஸ்ருஜோ விஷ்ணோர பூர்யத மநோரத:" என்று விச்வகர்த்தாவாயிருந்த ஸர்வேச்வரனுக்கும் ஒரு கொற்றையுண்டாயிருந்து அவன் மநோரதத்தை பூர்த்தி செய்யும்படி பூர்ணராயிருந்த ஸ்ரீபாஷ்யகார ஸம்பந்தத்தையிட்டு சேதநோஜ்ஜீவநம் பண்ண ஸங்கல்பித்து ஜகத்ஸ்ருஷ்டியில் உறப்பட்ட ஸர்வேச்வரனுடைய நினைவு ஸ்ரீபாஷ்யகாரருக்கு ஸதாசார்யஸம்பந்தமல்லாதபோது கூடாதாகையாலே அதற்குப் ப்ராப்தரான ஆளவந்தாரும் அவதார ஸமாப்தி பண்ணுகையாலே பெரிய நம்பிகளும் வருந்தி எழுந்தருளி ஸகலார்த்தங்களையும் இவருக்கு உபதேசிக்கையாலே ஸர்வேச்வரனை பூர்ணமநோரதராக்கும்படி பூர்ணரானாரிவரேயாயிற்று "தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே" இதி. இங்ஙனன்றி வேறோராசார்ய ஸம்பந்தமுண்டானவர் பக்கலிலேயானால் அப்போதாசார்ய பேதமுண்டாய் ஸ்வாசார்யர் பக்கலிலே ப்ரதிபத்தி குறையவும் கூடுமாகையால் அதாகாதென்றும் ஆசார்ய ஸ்ப்ரஹ்மசாரிகள் எல்லாரிடத்திலும் ஆசார்ய ப்ரதிபத்தி அவச்யம் கர்த்தவ்யம் என்னும் திருவுள்ளத்தாலே ஸப்ரஹ்மசாரி என்றது. "திருக்கோட்டியூர் நம்பி" இவர் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஸகலார்த்தங்களும் அதிகரித்தவர். அர்த்த சிக்ஷை பண்ணவும்—ரஹஸ்யார்த்த சிக்ஷைபண்ணவும். திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார் என்றிறே குருபரம்பரையிலே அருளிச்செய்தது. சிக்ஷைபண்ணவும் என்று இங்ஙனே அருளிச்செய்தது திருவாய் மொழி கேழ்க்கவும் என்று, மேலே அருளிச்செய்திருக்கையாலே பெரிய நம்பிகள் ஸ்ரீபாதத்திலே க்ருத்ஸ்நரஹஸ்யார்த்த க்ரஹணங்களுமாய் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே அபூர்வார்த்த க்ரஹணமன்றிக்கே க்ருஹீதஸ்திரீகரணார்த்த ஸம்சீலநமென்று இவ்வளவே உள்ளதென்று, கொள்ளவேணும். ஆகையாலேயிறே "வைசாகே ரோஹிணீஜாதம்" என்கிற இவர் தனியனை ஆசார்யபரம்பரா தனியனில் சேர்க்காதே உபகாரகதயா பின்னிட்டனுஸந்திக்கிறது. இவ்வளவுமட்டுக் கொண்டும் ஆசார்ய பரம்பரையிலே சேர்த்து அநுஸந்திப்பார்கள் சிலர். இத்தால் ஸதஸ்யங்களான உபநிஷதர்த்தங்கள் மாத்திரம் பெரிய நம்பிகள் பக்கலிலே உள்ளது. ரஹஸ்யார்த்தங்கள் எல்லாம் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலேயாயிருக்கும். அவர் தாமும் அர்த்த கௌரவத்தையும் அதிகாரிகள் இல்லாமையும் பார்த்து இவருடைய ஆஸ்திக்யாதி பரீக்ஷார்த்தமாக பதினெட்டு பர்யாயம் நடந்து துவளப்பண்ணி சூழரவுகொண்டு மாஸோபவாஸம் கொண்டு அருமைப்படுத்தி அருளிச் செய்தருளித்து என்று கல்பித்து வேதாந்தங்களுக்கு விருத்தமாக விதைதிஹ்யங்களோடு புணர்த்து ரஹஸ்யார்த்தங்களை

எழுதியதெல்லாம் ஸத்ஸம்ப்ரதாயாகத மன்றுகையாலே உபஜீவ்யமாகாது திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேழ்க்கவும் இதி — திருவாய்மொழிக்கர்த்தம் கேழ்க்கவும், திருவாய் மொழிசப்தம் சாஸ்த்ர வித் இத்யாதிகள் போலே ததர்த்தபரம். கேழ்க்கை = ப்ரதம க்ரஹணம். உபதேசரூபம். பெரிய நம்பிகள் தாம் அருளிச்செய்யாதே இவர் பக்கலிலே தானே கேழ்க்க நியமித்தாராய்த்து. ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் பக்கலிலே நல்வார்த்தை கேழ்க்கவும் இதி. இந்த அரையருக்கு ஆளவந்தாராழ்வாரென்றும் மற்றொரு திருநாமமுண்டு, குருபரம்பரையிலே அருளிச்செய்தது. நல்வார்த்தை கேழ்க்கவும் என்றது உபலக்ஷணம். குருபரம்பரையிலே திருவாய் மொழியுமோதி ஸ்தோத்திரமும் அருளிச்செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினர் என்று அருளிச்செய்தாரிறே. திருவாய் மொழியுமோதி என்றது வேதாத்யயநம்போலே அக்ஷராசி க்ரஹணமாத்திரமாயிருக்கும். ஸ்தோத்திரமாகிறது-ஆளவந்தார் ஸ்தோத்திரம். நல்வார்த்தை கேழ்க்கவும் நியோகித்ததும் இதி

"ஸப்ரஹ்மசாரி ஹோதாம் ஸப்ரஹ்மசாரிதாம் கத: । ஸம்ஶிஷ்டோ யோ ஶுஶ்ரூஷித" என்கிறபடியே இதுவும் ஆவச்யகமாயிருந்தது, கேட்கவும் இதி

"சுபம்வா யதிவா பாபம் யஸ்ய ஶ்ருதமஸ்யாவகாரோதிய: ।
தத்வீஹ ஶாஸ்த்ரம்விதுஷாம் ॥"

என்கையாலே நல்வார்த்தையருளிச் செய்யும வரும் குருக்களாக வாதாணீரென்ற தாய்த்து. இங்கு பெரிய நம்பி தாமுபதேசியாத வர்த்தங்களுக்கும் கூட ஸப்ரஹ்மசாரிகளிடத்திலே தானே கேழ்க்க நியமித்த வித்தாலே பூர்வம் பரிக்ருஹித்தவாசார்யர் இருந்தால் அவர் நியமநம் கொண்டு தான் அவர் ஸப்ரஹ்மசாரிகளிடத்தில் கேட்கவேணு மென்றும் அவர் திருமேனி தளர்ந்தாலும் அவர் ஸப்ரஹ்மசாரிகள் பக்கலில் தானே சிஷ்டமானதை க்ரஹிக்கவேணுமென்றும் தோற்றுகிறது-உய்யக்கொண்டாருக்கு நாதமுநிகள் நியமநமிருக்க ப்ராப்தகாலத்திலே ஸப்ரஹ்மசாரிகளான குருகாவலப்பன் முதலானாரில் ஒருவரையோ பலரையோ கொண்டு நியமநத்தைத் தலைக்கட்டாதே தம் திருவடிகளான மணக்கால் நம்பியைக் கொண்டு தலைக்கட்டினத்தையும் பெரிய நம்பிகள் ஸப்ரஹ்மசாரிகளைக் கொண்டு ஆளவந்தார் நியமனத்தைத் தலைக்கட்டினதையும் ஆராய்ந்தால் தமக்கு வல்லராயிருப்பாரொரு அந்தேவாஸி உண்டாகில் அவரைக் கொண்டே ஸம்ப்ரதாயம் நடத்த வேணுமென்றும் அவரில்லாத போது தான ஸப்ரஹ்மசாரிகளைக் கொண்டு நடத்தவேணுமென்றும் தோற்றுகிறது.



கிஞ்ச—திருமலை நம்பி ஸ்ரீ பாதத்திலே ஸ்ரீமத் ராமாயணம் கேழ்க்க நியமித்ததாக இங்கருளிச் செய்யாமையாலும் குரு பரம்பரையிலே திருமலை நம்பி ஸ்ரீ பாதத்திலே ஸ்ரீமத் ராமாயணம் கேட்டருளினர் என்று அருளிச் செய்திருக்கையாலும் பஞ்ச ஸம்ஸ்காரமல்லாதே ஸ்ரீமத் ராமாயணம் கேழ்ப்பது அஸம்ப்ரதாயமாகையாலும் பெரிய நம்பி ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயித்த பின்பு அவர் நியோகத்தின்படி க்ரந்தங்கள் நடத்திப் போருகையாலும் பெரிய நம்பிகள் ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயிப்பதற்கு முன்னமே தானே திருமலை நம்பிகள் ஸ்ரீ பாதத்திலே திருவிலச்சினை தொடக்கமானதுகளையும் ஸ்ரீமத் ராமாயணாதிகளான புராணங்களையும் ஸ்ரீ பாஷ்யகாரர் அதிகரித்தாரென்று கொள்ளவேண்டும். இவ் விஷயத்திலே அஸூயையாலே தோன்றினபடி எழுதுவதற்கெல்லாம் நாம் உத்தரம் சொல்லவாளானோமல்லோம். "பஹுப்ய: ச்ரோதவ்யம்" கிழ் வ்ருத்தாந்தங்களால் பஹுப்ய: என்கிற பஹுத்வம் ஆசார்ய ஸப்ரஹ்மசாரிகளையும் ஆசார்யன் பக்கல் தமக்கு முன் ஆச்ரயித்தாரையும் சொல்லுகிறது. "பஹுதாச்ரோதவ்யம்" இது ஏகார்த்தத்திலே தானே ச்ரோதவ்ய ப்ரகார பேதத்தைச் சொல்லுகிறது. ஒரே அர்த்தத்தை பஹுப்ரகாரமாக கேழ்க்கவேணுமென்றபடி. நம் தர்சநத்திலே ஒரே அர்த்தத்தையிறே ஸ்ரீ பாஷ்ய கீதா பாஷ்ய ரஹஸ்ய த்ரய பகவத் விஷயங்களிலே கேழ்க்கிறது—

காரணத்வோபாயத்வோபேயத்வாதிதா ।
இதி ஶாரீரஶாஸ்த்ரவ்ருத்திஹவாபி வ்யவஸ்திதம் ॥

என்று சாரீரகார்த்தத்தை சுருங்கச் சொல்லுமாயிற்று ரஹஸ்யத்ரயம், "ஆதள ஶாரீரகாஸ்த்ர ஸங்க்ஷிப்தம் விம்ஶதி" என்று திருவாய் மொழியும் சாரீரகார்த்தத்தை வெளியிடுவதாயிறே இருப்பது. ஸ்ரீ கீதா பாஷ்யமும் சாரீர கோதிதமான பக்தியோகத்தை ஸபரிகரமாகத் தெளிவிக்குமாயிற்று. இவை நாலும் உபாயப்ரதிபாதக ப்ரகரணங்களிலே அதிகாரி பேதத்திலே ப்ரபத்தி வித்யையையும் வெளியிடும்.

ஆகையால் க்ரந்த சதுஷ்டயமும் ஏகார்த்தமாயிருக்கக் குறையில்லை. இத்தாலே ஸ்ரீ பாஷ்யம் "ஸ்வரூப விருத்த பக்தி ப்ரதிபாதகமாக நிர்வஹித்தார். "தத்வமஸி" இத்யாதி வாக்ய ஜந்ய ஜ்ஞானமே மோக்ஷ ஸாதநமென்றும் கர்ம ஜ்ஞான ஸமுச்சயம் மோக்ஷ ஸாதநமென்றும் சொல்லும் குத்ருஷ்டிகளை நிரஸிக்கைக்காக. கீதா பாஷ்யமுப்படியே. ஆசார்ய ருசி பரிக்ருஹீதமுமாய் தாம் தஞ்சமாக வருதியிட்டிருக்கு மர்த்தம் ப்ரபத்தியாயிற்று. இந்த ப்ரபத்தி தான் ஸ்வ ரக்ஷணார்த்த ஸ்வ வ்யாபார நிவ்ருத்தி ரூபாத்யந்த பாரதந்த்ர்ய ப்ரகாசகம். பகவத் விஷயம் அநுபவ

ரூபம். என்று இப்படி பரஸ்பர விருத்தமென்று அர்த்த பேதகல்பநம் பண்ணி நடத்திப் போரும் ஸம்ப்ரதாயம் ஸத்ஸம்ப்ரதாயமன்றென்று கொண்டதாக வாகிறது, "ஜ்ஞாநவ்ருத்தோபஸேவநாத்" இதி—கிம் பஹுப்ய: என்றதை ஜ்ஞாநவ்ருத்தா: என்று விசேஷிக்கிறது. ஆதி சப்தத்தாலே "தத்வித்தி ப்ரணிபாதேந" த்யாதி ப்ரமாணங்கள் விவக்ஷிதங்கள். "சுகாதி வ்ருத்தாந்தங்களேயும்" இப் ப்ரமாணப்படிக் கநுஷ்டாநமில்லாதபோது ப்ரமாணத்துக்கு அநநுஷ்டாந லக்ஷணா ப்ராமாண்யம் வருமாகையால் அதில்லை என்று சுகாதி வ்ருத்தாந்தங்களைக் காட்டுகிறார். வ்யாஸர் தன் புத்திரனை சுகருக்கு அபேக்ஷித ஸகலார்த்தங்களையும் சொல்லி இது ப்ரதிஷ்டிதமாகைக்காக, மிதிலையில் ஜநகர் பக்கல் போய் கேழ்க்க விதித்தாரென்றும் இப்படி பல மஹரிஷிகள் பலபேர் பக்கல் கேழ்க்க விதித்ததாக இதிஹாஸங்களிலே காணலாமாயிருக்கும். அன்றிக்கே திர்யக்காயிருந்த கிளியை பஹுப்ரகாரமாக திருத்தியாயிற்று நல் வார்த்தைகள் கற்பிக்கிறது. இது திருந்தினபடி தான் திருமாலைப் பாடக் கேட்டு வளர்த்ததனால் பயன் பெற்றேன் ' வருகவென்று மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினாளென்றும் படியாயிருந்தது. "சிஷ்ய புத்ரரை இதி

> ஸாவஜ்ஞோ ஹ்யேஷ வை ஹந்த ஸம்ஸார: ।
> வ்ருத்தாந்திகா யச்ச லோகோ வேதா: ॥

யதோ யஸ்மாந் நிஷ்டிதம் ஞாநமிதரேஷு, என்று கேட்டு, ஸிஷ்யேஷு ஸம்ஸாரிணாம் ப்ரவஹம் ॥ என்று அடி பணிந்த ஸ்ஸாவஸாநாநுவர்த்திகளை பஹுமுகமாகத் திருத்தவேண்டுமென்கிற அபிஸந்தியாலே. உபபந்நதமம் இதி. ஆசார்யஸ்ய த்வி என்றதுவும் ஆசார்யலக்ஷணமாகையாலே இப்படி திருந்தாதபோது சாஸ்த்ரார்த்தமறியாதே, சிஷ்யராயிருப்பார்க்கு அதிக்ரமமுண்டானால் "சிஷ்ய பாபம் குரோரபி" என்றிருக்கையாலும் சாஸ்த்ரார்த்தங்கள் நெஞ்சில் ப்ரதிஷ்டிதமாமளவும் தாமே யாவது ஸ்வாபிமத சிக்ஷகாந்தரரைக் கொண்டாவது திருத்தவேண்டுமென்று திருவுள்ளம்—அபி ஸந்தியாலே என்றது—திருத்தவேணுமென்கிற அபிஸந்தியன்றிக்கே அநாதராதிகளாலே யானால் அநர்த்தாவஹமாய் தலைக் கட்டுமாகையாலே அப்படி யன்றிக்கே இப்படிச் செய்யுமது கேவலம் உபபந்நம் என்று சொல்லவொண்ணாதே உபபந்நதமமாயிருக்குமென்கைக்கு உபபாதகமாயிருக்கும்.

அவ—ஆனாலும் அபேக்ஷித ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுமது ஆசார்யாபிமதரான, ஸப்ரஹ்மசாரி, சிஷ்யர், இவர்கள் பக்கலிலேயே யாகவேண்டு



மென்று நிர்பந்தம் கூடுமோ? "பஹுப்ய: ச்ரோதவ்யம்" "ஜ்ஞாநவ்ருத்தா:" இத்யாதிகள் ஸாமாந்யமாயிருக்க ஆசார்யாநபிமதரான ஜ்ஞாதாக்கள் பக்கலிலும் ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுமதுவும் சாஸ்த்ரார்த்தமாகாதோ வென்ன வருளிச் செய்கிறார்.

மூ—இப்படி ஆசார்யாபிமத விஷயத்தில் ஆசார்யாநுஜ்ஞையாலே அபேக்ஷித ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுமது சாஸ்த்ரார்த்தமென்னுமிடம் அந்திமதசாவதியாக அத்யந்தாவஹிதராய்க் கொண்டு ஸதாசாராநுபாலநம் பண்ணின ஸ்ரீ பாஷ்யகாரருடைய அநுஷ்டாநத்தாலே ஸித்தம்.

வ்யா—அபேக்ஷித ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுமது இதி. தத்வஹித புருஷார்த்தங்களுக்கு அநபேக்ஷிதங்களாயிருந்த சாஸ்திராந்தர ஜ்ஞாநோபஜீவநம் அந்யத்ரவானாலும் இது இவர் பக்கலிலே தானே யாகவேணும் என்கிற நிர்பந்தம் இதிபாவ:" சாஸ்திரார்த்தம் என்னுமிடம் இதி, மஹரிஷிகள் க்ரந்த ரூபேண காட்டின சாஸ்த்ரங்களில் இப்படி யன்றிக்கே ஸாமாந்யமாகத் தோற்றினாலும் மஹரிஷிகளும், "ஸமாசாரோ ஹ்யாசாரோ வ்ருத்தாநாம் ஹ்யநுகத:" என்றும், "யச் சிஷ்டஸேவ்ய: ப்ரமாணம்" என்னும் சிஷ்டாசாரத்தை ப்ரமாணமாகச் சொல்லுகையாலும் ப்ரத்யக்ஷத்ருஷ்ட ப்ரமாணங்களுக்கு அவிருத்தமான ஆசாரமும் ப்ரமாணமென்று ஹோலாகாதிகரணத்திலே ந்யாய வித்துக்களாயிருப்பார் நிர்ணயித்து ஸாமாந்ய வசநத்தை ஸங்கோசிப்பது உண்டாகையாலும் பஹுப்ய: இத்யாதிகளுக்கு ஆசார்யாபிமத ஸப்ரஹ்மசாரி சிஷ்யர்களே விஷயமாகவேண்டியதால் இதுதான் சாஸ்திரார்த்தமென்னக் குறையில்லை. "அந்திமதசாவதியாக அத்யந்தாவஹிதராய்க் கொண்டு ஸதாசாராநுபாலநம் பண்ணின ஸ்ரீ பாஷ்யகாரருடைய" இதி, ஸ்ரீ பாஷ்யகாரர் அந்திம தசையிலே வருந்தி யெழுந்திருந்து, ஸந்த்யா காலத்திலே ஜலாஞ்ஜலி ப்ரக்ஷேபம் பண்ணியருளினார் என்று இப்படி ஸத் ஸம்ப்ரதாய வ்ருத்தர் சொல்லிப்போருகையாலே அந்திமதசாவதியாக என்றது, அவதியாக வென்றது—அன்றளவும் ஒரு ஸதாசாராதிக்ரமம் உண்டென்று சொல்லவொண்ணாதென்கிற திருவுள்ளத்தாலே. அத்யந்தாவஹிதராய்க் கொண்டு என்றது. அந்திமதசையிலே கரண பாடவமும் அசக்தியும் விஞ்சியிருக்குமாகையாலே ப்ரபந்நருக்கு நித்யநைமித்திகங்களில் யதாசக்தி அநுஷ்டாநம் அநுமதமானாலும் ஸந்த்யாகாலம் தப்பவொண்ணாதென்று, ஜாகரூகராயிருந்து பூர்வாங்கங்களை அநுஷ்டித்து முடித்து அர்க்யப்ரக்ஷேபத்துக்குக் காலம் வந்தவாறே விற்றிருந்தநுஷ்டிக்கவொண்ணாதென்று, ஸமீபத்திலிருந்த முதலிகள் ஹஸ்தாவலம்பநத்தாலே நின்ற திருக்கோலமாய் ஜலாஞ்ஜலிப்ரக்ஷேபம் செய்தருளுகையாலே ஸதாசாராநுபாலநம் இதி.

வண-ிாஶ்ரூஊவாரவ தா வ-ரா-ஷெண வரஃவ-ஊரநு ।
விஷ-ரராரயு௵தெ வஸா நாநுஷூ௵சுதாஷகாரகஃ ॥
ந வஶ்ுதிநிஜ வண-ியஊ-ி௵தாயஃ ।
ஷ்லெஷ்லெ கஊ-ிணு௵ிரதஃ ஶாவிஜிஂஉஹ௵த நரஃ ॥
ஷ்லகஊ-ிணாதஊஹுவ-ு ஷிஜிஂ விநுதிஊநவஃ ॥
ஷ்லகஊ-ி நிரதஷ்ஹிஜிஂ யயாவிநுதி

இத்யாதிகளில் ப்ரதிபந்நமான நித்யநைமித்திகாநுஷ்டாநம் ஸதாசாரம். ஸதாசாராநுபாலநம் பண்ணின என்கிற வித்தாலே ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்கிற விடத்திற்கு வர்ணாச்ரம தர்மங்கள் ஔபாதிகங்களாகையாலே ஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்தவனுக்கு த்யாஜ்யங்கள் என்னும் ப்ரபந்நனுக்கு ஸர்வ தர்மங்களினுடையவும் ஸ்வ ரூபத்யாகம் ப்ரபத்திக்கு அங்கமாக விதிக்கிறது என்னுமிப்புடைகளிலே எழுதி வைத்தநுஷ்டிப்பதெல்லாம் ஸத் ஸம்ப்ரதாய மன்றென்றதாகையாலே ஸத்வஸ்தர்க்கு அநுபாதேயமாம். பாஷ்யகாரருடைய இதி. இவர் மீமாம்ஸா விமர்ச சாலியாகையாலே நிஷ்கர்ஷித்து அநுஷ்டித்தவநுஷ்டாநம் உபாதேயமாயிருக்கத் தட்டில்லை. இத்தாலே அத்ரைவர்ணிகரான பிள்ளை உரங்காவில்லிதாஸர் கரஸ்பர்சத்தாலே தேவதாராதந காலத்திலே காய சுத்தி பண்ணின பாஷ்யகாரர் என்றெழுதியதும் ஞானியினுடைய ஹேயமாயிருந்த தேஹம் எம்பெருமானுக்கு அத்யந்தமபிமதமாகையாலே காய சுத்தி செய்யலாகாதென்று ஸூத்திர ப்ரணயநமும் பரஸ்பர விருத்தமாகையாலே இதுகள் எல்லாம் யாதவப்ரகாசீய க்ஷேப மூலமாய் வந்ததென்றே கொள்ளவேணும். ஸ்ரீ பாஷ்யகாரர் தாமருளிச் செய்த நித்யக்ரந்தத்திலே ‘ ஊபவர ௵ஊ கூாஷி௵நா ஹமவஷாராயந ஷுயொமஂவ௵க்ஷு ” என்று தொடங்கி பரமை காந்திக்கென்றே விலக்ஷண ஸ்நாந பூத சுத்தி பூர்வகமாய் திருவாராதநமருளிச் செய்திருக்கையாலும் இப்படியுமொரு விலக்ஷண பாகவத ஸ்பர்சம்வேண்டுமென்று சுத்தி ப்ரகரணத்தில் அருளிச் செய்யாமையாலும் இது ஸ்ரீ பாஷ்யகாரர் பக்கல் த்வேஷத்தாலே பக்த பாவனை பண்ணி எழுதின ஐதிஹ்யம் என்றே கொள்ளவேணும். அப்படியே இவர்கள் தாம் பகவதபசாரத்திலே வர்ணாச்ரம விபரீதாபசாரத்தையும் சேர்த்தெழுதியிருக்கையாலே வர்ணாச்ரம விபரீதாநுஷ்டாநம் அஸதாசாரம் என்று கொள்ளவேண்டியதால் உடையவர் வெள்ளை சாத்தி போஸலராஜ்யம் எழுந்தருளினர் என்றும் நடு வழியிலே ஓரம்மையார் தேனும் தினையும் கொடுக்க அமுது செய்தாரென்றும் ஆச்சானையே தளிகைக்கு நியமித்து மாதுகர மின்றிக்கே நியதமாக அங்கே தானே அமுது செய்து வந்தாரென்னும் வடுக நம்பி நியதமாக பால் கொடுக்க



அமுது செய்தாரென்றும் தம் திருவடிகளாயிருந்தாளொரு பெண் பிள்ளை தானே தளிகைப் பண்ணி பகவதாராதநமில்லாதே அவள் தன் கையாலே தானே தம்முடைய திருவடி நிலைகளுக்கு நிவேதநம் பண்ணினதை ஸ்ரீ பாதத்து முதலிகளை அமுது செய்ய நியமித்தாரென்றும் அங்கே தானே அவள் பர்த்தாவை சிஷ்யனாக்கிக் கொள்ளத் திருவுள்ளமாய் த்ரிதண்ட காஷாயங்கள் ஒன்றுமில்லாதே வெள்ளை சாத்தினபடியே சிரகாலமிருந்தாரென்றும் சோழனுக்காக அபிசாரம் செய்தாரென்றும் இப்புடைகளிலே அனுவாதத்துக்கும் கூட அநர்ஹமாக எழுதி வைத்ததெல்லாம் வர்ணாச்ரம தர்ம விருத்தங்களாய் ஸதாசாரங்களென்றவொண்ணாதாகையாலே அத்யந்தாவஹிதராய் ஸதாசாராநுபால நம் பண்ணின ஆசார்ய விஷயத்தில் அபசரித்ததாகத் தலைக்கட்டுமாகையாலே ஸாத்விகர் அஞ்சிச் செல்லவேணும். அந்திமதசாவதியாக அத்யந்தாவஹிதராய்க் கொண்டு ஸதாசாராநுபாலநம் பண்ணின என்றத்தாலே இவருக்கு அநவதாநத்தாலே ஓரநுஷ்டாநமில்லை என்றும் தேசகாலாவஸ்தா வைகுண்யத்தாலே வருமதெல்லாம் தாத்காலிக ஸதாசாரமென்று ப்ரமாணங்கள் காட்டுகையாலும் ஸமீசீந தேசகாலாவஸ்தைகளிலே அஸதாசாரமாய் முடிகையாலும் அத்தை திருஷ்டாந்த மாக்கி நாமனுஷ்டிக்கலாகாதென்றும் அவ்வநுஷ்டாநங்களைச் சொல்லுவதும் எழுதுவதும் கொண்டாடுவது மெல்லாம் சாஸ்திர விருத்தங்களென்றும் ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர் சொல்லிப்போருவர். ஸந்யாஸிகள் வெள்ளையுடுப்பது அசாஸ்திர மென்றுயித்து இன்றளவும் ஒரு ஸம்ப்ரதாயத்திலும் ஸந்யாஸிகள் அநுஷ்டியாதே போருவது. இப்படியானல் உடையவர் வெள்ளை சாத்தினர் என்று கொண்டாடும்படி எங்ஙனே? அநுஷ்டாநத்தாலே ஸித்தம் இதி. மஹாப்ராஜ்ஞராயிருந்த பாஷ்யகாரர்க்கு பலஜ்ஞாநிகள் பக்கல் ஜ்ஞானோபஜீவநம் பண்ணுமது ஆவச்யகமாயிருந்தால் மிதபாஜ்ஞரான நாமும் அவருடைய அநுஷ்டாநத்தையே ப்ரமாணமாகக் கொண்டு பஹுபேர் பக்கல் கேழ்க்கை ஆவச்யகம் என்று திருவுள்ளம்.

அவ—இப்படி ஓரோரர்த்தத்துக்குப் பலவிடங்களில் உபதேசத்துக்குச் ரௌதாசாரமும். காட்டுகிறார்.

மூ—அத்யாத்ம விஷயத்தில் ப்ரதாநா ப்ரதாநாம்சங்களை ஒருவருக்குப் பலராக உபதேசிக்க வேதாந்தங்களில் பலவிடங்களிலும் கண்டோம்.

வ்யா—அத்யாத்ம விஷயத்தில் = பராவராத்ம தத்ப்ராப்தி ததுபாயங்களில்; ப்ரதாநாப்ரதாநாம் சங்களை—அங்கி = ப்ரதாநம். அப்ரதாநம் = அங்கம், அங்கங்களிலும் ப்ரதாநாப்ரதாநாம்ச விபாகமுண்டு. அங்கியிலுமப்படியே, ஒருவருக்குப்பலராக உபதேசிக்க இதி—பலருக்குப்பலர்

உபதேசிப்பது நிர்விவாதம். எல்லாருக்கும் ஒருத்தரே யாகவேண்டுமென்கிற நிர்பந்தமில்லை. ஒரு சிஷ்யனுக்கு பல ஆசார்யர் கூடுமென்பது தான் ப்ரக்ருதவிவக்ஷிதம். வேதாந்தங்களிலே என்றது. கீழ்க்காட்டின வாசாரங்கள் எல்லாம் கேவலாசாரமாயும் ஸ்ம்ருதி மூலமாயுமிருக்கை யன்றிக்கே ப்ரத்யக்ஷச்ருதிமூலங்கள் என்று தோற்றுகைக்காக பலவிடங்களிலுமென்றது. உபகோஸலவைச்வாநர பஞ்சாக்நி வித்யாதிகளிலே என்றபடி. உபகோஸலவித்யையில் ப்ரதாநமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் அப்ரதாநங்களாயிருந்த அக்நிவித்யைகளையும் அக்நிகள் உபதேசிக்கவும், அர்ச்சிராதிகதிகள் தொடக்கமான சில அங்கங்களையும் ப்ரதாநாம்சத்தில் வேத்யங்களையும் ஆசார்யனுபதேசித்ததாயும், வைச்வாநரவித்யையில் ஔபமந்யவாதிகள் தொடக்கமான ஐந்து மஹரிஷிகளுக்கும் வைச்வாநராத்ம ஸ்வரூபத்தில் ப்ரத்யேகம் ஏகைகதேசம் பிந்நபிந்நாளிடத்தில் உபதிஷ்டமாய் கேகயனிடத்தில் எல்லாருக்கும் அபேக்ஷித யாவதுபதேசம் பெற்றதாயும் ச்வேதகேதுவுக்குப் பிதாவினிடத்தில் ஸத்வித்யையில் ப்ரஹ்ம ஸ்வரூபம் உபதிஷ்டமாயிருக்க, இவன் பாஞ்சால ஸதஸ்ஸுக்குப் போனபோது அவச்யம் ஜ்ஞாதவ்யமாய் ப்ரஹ்மவித்யாங்கமாயிருந்த பரிசுத்தாத்மஸ்வரூபம் அநுபதிஷ்டமாயிருந்து தம்மாசார்யனை பிதாவுமறியாதே இருந்தது கொண்டு பிதாவும் தானுமாய் ப்ரவாஹணனென்பானித்திலே அபேக்ஷிதயாவதுபதேசம் பெற்றதாயும் இப்படி பஹுஸ்தலங்களிலே காணலாம். கண்டோம் இதி — இதுகள் கிலச்ருதிகளன்றிக்கே, பட்யமாநங்களான சாந்தோக்யம் முதலான விடங்களிலே எல்லாரும் கண்டதுண்டென்றபடி.

அவ—இப்படி பல ஆசார்யர்கள் பக்கலிலே ஜ்ஞாநோபஜீவநம் பண்ணவேண்டும் என்பது ச்ருதி ஸ்ம்ருதி ஸதாசார ஸித்தமாயிருக்குமானால் இப்படி யன்றிக்கே ஸ்ரீமந்நாத முநிகளுக்கு அத்யாத்ம விஷயத்திலேயே தானே வேறேயொரு ஆசார்யரில்லாதே க்ருத்ஸ்நமும் ஆழ்வார் ஸ்ரீ பாதத்திலே தானே என்பதும் அப்படியே உய்யக்கொண்டாருக்கு நாதமுநிகள் ஸ்ரீ பாதத்திலே என்பதும் இப்படியே பெரிய நம்பிகள் உள்ளிட்ட ஆசார்யருக்கெல்லாம் ஒரே ஆசார்யன் பக்கலிலே க்ருத்ஸ்நோபதேசம் என்கிற ஸம்ப்ரதாயமும் விரோதியாதோவென்ன வருளிச் செய்கிறார்.

மூ—ஓராசார்யர் பக்கலிலே க்ருத் ஸ்நோபதேசமும் மைத்ரேயாதிகளுக்குப் போலே சிலருக்கு உண்டாம்.

வ்யா—ஓராசார்யன் பக்கலிலே க்ருத்ஸ்நோபதேசமாகாது ; பல ஆசார்யர் வேண்டும் என்கிற நிர்பந்தமில்லை ; என்று திருவுள்ளம். க்ருத்ஸ்நோபதேசமும் இதி—ஆசார்யருக்கும் தமக்கும் ஸாமாநாதிகரண்யத்



ஸமாதாநம்

இந்த சங்கையை சூத்திரகாரர் தானே பரிஹரிக்கப்போகிறார். வ்யபதேசாச்ச க்ரியாயாம்" என்ற சூத்திரத்தில். யாகம் செய்கை என்னும் க்ரியையில் இந்த விஜ்ஞாநத்தை கர்த்தாவாகச் சொல்லி இருப்பதால், ஜீவனே கர்த்தாவாகிறான். விஜ்ஞாநம் என்னும் சொல்லால் ஜீவனைச் சொல்லாமல் புத்தியை மாத்திரம் சொல்லும் பக்ஷத்தில் விஜ்ஞாநத்தை கர்த்தாவாகச் சொல்லியிருப்பது பொருந்தாது. கரணமாக கூறியிருக்க வேணும். கரணத்தின்மீது மூன்றாம் வேற்றுமையே வரும். முதல் வேற்றுமை கர்த்தாவையே குறிக்கும். ஆகையால் விஜ்ஞாநமயன் ஜீவனே. அவனைக் காட்டிலும் வேறுபட்டவன் ஆநந்தமயன் பரமாத்மாவே.

## सू—कामाच्च नानुमानापेक्षा ॥ १. १. १९ ॥

'सोऽकामयत बहुस्याम्' इति स्वकामादेवास्य जगत्सर्गः श्रूयते । प्रत्यगात्मनो हि यस्य कस्यचित्सर्गे आनुमानापेक्षा दृश्यते । अनुमानगम्यं प्रधानं आनुमानम् ॥

அந்த ஆநந்தமயன், பஹுஸ்யாம் என்று தன்னுடைய ஸங்கல்பத்தாலே உலகத்தைப் படைத்ததாகச் சொல்லபபடுகிறது. ப்ரதாநம் என்னும் ப்ரக்ருதியை அபேக்ஷித்து உலகத்தை ஸ்ருஷ்டித்ததாக சொல்லப்படவில்லை. ஜீவன் யாதாமொரு வஸ்துவை ஸ்ருஷ்டித்தால் ப்ரக்ருதியை அபேக்ஷிப்பது உண்டு. அப்படியல்லாமல் தன் ஸங்கல்பத்தாலேயே ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லுவதால் ஆநந்தமயன் ஜீவனல்லன்.

## सू—अस्मिन्नस्य च तद्योगं शास्ति ॥ १. १. २० ॥

अस्मिन् आनन्दमये अस्य प्रत्यगात्मनः आनन्दयोगं शास्ति । 'रसो वै सः । रसं ह्येवायं लब्ध्वानन्दी भवति ।' इति । अतः प्रत्यगात्मनः अर्थान्तरभूतः सर्वज्ञः पुरुषोत्तम आनन्दमयः ॥

इति आनन्दमयाधिकरणम् ।

அஸ்மிந் = இந்த ஆநந்தமயனிடத்தில் அஸ்ய = இந்த ஜீவனுக்கு, தத்யோகம் = ஆநந்தத்தின் லாபத்தை சாஸ்தி = விதிக்கிறது. (ச்ருதி) அந்த

ஆநந்தமயன் ரஸசப்தவாச்யன் ஆகிறான். இந்த ஜீவன் அந்த ரஸ சப்த வாச்யனான ஆனந்த மயனை அடைந்து ஆநந்தியாக அதாவது ஆநந்தத்தைப் பெற்றவனாக ஆகிறான்! என்று. ஆகையால் ஜீவனைக் காட்டிலும் வேறு பொருளாயும், ஸர்வஜ்ஞனாயும் இருக்கிற புருஷோத்தமனே ஆநந்தமயன் ஆகிறான்.

---

## ॥ अन्तरधिकरणम् ॥

### अन्तस्तद्धर्मोपदेशात् ॥ १. १. २१. ॥

अयं जगत्कारणभूतः विपश्चित् आनन्दमयः, कश्चिदुपचितपुण्यविशेषो जीवविशेषः देहयोगाद्विज्ञायते। नायं परमात्मेति नाशङ्कनीयम्। 'य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषः' इत्यादौ श्रूयमाणः पुरुषाकारः परमात्मैव। कुतः? तद्धर्मोपदेशात्—'स एष सर्वेषां लोकानामीशः सर्वेषां कामानाम्।' 'तस्योदिति नाम स एष सर्वेभ्यः पाप्मभ्यः उदितः' इति निरुपाधिकसर्वलोकसर्वकामेशत्वं स्वत एवाकर्मवश्यत्वं च प्रत्यगात्मनोऽर्थान्तरभूतस्य हि परमपुरुषस्यैव धर्मः। 'वेदाहमेतं पुरुषं महान्तं आदित्यवर्णं तमसः परस्तात्' इत्यादिषु त्रिगुणात्मकप्रकृत्यनन्तर्गताप्राकृतस्वासाधारणरूपवत्त्वञ्च ज्ञानादिगुणवत् तस्यैव हि श्रूयते।

### அந்தரதிகரணம் (7)

அந்த:—ஸூர்ய மண்டலம் முதலான விடங்களில் உள்ளிருக்குமவன் ஜீவனல்ல, பரமாத்மாவே. ஏனெனில், தத்தர்மோபதேசாத்—அந்த பரமாத்மாவுக்கு அஸாதாரணமான தர்மங்களை வேதங்களில் கூறியிருப்பதால்.

ஜகத்காரண பூதன் என்னும், விபச்சித் என்னும், ஆநந்தமயன் என்னும் சொல்லப்படுபவன், ஒரு ஜீவனே விசேஷமான புண்யம் செய்து அதன் பயனாக ஸூர்ய மண்டலம் முதலியவற்றை தனக்கு சரீரமாகக் கொண்டு



காணப்படுகிறான் என்பது சரியல்ல. அவன் பரமாத்மாவென்றே கொள்ள வேணும். அவனை உலகமனைத்துக்கும் ஈசன் என்னும், எல்லா காமங்களுக்கும் ஈசன் என்னும் புண்ணிய பாபரூபமான கர்மங்களில்லாதவன் என்னும் ச்ருதிகள் கூறுகின்றன. இக் குணங்கள் ஜீவனிடத்தில் இல்லை. பரமாத்மாவுக்கே உரியவை. ஞானம் முதலிய குணங்கள் எப்படி பரமாத்மாவுக்கு அஸாதாரணமோ அப்படியே த்ரிகுண ஸ்வ ரூபமான ப்ரக்ருதியில் சேராத அப்ராக்ருதமான, தனக்கே அஸாதாரணமான ரூபத்தையும் உடையவன் என்று ச்ருதிகள் சொல்லுகின்றன. ஆகையால் ஸூர்ய மண்டலத்தில் வசிப்பவன் பரமாத்மாவே. ஜீவனல்லன்.

ज्ञानादयोऽपि 'सत्यं ज्ञानमनन्तं ब्रह्म' 'यस्सर्वज्ञस्सर्ववित्। 'परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च' इत्यादिषु श्रुतत्वात् तस्य गुणा विज्ञायन्ते।

ஞானம் முதலான குணங்களும் பரமாத்மாவுக்கே அஸாதாரணங்களான குணங்கள் என்று—அடியிற்கண்ட ச்ருதிகள் கூறுகின்றன. "அந்த ப்ரஹ்மம் ஸத்யஸ்வ ரூபம், ஞான ஸ்வ ரூபம், அநந்தம், என்றும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் எல்லாவற்றையும் அறிபவன் என்னும் ஞான பலங்களோடு கூடின ஸ்ருஷ்டி ஸம்ஹாராதி க்ரியைகள் அவனுக்கு ஸ்வ பாவத்திலேயே சேர்ந்தது என்னும் இது முதலிய ச்ருதிகள் இவ்விஷயத்தில் ப்ரமாணமாக நிற்கின்றன.

तथा 'आदित्यवर्णं तमसः परस्तात्' इत्यादिषु अप्राकृतस्वासाधारणरूपश्रवणात् तद्वत्ता च विज्ञायते।

பரமாத்மாவுக்கு ரூபம் உண்டோவென்று சங்கை வர அவனுக்கு ரூபம் உண்டு என்கிறார். அப்படியே, ஸூர்யன் போல் ஜ்வலிப்பவன் என்னும் ப்ராக்ருதி மண்டலத்துக்குப் புறம்பே நிற்பவன் என்னும் சொல்லுகிற வாக்யங்களில் அப்ராக்ருதமாயும் அஸாதாரணமுமான உருவம் உண்டு என்று சொல்லுவதால் பரமாத்மாவுக்கு ரூபம் உண்டு என்று ஏற்படுகிறது.

तदेतद्वाक्यकारश्चाह—हिरण्मयः पुरुषो दृश्यत इति प्राज्ञस्सर्वान्तरः स्यात् लोककामेशोपदेशात् तथोदयात् पाप्मनामित्युक्त्वा, तद्रूपस्य कार्यत्वं मायामयत्वं वेति विचार्य, स्याद्रूपं कृतकमनुग्रहार्थं

तच्चेतसामैश्वर्यात्, इति निरसनीयं मतमुपन्यस्य ; रूपं वातीन्द्रियम् । अन्तःकरणप्रत्यक्षनिर्देशात् इति ॥

இவ்விஷயத்தை வாக்யகாரர் பேசுகிறார், ச்ருதியில் பொன் நிரமான பரம புருஷன் காணப்படுகிறான் என்று சொல்லி இருப்பதைக் கொண்டும் ஸர்வ லோகங்களுக்கும் ஸர்வ காமங்களுக்கும் ஈசன் என்னும், புண்ணிய பாபரூப கர்மங்கள் இல்லாதவன் என்னும் சொல்லியிருப்பதைக் கொண்டும், அந்த பரம புருஷன் அந்தர்யாமியாயிருப்பவன் என்று. இதன் மேல் அவனுடைய ரூபம் நித்யமா அநித்யமாவென்று விசாரித்து, அவன் தனது இஷ்டப்படி செய்யவல்லவன் ஆக விருப்பதால் ஜனங்களை அநுக்ரஹிக்க வேண்டி அநித்யமான உருவத்தைக் கொள்கிறான் என்று பூர்வபக்ஷமான கொள்கையை சொல்லி, அவனுடைய உருவம் நித்யம் அதீந்திரியம்; மனதாலேயே ப்ரத்யக்ஷீகரிக்கத் தக்கவன் என்று ச்ருதி சொல்லுவதால் என்று நிரூபணம் செய்து இருக்கிறார்.

व्याख्यातं च द्रमिडाचार्यैः—न वा मायामात्रम् अञ्जसैव विश्वसृजो रूपम् । तत्तु न चक्षुषा ग्राह्यम् । मनसा त्वकलुषेण साधनान्तरवता गृह्यते । 'न चक्षुषा गृह्यते नापि वाचा, मनसा तु विशुद्धेन' इति श्रुतेः. न ह्यरूपाया देवताया रूपमुपदिश्यते । यथाभूतवादि हि शास्त्रम् । तथा 'माहारजतं वासः, वेदाहमेतं पुरुषं महान्तम् आदित्यवर्णम्' इति प्रकरणान्तरनिर्देशात् इति ॥

த்ரமிடாசார்யரும் இதை வ்யாக்யானம் செய்திருக்கிறார். உலகங்களை எல்லாம் ஸ்ருஷ்டிக்கவல்லவனான பகவானுடைய ரூபம், ப்ராக்ருதமல்ல. கண்ணாலே க்ரஹிக்கக் கூடியதுமல்ல. கலக்கமற்றதும் சமதமாதி ஸாதநங்களோடு கூடியதுமான மனதால் க்ரஹிக்கக்கூடும். அப்படியே ச்ருதியும் சொல்லுகிறது. ச்ருதிகள், ரூபமில்லாத தேவதைக்கு ரூபத்தை ஸாதிக்க வரவில்லை. உள்ளதை உள்ளபடி உரைப்பதல்லவோ சாஸ்திரம். வெவ்வேறு ப்ரகரணங்களிலும், அவனுடைய பீதாம்பரத்தையும், சூர்யன் போல் ஜ்வலிக்கின்ற வர்ணத்தையும் ச்ருதிகள் நிரூபிக்கின்றன.

साक्षिण इति, हिरण्मय इति रूपसामान्यात् चन्द्रमुखवत् इति च वाक्यम् ।



வாக்யம் என்னும் க்ரந்தத்தில் ஹிரண்மயபதத்தை விவரிக்கும்போது, ரூபத்தில் ஹிரண்யம் போன்றது. சந்திரமுகம் என்னும் சொல்லில் சந்திர பதம் சந்திரனை போன்றது என்று கொள்வது போல் என்று சொல்லப்பட்டது.

तच्च व्याख्यातं तैरेव । न मयडत्र विकारमादाय प्रयुज्यते । अनारभ्यत्वादात्मनः इत्यादिना ॥

இந்த வாக்யத்தையும் அந்த த்ரமிடாசார்யரே வ்யாக்யானம் செய்திருக்கிறார். ஹிரண்மய என்கிற விடத்தில் மய என்னும் விகுதி, விகாரப் பொருளில் உபயோகப்படுத்தப்படவில்லை. ஆத்மா க்ருத்ரிமமல்லாததால், என்று.

अतः प्रधानात् प्रत्यगात्मनश्च अर्थान्तरभूतः निरुपाधिकविपश्चित् । अनवधिकातिशयानन्दः, अप्राकृतस्वासाधारणदिव्यरूपः पुरुषोत्तमः परं ब्रह्म जगत्कारणमिति वेदान्तैः प्रतिपाद्यत इति निरवद्यम् ।

ஆகவே—ப்ருதியைக் காட்டிலும் ஜீவனைக் காட்டிலும் வேறு வஸ்துவாய் தன்னுடைய ஸங்கல்பமின்றி வேறு தூண்டுதல் இல்லாத பஹுபவந ஸங்கல்பம் செய்பவனாய், எல்லையில்லாத வாநந்தம் உள்ளவனாய், அப்ராக்ருதமாயும், தனக்கு மாத்திரம் உரியதாயுமான திவ்ய ரூபமுடையவனுமாய் புருஷோத்த மனுமான பரப்ரஹ்மமே ஜகத் காரணம் என்று வேதாந்தங்களால் நிரூபிக்கப் படுகிறது என்பதில் குற்றங் குறையில்லை.

### भेदव्यपदेशाच्चान्यः ॥ १. १. २२ ॥

பேத வ்யபதேசாத் = சூர்ய மண்டலத்தில் இருந்து சூர்யனைக் காட்டிலும் வேறு வஸ்துவாக இருக்கிறான் என்றும், ஆத்மாவில் அந்தர்யாமியாய் இருந்து ஆத்மாவைக் காட்டிலும் வேற்றுமை உள்ளவனாக இருக்கிறான் என்றும் பல விடங்களில் ச்ருதிகளில் சொல்லியிருப்பதால், அந்ய: = இந்த ஜகத் காரணமான பரமாத்மா, ஜீவாத்மாவைக்காட்டிலும் வேறுபட்டவனே என்று.

य आदित्ये तिष्ठन् आदित्यादन्तरोयमादित्यो न वेद । यस्यादित्यश्शरीरम् य आदित्यमन्तरो यमयति स त आत्मान्तर्याम्य-

मृतः, इत्यधिदैवतम् । यश्चक्षुषि तिष्ठन् य आत्मनि तिष्ठन् इत्यध्यात्मम् । यस्सर्वेषु लोकेषु तिष्ठन्नित्यधिलोकम् । यस्सर्वेषु भूतेषु तिष्ठन्नित्यधिभूतम् । यस्सर्वेषु वेदेषु तिष्ठन्नित्यधिवेदम् । यस्सर्वेषु यज्ञेषु तिष्ठन्नित्यधियज्ञम् । इत्यन्तर्यामिब्राह्मणे ॥

सुबालोपनिषदि च 'यः पृथिवीमन्तरे सञ्चरन्' इत्यारभ्य 'योऽव्यक्तमन्तरे सञ्चरन्, योऽक्षरमन्तरे सञ्चरन्, यो मृत्युमन्तरे सञ्चरन्, यस्य मृत्युश्शरीरम्, यं मृत्युर्न वेद, एष सर्वभूतान्तरात्मा अपहतपाप्मा दिव्यो देव एको नारायणः' इति सर्वदेवसर्वलोकसर्वभूतसर्ववेदसर्वयज्ञसर्वात्मोपरिवर्तमानतया तत्तच्छरीरतया तदन्तरात्मतया तत्तद्वेद्यतया तत्तन्नियन्तृतया च एभ्यः सर्वेभ्यः भेदव्यपदेशाच्च अयमपहतपाप्मा नारायणः प्रधानात् प्रत्यगात्मनश्च अर्थान्तरभूतो निखिलजगदेककारणमिति सिद्धम् ॥

அந்தர்யாமி ப்ராம்ஹணத்தில், எவன் ஒருவன் ஸூர்யமண்டலத்தில் இருந்து கொண்டு ஸூர்யனுக்கு அந்தர்யாமியாக இருக்கின்றானோ, எவன் ஒருவனை ஸூர்யனும் அறிய முடியவில்லையோ, எவனுக்குச் ஸூர்யன் சரீரமோ, எவன் ஒருவன் ஸூர்யனை, நடத்துகிறானோ, அவனே உனக்கும் ஆத்மா, அந்தர்யாமி, என்றும், எவன் ஒருவன் கண்ணில் வஸிக்கிறானோ, எவன் ஒருவன் ஆத்மாவில் வசிக்கிறானோ, எல்லா உலகங்களிலும் வசிக்கிறானோ, எல்லா பூதங்களிலும், எல்லா வேதங்களிலும், எல்லா யக்ஞங்களிலும், வஸிப்பவன் அவனே என்றும் சொல்லப்பட்டது. ஸுபாலோபநிஷத்திலும் எவன் ஒருவன் பூமியின் உள்ளே சஞ்சரித்துக் கொண்டு என்று தொடங்கி, அவ்யக்தத்தின் உள்ளில் ஸஞ்சரிப்பவன், ஆத்மாவின் உள்ளில் ஸஞ்சரிப்பவன், ம்ருத்யுவின் உள்ளில் ஸஞ்சரிப்பவன், எவன் ஒருவனுக்கு ம்ருத்யு சரீரமாகின்றானோ, எவன் ஒருவனை ம்ருத்யு அறியமாட்டானோ, அவனே ஸர்வ பூதங்களுககும் அந்தராத்மா, செய்வினை களற்றவன், வானுலகத்தில் இருப்பவன், தேவன், ஒருவன், நாராயணன் என்று எல்லா தேவர்களுக்கும், எல்லா உலகங்களுக்கும், எல்லா பூதங்களுக்கும் எல்லா வேதங்களுக்கும், எல்லா யக்ஞங்களுக்கும், எல்லா ஆத்மாக்களுக்கும், மேல்



வஸிப்பவனாய், அவை எல்லாவற்றையும் தனக்கு உடலாகக் கொண்டவனாய், அவை அனைத்துக்கும், தான் அந்தராத்மாவாய்; அவ்வனைவராலும் அறிய முடியாதவனாய், அவர் எல்லாரையும் அடக்கி ஆளுபவனாய், என்று இப்படிப்பட்ட எல்லாரையும் காட்டிலும் வேறு பட்டவனாக சொல்லி இருப்பதாலும், இந்த கர்ம ஸம்பந்தமற்ற நாராயணன், ப்ரகிருதியைக் காட்டிலும், ஜீவனைக் காட்டிலும், வேறு பொருளாக நின்றுகொண்டு, இவ்வுலக மனைத்திற்கும், ஒரே காரணமாக, ஆகிறான் என்பது திண்ணம்.

## आकाशाधिकरणं ; प्राणाधिकरणञ्च

### आकाशस्तल्लिङ्गात् ॥ १. १. २३ ॥

### अत एव प्राणः ॥ १. १. २४ ॥

சாந்தோக்யோபநிஷத்தில், இந்த பூதங்கள் அனைத்தும் ஆகாசத்தில் நின்றும் உண்டாகின்றன. ஆகாசத்திலேயே லயிக்கின்றன வென்று கூறப்பட்டிருக்கிறது. இங்கு ஆகாசம் என்பது பரமாத்மாவே. ஏனெனில் "தல்லிங்காத்" உலகத்தில் ப்ரசித்தமானதாகக் காட்டப்பட்ட பரமாத்மாவுக்கே உரியதாகிய அடையாளங்களைக் கொண்டு.

இதே காரணத்தைக்கொண்டு ப்ராண என்றும் சொல்லும் பரமாத்மாவையே குறிக்கும்.

'सर्वाणि ह वा इमानि भूतानि आकाशादेव समुत्पद्यन्ते । आकाशं प्रत्यस्तं यन्ति ।' 'सर्वाणि ह वा इमानि भूतानि प्राणमेवाभिसंविशन्ति । प्राणमेवाभ्युज्जिहते' इत्यादौ सदेव सोम्येदमग्र आसीदित्यादिना सामान्येन निर्दिष्टस्य जगत्कारणस्य भूताकाशप्राणसहचारिजीववाचिशब्दाभ्यां विशेषनिर्णयशङ्कायां 'सर्वाणि ह वा इमानि भूतानि' इति प्रसिद्धवन्निर्दिश्यमानात् जगत्कारणत्वादिलिङ्गात् भूताकाशजीवाभ्यां अर्थान्तरभूतः परमपुरुष एवात्र आकाशप्राणशब्दनिर्दिष्ट इति निश्चीयते ॥

இந்த பூதங்கள் எல்லாம் ஆகாசத்தில் நின்றும் உண்டாகின்றன. ஆகாசத்திலேயே மறைகின்றன. இந்த எல்லா பூதங்களும் ப்ராணனில் மறைகின்

158715



[illegible]ருந்தே தோன்றுகின்றன. என்று சொல்லுமிடங்கள் இந்த ஸூத்திரத்திற்கு விஷயம். ஜகத்காரணம் இன்னதென்று குறிப்பிட வந்த ச்ருதி, ஆதியில் ஸத் ஒன்றே இருந்தது என்று பொதுவாய் சொல் லிற்று. இப்படி பொதுவாய்ச் சொல்லப்பட்ட பொருளை விசேஷித்து இன்னதென்று சுட்டிக்காட்டவேண்டியது அவச்யம். இப்படி சுட்டிக் காட்டுவதற்காக வந்த ச்ருதி வாக்யங்கள் "ஸர்வாணிஹவா இமாநி பூதாநி" முதலியவை. அவைகளில் ஸமஸ்த பூதங்களும் ஆகாசத்தில் நின்றும் உண்டாகின்றன. ஆகாசத்தில் லயிக்கின்றன. ப்ராணத்தில் லயிக்கின்றன. ப்ராணனிலிருந்து கிளம்புகின்றனவென்று மற்ற விடங்களில் ப்ரசித்தமானதாகக் கூறப்பட்டது. ஆகையால் இவ்விடத்தில் ஆகாசம் ப்ராணம் என்று சொல்லப்பட்ட பொருள் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய ஆகாசம் ப்ராணவாயுவல்ல. ஜகத்காரணத்வம் முதலான அடையாளங்களைக் கொண்டு. பரம புருஷனே இங்கு ஆகாச ப்ராண சப்தங்களால் குறிக்கப் பட்டவன் என்று தீர்மானிக்கப் படுகிறது.

तत्प्रसिद्धिस्तु—बहुभवनरूपेक्षानवधिकातिशयानन्दजीवानन्द-हेतुत्वविज्ञानमयविलक्षणत्व निखिलभुवनभयाभयहेतुत्व सर्वलोकसर्वकामेशत्व सर्वपाप्मोदयाप्राकृतस्वासाधारणरूपविशिष्टस्य रविकरविकसितपुण्डरीकनयनस्य सर्वज्ञस्य सत्यसङ्कल्पस्य करणाधिपाधिपस्य परमपुरुषस्यैव निखिलजगदेककारणत्वादिति स एवाकाशप्राणशब्दाभ्यां जगत्कारणत्वेनाभिधीयत इति निर्णयो युक्त एव ।

மேற்சொன்ன விஷயம் ப்ரசித்தமான படி எங்ஙனே யென்னில்—நான் பலபடியாக ஆகுவேன் என்ற ஸங்கல்பமும், அளத்தற்கரிய ஆநந்தமும், ஜீவனுக்கு ஆநந்தத்தைத் தருதலும், விஜ்ஞாநமயனான ஜீவனைக் காட்டிலும் விலக்ஷணமாய் நிற்பதும், எல்லா உலகங்களுக்கும் பயா பயங்களுக்குக் காரணமாக நிற்பதும், ஸர்வ லோகங்களுக்கும் ஸர்வ காமங்களுக்கும் ஈசனாகவிருப்பதும், செய்வினைகள் தன்னிடத்தில் அணுகாமையும். அப்ராக்ருதமாயும் தனக்கு மாத்திரம் உரியதுமான ரூபமும் கூடின ஸூர்ய கிரணங்களால் மலர்ந்த செந்தாமரை போன்ற திருக்கண்களையுடையவனும், ஸர்வஜ்ஞனும், ஸத்ய ஸங்கல்பனும் இந்திரியங்களுக்கு இறைவனான ஜீவனுக்கும் இறைவனாயும் இருக்கிற பரம புருஷனே இவ்வுலகனைத்துக்கும் முக்கிய காரணமாயிருப்பது காரணமாக அவனே இந்த விரண்டு ஸூத்திரங்களில் ஆகாச ப்ராணசப்தங்களால் சொல்லப்படுகிறான் என்று நிர்ணயிப்பது யுக்தமே.

இளங்குழந்தை முதல் கிழவரீறாக

சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

# ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

**சுவையில் தேனினும் இனிது.**

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

*ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப்பட்டது.*

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீகந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்ப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அநுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மையுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

**வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.**
**வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.**

*சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.*

**ஆர்யன் பார்மஸி,**
**11, ஆதியப்ப முதலித் தெரு,**
**வேப்பேரி, மதராஸ்.**

Registered No. M. 3778.


சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

**வைர நகையே.**

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्र प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

“ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்.”



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S

The Jewellers

313 ESPLANADE, MADRAS.


Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.